ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 54

# உதயன்

சுடர் 27
கதிர் 57

வள்ளுவர் ஆண்டு 2043 தை 08 ஞாயிற்றுக்கிழமை (22/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


## ஒட்டுசுட்டானில் கைக்குண்டு மீட்பு

ஒட்டுசுட்டான் தொழிநுட்பக் கல்லூரிக்குச் சமீபமாக நேற்றுக்காலை கைக்குண்டு ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. தொழிநுட்பக் கல்லூரிக்கு அருகில் இந்த வெளிநாட்டுத் தயாரிப்புக் குண்டு வந்தது எப்படி? என்பது குறித்து தெரியவில்லை என்று பொலிஸார் கூறினர். இதேவேளை பொரளை கஜபாபுர பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் வேளையில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது துப்பாக்கி ரவைகளை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். (ஒ-319)

## மும்மொழி இலங்கை அங்குரார்ப்பணம்

'மும்மொழி இலங்கை' செயற்திட்டம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அலரிமாளிகையில்நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் ஜனாதிபதி ராஜபக்ஷ ஆகியோர் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். இவ்விழாவில் தெல்தெனிய மத்திய மகா வித்தியாலய மாணவி டபிள்யூ ஏ.லக்மாலி திலக்ஷி விஜேசூரிய தமிழிலும் முந்தல் தமிழ் வித்தியாலய மாணவி ஆர். சஹனா சிங்களத்திலும் அக்கரைப்பற்று முஸ்லிம் மகாவித்தியாலய மாணவி பாத்திமா ஜெமீலா ஆங்கிலத்திலும் நன்றியுரையாற்றினர்.

## பரந்தனில் விபத்து இருவர் படுகாயம்

கிளிநொச்சி பரந்தனில் நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஹன்ரர் வாகன விபத்தில் படுகாயமடைந்த இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்தில் முல்லை வீதி, பரந்தனைச் சேர்ந்தவர்களான கிறிஸ்தோபர் லிங்டன் (வயது - 29), சிவகுருநாதன் சிவநாதன் (வயது - 25) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர். உடனடியாக இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் சென்ற லிங்டன் கால் முறிந்ததோடு செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டு சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிவநாதன் கடும் உட் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

# பேச்சின் எதிர்காலம் கேள்விக்குறியில்

### அரசிடமிருந்து கூட்டமைப்புக்கு இதுவரை பதிலேதும் இல்லை

யாழ்ப்பாணம், ஜனவரி.22

கடந்த வாரம் நடைபெறவிருந்த அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான பேச்சு அரச தரப்புப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாமையால் நடைபெறவில்லை. பேச்சில் கலந்துகொள்ளாமைக்கான காரணம் எதையும் அரசு கூட்டமைப்புக்குத் தெரிவிக்கவில்லை. பேச்சுப் பற்றி இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இதனால் பேச்சு ஒரு கேள்விக்குறியான நிலையிலேயே உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அரசு - கூட்டமைப்பு இடையிலான பேச்சின் நிலை குறித்து கேள்வி எழுப்பிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பேச்சில் அரசு இவ்வாறு இழுத்தடிப்பு செய்வதால் கூட்டமைப்பும் விரைவில் கூடி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிலையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 17,18, 19 ஆம் திகதிகளில் பேச்சு நடைபெறும் என ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவும் அதனை உறுதி செய்திருந்தார். நாங்களும் பேச்சுக்குத் தயாராக இருந்தோம். ஆனால் அரசு இந்த மூன்று நாள்களும் பேச்சுக்கு வரவில்லை.

பேச்சுக்கு வர

19

## முன்னாள் போராளிகள் 73 பேர் இன்று விடுதலை

மட்டக்களப்பு, ஜன.22

புனர்வாழ்வுப் பயிற்சியை நிறைவு செய்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் 73 முன்னாள் உறுப்பினர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் வைத்து விடுவிக்கப்படவுள்ளனர். இவர்களில் 9 பேர் பெண்களாவர்.

தைப்பொங்கல் தினத்தையொட்டி மட்டக்களப்பு வெபர் நகர சபை மண்டபத்தில் இன்று இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகளின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்

19

## புனர்வாழ்வு பெற்ற புலிகளை அமைச்சர் கஜதீர சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஜன.22

புனர்வாழ்வுப் பயிற்சி பெற்று விடுவிக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களை சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அந்த அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை

19

## கலாம் நாளை வருகிறார்


யாழ்ப்பாணம், ஜன 22

யாழ். மாவட்டத்துக்கு நாளை திங்கட்கிழமை வருகை தரும் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல்கலாம் இங்கு இடம்பெறும் மூன்று நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

நாளை மதியம் 11.45 மணி முதல் 12.45 மணிவரையில் யாழ். பல்கலைக் கழகத்தில் 'மனநிலையின் ஒற்றுமை' என்ற தலைப்பில் அவர் கருத்துரை வழங்குகிறார்.

அதன் பின்னர் பிற்பகல் 2.55 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வருகை தரும் அவர், அங்கு பிரார்த்தனை மண்டபம் ஒன்றைத் திறந்து

19



கொழும்பு வந்த இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுகிறார்.

## யாழ்.மாணவர் தாதியர்களுக்கு ஜனாதிபதியால் நியமனக் கடிதம்

### இன்று அலரி மாளிகையில்

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.தாதியக் கல்லூரியில் பயில்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவ தாதியர்களில் 10 பேருக்கு அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதியினால் இன்று ஞாயிறு நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன என்று யாழ்.தாதியர் கல்லூரி அதிபர் செல்வி. ரஜூலாதேவி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

யாழ்.தாதியர் கல்லூரியில் பயில்வதற்கு கடந்த வருடம் நடைபெற்ற தேர்வில் சித்தியடைந்தவர்களில் 250 பேருக்கு கல்லூரியில் பயில அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 10பேருக்கே அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன என்றார் அதிபர்.(ஒ-4)


ரூபா 10,000/= விலைக் குறைப்பு
இச்சலுகை இன்று மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்
யாழ்.வர்த்தகக் கண்காட்சியில் ஜப்பான் ரேடர்ஸ் நிறுவனத்திடம் கொள்வனவு செய்யும் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும்
காட்சிக் கூட இல:- 195
Stall No.:- 195
மேலதிக தொடர்புகளுக்கு:
ஜப்பான் ரேடர்ஸ்
10-14, ஸ்ரான்லி வீதி, யாழ்.
Hot Line: 077-0868079


## ரூ.11 லட்சம் பெறுமதியான நகை வீடு புகுந்து கொள்ளை

### சுன்னாகத்தில் அதிகாலை வேளை முகமூடிக் கொள்ளையர் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜன.22

அதிகாலை வேளை வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த முகமூடிக் கொள்ளையர் அங்கிருந்த இரு பெண்களையும் கட்டிவைத்து விட்டு மணிக்கணக்கில் வீட்டைச் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி அங்கிருந்த

19


50W நிகரான ஒளியைத் தரும் எமது LED மின்குமிழை 30 நாள்களுக்குப் பாவித்தால் உங்கள் மின்சாரக் கட்டணம்
1 ரூபா 67 சதம் மட்டுமே!
மேலதிக விவரங்களுக்கு:
சர்வதேச வர்த்தக கண்காட்சி
Stall No.: 205
Phone : 021 320 17 71

CMB-ZURICH-CMB - 78800/=
COLOMBO-SHARJAH-12500/=
COLOMBO-DOHA -15700/=
CMB-LONDON-CMB -70800/=
Call 0777727617
AIR MARK Travels & Tours IATA

யாழ். நகரில் தரம் வாய்ந்த இறக்குமதி செய்யப்பட்ட டைல்கள் மற்றும் குளியலறை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள..
Open Every day
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
# 05, Stanley Road, Jaffna. 021 222 4777 / 021 2...
Ranjanas CERAMIC metro engine...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் ந...

# இறுதிப் போரில் படையினர் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம் மக்களும் கொல்லப்பட்டனர்

## இலங்கை ஜனாதிபதி தான் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, ஜன.22

இறுதிப்போரில் இலங்கைப் படையினர் மற்றும் சிங்கள, முஸ்லிம் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டனர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

ஆனால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்ற உண்மையை அவர் அந்த நிகழ்வில் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போரில் உயிரிழந்த குடிமக்கள் ஊர்காவற் படையினரின் நினைவாக மிஹிந்தலையில் நிறுவப்பட்டுள்ள நினைவுத் தூபியை திறந்து வைத்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில், இந்தப் போரில் கணிசமானளவு பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள நிலையிலேயே, ஜனாதிபதி மஹிந்த இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து துடைத்தெறிந்தாலும், நாம் பெற்றுக்கொண்ட வெற்றியை மீள அபகரித்துக் கொள்ள மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறு செயற்படுபவர்கள் தொடர்பாக அரசு அவதானத்துடன் உள்ளது.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டை பாதுகாப்பதற்கு இராணுவம், பொலிஸாரைப் போன்றே ஊர்காவற் படையினரும் தமது உயிரை பணயம்வைத்துப் போராடினர். கெப்பிட்டிக்கொல்லாவயில் இடம்பெற்ற குரூரமான சம்பவத்தை நாம் மறக்க முடியாதது.

சம்பவத்தைக் கேள்விப்பட்டு நாம் உடனடியாக அங்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களிடம் துக்கம் விசாரித்தோம். ஏனைய மக்களை ஆறுதல்படுத்துவதிலும் ஈடுபட்டோம்.

அதுவரை காலமும் ஊர்காவற் படையினர் உதாசீனங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. நாம் அவர்களுக்கு சிறந்த பயிற்சியளித்தோம். அவர்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொடுத்து அவர்களையும் பலமுள்ள படையினராக உருவாக்கினோம்.

அவர்களுக்கான பொறுப்பை பாதுகாப்புச் செயலாளர் ஏற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் மூலம் கிராமங்களினதும், பிரதேசத்தினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன் கிராமங்களை விட்டுவிட்டு வெளியேற முற்பட்ட மக்களை தடுத்து அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பையும் அவர்கள் வழங்கினர்.

எல்லைக் கிராமங்களிலுள்ள மக்களை அங்கிருந்து துரத்துவதற்கு பயங்கரவாதிகள் திட்டமிட்டனர். அவர்களைத் தெற்குப் பக்கம் துரத்த எண்ணினர். எனினும், நாம் ஊர்காவற் படையினருக்கு பயிற்சிகளை வழங்கியிருந்ததால் அவர்கள் அதனைத் தடுத்தனர்.

நாட்டை மீட்கும் வெற்றியின் பங்காளர்களாக சிவில் ஊர்காவலர் திகழ்கின்றனர். மனிதாபிமான நடவடிக்கையின் போது 525 ஊர்காவல் படையினர் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

அதேவேளை சிங்கள, முஸ்லிம் மக்களும் உயிரிழந்துள்ளனர். தாய்நாட்டை மீட்பதற்காகவே அவர்கள் இந்தத் தியாகத்தைச் செய்துள்ளனர் - என்றார். (ஒ-10)

# சென்னை விமான நிலையத்தில் யாழ். இளம் பெண் திடீர் மாயம்

## அதனால் அங்கு பெரும் பரபரப்பு

சென்னை, ஜன.22

சென்னை, மீனம்பாக்கம் அண்ணா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து திடீரென மாயமானார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தானுஷா (வயது 26) என்ற இளம் பெண்.

இவர் கொழும்பு செல்வதற்கே விமான நிலையம் வந்திருந்தார்.

தானுஷா, குடிவரவு குடியகல்வு மற்றும் சுங்கப் பிரிவினரின் சோதனைளை முடித்துக்கொண்டு விமானம் ஏறத் தயாராக இருந்தார்.

ஆனால், விமானம் புறப்படும் வேளையில் அவர் இல்லை. அவர் திடீரென காணாமற் போயிருந்தார்.

விமான நிறுவன அதிகாரிகள் உஷாரானார்கள். விசாரணையை முடுக்கினர். அதன்போது ஒரு பெண் தமது போடிர்ங் பாஸ் மற்றும் அனுமதிச் சீட்டுக்களைக் கொடுத்துவிட்டு வெளியே சென்றது தெரியவந்தது.

போர்டிங் பாஸ் பெற்றபின் ஒரு பயணி வெளியே செல்ல அனுமதி கிடையாது என்பதனால் இவரை வெளியே செல்ல அனுமதித்த மத்திய தொழிற்படையினரிடம் அதிகாரிகள் விசாரித்துள்ளனர்..

அத்துடன், அந்தப் பெண் கொண்டு வந்த பயணப் பையில் வெடிகுண்டு இருக்குமோ என்ற சந்தேகமும் வந்தது.

இதையடுத்து வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் பயணப் பையைச் சோதனையிட்டபோது அதில் எதுவும் இல்லை என தெரியவந்தது.

இந்தச் சம்பவம் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. எனினும் 15 நிமிடத்துக்குப் பின் விமானம் புறப்பட்டது.

தானுஷா கடத்தப்பட்டாரா? இல்லை எவருடனாவது சென்றுவிட்டாரா என்பதை கண்டறிய பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(ஒ-319)

### ரூ.12.379 மில்லியன் பெறுமதியான

# வைத்திய உபகரணங்கள் நாளை யாழ். ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு, கனடாவிலுள்ள கனேடிய மருத்துவ மற்றும் பல் அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் இதய மருத்துவருமான வி.சாந்தகுமாரின் ஏற்பாட்டில் 12.379 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களின் வைபவரீதியான கையளிப்பு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் இதய ஆய்வு கூடத்தில் நடைபெறவுள்ளது.

எதிரொலி இதயத் துடிப்பு பதிவு கருவி, ஈ.சி.ஜி. இயந்திரம், தானியங்கி இரத்த அமுக்க கண்காணிப்பு கருவிகள் என்பனவே யாழ். போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. 12.379 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த உபகரணங்களின் வைபவரீதியான கையளிப்பே நாளை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கைக்கான கனேடிய தூதுவர், புரூஸ் லீவி, சிறப்பு விருந்தினர்களாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் பி.ஜி.மகிபாலா, றோட்டறி 3220 மாவட்ட ஆளுநர் றொட்டேறியன் பி.எச்.எவ். ஜெகான் ஸ்ரீபத்தனாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஒ-15)

# போலி கடனட்டை மோசடி யாழ். இளைஞர் கைதானார்

## அவர் தற்போது புழல் சிறையில்

கொழும்பு, ஜன.22

இலங்கை இளைஞர் ஒருவரை போலி கடனட்டை மோசடி விவகாரம் காரணமாக இந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர். தற்போது அவர் புழல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 28 வயதான நந்தீபன் எனும் இளைஞர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்தும் இவரின் சகாவான வினோ என்பவரிடமிருந்து இருந்து 70 போலி கடன் அட்டைகள், 200 வங்கி அட்டைகள் என்பனவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவ்விருவரும் வேளச்சேரி மற்றும் கிழக்கு கடற்கரைச்சாலை ஆகிய இடங்களிலுள்ள தன்னியக்க பணப்பரிமாற்ற நிலையங்களிலிருந்து 1.16 லட்சம் இந்திய ரூபாவை பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நந்தீபன், வினோத் ஆகியோரிடம் நடத்திய விசாரணைகளின்போது தாம் போலி கடனட்டை தயாரிக்கும் முறையை மலேஷியாவில் வசிக்கும் மற்றொரு இலங்கையரான குமார் மூலம் அறிந்ததாக கூறியுள்ளனர். குமாரின் வழிகாட்டலின் பேரில் அவர்கள் பணப்பரிமாற்ற இயந்திரத்திலிருந்து பணம் பெற்றுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் இரண்டாவது தடவையாக சென்னைக்கு வந்த நந்தீபன் அங்கு குமாரைச் சந்தித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் வசிக்கும் தனது மனைவி, மகனை சந்திப்பதற்காக நந்தீபன் கடந்த 12 ஆம் திகதி இலங்கைக்கு திரும்பவிருந்தார். (ஒ-10)

# தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் தலைவராகத் தவா செயலாளராக வித்தி

கொழும்பு, ஜன.22

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளை கடந்த புதனன்று கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கொழும்பு மாவட்டக் கிளையின் தலைவராக மூத்த சட்டத்தரணி கே.வி. தவராஜாவும், செயலாளராக மூத்த ஊடகவியலாளர் என். வித்தியாதரனும், பொருளாளராக எஸ்.சிவலோகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

கொழும்பு பம்பலப்பிட்டி, றிட்றீட் அவெனியூவில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சி.ஸ்ரீதரன் மற்றும் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கொழும்பு மாவட்டச் கிளையின் துணைத் தலைவர்களாக சி.இரத்தினவடிவேல், மா.தேவராஜா ஆகியோரும், துணைச் செயலாளராக கே.உதயகுமாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுமந்திரன் உட்பட ஒன்பது பேர் செயற்குழுவுக்குத் தெரிவாகினர்.

தமிழரசுக் கட்சி உறுப்பினர்களைப் பதிவு செய்து, கொழும்பு மாவட்டக்கிளையை விரிவுபடுத்தி, செயலூக்கப்படுத்துவது என்றும் -

கொழும்பு மாவட்டத்தில் கட்சியின் செயற்பாடுகளைப் பலப்படுத்தும் வகையில் மாதாந்த சந்திப்புகள், கூட்டங்கள், ஒன்றுகூடல்கள் போன்றவற்றை நடத்துவது என்றும் -

கடந்த வருடம் போன்று இம்முறையும் தலைநகரில் தந்தை செல்வா நினைவு தினக் கூட்டத்தை உரிய அளவில் ஏற்பாடு செய்வது என்றும் -

கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு கலாம் செல்வதற்கு விருப்பம்

## இலங்கை அரசிடம் அனுமதி கேட்பேன் என்கிறார் அவர்

கொழும்பு,ஜன.22

இடம்பெயர்ந்த முகாம்களுக்குச் செல்ல விரும்புகிறேன். அங்குள்ள மக்களைச் சந்தித்து கலந்துரையாட ஆவலாக உள்ளேன். இதற்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறு இலங்கை அரசை கேட்பேன்.

-இவ்வாறு இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் புதுடில்லியில் தெரிவித்தார்.

கொழும்பு புறப்பட முன்னர் இந்திய ஊடகங்களுக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களையும், இந்துக் கல்லூரி மாணவர்களையும் சந்திக்கவுள்ளேன். [illegible]டன் அங்குள்ள [illegible]கள், நிபுணர் [illegible]துமக்களை [illegible] நிச்சயமாக மிகவும் மகிழ்ச்சிடைகிறேன்.

2020இல் இந்தியாவை ஆற்றலுள்ள நாடாக மாற்றுவதற்கான திட்டம் குறித்த எமது அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்த அனுபவங்களை இலங்கை மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

மும்மொழிக் கல்வித் திட்டம் இலங்கையை மீளக் கட்டியெழுப்ப நல்லதொரு வாய்ப்பாக அமையும்.

இந்தியாவில் பலமொழிகள், பல கலாசாரங்கள் இருந்த போதிலும், ஜனநாயகம் எல்லா மக்களுக்கும் சம உரிமையை உறுதி செய்கிறது. அதன் மூலம் அமைதியான வாழ்வை உறுதிப்படுத்த முடியும்.

இலங்கையை இருதரப்பு தலைவர்களையும் சந்தித்து பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்புவது குறித்த பேசவுள்ளேன். இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு செல்வதற்கு ஒழுங்குகளை செய்து தருமாறும் அரசிடம் கோரவுள்ளேன்.

இந்தப் பயணம் அமைதியை ஊக்குவிப்பதற்கானது. இதனை சிலர் விமர்சித்தாலும் அது அவர்களின் ஜனநாயக உரிமை.

போர்கள் மோசமான நிலைமைகளையே கொண்டு வந்துள்ளன. தமது மகன்களையே தந்தைமார் புதைத்துள்ளனர்.

எந்தப் பிரச்சினைக்கும் போர் மூலம் தீர்வு காண முடியாது. மோதல்களுக்கான தீர்வாக எந்தவொரு போரும் அமையவில்லை.

போருக்குப் பிந்திய நம்பிக்கையை, உண்மையை, [illegible] இலங்கையின் தேவை - என்றார் கலாம். (ஒ-10)

# கௌரவிப்பு

கலாபூஷணம் விருது பெற்ற கே.ஆர்.டேவிட் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3.15 மணிக்கு அல்வாயில் உள்ள கலையகத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாராட்டுரையை வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ் . உதயகுமார் வழங்குவார்.


# கணினி தட்டெழுத்தாளர் தேவை

எமது நிறுவனத்துக்கு
கணினித் தட்டெழுத்தாளர்கள் தேவை

மிக வேகமாகத் தட்டெழுத்துச் செய்யக்கூடிய
ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 26.01.2012
ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக
அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன்,
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னித் தேவைகள் நிறைவேற வலுவாய்பாடு வேகமே தேவை

வன்னிப் பிரதேசங்கள் அடங்கிலும் நடைபெற்ற இறுதிப் போரினால் உண்டான உறவுகளின் உயிர் இழப்புகளினாலும், உடமை இழப்புகள், சொத்து அழிவுகள், தொழில் இன்மை போன்ற பல்வேறு வகைப்பட்ட தாக்கங்களினாலும் அல்லற்படும் மக்களாக, ஏதிலிகள் என்ற சொல்வகைக்குள்ளும் அடங்காத நிலையில் உள்ளவர்கள், பல்லாயிரம் பேர்.

இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து ஏறக்குறைய இரண்டு வருடங்கள் கடந்தும், முந்திய நிலையை எட்டிப் பிடிப்பதற்கு இன்னும் எத்தனை வருடங்கள் ஆகுமோ என்ற மன ஏக்கத்துடன் நாள்களைக் கழிக்கிறார்கள்.

ஒரு பிரிவில், ஒரு துறையில் என்றில்லாமல் மிகப் பல சேவைகளும் பாதிப்புற்று, சராசரி தேவைகளைத் தானும் நிறைவேற்ற இயலாமல் அல்லாடுகிறார்கள்.

மாவட்ட மட்டங்களில், வன்னி வாழ் மக்கள் தமது நாளாந்தத் தேவைகளையும் சீவியத்தையும் முந்திய நிலைக்குக் கொண்டு வர இயலும் என்று கனவுதானும் காண முடியாத நிலையில் உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலில் தொட்டுக் காட்ட வேண்டிய உடனடித் தேவை, வைத்திய வசதிகளின் பற்றாக் குறைகள். ஊருக்கு ஊர் இடத்துக்கு இடம் போதாமைகளும், கிடையாமைகளும் போட்டி போட வைக்கப்படுகின்றன. அரசாங்கத்தின், அதன் அலகுகளின், அவற்றில் பணியாற்றும் அதிகாரிகளின் மக்களுக்குரிய வைத்தியத் தேவைகள் குறித்த அசமந்தமான போக்கே இதற்கு மூலகாரணம்.

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பிரதான ஆஸ்பத்திரி தொடக்கம் தர்மபுரம், கண்டாவளை, வட்டக்கச்சி, முழங்காவில், வேரவில், பூநகரி, அக்கராயன், வன்னேரிக்குளம், பச்சிலைப்பள்ளி உட்பட்ட சகல ஆஸ்பத்திரிகளிலும் வைத்தியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. நடமாடும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களின் சேவைகளும் வைத்தியர்கள், சிற்றூழியர்கள் பற்றாக்குறைகளால் தூர்ந்து போயுள்ளன. இப்போது கால் மட்டம் அரை மட்டத்தில் இயங்கும் வைத்திய நிலையங்கள் கூட வைத்தியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் போதாமையால் அனேகமாக நண்பகல் பன்னிரண்டு மணியோடு மூடப்பட்டு விடுகின்றன. அதனால் நோயாளர்கள் படும் பாடுகளையும், பாதிப்புகளையும் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இம்மாவட்ட மக்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் நலிந்து போயுள்ள வைத்திய சேவைகளை விட மோசமாக உள்ளன.

''மாடுமோ செத்தல் மாடு
வண்டியோ ஓட்டை வண்டி
மாடிழுக்க மாட்டாமல்
மாய்கிறாண்டி உன் புருஷன்''

என்ற கதையாக ஆகிப் போயிருக்கிறது வன்னிப் பிரதேச மக்களின் இன்றைய போக்குவரத்து உட்பட்ட ஏனைய அத்தியாவசியத் தேவைகளும்.

அடுத்துக் கல்விப் புலத்துக்குள் சென்று பார்த்தால், பாடசாலைகளில் எழுபது வீதமானவற்றின் கட்டடங்கள் மற்றும் பௌதிக வளங்கள் சேதமடைந்தும் அற்றும் வற்றிப் போய்விட்டன. மாணவர்கள் மரநிழல்களிலும், கூரைகள் மற்றும் மறைப்புகள் அற்ற வசதிகள் குறைந்த இடங்களில் இருந்து கற்க வேண்டிய பரிதாப நிலை அதிக சதவீதப் பாடசாலைகளில் காணப்படுகிறது.

அது போர் விளைவித்த அழிவு நிலை என்றால், கிளிநொச்சி மாவட்டத்தின் ஒட்டுமொத்தக் கல்வி வளர்ச்சியை தறுக்கணிக்கச் செய்யும் வகையிலான கல்விப்புலச் செயற்பாடுகள் பெருகி வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் **106** பாடசாலைகள் இயங்குகின்றன. அவற்றில் எண்பது சதவீதத்துக்கும் அதிகமானவற்றில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. பல பாடசாலைகளில் பாடரீதியான ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு உண்டு. அதனால் அதிபர்களே குறிப்பிட்ட பாடங்களைப் போதிக்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தைப் போன்றே, வைத்திய சேவை சீர்குலைந்துள்ளது. ஒட்டுசுட்டான் மத்திய வைத்தியசாலையில் நிரந்த வைத்தியர் எவரும் நியமிக்கப்படவில்லை. சிகிச்சை பெறச் செல்வோர் பலமணி நேரம் காத்திருக்கும் நிலை. ஊர் மனைகளில் உள்ள பொதுக் கிணறுகள் மழை, வெள்ளம் புகுந்த பின்னர் இன்னும் துப்புரவு செய்யப்படவில்லை. போக்குவரத்துச் சேவையும் இந்த மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே நடை பெறுகிறது.

இவற்றுக்கும் மேலாக, மாவட்டத்தின் பல கிராமங்களைச் சேர்ந்த ஊனமுற்றவர்களுக்குப் போதிய உதவிகள் கிடைப்பதில்லை. அதேபோன்று தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்ட இளைஞர்களுக்கு நிவாரணம் மற்றும் உதவிகள் ஆமை வேகத்திலேயே வழங்கப்படுகின்றன. அவர்களைச் சமூகத்திற்குள் உள்வாங்குவதற்கான திட்டங்கள் எதுவும் அரசிடம் இருப்பதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

வன்னி மாவட்ட மக்களின் வாழ்க்கை நிலை, போர் முடிவுற்று இரண்டு வருடங்கள் நிறைவடைய உள்ள போதிலும், இன்னும் நிலத்துக்குள்ளே இருக்கும் நிலையே காணப்படுகிறது என்பதற்கு இவற்றை விட வேறு உதாரணங்கள் வேண்டும் என்பதல்ல.

மொத்தத்தில், வன்னிப் பிரதேசத்தில், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை அரசு வழமையான பெருக்கல் வாய்பாட்டின் அடிப்படையில் அன்றி, வலுவாய்பாட்டு வெகு வேகத்தில் இயற்ற வேண்டும்.

தான் அழித்தொழித்து நிர்மூலமாக்கிவிட்ட வன்னியையும் அங்கு வாழும் மக்களையும் தூக்கிவிட வேண்டிய தார்மீகக் கடமை அரசுக்கு உண்டு. அதேபோன்று, அங்கே வாழும் மக்களின் நலன்களையும் தேவைகளையும் முன்னுரிமை ரீதியில் சேவை மனப்பான்மையுடனும் அரப்பணிப்புடனும், அங்குள்ள மாவட்டங்களில் பணிபுரியும் எமது அரச உயர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், மனம் வைத்துச் செயலாற்ற வேண்டும். அல்லற்பட்டு ஆற்றாது மக்கள் நிமிடத்துக்கு நிமிடம் விடும் கண்ணீரைத் துடைக்கும் மனிதநேயம் முதலில் எம் மத்தியில் உதிக்கட்டும்.

# தமிழ் அரசியல் கைதிகளை சுதந்திர தினத்தில் விடுவியுங்கள்

## பிரபா கணேசன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜன.22

இலங்கையின் சுதந்திர தினத்தில் தமிழ் அரசியல் கைதிகளையும் அரசு விடுதலை செய்ய வேண்டும் - என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணே சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சுதந்திர தினத்தில் பல்லாயிரம் கைதிகளை விடுதலை செய்யப்போகிறது என அரசு அறிவித்துள்ளது. இவர்களில் விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளையும்விடுதலைசெய்ய வேண்டுமென பாதுகாப்புச் செயலாளரிடம் கோரவிருக்கிறேன்.

**பல வருட காலமாக விசாரணைகள் இன்றியும் சந்தேகத்தின்பேரிலும் கைதுசெய்யப்பட்டு, சிறைச்சாலைகளில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளையும் நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்ய வேண்டும்.**

கடந்த வருடம் பண்டிகை தினங்களில்கூட இந்தக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படவில்லை என சிறைச்சாலை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். அதே நேரம், அடுத்த மாதம் சுதந்திர தினத்தன்று பல்லாயிரக் கணக்கான கைதிகள், பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அறிவித்துள்ளார்.

இதன்போது, பல வருட காலமாக விசாரணைகள் இன்றியும் சந்தேகத்தின்பேரிலும் கைதுசெய்யப்பட்டு, சிறைச்சாலைகளில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளையும் நல்லிணக்கத்தின்பேரில் விடுதலை செய்ய வேண்டுமென பாதுகாப்புச் செயலாளரிடம் கோரவுள்ளேன். பாதுகாப்புச் செயலாளரின் உதவியாளர் மேஜர் ருவன் ஏல பொல மூலமாக அடுத்த வாரம் பாதுகாப்புச் செயலாளரை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன- என்றார். (உ-சி)

# தீக்குளிப்பு வேடத்தில் விமல், சாமியாக சம்பிக்க; மஹிந்தவின் இயக்கத்தில் வருகிறது திரைப்படம்

## கிண்டலடிக்கிறார் ஜே.வி.பியின் லால்காந்த

கொழும்பு, ஜன.22

அதிகாரப் பகிர்விற்கு எதிரான திரைப்படத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவும், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் தோன்றுவார்கள் என்றும், இந்தத் திரைப்படத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இயக்குவார் என்றும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

இந்தப் படத்தில் அதிகாரப்பகிர்விற்கு எதிராக விமல் வீர வன்ஸ தீக்குளிக்க இருப்பதுடன், சம்பிக்க ரணவக்க மொட்டையடித்து துறவறம் பூணுவார் என்றும் அவர் கிண்டலடித்துள் ளார்.

அகில இலங்கை போக்கு வரத்து சேவை சங்கத்தின் 14 ஆம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**அதிகாரப் பகிர்வுக்கு தாம் இணங்கிய போதிலும், கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களும் மக்களும் விரும்பவில்லை எனக் கூறுவதனையே ஜனாதிபதி விரும்புகின்றார்.**

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

13 ஆவது திருத்தச் சட்டத் திற்கு அப்பாலான இந்தியாவின் தீர்வுத் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டதா? அல்லது இல்லையா என்பதை ஆளும் கட்சி மக்களுக்கு தெளிவாக அறிவிக்க வேண்டும்.

தற்போது அரசோ ஜனாதிபதியோ அதிகாரப்பகிர்வு குறித்துப் பேசவில்லை. இன்னும் சில தினங்களில் அதிகாரப்பகிர்வு குறித்து இருவர் பேசுவார்கள்.

சம்பிக்க ரணவக்க மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் இது தொடர்பில் பேசுவார்கள்.

அதிகாரப் பகிர்விற்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராட்டம் நடத்துவதற்கு அவர்கள் இருவருக்கும் ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

அதிகாரப் பகிர்விற்கு தாம் இணங்கிய போதிலும், கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களும் மக்களும் விரும்பவில்லை எனக் கூறு வதனையே ஜனாதிபதி விரும்புகின்றார்.

- இப்படி அவர் தெரிவித்தார். (உ-சி)

# நிகழ்வுகள் இன்று

**கலாசார நிகழ்வு**

மக்கள் வங்கியின் கலை வட்டம் நடத்தும் யாழ், வன்னிப் பிராந்திய பணிப்பாளர்களின் கலாசார நிகழ்வு பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (த-313)

**ஆண்டுவிழா**

சமூளக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியன இணைந்து நடத்தும் முப்பெரும் ஆண்டுவிழா காலை 8.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண் டபத்தில் நடைபெறவுள்ளது.(த-313)

**அபிராமிப் பட்டர் விழா**

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகாபரமேஸ்வரி ஆலயத்தின் அபிராமிப்பட்டர் விழா பிற்பகல் 3மணிக்கு பிரம்மஸ்ரீ வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெற வுள்ளது.(த-313)

**இரத்ததானம்**

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வருடாந்த இரத்ததான முகாம் காலை 8.30 மணிக்கு கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

**ஒன்று கூடல்**

வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு நடத்தும் ''அன்புவார ஒன்று கூடல்'' நிகழ்வு காலை 9மணிக்கு திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

**மீள் பரீட்சை**

வடமாகாணத்தில் அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான வாய்மொழி மூல மீள் பரீட்சை காலை 9மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளது. (த-313)

**நினைவுப் பேருரை**

இணுவில் கா.கேசவன் நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும் பிற்பகல் 4மணிக்கு இணுவில் சிவகாமி அம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவத் திருநெறிக் கழகத் தலைவர் கே.தவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விரந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் கலந்துகொள்வார். (த-313)

**போட்டிகள்**

வைத்தீஸ்வராக் கல்லூரி இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு முன்னோடி நிகழ்வில் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி யும்,பெண்களுக்கான துவிச்சக்கர வண்டிப் போட்டியும் காலை 5.45 மணிக்கு கல்லூரி முன்றலில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளளது.(313)

**கூட்டம்**

கணபதி படிப்பகத்தின் 45 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் பிற்பகல் 3.30மணிக்கு நெடியகாடு கணபதி பாலர் பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.(த-313)

* * *

குருநகர் புனித யாகப்பர் ஆலய திருஇருதய சபையின் 107 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் பிற்பகல் 5மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் சி.தர்சீசியஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்குத் தந்தை அருட்திரு ஆர்.எக்ஸ். நேசராசா கலந்து கொள்வார்.(த-313)


* * *

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய தரும பரிபாலன சபையின் வருடாந்தக் கூட்டம் முற்பகல் 10மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (த-313)

* * *

செம்பியன் பற்று அ.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் பொதுக்கூட்டம் முற்பகல் 10மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தயக்கம் என்ன ?

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக மஹேல ஜெயவர்தனவை நியமிக்கலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் எழுந்துள்ள நிலையில் அந்தப் பதவியை ஏற்பதற்கு அவர் தயக்கம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மஹேல தெரிவித்தமை வருமாறு:

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவராக நான் பதவியேற்குமாறு கோரப்பட்டால் அது குறித்து யோசிக்க வேண்டியிருக்கும்.

இலங்கை அணியின் தலைவர், பயிற்றுநர் பதவி மாற்றங்கள் உட்பட முழுமையான மறுசீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக செய்திகள் வெளியான நிலையில் மஹேல ஜெயவர்தன இவ்வாறு கூறியுள்ளார். முன்னாள் தலைவரான மஹேல மீண்டும் அணித்தலைவராக நியமிக்கப்படலாம் எனவும் செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தென்னாபிரிக்காவின் கிம்பர்ளி நகரில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், அணித்தலைவர் பதவி குறித்து பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளதா எனவும் மஹேலவிடம் கேட்கப்பட்டது.

' இல்லை என்னிடம் ஒருவரும் பேசவில்லை. கடந்த 6 மாதங்களாக இவ்வாறான கட்டுரைகளை நான் பார்த்துள்ளேன். அது எனக்குத் தெரியும். ஆனால் அந்த விடயங்கள். எனது கட்டுப்பாட்டில் இல்லை' என்று மஹேல பதிலளித்தார்.

தென்னாபிரிக்க அணியுடன் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் காயம் காரணமாக மஹேல விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (15)

''இலங்கை அணியின் தலைவர், பயிற்றுநர் பதவி மாற்றங்கள் உட்பட முழுமையான மறுசீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.''


ஆட்டநாயகன் பெரேரா...


44 பந்துகளில் 5 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் 69 பந்து வீச்சில் இரண்டு இலக்குகள்



## இலங்கை வெற்றி!

**நேற்றுமுன்தினம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டியது.**





# இது எனக்கு அவமானம்...

ஆஸ்திரேலியாவில் இவர்களது மோசமான ஆட்டம் ஒரு கிரிக்கெட் வீரரான என்னை அவமானம் அடையச் செய்கிறது.

**- கபில்தேவ்**



ஆஸ்திரேலியாவில் இந்திய அணி மோசமாக விளையாடி வருவது கிரிக்கெட் வீரரான எனக்கு அவமானமாக உள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி முதல் மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் படுதோல்வி அடைந்து தொடரை இழந்தது. இது குறித்து கபில்தேவ் கூறியதாவது:

ஆறு மாதத்திற்கு முன்பு முதலிட அணியில் இடம் பெற்றிருந்த அதே வீரர்கள் தான் தற்போதும் உள்ளனர். ஆஸ்திரேலியாவில் இவர்களது மோசமான ஆட்டம் ஒரு கிரிக்கெட் வீரராக என்னை அவமானம் அடையச் செய்கிறது. மூன்று ஆட்டத்திலும் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று எதிலுமே சரியாக செயல்படவில்லை.

டெஸ்ட் ஆட்டம் என்பது ஐந்து நாள்கள் நடக்கக் கூடியது. இதிலும் நம்முடைய வீரர்கள் ஏமாற்றத் தான் செய்தனர். உணர்ச்சி வசப்பட்டு பேசிக் கொண்டிருப்பதற்கு இது நேரமில்லை. நமது அணி சரிவை நோக்கி செல்கிறது. அதிலிருந்து மீள வேண்டும். வீரர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். குழுவாக இணைந்து செயல்பட முயற்சிக்க வேண்டும். அவர்களின் அனைத்து முயற்சிக்கும் ஆதரவு தர தயாராக உள்ளோம் என்றார். (15)

## அனுபவம் உதவாது

ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் இர்பான் பதான் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து இர்பான் பதான் கூறுகையில், ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே இருமுறை ஆடியுள்ளேன்.

எனினும் தற்போதைய சூழ்நிலை முற்றிலும் மாறியிருக்கும். பழைய அனுபவங்கள் உதவாது. சர்வதேச போட்டி என்றால் நெருக்கடிகள் இருக்கத்தான் செய்யும். கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி கொள்வேன் என்றார். (15)

## கிரிக்கெட்டை வாழ்வாக்கும் ரசிகர்கள்

**இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி பெற்றமை நாட்டிற்கு ஊக்குவிப்பாக அமைந்துள்ளதாக பாகிஸ்தான் அணியின் இடைக்கால பயிற்றுவிப்பாளர் மொசின் கான் கூறியுள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தமது அணியின் முன்னாள் வீரர்கள் சிலர் தேவையற்ற செயற்பாடுகளை மேற்கொண்டு பாகிஸ்தான் கிரிக்கெட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.**



**கிரிக்கெட் பாகிஸ்தானில் விளையாட்டாக மட்டும் பார்க்கப் படுவதில்லை எனவும், அதனை ரசிகர்கள் ஒரு வாழ்க்கையாகவே பார்ப்பதாகவும் மொய்சின் கான் சுட்டிகாட்டியுள்ளார். (15)**

## முன்னேறும் அஜ்மல்

டெஸ்ட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது. இதில் துடுப்பாட்ட வரிசையில் இலங்கையின் சங்ககார முதலிடத்தையும், தென்னாபிரிக்காவின் கலிஸ் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளனர். சச்சின் 9 ஆவது இடத்தில் நீடிக்கிறார். பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலில் முதல் இரு இடங்களில் முறையே தென்னாபிரிக்காவின் ஸ்ரெயின், இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன் ஆகியோர் உள்ளனர். இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் ஒரு இடம் இறங்கி 4 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல் முன்னேற்றம் கண்டுள்ளார். டுபாயில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 10 இலக்குகள் வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்ட அவர் 9 இடங்கள் ஏற்றம் கண்டு 3 ஆவது இடத்தை பிடித்துள்ளார். இதே போல் இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் ஒரு இடம் சரிந்து 9 ஆவது இடத்தில் இருக்கிறார். முதல் 10 இடத்திற்குள் இலங்கைப் பந்துவீச்சாளர்கள் எவருமே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# மூன்றாவது சுற்று முடிவுகள்...



ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுக்கு, ஸ்பெயின் வீரர் நடால், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முன்னேறினர்.

மெல்போர்ன் நகரில், 100 ஆவது ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் தொடர் நடக்கின்றது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் ஸ்பெயின் வீரர் நடால், சுலோவேகியாவின் லுகாசை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால், 6-2, 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், சுவிட்சர்லாந்தின் பெடரர், குரோசியாவின் கார்லோவிச்சை 7-6, 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்ற மூன்றாவது சுற்றுப் போட்டியில், ஸ்பெயினின் பெலிசியானோ, உக்ரைனின் அலெக்ஸாண்டர், சீன தைபேயின் பென்னைசன், செக் குடியரசின் தாமஸ், ஸ்பெயினின் நிக்கோலஸ் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

**கிளைஸ்டர்ஸ் அசத்தல்:**

பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில், பெல்ஜியத்தின் கிளைஸ்டர்ஸ், சுலோ வேகியாவின் ஹண்டுசோவாவை சந்தித்தார். இதில் 'நடப்பு சம்பியன்' கிளைஸ்டர்ஸ், 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதன் மற்றொரு போட்டியில், முதல் தர வீராங்கனை டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, ருமேனியாவின் மோனிகாவை 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தினார்.

**நல்பாந்தியனுக்கு அபராதம்**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில், அமெரிக்காவின் இஸ்னர், சந்தித்தார். அர்ஜென்டினாவின் நல்பாந்தியன் மோதினர். இருவரும் தலா 2 செட் வென்றனர். வெற்றி யாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில், இஸ்னருக்கு சாதகமாக நடுவர் தீர்ப்பு வழங்கியதாக ஆவேசமடைந்த நல்பாந்தியன், தண்ணீர் போத்தலை எடுத்து அங்கிருந்த ஊழியர் மீது வீசினார். இதையடுத்து இவருக்கு ரூ. 4 லட்சம் அபாரதம் விதிக்கப்பட்டது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டக்ளஸ் கூட்டிய கலந்துரையாடல் யாழ்.செயலகத்தில் மூடிய அறையில்

## காணி விடயம் தொடர்பாக ஆராய்வு

யாழ்.செயலகத்தில் நேற்று முன்தினம் காணி தொடர்பான கலந்துரையாடலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூடிய அறையினுள் நடத்தினார். நேற்றுமுன்தினம் இந்தக் கலந்துரையாடல் திடுதிடுப்பென ஏற்பாடாகி இருந்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று முன்தினம் காலையே அறிவிக்கப்பட்டு மதியம் கலந்துரையாடல் இடம்பெற்றது. காணி தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுவதற்காகவே இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடமாகாண காணி ஆணையாளர் பி.தயானந்தா, யாழ்.மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் இலங்கை மின்சார சபையினரும் கலந்துகொண்டனர்.

மாவட்ட செயலகத்தில் அரச அதிபரின் அறையினுள்ளேயே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

அதை அடுத்து அங்கிருந்து ஊடகவியலாளர்கள் வெளியேறினர். அந்தச் சமயம் அறையை விட்டு வெளியில் வந்த அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், இது அமைச்சரினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கூட்டம். இதில் அமைச்சரின் ஊடகவியலாளர்கள் மட்டும் கலந்து கொள்ள முடியும். என்னைச் சந்திப்பதாயின் கலந்துரையாடல் முடிந்த பின் சந்திக்கலாம் என்று கூறினார்.

அதன் பின்னர் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பழைய பூங்காவில் அமைக்கப்பட்டு வரும் கட்டடங்கள் தொடர்பிலேயே ஆராயப்பட்டது.

இலங்கை மின்சார சபை தனக்குச் சொந்தமான யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள காணியை போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்குவதாயின் அதற்கு மாற்றீடான காணியைக் கோரியிருந்தனர். அதன்படி மின்சார சபைக்கு ஏற்கனவே பழைய பூங்காவினுள் காணி வழங்கப்பட்டது.

அந்தப் காணி பழைய பூங்காவில் வழங்க முடியாதென அமைச்சரால் தெரிவிக்கப்பட்டதுடன் மின்சார சபைக்கு மாற்றுக் காணி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் பழைய பூங்காவின் திட்ட வரைபடத்தை தமக்குத் தருமாறும் அமைச்சர் டக்ளஸ் கேட்டுக் கொண்டார் என பின்னர் தெரியவந்தது. (ஒ-15)

# ஒழுங்கு முறையற்ற பஸ்சேவை எமக்குத் தேவையில்லை

## நயினாதீவு மக்கள் ஆவேசம்

யாழ்ப்பாணம், ஜன.22

நயினாதீவு பஸ் போக்குவரத்து சேவை முற்றாக சீர்குலைந்துள்ளது. நேரக்கட்டுப்பாடு இன்றி ஒழுங்கற்ற முறையிலேயே சேவைகள் இடம்பெறுகின்றன. இந்தச் சேவைகளை ஒழுங்கு படுத்த வேலணைப் பிரதேச சபைத் தலைவர் முன்வரவேண்டும்.

- இவ்வாறு வேலணை பிரதேச சபை உப அலுவலக அபி விருத்திக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தமது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

**சீரற்ற பஸ் சேவையால் சீரழிவதைவிடவும் அதனை ஒரேயடியாக நிறுத்தி விடுவது மேலானது என்று மக்கள் குமுறினர்.**

நயினாதீவு உப அலுவலக அபிவிருத்திக் கூட்டம் பொறுப்பதிகாரி ர.மோகனரூபன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக வேலணைப் பிரதேச சபை தலைவர் சி.சிவராசா கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

நயினாதீவு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் படையெடுத்து வருகின்ற ஒரு புனித பூமி.

ஆனால் இங்கு வந்தடையும் மக்கள் இந்தப் புனித பூமியை தரிசித்த தாம் நினைத்த படி வந்து செல்வதற்கு பஸ் போக்குவரத்துச் சீரானதாக இருக்க வேண்டும். சீரான பஸ் சேவை யைப் வழங்க முடியாவிடில், ஒழுங்கற்ற முறையில் நடத்துவதை விடவும் இதனை முற்றாக நிறுத்துவது சாலச் சிறந்தது.

மேலும் தற்போது நயினாதீவுக்கு வழங்கப்பட்ட பஸ் ஓட முடியாத நிலையிலேயே இருக்கிறது . இது பயன்பாட்டுக்கு ஒவ்வாதது. இவ்வாறான பஸ் எமக்குத் தேவையில்லை. அத்தோடு ஒழுங்கற்ற சேவையும் எமக்குத் தேவையில்லை - என்று மக்கள் தமது போக்குவரத்துப் பிரச்சினையை மக்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவிக்கையில்:

நயினாதீவுக்கு ஒழுங்கற்ற பஸ் சேவை தொடர்பாக எனக்கு மூன்று கடிதங்கள் ஏற்கனவே கிடைத் துள்ளன.

தற்போது தான் இதன் உண்மைத் தன்மையை அறிந்துள்ளேன்.

விரைவில் புதிய பஸ்ஸை இங்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கும் ஒழுங்கான முறையில் பஸ்சேவையை காலை, மாலை நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளையும் மேற்கொள்வேன் - எனத் தெரிவித்தார்.

இதேவேளை - மேற்படி ஒழுங்கற்ற பஸ் சேவை தொடர்பாக உடனடியாகப் போக்குவரத்து அமைச்சு செயலாளரின் கவனத்துக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கும் அவர் கொண்டு சென்றுள்ளார்.

இவ்விடயம் குறித்து கோண்டாவில் பஸ்டிப்போ பொதுமுகாமையாளருடன் அவர் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் அது கைகூடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ங-4)

## பட்டப்பகலில் 13 பவுண் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.22

சாவகச்சேரி சோலை அம்மன் கோயிலை அண்மித்துள்ள வீடொன்றிலிருந்து 13 பவுண் நகைகளும் சுமார் 6 ஆயிரம் ரூபா பணமும் பட்டப் பகலில் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீட்டுக்காரர் மரணச் சடங்கு ஒன்றுக்குச் சென்றிருந்த போதே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பத்தின்போது வீட்டின் ஓட்டைப் பிரித்தே திருடர்கள் உள்ளிறங்கி இவற்றைத் திருடியுள்ளனர். சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ங-4)



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோருக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. கைதடி கிழக்கு ராஜபுரியைச் சேர்ந்த அமரர் மயிலன் பொன்னன் ஞாபகார்த்தமாக இந்தப் பொருள்களை அவரது மகன் மோகனச்சந்திரன் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் எஸ்.கனகசபையிடம் கையளித்தார்.

# சோளச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.குடாநாட்டில் சோளச் செய்கையை ஊக்குவிப்பதற்கு மாவட்ட விவசாய திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தற்போது குடாநாட்டில் சோளம் உற்பத்தி அருகிச் செல்கின்றது. இந்த உற்பத்தியில் விவசாயிகள் அதிக அக்கறை காட்டாததே இதற்குக் காரணம்.

சோளச் செய்கையை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிப்பதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - தென் பகுதியில் இருந்து தினமும் பெரும்தொகையான சோளம் பொத்திகள் விற்பனைக்காக எடுத்து வரப்படுகின்றன. இவற்றின் வருகை அதிகரித்ததால் விலையும் குறைந்துள்ளது. (த-17)

# அபராதம் ரூபா 15 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜன.22

சட்டவிரோதமாக மது விற்பனை செய்தமை, அனுமதியின்றி மேலதிகமாக மதுபானம் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக இருவருக்கு நெடுந்தீவு சுற்றுலா நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

நெடுந்தீவுப் பகுதியில் இவ்வாறு செயற்பட்ட இதே இடத்தைச்சேர்ந்த இருவரை நெடுந்தீவுப் பொலிஸார் அண்மையில் கைது செய்து வழக்குப் பதிவு செய்திருந்தனர். இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் நெடுந்தீவு சுற்றுலா நீதிமன்றில் நீதிவான் எஸ்.எம். மகேந்திரராஜா விடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். விசாரணையின் போது சந்தேக நபர்கள் இருவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

மாதத்தில் ஒரு தடவை நெடுந்தீவு சுற்றுலா நீதிமன்ற அமர்வு இடம்பெறுகின்றது. நெடுந்தீவில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளை விரைவாக விசாரித்து [illegible] [illegible] வருகின்றது. (ங-4)

# டெங்கு ஒழிப்பு தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.22

வலி.கிழக்குப் பிரதேசத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் சுகாதார பகுதியினர் வீடு வீடாகச் சென்று டெங்குநோயைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கையைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

வீடுகளுக்குச் செல்லும் சுகாதாரப் பகுதியினர் வீட்டுச் சுற்றாடலைச் சுற்றிப் பார்த்ததுடன் அங்கு டெங்கு நோய்பரவக்கூடிய நிலை உள்ளதா எனவும் ஆராய்கின்றனர்.

சுற்றாடல்களில் இருக்கும் கழிவுப்பொருள்கள் மற்றும் பற்றைகளை உடன் அகற்றுமாறும் அவர்கள் மக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

பொது இடங்கள் மற்றும் வெறும் காணிகளில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள் செடிகள் போன்றவற்றை அகற்றாதோர் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினரின் இந்தஅறிவுறுத்தலை அடுத்துக் கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் சுற்றாடல்களை துப்புரவு செய்யும் பணியில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (த-17)

# பிணையில் எடுக்க யாரும் வரவில்லை விடுதலையாகியும் சிறையில் வாடும் நபர்

யாழ்ப்பாணம், ஜன.22

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரபல திருடன் பிணையில் விடுவிக்கப்பட்டபோதும் அவரைப் பிணையில் எடுக்க எவரும் முன்வராததனால் மீண்டும் அவன் சிறைக்குள் தள்ளப்பட்டான்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

முன்னர் ஒருமுறை நடைபெற்ற திருட்டு வழக்கில் குறித்த திருட்டுச் சந்தேக நபர் தனது தாயையும் சகோதரியையும் பிணை வைத்து வெளி வந்தான். வந்ததுமே தப்பி யோடி தலைமறைவாகி விட்டான். இதனால் இவனது தாயும், சகோதரியும் 50 ஆயிரம் ரூபா பிணைப் பணம் செலுத்தியே தம்மை விடுவிக்கவேண்டியநிலைமை ஏற்பட்டது.

இதன் பின்னர் குறித்த சந்தேக நபர் ஒருநாள் ஓட்டோவினைச் செலுத் திச் சென்றார். அப்போது குறித்த நபரின் கைவரிசைகளை அறிந்திராத குடும்பப் பெண் ஒருவர் ஓட்டோவை மறித்து, [illegible] தனது [illegible] கொண்டு சென்று விடுமாறு கூறியுள்ளார்.

குறித்த திருட்டுச் சந்தேக நபரும் இது தான் சந்தர்ப்பம் என்று அந்தப் பெண்ணை ஓட்டோவில் ஏற்றிச் சென்றார். ஓட்டோ யாழ். பொம்மை வெளியில் சென்று கொண்டிருந்தபோது திடீரென ஓட்டோவை நிறுத்தி விட்டு பெற்றோல் முடிந்து விட்டது இறங்குங்கள் என அந்தச் சந்தேக நபர் கூறியுள்ளார். இதனை உண்மை என்று நம்பி, அந்தப் பெண்ணும் ஓட்டோவிலிருந்து இறங்கினார். அடுத்த நொடியே அவர் அணிந்திருந்த சங்கிலியைச் அறுத்துக் கொண்டு குறித்த நபர் ஓடிவிட்டார். இதுபற்றி அந்தப் பெண்மணி யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

சங்கிலியைப் பறித்துச் சென்ற கில்லாடித் திருடன் அதனை தனக்கு நெருங்கிய தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படும் நகைத் தொழிலாளி ஒருவரிடம் கொடுத்து, அவரிடமிருந்து 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுச் சென்று விட்டார். பொலிஸ் விசாரணையின் போது சங்கிலியை வைத்திருந்த நகைத் தொழிலாளியை கைது செய்த பொலிஸார் அவரை நீதி மன்றில் ஆஜர் படுத்தினர். இவர் சார்பாக சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஆஜராகியிருந்தார். எனினும் குறித்த சங்கிலித்திருடனை பிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில் பிறிதொரு திருட்டுத் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரால் அந்தத் திருடன் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மன்றினால் தண்டிக்கப்பட்டார். எனினும் உடனடியாகவே அவர் ஏனைய வழக்குகளுக்காக யாழ். நீதி மன்றுக்குக் கொண்டு வரப்பட்டார்.

இந்தவழக்கு யாழ். நீதி மன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது. விசா ரணையின் பின்னர் குறித்த திருட்டுச் சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும் நகைத் தொழிலாளி பிணையில் வெளிவந்தபோதும் பிரசித்தி பெற்ற திருட்டுச் சந்தேக நபரைப் பிணையெடுக்க எவரும் முன்வரவில்லை. இதனால் அவர் மீண்டும் சிறைக்குள் தள்ளப்பட்டார். இந்த வழக்கு அடுத்த மாதம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ங-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது விவசாய பீடத்தின் பீடாதிபதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்

(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர்)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய பீட நலன்புரி சங்கம்
யாழ்.பல்கலைக்கழகம்.

(133565) (6,7,10)

---

ஜெய் குருதேவ்

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக

பத்து வயதுக்கு மேற்பட்டவர்கள்



## வாழும் கலை அமைப்பின் ஸ்ரீ ஸ்ரீ யோக

யோக ஆசனங்கள், மூச்சுப் பயிற்சி, தியானம் உடல் எடை குறைய உடலும் மனமும் ஆனந்தம் பெற

காலை 6.00 - 8.00
மாலை 6.00 - 8.00

**திகதி: 24.01.2012 - 29.01.2012**

இடம்:- மகேஸ்வரன் மணி மண்டபம் (நல்லூர்)

வாழும்கலை ஆரம்பப் பயிற்சி பயின்ற அனைவரும் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவும். T.P: 07777049593

(13360) (2-6)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது விவசாய பீடத்தின் பீடாதிபதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் அவர்களின் அன்புத் தாய்



### திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்

(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர்)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்
விவசாய பீட பீடாதிபதி
அலுவலகம்.

(13366) (6,10)

---

## சொகுசு பேருந்து அனுமதிப்பத்திரத்துடன் விற்பனைக்குண்டு



யாழ்-கொழும்பு அனுமதிப் பத்திரத்துடன் (Route-Permit), ND இலக்க, A/C, Ashok Leyland சொகுசு பஸ் உடனடி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு: 0774050936**

---

## மரண அறிவித்தல்

### திருமதி பரமானந்தம் அன்னரத்தினம்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமானந்தம் அன்னரத்தினம் 20.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி-இலட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கந்தையா-செல்லம்மா தம்பதியரின் மருமகளும் பரமானந்தத்தின் மனைவியும், விஜயலட்சுமி, விஜயராணி, சேவற்கொடியோன் (சேயோன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயும், அருளானந்தம், லதா (யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியும், சசிறஜனி, கிருபாகினி, ரேணுகா, வித்தியா, கண்ணதாஸ் ஆகியோரின் பேர்த்தியும், அனுரேகாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி, இருபாலை கிழக்கு,
இருபாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(13348) (6,7,10)

---

## காணி விற்பனை

பண்ணாகம் விசவத்தனை வீதியில் பிரதான வீதியிலிருந்து சிறிய தூரத்தில் 5 பரப்புக் காணி தனிக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 6853797 (சி/7962) (45-)

## வீடு விற்பனை

சித்தன்கேணி சந்திக்கு அருகில் பிரதான வீதியில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு உடனடியாக விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 6853797 (சி/7961) (45-)

## வீடு காணி விற்பனை

அளவெட்டி, தெற்கு, மல்லாகம் சந்தியை பிரதான வீதியில் நல்ல சூழலில் கிணற்றுடன் 10 பரப்பு காணி முழுமையாக அல்லது பகுதிகளாக விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 9117105 (சி/7960) (45-)

## வீடு காணி விற்பனை

பொலிகண்டியில் பிரதான வீதியில் (கடற்கரை வீதி) 30 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 5581639, 0112 360174
021 2223088 (சி/7959) (45-7-9)

## காணி விற்பனை

தெல்லிப்பழை, ஆனைக்குட்டி மதவடி ஒழுங்கை, தலைமன் கலட்டியில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 011 2584878, 077 2571812
075 5007648 (சி/7958) (45-7-9)

## வாடகை

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சந்திக்கு அருகில் மாடி வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 5572982 (சி/7957) (45-7-9)

## நல்லின நாய் கண்டுபிடிப்பு

நல்லூர் கைலாயபிள்ளையார் கோயிலடியில் 20.01.2012 அன்று நல்ல இனம் உள்ள நாய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்

தொடர்பு : 077 114 9527 (13301) (7-8-45)

## தேவை

எண்பது வயதான தாயை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பொறுப்புகளற்ற பெண் உதவியாளர் தேவை. சகல வசதிகளுடன் தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 075 7630165 (13342) (7-8-45)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

40 நாள்கள் பூர்த்தியடைந்த நிலையிலுள்ள அல்சேசியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 021 4900836,
077 1510306

## தேவை

அச்சகம் ஒன்றின் பயன்பாட்டுக்குப் பாவித்த மேசை, கதிரை, தளபாடங்கள் மற்றும் கணினி, மேசை என்பன தேவை

தொடர்பு: 077 2984514 (சி/8021) 45-7

## தவறிவிட்டது

காவி கோயிலடி, தவாடி வடக்கு, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த பாலசுந்தரம் முருகானந்தம் என்பவரது தேசிய அ.அட்டை (703051634 V) சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் காப்புறுதி, வரிப்பத்திரம், கடன் அட்டை மற்றும் செல்வம் மில் வீதி, உடுப்பிட்டி என்னும் முகவரியைச் சேர்ந்த கனகலிங்கம் மதிவதனா என்பவரது தேசிய அ.அட்டை (805283971 V) என்பன 16.01.2012 அன்று யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 077 5799041 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

(13381) (7-8-45)

## மாடி வீடு வாடகைக்கு

நிறுவனங்கள், அலுவலகங்களுக்கு, உகந்த 6 அறைகள், 3 விறாந்தைகள், இணைந்த குளியல் அறை, முற்றிலும் குளிரூட்டப்பட்ட 5 வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய மாடி வீடு (யா/பொஸ்கோ பாடசாலைக்கு அருகில்) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 1149527

(12615) (45-7-6)

## சாவகச்சேரியில் சிங்களம்

சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்பிக்கப்படும்

**ஆரம்பம் 28.01.2012**

சனி/ ஞாயிறு வகுப்புக்கள்
நண்பகல் 12- 1 மணிவரை

பதிவுகளை 28.01.2012 க்கு முன் மேற்கொள்ளவும். யாழ். பிரபல்ய சிங்கள ஆசிரியர் **ஸ்ரீ மாஸ்டர்**

இலண்டன் ஸ்ரீ கனகதுர்கைக் அம்மன் [illegible]
114, டச் வீதி, சாவகச்சேரி.
தொலைபேசி இல. 077 3144902

---

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரியை அண்டிய பகுதியில் உள்ள வயோதிபப் பெண்மணியைப் பராமரிக்கக் கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை. தங்குமிட வசதியுள்ளது. தென் மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு:0774320309

## குறுகிய காலத்தில் அதிகவருமானம் பெறக்கூடிய கற்கைநெறிகள்

* Certificate in Travel Management
* Certificate in Air ticketing & Travels and Tourism
* Certificate in Media & Tourism

கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

3மாத கற்கை நெறிகள்

மேலதிக கற்கை நெறிகளை கற்க விரும்புவோர் இந்தியா, லண்டன் போன்ற நாடுகளில் கற்கையை தொடர முடியும்.

தகைமை: O/L 6 பாடசித்தியடைந்தவர்கள்

உங்களுடைய சுயவிபரக்கோவையும் புகைப்படப் பிரதியையும் கீழ் வரும் முகவரிக்கு 31.01.2012 க்கு முன் அனுப்பி வைக்கவும்



விளம்பர இல4214
மே.பா உதயன்
361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள்
உள்ளவாங்கப்படவுள்ளதினால் பதிவுகளுக்கு முந்துங்கள்

## Metro Travels

விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 13500 |
| Colombo-Tiruchirapally-Colombo | 14400 |
| Colombo-Doha | 23000 |
| Colombo-London | 38000 |
| Colombo-Toronto | 80000 |
| Colombo-Singapore-Colombo | 30800 |
| Colombo-kualalumpur | 34000 |
| Colombo-Frankfurt | 38000 |
| Colombo-Milan | 38500 |
| Colombo-Rome | 40500 |
| Colombo-Paris | 38000 |
| Colombo-Zurich | 45000 |



**All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,**
**Above Fares Are Subject to seat Availability**
**Terms & Conditions Apply**

மேலதிக தொடர்புகளுக்கு

**METRO TRAVELS & TOURS PVT LTD**
(Branch office) No-62/33, Stanley Link Road, Jaffna.
Tel:-215673555,0212224647,0212220404,0215673666.
Office Hourse: Weekdays from 8.30 am to 5.00 pm
Saturday from 9.00 am to 1.30 pm
**New Branch office: No-34, New Bus Stand Complex, Vavuniya.**
Tel:0242226800 / 0242226801. (C\8028) (6,10)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா வைத்திலிங்கம்



சாவகச்சேரி, மீசாலையை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) 2012.01.20 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் காலஞ்சென்ற கந்தையா வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், புவிதாசன் (முன்னாள் இலங்கைவங்கி உத்தியோகத்தர்), இரவிதாசன் (பிராந்தியக் கணக்காளர், டெலிகொம், திருகோணமலை), மதிவதனி (அவுஸ்திரேலியா), ஜெகதாசன் (பொறுப்பு தாதிய உத்தியோகத்தர், பொது வைத்தியசாலை, திருகோணமலை), தேவதாசன் (MLT, அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வராசா (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), சிவகௌரி (முன்னாள் ஆசிரியை, தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), றஜீத்தா (முன்னாள் ஆசிரியை, யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி), லலிதாரட்ணம் (ஆசிரியை, தி/சென்மேரிஸ் கல்லூரி), யானகி (முன்னாள் ஆசிரியை, தி/தம்பலகாமம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், சாத்விகா, விதுரன், சாகித்யன், ஜனகன், யாதவி, சுபங்கா, கீர்த்தனா, தமிக்கா, தனுசாந், கரிஸ்மா, தேஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (2012.01.23) திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் 210/09A ,லோவர் வீதி, உவர்மலையில் அமைந்துள்ள அவரின் மகனின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

210/9A, லோவர் வீதி,
உவர்மலை, திருகோணமலை.

தகவல்
குடும்பத்தினர்.

(C\8026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் ப. சேவற்கொடியோனின் அன்புத் தாய்

திருமதி

**பரமானந்தம் அன்னரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வலி.கிழக்கு, கோப்பாய்.

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## துயர் பகிர்கின்றோம்



தென்மராட்சிப் பிரதேசத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத் தலைவர் கலாநிதி க.அருள் அவர்களின் அன்புத் தாய்

திருமதி **புஷ்பா கணேசலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவை அறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருடன் துயரினைப் பகிர்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம். (சி/2919)(2-6-7)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா யோகேஸ்வரன்



பழைய பொலிஸ் ஸ்ரேசன் றோட், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகேஸ்வரன் (18.01.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ராமலிங்கம் - மற்றும் ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் அன்னலட்சுமியின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சயந்தினி (சாந்தா, ஜேர்மனி), றஞ்சன் (சுவிஸ்), சியாமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராசநாயகம், வனித்தா, தேவதாஸ் ஆகியோரின் மாமனும், ராசலிங்கம், பஞ்சலிங்கம், சிவயோகம், சிவநேசம், சிவமணி ஆகியோரின் மைத்துனரும், கலைச்செல்வி, மாலதி, ராசதுரை, காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் விஜயதாசன் ஆகியோரின் சகலனும், மலர், நிமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகுமார், கிரிசாந்தன், பிரதீபன், நிவேதா, விதுஷன், நிதுஷன் ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

பழைய பொலிஸ் ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம். (13335)(2,6,7)

ராசலிங்கம் (லண்டன்) 0044 208 9039232
பஞ்சலிங்கம் (சுவிஸ்) 0041 765017126
சிவமணி (நோர்வே) 0047221 64012

### திருமதி சிவசுப்பிரமணியம் பாலசௌந்தரி



காரைநகர், பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் பயிரிக்கூடலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் பாலசௌந்தரி (19.01.2012) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், அருட்குமரன் (லண்டன்), அருட்செல்வி (ஆசிரியை, வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), அருட்சோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சந்திராதேவி (லண் டன்), யோகேஸ்வரன் (மொபிற்றல் கலேஸ், யாழ்ப்பாணம்), கிருஷ்ணதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் சந்தோஸ், சாருஷன், மையூரி (லண்டன்), கிசால்வன், தேசிகன், சுஜீவன், கார்த்திகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான விஸ்வேஸ்வரன், மகேஸ்வரி மற்றும் அம்பிகைபாகன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.சிவசுப்பிரமணியம் (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பயிரிக்கூடல்,
காரைநகர். (C/8016)(2,6,7)

## சேவை

கனடா, லண்டன் குடியகல்வு சம்பந்தமான சட்ட ஆலோசனைகள் வழங்கப்படும்

தொடர்புகொள்ளவும் : 071 9364237

## மணமகள் தேவை

இலண்டன் பிரஜாவுரிமை உடைய மிகவிரைவில் இலங்கை வரவுள்ள 33 வயது யாழ். இந்து மணமகனுக்கு மணமகள் தேவை

தொடர்பு: 077 2363500 (13357) (45-)

## Vacancy in Punakari

மனேஜர் - மேற்பார்வையாளர்
தகைமை: விவசாய விஞ்ஞானம் பாடத்தில் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 31.01.2012

S. Kokulan
107, Temple Road, Kokuvil East, Kokuvil

## சிங்களம்

சிங்களம் பேச, எழுத, வாசிக்க மிகவும் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்

(ஆரம்பம் 22.01.2012 காலை 8மணி)

சனி/ ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில்

**ஸ்ரீ மாஸ்டர்**

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்,
இல. 41, றக்கா லேன்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 077 7033729

## வேலையாள்கள் தேவை

★ Room Boys - Hotel தேவைக்கு
★ உதவியாளர்கள்: Sales வாகனத்தில் சென்று பொருள்களை ஏற்றி இறக்குதல்.

கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 23.01.2012 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும்

City Inns
இல. 56, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல : 021 4923522 (13347) (45-7-6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கண்டி வீதியில் Commercial Bank க்கு முன்பாக பிரத்தியேக ஒழுங்கையில் உள்ள இராசதோப்பு வளவு, 5 பரப்பும் 12.2 குளி நிலப்பரப்புடைய காணி விற்பனைக்குண்டு

தொடர்பு: 071 4105635

(சி/7955) (45-7-9)

## மணமகள் தேவை

விடுமுறையில் கொழும்பு வந்திருக்கும் M. Sc. ரேவதி நட்சத்திரம், வயது 32, அவுஸ்திரேலிய Citizen மணமகனுக்கு மணமகள் தேவை

தொடர்புகளுக்கு: 077 9539415
(சி/7956) (45-7-9)



STUDY IN UK

Minimum IELTS 4.0 Required

OUR SERVICE ABSOLUTELY FREE

Before the Visa or After Getting Visa
(Lowest Course fee with O/L)

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Colombo 6.
Hotline: 0777-761346
E-mail: flexinstitute@sltnet.lk

FLEX Graphic

## தவறிவிட்டது

மூளாய் தெற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த சிவகுமார் ரஜிதா (தே. அ. அ. 737992152 V) என்பவரது 5 பவுண் தாலிக்கொடி, 1½ பவுண் சங்கிலி, 2 மோதிரம், 2000/= பணம் உட்பட 19.01.2012 அன்று மாலை 5.30 மணிக்கு கந்தரோடைக்கும் மூளாய்க்கும் இடையில் வரும்பாதையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும் அல்லது 021 320 7530 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்

(13356) (45-6-7)

சவுதி அரேபியாவில் உடனடி வேலைவாய்ப்புக்கள்

**சுத்திகரிப்பாளர் 100 SR. 900**

வெளிநாட்டு முகவர்களால் 1ம், 2ம், 3ம் திகதிகளில் நேர்முகப்பரீட்சை நடைபெறும்

சலுகைகள்: இலவச உணவு, இலவச தங்குமிடம், இலவச போக்குவரத்து, வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம், (48 மணித்தியாலம்), ஒரு வழி விமான டிக்கட், ஒப்பந்தகாலம் 2 வருடங்கள், ஏனைய நிபந்தனைகளும் நியதிகளும் சவுதி தொழில் சட்டத்திற்கமைவாக.

அரசாங்கம் அனுமதித்தகட்டணம் மட்டுமே

**HAL Group**
HAL MANAGEMENT SERVICES Pvt Ltd.
HAL TOWER, 39, St Anthony's Mawatha, Kollupitiya, Colombo 3.
Tel: 011-2372970-1, 2301794
Fax : 011 - 2301080, Email: cv@hal-group.com
Srilanka's No.1 ISO (9001 - 2001) Certified Manpower solution provider

அழையுங்கள்
சக்மன்: 0777-428665

HAL GROUP
Labour Licence No-867
AL/867/Advt./02/12

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**புஷ்பா கணேசலிங்கம்**



(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி)

யாழ் போதனா வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் Dr.க.அருள்மொழி அவர்களின் தாயாரின் இழப்பின் துயரில் நாமும் பங்குகொள் கின்றோம்.

மத்திய மகா
வித்தியாலய வீதி,
நெல்லியடி. (13355) (6,7,10)

உரிமையாளரும்
பணியாளர்களும்,
நெல்லியடி கிளினிக்

## ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவுகள்



அமரர்
**சின்னையா திருநாவுக்கரசு**
(சின்ராசு)

திதி: 22.01.2012

தாயின் கரங்களில்
09★10★1948

இறைவனின் கரங்களில்
14★01★2010

வருடங்கள் இரண்டு ஓடி விட்டன
வருடும் நினைவுகளோ
கணம் தோறும் மீட்டிப் பார்க்கின்றது
உங்கள் உருவம் தான் மறைந்தது
எம்மை விட்டு ஆனால்
உள்ளத்து உணர்வுகள் நினைவுகள்
கனவுகள் யாவும் நீங்களாகவே
நீக்கமற நிறைந்து நிற்கிறீர்கள்
எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டிரண்டில் அஞ்சலிப் பாக்களால்
மலர் தூவி அர்ச்சிக்கின்றோம்
ஓம் சாந்தி!ஓம் சாந்தி!!!ஓம் சாந்தி!!!

உங்களை என்றும் நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
ஊரெழு. (13354)(2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்னாள் வழிபடுவோர் சபைத் தலைவர் அமரர் சோ.கணேசலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாரும், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமாகிய

திருமதி **புஷ்பா கணேசலிங்கம்**

அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்ம ஈடேற்றத்துக்கு எல்லாம் வல்ல மாவடியானைப் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினரின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

- வழிபடுவோர் சபை -
மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



எங்கள் குலவிளக்காய்
எம்மைப் பார்போற்ற வாழவைத்த
அமரர்
## சண்முகலிங்கம் லதுர்ஜிகாந்
(வதனி ஜுவல்லறி)

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
| --- | --- |
| 16.08.1976 | 14.01.2010 |

திதி: அபரபக்க சதுர்த்தசி

புன்னகை பூத்த திருவதனம்
புகழளந்த எங்கள் பொக்கிசம்
தன்னலமே இல்லாத சேவையுள்ளம்
உறவுகள் மீது உயிரனைய உறவானாய்!
சொல்லாலும் செயலாலும் என்றுமே
மறவாத மனத்தூய்மையாளான்

குலம்காத்த குன்றம் எங்கள் குலவிளக்கு
எங்களுக்கு நீர் ஓர் ஒளிவிளக்கு
கலங்காது எமைக் காத்த காவல் தெய்வம்
ஐயா நீ, கண்கள் குளமாகக் கண்ணீர் ஆறாகக்
கதறிக் கதறி அழுவதே மொழியாக
எண்ணாத நேரத்தில் இடை நடுவில்
எமைப் பிரிந்து இறைவனடி சேர்ந்தாயே
ஈராண்டல்ல ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம்மில் நீ என்றும் வாழ்வாய்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(வதனி ஜுவல்லறி, கொடிகாமம்)
பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி



என்றும் உன் நினைவில்:
– குடும்பத்தினர்.

(3152)(2-6-7)

# AFTER GCE O/L & A/L WHAT NEXT?

# STUDY IN UK
**Spot Admission!**

| காலம் | 22nd & 23rd of January 2012 : 10.00a.m. - 1.00p.m. |
| --- | --- |
| இடம் | Exponet (Branch Office) No. 197 Arasady Road,Jaffna |

## உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

## இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

கடந்த வருட இறுதியில் வீசா கிடைத்து பயணமான மாணவர்களில் சிலர்



| | | | | | | | | | | | | | | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| Sasivathana POINTPEDRO | Praveena KAITHADY | Elayaruby VAVUNIYA | Athavan JAFFNA | Atputharajah BATICALOA | Janagan COLOMBO | Kabilthev VAVUNIYA | Nitharshan KOKUVIL | Vijenthiran VAVUNIYA | Thushyanthan COLOMBO | Sinthujan KAYTS | Senthuran URELU | Kabilan KOKUVIL | Kabilraj CHANKANAI | Kajakoban VALVEDDYTHURAI | Kajanany WATTALA |



| | | | | | | | | | | | | | | | | | | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| Arulnesan COLOMBO | Jathishangar KOKUVIL | Antony MATHAGAL | Anushajini KARAVEDDY | Aravinthan PULOLY | Kajanthan COLOMBO | Kalaivanan VAVUNIYA | Kalpana VAVUNIYA | Ketheesan KARAINAGAR | Logeshwaran COLOMBO | Nirojan KONDAVIL | Niruthika VADDUKKODAI | Nitharshini TRINCO | Nithyadarsan VAVUNIYA | Pathmatheepan COLOMBO | Rajmohan NELLIADY | Rakeesan URUMPIRAI | Ramya MALLAKAM | Rizmy KANDY | Rushanth JAFFNA |



| | | | | | | | | | | | | | | | | | | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| Gobiraj JAFFNA | Isuru COLOMBO | Jegarajiny INUVIL | Anusha JAFFNA | Anushan JAFFNA | Anbalagan COLOMBO | Sathurna KAITHADY | Sathveehan JAFFNA | Sayanthan KONDAVIL | Sowmya URUMPIRAI | Srivithyakaran NELLIADY | Subakalyani THOLPURAM | Subasini KARAVEDDY | Tharaneetharan COLOMBO | Thargika PALLAI | Tharshika ANAIKODAI | Thavalingan PULOLY | Thushyandan JAFFNA | Thuvarahan TRINCO | Vishnumohan URUMPIRAI |

**GCE(O/L)** தகமை போதுமானது

பதிவுகளுக்கு

**Colombo-011 7 555511/14 Fax-011 7 555517**
**Jaffna-021 7538395 / 021 2227230**

EXPONET Overseas Consultants

Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens, Harrow Middlesex, HA1 4EY, UK.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் காப்புறுதி நிறுவனத்தின் 109ஆவது கிளை சாவகச்சேரியில்

தென்மராட்சி, ஜன.22

இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் 109ஆவது கிளை கடந்த 19 ஆம் திகதி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.



நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ, நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹாண்டி அல்விஸ் ஆகியோர் கூட்டாக கட்டடத்தை திறந்து வைத்தனர்.

கிளை முகாமையாளர் பாலேந்திரா சத்தியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சரிய சுவாமிகள், அருட்பணி பத்திநாதர் அடிகள், நயினாதீவு நாக விகாரை பிரதம குரு மௌலவி நசீர் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் வட பிராந்திய முகாமையாளர் திருமதி ராணி அரியநாயகம், உதவி பொதுமுகாமையாளர் நிலங்க விக்கிரமசிங்க, பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹாண்டி அல்விஸ், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சார்பில் அவரது மொழிபெயர்ப்பாளர் ஆகியோர் உரையாற்றினர்.

நிறுவனத்தின் ஐம்பதாவது ஆண்டில் திறக்கப்படும் 109 ஆவது கிளையும், வடபிராந்தியத்தில் ஏழாவது கிளையெனவும் குறிப்பிடப்பட்டது. (த-207)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மக்கள் வங்கியின் சிசு உதான கணக்கு வைத்துள்ள மாணவர்கள் நால்வர் கடந்த முதலாம் திகதி புதுவருட தினத்தன்று சாவகச்சேரி மக்கள் வங்கியினரால் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப் பட்ட மாணவர்களுடன் உதவிப் பிராந்திய முகாமையாளர் கே.சசீந்திரன், கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் உட்பட வங்கி உத்தியோகத்தர்களும் பெற்றோர்களும் காணப்படுகின்றனர். (த-207)

# வடக்கு நோக்கி நகரும் வணிக நிகழ்முறை அயலாக்கம்

ஒரு முன்னோடி முன்முயற்சி என்ற வகையில் இம்மாதம் வணிக நிகழ்முறை அயலாக்கத்தின் (BPO) முதலாவது நிறுவன அமைப்பினை உடுவில் பிரதேசம் கண்டு மகிழ்ந்துள்ளது.

இந்த அமைப்பானது (BPO) பின்வரும் பங்காளி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த கூட்டுமுயற்சியின் பெறுபேறாகும்.

1. கிராமிய தொழில் வாய்ப்புக்களை முன்னேற்றுவதற்கான நிறுவனம் (FARO). இது ஒரு இலாபம் கருதாத அமைப்பு. இலங்கையிலுள்ள கிராமிய இளைஞர்களுக்கு நிலையான தொழில்களைத் தேடிக்கொள்ளவும், உயர்மட்ட வணிகத் துறைகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் வினைத்திறனுடன் உதவுகின்றது.

2. இலங்கை-தகவல் மற்றும்தொடர்பாடல்தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) கிராமிய மட்டத்தில் தகுதி நிலைகளை கட்டமைப்பது மற்றும் மறுசீரமைப்பு திட்டங்களின் கீழ் இந்த திட்டமுன்னெடுப்புகளுக்கு பிரதான நிதி வழங்குநராக விளங்குகின்றது.




3. ஹேலீஸ் வணிகத் தொழில் தீர்வுகளுக்கான சர்வதேச தனியார் நிறுவனம்-HBSI (Pvt) Ltd

BPOவின் இந்த வணிக நிகழ்முறை அயலாக்கப் பணிகளை வழங்குவதற்கு உற்சாகத்துடன் இணைந்துள்ளதுடன் இவ்வித வசதிகளை ஏற் படுத்துவதிலும் உதவுகின்றது.

4. உடுவில் மகளிர் கல்லூரி:

உடுவில் மகளிர் கல் லூரியானது திட்டங்களில் உதவுவதிலும் உபசாரம் வழங்குவதிலும் முன்னிற் கிறது.

இவ்வாறு வியப்பளிக்கும் முன் முனைப்பு திட்டத்தின் கீழ், உடுவிலைச் சேர்ந்த 15 இளம் பிள்ளைகள் HBSI தனியார் நிறுவனத்துக் கான கணக்கியல் பயிற்சிகளைப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வணிகத் துறை பிரதான நிறுவனங்களில் ஒன்றாகும். HBSI (PVT).Ltd இந்த சேவைகள் உடுவிலில் இருந்து இணைய வலைப் பின்னல் தொடர்புகளின் வாயிலாக வழங்கப்படுவதாகும்.

இந்த முன்முனைப்பின் இன்னொரு முக்கிய அம்சம் யாதெனில்BPOவின்உடைமை வழங்கும் முன் மாதிரியாகும் தெரிவு செய்யப்படும் இளைஞர்களாலேயே BPO உரிமை கொள்ளப்பட்டு இயக்கப்படுவதாக இது இருக்கும். திட்ட பங்குதாரர்களால் இவர்கள் வழிப்படுத்தப்படுவார்கள்.



பயிலுனர்கள் உடுவிலில்



ஹேலீஸ்-இல் பயிற்சிபெறும் பயிலுனர்கள்

இது BPOவின் வெற்றிகரமான ஏனைய கிராமிய திட்டங்களைப் போன்றதே இத்திட்டம் FARO வினால் மகாவிலிச்சிய மற்றும் சீனிகம என்ற இடங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் வணிக நிகழ்முறை அயலாக்கத் துறைகளில் கிராமப்புற இளம்பிள்ளைகளுக்கு நிலையான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களை வலுவுள்ளவர்களாக இது ஆக்கியுள்ளது. தாம் பணியாற்றும் BPO அமைப்பினைத் தம் உரிமையாக்கி நிர்வகிப்பதற்கான மிகச் சிறப்பான சந்தர்ப்பத்தினை இது வழங்கியுள்ளது.

# திசைகாட்டியின் கிளை விரைவில் கிளிநொச்சியில்

எமது பிரதேசத்தில் விசா என்ற விடயம் தேவைப்படும்போது மட்டும் தேவையானவர்கள் கொழும்பில் சென்று தேவையைப் பூர்த்தி செய்வதோடு சரி. மற்றபடி எம்மவர் அநேகருக்குப் பரீட்சயம் இல்லாத ஒரு துறை. இந்த விசாப் பக்கங்களின் சட்ட ரீதியான அணுகுமுறைகள் எம் சமூகத் துக்கு புதிது. கால மாற்றத்துக் கேற்ப எல்லா நாடுகளும் குடியகல்வு குடிவரவு நடைமுறைகளைப் புது வடி வம் கொடுக்கின்ற காலம் இது.

இதன் பயனாக எம்மவர்கள் இழந்தவை அதிகம். இந்தநிலையில் யாழ்ப்பாணத்தில் விசா விழிப்புணர்வுடன் ஆலோசனையை வியாபாரப் பொருளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே இந்தத் திசை காட்டி.

ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்துக்குள் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக மாற்றம் கண்டதுடன் கொழும்பிலிருந்தே யாழ்ப்பாணத்துக்கு எம்மவர்கள் விசா ஆலோசனை பெற தம்மிடம் வருகின்ற நிலையை ஏற்படுத்தி இந்தத் துறையில் தனித்தடம் பதிக்கின்றமை உண்மையே.

இந்தக் குறுகிய காலத்தில் 866 பேர் விசா தொடர்பாக இலவச விழிப்புணர்வை பெற்றுள்ளமை இங்கே குறிப் பிடத்தக்கதாகும்.

அந்தந்த நாட்டு விசா நடை முறைகள் என்ன? முற்ப ணங்கள் வழங்காமல் விசா பெற என்ன வழி? முற்பணங்கள் வழங்குவதாயின் முற்காப்புக்கள் என்ன?

இவை எல்லாவற்றையும் பற்றி பிரஸ்தாபிக்க தன் வியாபாரக்கிளையை கிளிநொச்சி நகரில் வரும் வாரம் திசைகாட்டி ஆரம்பிக்கின்றமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (த)



இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையின் புதுவருடப் பிறப்பு நிகழ்வில் அதன் முகாமையாளர் இ.பிறேமராஜன் தொடக்கவுரை நிகழ்த்துகிறார். அருகில் சர்வமதக்குருக்கள், உதவி முகாமையாளர் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (த)

# கண்டியில் கண்காட்சி

இலங்கையில் கொழும்பு மற்றும் கண்டி மாநகரங்களில் கல்விக்கும் தொழில் வாய்ப்புக்குமான "EDEX 2012" மாபெரும் கண்காட்சி 9 ஆவது ஆண்டாகக் கண்டி சிட்டி சென்ரரில் ஜனவரி 27, 28ஆம் திகதிகளிலும் நடைபெறவிருக்கின்றது.

EDEX கண்காட்சி ஒரே மேடையில் உங்களுக்கான தெரிவுகளையும், தேர்வுகளையும், சந்தர்ப்பங்களையும் கல்வியிலும் தொழில் வாய்ப்பிலும் வெவ்வேறு சமூகப் பிண்ணனியிலிருந்து வருகின்ற இளைஞர்களை அதிசயிக்கத்தக்க விதத்தில் கவர்ந்திழுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கண்காட்சிக்கு சிரேஷ்ட மாணவர்கள், ஆர்வமுள்ள பெற்றோர்கள், பாடசாலையைவிட்டு விலகியவர்கள், வேலையற்றோர் கீழ் உழைப்புள்ளோர் அத்துடன் கல்வியிலும் தொழில்நுட்பத்திலும் தொழிற் பயிற்சிகளிலும் தகுதிபெற விரும்புவோர் ஆண்டுதோறும் வருகை தருகிறார்கள்.

இம்முறை 20 இற்கும் மேற்பட்ட வேறுபட்ட நாடுகளிலிருந்து வந்துள்ள 250இற்கும் மேற்பட்ட கண்காட்சி மையங்களை நீங்கள் தரிசிக்கலாம். இவற்றுள் முக்கியமான நாடுகளாக ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, மத்திய கிழக்கு ஆசிய நாடுகள், தூர கிழக்கு ஆசிய நாடுகள், தென் ஆசிய நாடுகள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற உலகளாவிய ரீதியில் நற்தராதரங்கள் பெற்ற நாடுகள் பங்குபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இளைஞர்களின் ஆற்றல் திறனை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அரசாங்கத்தினதும் தனியார் துறையினதும் பல்வேறுபட்ட தொழில்துறை சார்ந்ததும் தொழில்நுட்பம் சார்ந்ததுமான நிறுவனங்கள் பயிற்சிகளை வழங்க இருக்கின்றன.

கொழும்பிலும் கண்டியிலும் கல்வி, தொழில் வாய்ப்பு சார்ந்த ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படுவதோடு பொருத்தமான உளத்தள சோதனைகளினால் இளைஞர் களுக்கு வழிகாட்டுவதுடன் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

# இந்தியன் வங்கி யாழ்.கிளை ஆண்டு விழா நேற்று

யாழ்ப்பாணம், ஜன.22

இந்தியன் வங்கி யாழ். கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், வட்டு மேற்கு பிரதேசத்தின் முன் மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று சனிக்கிழமை மு.பகல் 11 மணியளவில் யாழ். கிளையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.



யாழ்.இந்திய துணைத் தூதர அதிகாரி வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின் தமிழ்தாய் வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கினை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம், வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சந்திரசேகர், வலிகாமம் பிரதேச சபைச் செயலாளர் எ.சோதிநாதன், உதவிச் செயலாளர் பி.சிவகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வின் வரவேற்புரையை இந்தியன் வங்கியின் யாழ். கிளை சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சந்திரசேகர் நிகழ்த்தினார். விழாவின் சிறப்பு நிகழ்வாக வட்டு மேற்கு கிராமத்தின் முன் மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத் தினை யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.இந்தியத் துணைத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம் ஆகியோர் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து 101 பயனாளிகளுக்கு 7.64 மில்லியன் ரூபா வாழ்வாதாரக் கடன் உதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி புஷ்பா கணேசலிங்கம்

### (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)



வேலணையைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஷ்பலதிகவதி (புஷ்பா) கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி) நேற்று முன்தினம் (20.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், பிரபல வைத்தியர், வேலணை) - உருக்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர் களான சோமசுந்தரம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர், கைதடி) அவர்களின் அன்பு மனைவியும், வளர்மதி (கனடா), கலாநிதி அருள் (முன்னாள் விரிவுரையாளர் சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம் Solicitor, லண்டன்), கலாநிதி சிவமதி (பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி அருள்மொழி (குழந்தை வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), கலாநிதி அருள்ராஜ் (முன்னாள் விரிவுரையாளர் விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், விவேகானந்தன் (கனடா), சுகுணா (லண்டன்), சிவச்சந்திரன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர், யாழ்.பிரதேச செயலகம்), வைத்திய கலாநிதி ஜானகி (உணர்வழியியல் நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), கலாநிதி பார்பரா (லண்டன்) ஆகியோரின் மாமியும், அர்ச்சனா, ஆராதனா, யதுஷன், அர்ச்சுன், அஸ்மிதா, அஸ்வினி, அபிலாஷா, ஹர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும், புஷ்பராஜவதி (பேபி), பேராசிரியர் சிவச்சந்திரன் (முன்னாள் கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற புஷ்பரத்னவதி மற்றும் இராசமலர் (சோதி, அவுஸ்திரேலியா), சிவமலர், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 72/27, பணிக்கர் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி இல்லத்தில் இன்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**பிள்ளைகள்.**

**72/27, பணிக்கர் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி.**


**'சிவகிரி', மீசாலை வடக்கு, மீசாலை.**

(13297)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வருட ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர். (ம)




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சுவாமி விவேகானந்தரின் நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கருத்தரங்கில் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுகிறார். அதிபர் திருமதி செ.சுந்தரேசன் மற்றும் பிரதி அதிபர், உப அதிபர் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ம-236)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் விரிவுரையாளர் இ.மருதலிங்கம் ஆகியோர் அழைத்துவரப்படுகின்றனர். விழா மேடையில் விருந்தினர்கள் அமர்ந்துள்ளனர். நிகழ்வில் இடம்பெற்ற தனித்துவமான காமன் கூத்தின் ஒரு காட்சி. (ம-38)



உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வாசிப்பு மாதப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட வடமாகாண நூலக மற்றும் தொழில்நுட்பக் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன் இங்கு வெளியிடப்பட்ட கலங்கரை சஞ்சிகையை அதன் பொறுப்பாசிரியர் திருமதி ம.செல்வரஞ்சினியிடம் இருந்து பெற்றுக்கொள்கின்றார். (ம-38)



காரைநகர் மணற்காட்டில் அமைந்துள்ள மகேஸ்வரன் தர்மசுரபி மண்டபத்தில் நடைபெற்ற தையல் பயிற்சிநெறியின் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன. கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுகின்றனர். (ம-250)



வடக்கு மாகாணக் கணக்காய்வுத் திணைக்களத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் புத்தாண்டு வரவேற்பு நிகழ்வும் அண்மையில் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன. வடக்கு மாகாணக் கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் க.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாணத் திறைசேரிப் பணிப்பாளர் கே.துரைசிங்கம் உரை நிகழ்த்துகிறார். கணக்காய்வு உத்தியோகத்தர்களின் கலைநிகழ்வும் இடம்பெறுகிறது. (ம-288)



லண்டன் வாழ் கைதடி ஒன்றியத்தின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகம் இவ்வாண்டு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்கும் நிகழ்வு கடந்த தைப்பொங்கல் தினத்தன்று கைதடி மத்தி வளர்மதி கல்விக்கழக கேட்போர் கூடத்தில் கழகத் தலைவர் 'லயன்' ப.செல்லத்துரை தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட சுவிஸ் ஒன்றியப் பிரதிநிதி நா.தவராஜா மாணவர் ஒருவருக்குப் புத்தகப்பை வழங்குகிறார். (ம-288)




பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்திற்கு காணிகள் வழங்கப்பட்டன. காணியை கிராம சேவையாளர் இ.திருப்புகழூர்சிங்கம், பாடசாலை அதிபர் திருமதி பு.சந்திரராசாவிடம் வழங்குகிறார். (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழி இறைச்சி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சி நியாயமான விலையில் விற்கப்படும். காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
(13094) (6-7-45) இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## புதிய ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

ஆண்டு 6 முதல்(A/L வரையிலான (Spoken English) உட்பட புதிய ஆங்கில வகுப்புகள் 1.2.2012 முதல் இளைப்பாறிய வங்கி முகாமையாளரினால் நடத்தப்படுகின்றது.

தொடர்பு: 077 3790471

COMMERCIAL BANK

## குத்தகைக்கு அல்லது வாடகைக்கு கட்டடம் தேவை

பின்வரும் இடங்களில் கொமர்ஷல் வங்கிக்கு கட்டடங்கள் குத்தகைக்கு அல்லது வாடகைக்குத் தேவை. 4000 சதுர அடி ஆகக் குறைந்த விஸ்தீரணமும் (Floor Area) அதில் 1800 சதுர அடி தரைமட்டத்தில் (Ground Floor Area) உள்ளதாகவும் குறைந்தது 30 அடி வாகனத்தரிப்பிடத்திற்கு வீதி முன் முகப்பாகவும் இருக்க வேண்டும்.

★ கிளிநொச்சி
★ முல்லைத்தீவு
★ மதவாச்சி
★ கொடிகாமம்

குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எதிர்பார்க்கும் தொகையுடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி, தொலைபேசி இலக்கங்களை குறிப்பிட்டு கட்டடத்தோற்ற வரைபடத்துடன் 31 ஆம் திகதி ஜனவரி மாதம் 2012 அன்றோ அல்லது அதற்கு முன்னர் பிற்பகல் 4 மணிக்கு முன்பாக கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும். கடித உறையின் இடதுபக்க மூலையில் "கட்டடம் குத்தகை/ வாடகை" (Premises on Lease/ Rent) என்று குறிப்பிடப்பட வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்,
(சொத்துக்களும் சேவைகளும்),
கொமர்ஷல் வங்கி,
21, பிரிஸ்டல் வீதி,
கொழும்பு - 01
தொலைபேசி: 011 2486236
தொலைநகல் : 011 2341313
Asst. General Manager,
(Properties & Services),
Commercial Bank of Ceylon PLC,
No. 21, Bristol Street,
Colombo - 01
Telephone : 011 2486236
Fax : 011 2341313

(சி/7884) (- 45)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 22.07.1948 — மறைவு 23.12.2011



## முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

(விநாயகர் கடைச்சல் தொழிற்சாலை உரிமையாளர்)

இனிய மாமாவே! சித்தப்பாவே!
எதையும் மறுதலிக்காத மனமும்
புன்சிரிப்பும்
வன்மையில்லாத வார்த்தையும்
பாசமும் உங்களது சொத்து - உங்கள்
உயிரை மட்டுமே காலனால் கவர முடிந்தது
காலம் பல சென்றாலும் - நீங்கள்
எங்களோடும் உறவுகளோடும் நண்பர்களோடும்
என்றுமே வாழ்வீர்கள்



எங்கள் அன்புத் தெய்வத்தைப் பிரிந்த எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

கல்லூரி ஒழுங்கை, சண்டிலிப்பாய். மருமக்கள், பெறாமக்கள்.

(7900) (2-6-7)




உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மிருதங்க வித்துவான் **கந்தையா கனகேஸ்வரன்** 2011 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது பெற்றமைக்காகவும், அவரது பாரியாரும் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வயலின் வித்துவாட்டியுமான **திருமதி விமலலோஜினி கனகேஸ்வரன்**, 2011 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது பெற்றமைக்காகவும், கலைத் தம்பதியினரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இசைக் கலைத்துறையில் இவர்கள் மேலும் பல விருதுகளைப் பெற்றுப் புகழ் பரப்ப வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

கரந்தன், நீர்வேலி. ரமேஸ் ராதிகா தம்பதியினர், செல்வேந்திரா குமதி தம்பதியினர், த. பரமேஸ்வரன் மற்றும் உறவினர்கள்.

(13274)(2-6-7)

## பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 6 தொடக்கம் 10 வரையான வகுப்புகளுக்கு கணிதம் (ஆங்கிலம் மூலம்) மற்றும் ஆங்கில பாட பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தப்படும்.

தொடர்புகளுக்கு: 071 5360635

(13063) (45-7-6)

## ஜீப் விற்பனைக்கு

TATA SUMO VICTA JEEP
2005 MODEL DUAL AC
WP KB 7 XXX SIERI NO
தொடர்பு:
077 1610195

(13265) (45-7-6)

## பெண் கணக்காளர் தேவை

பிரபல கு . வி அச்சக நிறுவன யாழ். கிளைக்கு (புத்தக விற்பனை நிலையம்) Accounts Clerk வேலைக்கு பெண் வேலையாள் தேவை

தொடர்புகளுக்கு: 077 1591677

(13278) (45-7-6)

## காணி விற்பனை

ஏழாலை மேற்கு கோட்டைக்காடு மடத்தடிப் பிள்ளையார் கோயிலுக்கும் மடத்துக்கும் தெற்குப் பக்கமாக நில. பர 6 விஸ்தீரணமான காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

ஞானசிவம்

தொடர்புகளுக்கு:
கி. வினோதானந்தன்
851, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8640

(12926)(45-7-6)

WICKramarachchi
Opticians



விக்கிரமாராட்சி கண் மற்றும் காது பரிசோதனை சேவைகள் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் நடைபெறுகிறது

யாழ்ப்பாணக் கிளை
இல: 229, 231,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



தொலைபேசி இல: 0777 511260

ISO :9001:2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுலன், பங்குஷனின் சதங்கள் வென்றது கொக்குவில் இந்து


யாழ்ப்பாணம்,ஜன.22

ராகுலன், பங்குஷன் ஆகியோரின் அதிரடி சதம் கை கொடுக்க ஓர் இனிங்ஸ்சாலும் 268 ஓட்டங்களாலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றி கொண்டது. கொக்குவில் இந்துக் கல்லூரி.

கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த புதன், வியாழக்கிழமைகளில் இடம்பெற்றது.

முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் 83 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையும் இழந்து 478 ஓட்டங்களைப் பெற்றனர்.



ராகுலன்



பங்குஷன்

இதில் ராகுலன் எட்டு ஆறு ஓட்டங்கள், 11 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 123 ஓட்டங்களையும் பங்குஷன் 15 நான்கு ஓட் டங்கள் அடங்கலாக 117 ஓட்டங்களையும் ஆதித்தன் 3 ஆறு ஓட்டங்கள், 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 68 ஓட்டங்களையும் திவாகர் 48 ஓட்டங்களையும், ஜனதாஸ் 38 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி அணி வீரர்களான பென் ரில்கர் 21 ஓவர்கள் பந்து வீசி 81 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டையும் சோபிநாத் 17 ஓவர்கள் பந்து வீசி 86 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 43.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றனர்.

மாதவறூபன் 17, விவேஸ் 13, நிதர்சன் 12 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர்களான ராகுலன் 15 ஓவர்களில் 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் ஜனதாஸ் 9.5 ஓவர்கள் பந்து வீசி 82 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் பவிதரன், 5 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாது இனிங்சுக்காகத் துடுப்பெடுத் தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 56.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றனர். மதுஷன் 3 ஆறு ஓட்டங்கள் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 40 ஓட்டங்களையும் பென்ரில்கர் 12, சோபிநாத் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர்களான ராகுலன் 14.3 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும் பங்குஷன் 13 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ம-23)

## கரப்பந்தாட்டப் போட்டி இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.22

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் தேசத்தின் மகுடத்துக்கான ஆண்கள் மட்டும் பங்கு கொள்ளும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற இருந்தது அந்தப் போட்டிகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. போட்டியாளர்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு காலை 8.30 மணிக்கு சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். . (ம-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.22

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அமரர்களான சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் அம்மன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

* * *

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லேப் போட்டி இன்று காலை 8 மணி தொடக்கம் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## ஒரு நாள் கிரிக்கெட்

யாழ். மத்திய கல்லூரி 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிக்கும், சென்ற லயிட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.22

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் இடம் பெறவுள்ளது.



எனவே அனைத்து மத் தியஸ்தர்களையும் தவறாது சமுகம் தருமாறு செயலாளர் அஜித்குமார் கேட்டுக் கொண்டுள்ளார். (த-23)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா



**மேடம்:** சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். மாலைப் பொழுதிலிருந்து நிம்மதி கிட்டும் நாள்.



**இடபம்:** மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலையுயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். தாயாரின் உடல் நலம் சீராகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிலும் போராடி வெல்லும் நாள்.



**மிதுனம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும் நாள்.



**கடகம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயற் படுவார்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.



**சிங்கம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.



**கன்னி:** குடும்பத்தாரின் ஆதரவு அதிகரிக்கும். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சிலர் வீடு, மனை வாங்குவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார். வெற்றிக்கு வித்திடும் நாள்.



**துலாம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணம் சேரும். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.



**விருச்சிகம்:** தேவையற்ற அலைச்சலுக்கு ஆள்படுவீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதை பெரி தாக்க வேண்டாம். வியாபாரத்தில் வசூல் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை தாமதமாக கிடைக்கும். மாலைப் பொழுதிலிருந்து தடைகள் உடைபடும் நாள்.



**தனுசு:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். உணவில் காரம், வாயு பதார்த்தங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கை தேவைப்படும் நாள்.



**மகரம்:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். உங்களால் வளர்ச்சி அடைந்த சிலரை இப்போது சந்திக்க நேரிடும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். சிறப்பான நாள்.



**கும்பம்:** உங்களின் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பழைய உறவினர்கள், நண்பர்களைச் சந்திப்பீர்கள். திருமண முயற்சியில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடிவரும். சாதித்துக் காட்டும் நாள்.



**மீனம்:** கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட காரியங்கள் இன்று முடியும். கடனாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். உற்சாகமான நாள்.

**நாளை**

தை 09 திங்கட் கிழமை 23.01.2012
திதி: அமாவாசை பி.ப. 01.42 வரை
நட்சத்திரம்: உத்திராடம் பி.ப.04.11 வரை
சுபநேரம்: 12.36 - 02.06 வரை,
ராகு காலம்: 08.06 - 09.36 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 3 | | | | | | |
| 7 | | 9 | 4 | | 2 | 6 | 8 | 5 |
| 5 | | 2 | | 8 | | | 7 | |
| | 9 | | 2 | | 7 | 1 | | |
| | | | | 1 | | | | |
| | | 7 | 3 | | 8 | | 2 | |
| | 3 | | | 7 | | 8 | | 6 |
| 9 | 7 | 6 | 8 | | 1 | 3 | | 2 |
| | | | | | | 4 | 9 | |

சுடோக்கு ஓர் எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது.(உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நடராசா வல்லிபுரநாதன்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெம்பிளி, லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா வல்லிபுரநாதன் அவர்கள் கடந்த 02.01.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் வசந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அர்சுன ஜெயன் மற்றும் துளசி, லட்ஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும். கதிரமலைநாதன் (கனடா), காலஞ்சென்ற இரங்கநாதன் மற்றும் புவனஜோதி (கனடா), அகிலஜோதி (கனடா), பாலஸ்கந்தன் (லண்டன்) ஆகியோரின் சகோதரனு மாவார்.

அன்னாரின் பூதவுடல் (8.1.2012) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது ஆத்மா சாந்தியடைய 28.01.2012 அன்று லண்டனில் அவரது இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
(13248) (45-7-9) இரங்கநாதன் குடும்பம் (கொழும்பு)





இதோ!
சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி தீராத இருமல், சளி,இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தார அதிமதுரம் ஆடாதோடை சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில்) தொ.பே:222 2567

Manufactured By: SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw,(Reg.No:- 6382) AR/No.228


# மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



திருமதி
## இராசசிங்கம் செல்லம்மா

பிறப்பு: 20.08.1932
இறைவன் திருவடியில்: 26.01.2009

குடும்பத்தின் குலவிளக்காய் இருந்தாயம்மா காலங்கள் கடந்தோடினாலும் காலமெல்லாம் உன் நினைவிலே வாழுகின்றோம்.

என்றும் நீங்கா நினைவில்
பொ.இராசசிங்கம் (கணவர்),
பிள்ளைகள்.

இ.கெங்காதரன்,(மகன்)
அதிபர் (மாத்தளன்)
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(13062) (6,7,10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 22 - 07 - 1948

உதிர்வு 23 - 12 - 2011



## அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

(உரிமையாளர்-விநாயகர் ரேனிங் வேக்ஸ்)

மங்காத ஒளி விளக்கே
மாசில்லா மாணிக்கமே
பண்பாக வாழ்ந்து நீயும்
பாதியில் சென்றதேனோ?

நோயென்று வந்தவுடன்
பக்கத்தில் நாமிருந்தும்
பலனேதும் கிடைக்கவில்லை
பாவி இவன் காலனுக்குப் பலியாய் விட்டீரே
இது விதியின் சதியோ என் செய்வோம்

கடந்த 23.12.2011 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதித் துயரில் எம்முடன் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.
(13206) (2,6,7)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகலவித மோட்டார் வாகனங்களின் பிளாஸ்ரிக் பொருள்களும் சிறந்த தொழில் நுட்ப முறையில் செய்து கொடுக்கப்படும்

1. ஸ்பிறே பெயின்ரிங்
2. பிளேற்றிங் (மொப்பிங்)
3. கண்ணாடி வகைகள் பொலிசிங்
4. பைவர் மோல்டிங்.

வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்
286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு: 0773512591

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1977 ஆம் ஆண்டு மார்கழி மாதம், உத்தரம் 1ஆம் பாதத்தில் பிறந்த 4 இல் செவ்வாய் உள்ள ஆகுதி பட்டதாரி மணமகனுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் படித்த மணமகள் தேவை.(வெளிநாடு விரும்பத்தக்கது)
தொடர்பு: 075 553 8216

# கோழி இறைச்சி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
(13260) (6-7-45)

# வீடு வாடகைக்கு

3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
T.P. 077 5317204, 077 0563144
சுதுமலை
(13305 (45-7-6)

# காணி விற்பனைக்கு

மந்திகைச் சந்தியிலிருந்து கொடிகாம வீதியில் 3பரப்பு 133/32 குளியும், கிணறும், ரொயிலற்றும், பழைய வீடும், தென்னை, தேசி மரங்களும் கொண்ட காணியும், இருபாலை கிழக்கிலும் 4½ பரப்புக் காணியும், விற்பனைக்குண்டு (தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 630 0826 - 077 892 8128

# மணமகள் தேவை

37 வயதுடைய, இந்து சமயம் சுயதொழில் செய்கின்ற மணமகனுக்கு நற்குடும்பத்தைச் சேர்ந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். (மணமகனுடைய பிறப்பிடம் கொழும்பு, வசிப்பிடம் யாழ்ப்பாணம்)
தொடர்புகளுக்கு: 077 7065940

# காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு சமீபமாக 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு: 077 3120 259
(113190) (45-7-6)

# கார்கள் விற்பனைக்கு

NISSAN SB-13 64-xxxx, Super Saloon Full Option
NISSAN FB -15 KC-xxxx Super Saloon Full Option
கார்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0712118460, 0777292199

# மணப்பெண் அலங்காரப் பொருள்கள்

மணப்பெண் அலங்காரப் பொருள்கள் துறையில் அனுபவம் பெற்ற கனடா, லண்டன், சுவிஸ் நாடுகளில் புகழ்பெற்றவரால் சடைநாகம், பொக்கே முதலிய பூவேலைகளும், மணப்பெண் அலங்காரப் பொருள்களும் தரமான முறையில் தயாரித்துக் கொடுக்கப்படும் 0777206829/0112448743

# விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள/ பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை.
கடமை நேரம் (9 Am- 6 Pm) உடன் நேரில்வரவும்
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக),யாழ்ப்பாணம்.

# வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் தனியார் பாவனைக்கு உகந்த/ Office /Store மாடிவீடு உண்டு.
தொடர்புகளுக்கு:
0779384635
0776239878

# கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No- 1 புறொயிலர் கோழிக் குஞ்சுகள் (27.01.2012) அன்று விநியோகம் செய்யப்படும். பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
T.P.No. 021 222 1158
(13283) (2-7-9)

# மருந்தக உதவியாளர் தேவை

புதிதாகத் திறக்கப்படும் மருந்தகம் ஒன்றுக்கு அனுபவமுள்ள உதவியாளருக்கு வெற்றிடம் உள்ளது. சம்பளம் கதைத்துத் தீர்த்துக் கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0777526066
(13303) (45-6-7)

# உடனடி வேலைவாய்ப்பு

## கட்டார்

| தொழில் | எண் | சம்பளம் (QR) | சம்பளம் (RS) |
|---|---|---|---|
| வெல்டர்-Welder | 25 | 1400 | 43,400 |
| பிளம்பர்-Plumber | 25 | 1200 | 37,200 |
| குழாய் பொருத்துபவர் Pipe Fitter | 25 | 1200 | 37,200 |
| மேசன் Mason | 25 | 1200 | 37,200 |
| இயந்திர பொறியிலாளர் Machanical Engineer | 02 | 3000 | 93,000 |
| இயந்திர ஆட்டோ கேட் வரைவாளர் Auto cad Draftsmen | 02 | 2000 | 62,000 |
| கட்டட பொறியியலாளர் Civil Engineer | 04 | 3500 | 108,500 |
| கனரக கருவிகள் ஆப்ரேட்டர் Heavy Equipment Operator | 04 | 1500 | 46,500 |
| நில அளவையாளர் Land surveyor cum forman | 04 | 2300 | 71,300 |
| உதவியாளர்கள் Machanical Helpers | 25 | 900 | 27,900 |

நிபந்தனைகள்: 1QR = Rs.31.00

1. நிறுவனத்தினால் இலவச உணவு, தங்குமிட வசதி, வைத்திய பரிசோதனை, காப்புறுதி மற்றும் இதர வசதிகள் செய்து தரப்படும்.
2. 2 வருட கால ஒப்பந்தம்.
3. 2 வருட ஒப்பந்த கால முடிவில் திரும்பி வருவதற்கான பிரயாணச்சீட்டு இலவசம்.
4. தொழில் அனுபவம் இல்லாதவர்களுக்கு தொழிற்பயிற்சி இலவசம்.

★ 8 வர்ண புகைப்படங்களுடன் கடவுச்சீட்டு அளவு. (பின் தளம் வெள்ளை நிறம்)
★ கடவுச்சீட்டு
★ அசல் சான்றிதல்களுடன் நேரில் வரவும்.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்:
க. சுதாகரன் - 0779580588

மேன்டெக் என்டர்பிரைசஸ்
#535 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
தொ.இல. 2363193, 011-4375911 பெக்ஸ்: 4510549
Email: mantek.enterprises@yahoo.com
License No. 1449
(நித்திய கல்யாணி ஜுவலர்ஸ் அருகில், ரொக்ஸி தியட்டர் அருகில் உள்ள பெட்ரோல் நிலையத்திற்கு முன்பாக)
SLBEF APROVED CHARGES ONLY
App No. AL 1449 / Advt 01,12


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
கட்டுவன்
இலங்கை
04 ★ 09 ★ 1915



இறப்பு
ஒன்ராறியோ
கனடா
22 ★ 01 ★ 2009

## அமரர் பொன்னம்பலம் முருகேசு

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

பாசத்தின் உறைவிடமாய் நேசத்துடன் பழகி
ஆலமரமாய் இருந்து அறிவுரைகள் கூறிய ஐயாவே!
இன்றைய நாளில் உங்களை நினைத்து இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'சிங்கம்ஸ் இல்லம்',
கோண்டாவில் மேற்கு.

சிங்கம்ஸ் பார்மஸி,
கோண்டாவில் மேற்கு.

(13184)(2-6-7)

# மரண அறிவித்தல்



கார்த்திகேசு
## சிவராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற மலேரியா தடைப் பகுதி தெளிகருவி உத்தியோகத்தர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், நுணாவில் சந்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவராஜசிங்கம் 19.01.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் நல்லம்மா தம்பதியரின் மருமகனும், விமலேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவரஞ்சன் (ஜேர்மனி), சசிதா (சுவிஸ்), வனிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி, தேவகுமார், சிவகுமார் ஆகியோரின் மாமனும், கபின், அபின், கிருத்திக், மிதுர்னா, மயுர்னா, மகிழவன், மகிழவி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், குமாரசிங்கம் மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற பரராஜசிங்கம், தர்மேஸ்வரி (இந்தியா), குணேஸ்வரி (லண்டன்), கமலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரன், சர்வேஸ்வரன், குகனேஸ்வரி, தர்மேஸ்வரி, யோகேஸ்வரன், மகேஸ்வரன், ராஜேஸ்வரி, ராஜேந்திரம் (அமரர்), குணேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

SWISS TEK ALUMINIUM LTD நிறுவனத்துக்கு வட மாகாணத்தில் 'விற்பனைப் பிரதிநிதி' ஆகப் பணிபுரியக் கூடிய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன. விண்ணப்பதாரிகள் 18-27 வயதுக்கிடைப் பட்டவராகவும் க.பொ.த (சாதாரண தரம்) அல்லது உயர்தரத்தில் சித்தியடைந்தவராகவும், ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் தேர்ச்சிபெற்றவராகவும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற வராகவும் இருத்தல் வேண்டும். தகைமைச் சான்றிதழ்கள், சுயவிவரக்கோவை என்பவற்றுடன் 22.01.2012 இன்று மு.ப. 11 மணிக்கு 469, K.K.S வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள LANKA TILES SHOW ROOM அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

குறிப்பு:- நேற்றைய விளம்பரத்தில் நேர்முகப்பரீட்சை 23.01.2012என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டதற்காக வருந்துகின்றோம்.

**Quick Learning Course**

**Spoken English With Grammar**

உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Month)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களம் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

O/L மற்றும் A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

கிழமை நாட்களில் மாலைநேர வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

Date 23.01.2012
Time 3.00 -5.00 p.m.

BCHS BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074
No. 3, 6th Lane Vairavar Kovil Veethy, Vaiavarpulliam Kulam Vavuniya. Tel: 024 3245287

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ... தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



வமதுப் பிரச்சினை 07




கொக்கோ சிறுவர்கள் 03



கோத்தாவின் கேள்வி 02




நண்பன் – விமர்சனம் 18



அபிவிருத்தி மீது வீசப்படும் கரிகள் 10

# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம் 01


உதயன் 22 ஜனவரி 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு

# சரி பிழை எது ?

ஞானியன்

''புலிகளையே ஒழித்து, சாதனை செய்த எனக்கு இந்த டெங்கு விளையாட்டுக் காட்டுகிறது. எவ்வளவு தான் முயன்றும் இதை (டெங்கு) அழிக்கவே முடியாதிருக் கிறது''.

-ஒரு நித்திரைப் புலம்பலில் ஜனாதிபதி.



ஈடிஸ் ஈஜிப்டி. இதுதான் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பின் 'டாப்புப் பெயர்'. ஆனால் மற்றைய நுளம்புகளைப் போல் அல்லாமல் ஈடிஸ் சுத்தம் பார்க்கும் பிரகிருதி. அதனால் தான் நன்னீர் தேங்கியுள்ள இடங்களில் வாடகை கொடுக்காமல் 'அடாத்தாக' குடியிருக்கத் தொடங்குகிறது. பயன்படுத்தப்படாத குளிர்சாதனப் பெட்டிக்குள் தேங்கியிருக்கும் நீரில் கூட தன்னுடைய உற்பத்தியை செய்யக் கூடிய வல்லமை கொண்டது. இதன் உயிர்நாடியே தேங்கி நிற்கும் நல்ல தண்ணீர் தான். பேய் அண்டாமல் இருக்க ஒரு சிலர் தலைமாட்டுக்குள் விளக்குமாற்றை வைத்துக் கொண்டு தூங்குவார்கள். அதுபோல தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொண்டால் டெங்கு நுளம்பும் எவரையும் அண்ட முடியாது.







2010 ஓகஸ்ட் 2 .

களனியில் பேயாட்டம் போடும் டெங்கை ஒழிப்பதற்கு களனியின் குறுநில மன்னரும் பிரதி அமைச்சருமான மேர்வின் சில்வா தலைமையில் ஒரு அவசரக் கூட்டம். அந்தக் கூட்டத்துக்கு எல்லா சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கட்டாயம் வரவேண்டும் என்பது அவரின் கண்டிப்பான கட்டளை. ஆனால் ஒரு சமுர்த்தி உத்தியோகத்தருக்கு அன்றைக்கு ஏழரைச் சனியன். அவரது பிள்ளைக்கு உடல்நலக் குறைவு என்பதால் குழந்தையைக் கூட்டிக் கொண்டு அவர் வைத்தியசாலைக்குச் சென்று விட்டார். கூட்டத்துக்கு வரவில்லை.

மேர்வின் அந்த உத்தியோகத்தர் ஏன் வரவில்லை என்று கேட்டார். காரணம் சொல்லப்பட்டது.

''என்னுடைய பேச்சை மதிக்காமல் களனியில் ஒருவன் செயற்படுவதா?'' என்று உறுமியவாறு பற்களை நறநற வெனக் கடித்துக் கொண்டார்.விஜயகாந்த் போல மேர்வினின் கண்களும் கொவ்வைப் பழங்களாயின. சமுர்த்தி உத்தியோகத்தர் அவசரமாக மேர்வினின் ஏவுதலின் பேரில் அங்கு இழுத்து வரப்பட்டார். யமதர்மன் போல பாசக் கயிற்றோடு காத்திருந்த மேர்வின் அந்த உத்தியோகத்தரை மரத்தோடு சேர்த்துக் கட்டினார். ஆசைக்கு நாலைந்து அடிகளும் இலவசமாகக் கொடுத்தார். வெறு வாயை மென்று கொண்டிருந்த ஊடகங்களுக்குநல்லதீனி கிடைத்தது. அடுத்த நொடியே எல்லா ஊடகங்களும் இந்தச் செய்தியை முன்னிலைப்படுத்த மேர்வினின் காட்டுத் தர்பார் பற்றிய விமர்சனங்கள் தாறுமாறாக வரத் தொடங்கின. சனியனின் பார்வை உத்தியோகத்தரை விட்டு விட்டு மேர்வினின் பக்கம் திரும்பியது. அவரிடமிருந்த பிரதியமைச்சர் பதவி பிடுங்கப் பட்டது. மூன்று மாதங்களுக்கு மேலாக தலையில் முக்காடிட்டபடி தான் மேர்வினின் நடமாட்டம் இருந்தது.

2011 ஜனவரி 14.

சேந்தாங்குளத்தில் இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் மக்கள் மீள்குடியேற்றப் பட்டிருந்தனர். நீண்டகாலமாக மக்கள் நடமாட்டம் இன்மையால் எங்கும் ஒரே பற்றைக்காடு. டெங்கு, மலேரியா போன்ற நோய்களை பரப்பும் எல்லா வகையான நுளம்புகளும் இங்கு நல்ல வசதியோடு வாழத் தொடங்கியிருந்தன. இவற்றை அழித்தால் தான் நோய்கள் பற்றிய பயம் இன்றி மக்கள் நிம்மதியாக வாழ முடியும். ஆனாலும் இந்தப் பகுதியில் இத்தனை நாளும் தாம் நினைத்தபடி வாழ்ந்த வாழ்வுக்கு இப்போது 'ஆப்பு' வந்துவிட்ட ஆத்திரத்தில் கடற்படை மக்களின் அபிவிருத்தி வேலைகள் பலவற்றுக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தது. அதனைத் தவிர்க்கும் முகமாக நுளம்புகள் உற்பத்தியாவதற்கு வசதியாகவுள்ள பற்றைகளை அழிக்க கடற்படையிடம் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் கலந்துரையாடி அனுமதியும் பெற்றிருந்தார். அனுமதி கிடைத்த விடயம் மக்களுக்குச் சொல்லப்பட்டது.

வழமையாகவே தைப் பொங்கலுக்கு முதல் நாள் வீடுகளையும், வளவினையும் சுத்தப்படுத்துவது யாழ்ப்பாணத்தில் எழுதப்படாத ஒரு சட்டமாக இருக்கிறது இந்தச் சாட்டோடு தம்மைச் சூழவுள்ள பற்றைகளையும் அகற்றுவதற்காக அவற்றுக்கு நெருப்பு வைத்தனர் சிலர். அது கொழுந்துவிட்டெரிய, பக்கத்து முகாமிலிருந்த கடற்படையின் வயிறும் பற்றியெரிந்தது. (இத்தனை நாளும் தாங்கள் ஆசையாக வளர்த்து வந்த பற்றைகள் கண்முன்னே தீக்கிரையாகும் போது அவர்களுக்கு கவலை வரத்தானே செய்யும்?) கொட்டன்களோடு வந்தவர்கள் நெருப்பு வைத்தவர்களுக்கு 'நெருப்படி' கொடுத் தார்கள். கொளுத்தியவர்களைக் கொண்டே தண்ணீர் ஊற்றி நெருப்பை அணைக்கவும் செய்தார்கள். விபரீதத்தை அறிந்த வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சம்பவ இடத்துக்கு விரைந்தார். ஆனாலும் அவரது பேச்சைக் கேட்கும் மன நிலையில் அந்த கடற்படை முகாமில் பொறுப்பதிகாரி இல்லை. அவருக்கும் 'துவக்குச் சோங்கால்' நாலு சாத்து விழுந்தது. உயிர் பிழைப்பதற்காக அவர் ஓடுவதைத் தவிர வேறு தெரிவுகள் அப்போதைக்கு இருக்கவில்லை.

* * *

தேசிய ரீதியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை செய்யாத உத்தியோகத்தர் களனியில் கட்டிவைக்கப்பட்டு அடிக்கப்பட்டார். சேந்தாங் குளத்திலோ அந்த நடவடிக்கையை முனைப்போடு மேற்கொண்டமைக்காக மக்களும் பிரதேச சபைத் தலைவரும் கடற்படையால் தாக்கப்பட்டுள்ளனர். இதனால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுப்பது சரியா பிழையா என்று தெரியாமல் பலரும் குழம்பிப் போயுள்ளனர்.

உயிர்களை இரக்கமின்றிக் காவு கொள்ளும் டெங்கு நுளம்புகள் மீது அரசு போர்ப் பிரகடனம் செய்திருக்கிறது. டெங்கு நோயை ஒழிப்பதற்கு மில்லியன் கணக்கில் பணமும் கரைந்து செல்கிறது. இந்த நிலையில் ''டெங்கு நோயை ஒழிக்க ஒன்றிணையுங்கள்'' என்று ஜனாதிபதி மஹிந்த விடுத்த அறைகூவலை சிரமேற் கொண்டு பற்றைகளை அழித்த மக்களும் பிரதேச சபைத் தலைவரும் ஏன் தாக்கப்பட்டனர் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

ஒருநாட்டின்ஜனாதிபதி விடுத்த ஆணையை முன்னெடுத்தவர்களைத் தடுத்ததும் தாக்கியதும் குற்றமாகாதா? அவ்வாறு குற்றமிழைத்தவர்களை அரசு தண்டிக்குமா? என்ற கேள்விகள் எழுந்து கொண்டே இருக்கின்றன. யார் கண்டது? இலங்கையில் ஜனாதிபதியின் ஆணையை தடுத்து நாய் போல தாக்குவது கூட ஜனநாயகமாக (ஜனம்+நாய் + அகம் = ஜனநாயகம்) கருதப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிசங்கு சொர்க்கத்தில் திணறிய அமைச்சர்கள்

அமைச்சரவை மாறப்போகிறது என்று 'மௌபிம' சிங்களப் பத்திரிகை கடந்தவாரம் செய்தி வெளியிட்டது. ஆடிப்போய்விட்டார்கள் அமைச்சர்கள் அனைவரும். மஹிந்தருக்கு காலையிலிருந்தே அழைப்புக்கு மேல் அழைப்பு. எல்லோரது கேள்வியும் ''விசயம் உண்மைதானா'' என்பது மட்டும்தான். கடுப்பாகிய மஹிந்தரோ, ''நீங்கள் எல்லாம் விரும்பினால் அமைச்சரவையை மாற்றிவிடுகிறேன்'' என்று சீறிவிட்டு தொலைபேசியை அடித்து அடித்து வைத்துக் கொண்டிருந்தார்.



இந்தப் பதிலால் பல அமைச்சர்களின் நிலையோ திரிசங்கு சொர்க்கம். அமைச்சரவை மாறுமா இல்லையா என்று உறுதியாகத் தெரியாமல் அவர்களுக்கு மண்டை காய்ந்து விட்டது. நேரிலேயே கேட்டு விடுவது என்று சில அமைச்சர்கள் அலரிமாளிகைக்குப் புறப்பட்டுப் போனார்கள். ''மாற்றம் வருமா? வராதா?'' இதுதான் அனைவருக்கும் தெரியவேண்டி இருந்த ஒரேயொரு விடயம். நிலைமையைப் புரிந்துகொண்ட மஹிந்தர், ''கவலைப்படாதீர்கள். இப்போதைக்கு எனக்கு அந்த எண்ணம் இல்லை. நீங்கள் அவசரப்பட்டால் அமைச்சரவையை மாற்றிவிடுகிறேன்'' என்றிருக்கிறார்.

''அப்ப, அந்தச் செய்தி பொய் என்று ஓர் அறிக்கை விடுவோமே...'' என்று அமைச்சர்கள் கோரஸாகக் குரல் எழுப்பினர். மஹிந்தரோ, ''எதற்கு அதெல்லாம். மாற்றம் வந்தாலும் வரும் விட்டாலும் விடும்'' என்று மீண்டும் அமைச்சர்களைக் குழப்பிவிட்டார். விடாக் கொண்டர்களாக நின்ற அமைச்சர்களோ, ''அப்ப, அந்தப் பத்திரிகைக்கு மட்டுமாவது மறுப்பு அனுப்பலாம்தானே'' என்று நாண்டு கொண்டு நின்றார்கள். மஹிந்தரோ, ''நான் அந்தப் பத்திரிகைக்காரர்களுடன் ஏற்கனவே பேசி விட்டேன். மறுப்புபோடவா என்று கேட்டார்கள். அதெல்லாம் தேவையில்லை, ஓரிரு நாள்களில் மக்கள் அதையெல்லாம் மறந்துவிடுவார்கள். விட்டுவிடுங்கள் என்று சொல்லிவிட்டேன்'' என்று பதிலிறுத்துள்ளார்.

''முன்னாலே போகவிட்டு பின்னாலே தூக்கிவிடுவார்களோ என்ற பீதியிலேயே அமைச்சராகக் கதிரையில் இருக்க வேண்டியிருக்கிறது'' என்று இப்போது புலம்பித் திரிகிறார்களாம் சில அமைச்சர்கள். ஆனாலும் விடாத அமைச்சர்கள் தங்களுத் தெரிந்த ஆங்கிலப் பத்திரிகையாளரைப் பிடித்து செய்தியை வெளியே கொண்டு வந்துவிட்டார்கள்.



# எல்லாமே ஒன்றுதான்

கடந்த வாரம் அரசியல் வட்டாரங்களைக் கடும் பரபரப்புக்கு உட்படுத்திய, அமைச்சரவை மாற்றச் செய்தி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவையும் விட்டுவைக்கவில்லை. ஏனெனில் அவரது பதவியும்தான் மாற்றப்படப்போகிறது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. செய்தி வந்தபோது அமெரிக்காவில் இருந்த சமல், ஓரிரு நாள்களில் திரும்பினார். அவரிடம் போய் சில எம்.பி.மார் ''செய்தி உண்மையா? உங்கள் பதவியும் பறிபோகுமா?'' என்று கேட்டார்கள். வெற்றுப் புன்னகையுடன், ''செய்தியில் உண்மையும் இல்லை; பொய்யும் இல்லை. சபாநாயகராக இருக்கச் சொன்னால் இருப்பேன்; போகச் சொன்னால் போவேன். வேறு ஏதாவது பதவி தந்தால் அதனையும் ஏற்பேன்'' என்று சலனமே இல்லாமல் பதில் சொல்லிவிட்டு சாமியார் மாதிரிக் கடந்து விட்டார் சமல்.

# கோத்தாவின் கேள்வி

கொழும்பு அரசியல் வட்டாரத்தை கடந்த வாரத்தில் கலக்கிய மற்றொரு செய்தி கோத்தபாய அரசியலுக்கு வரப்போகிறார் என்பதுதான். இதுதான் சந்தர்ப்பம் என்று கருதிய ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அலரிமாளிகையில் கோத்தபாயவைச் சந்தித்த ஒரு கணத்தில், ''ஜனாதிபதிக்கு உமது உதவி அவசியம் தேவை. ஒரு முடிவெடுத்து அரசியலில் இறங்கிவிடவேண்டியதுதானே'' என்று கேட்டார். கோத்தபாயவின் முகம் இறுகிப் போய்விட்டது. லலித்தை ஒரு மாதிரியாகப் பார்த்து, ''ஏன்... பாதுகாப்புச் செயலர் பதவியை யாருக்காவது கொடுக்க வேண்டியிருக்கிறதா?'' என்றார்.



பதறிப்போன லலித்தோ ''இல்லையில்லை அப்படி ஒன்றும் இல்லை; செய்திகள் வருகின்றதே என்று கேட்டேன்'' என்று கூறிச் சமாளித்தார். அதற்குக் கோத்தபாயவோ, ''என்னை அரசியலுக்கு வரச் சொல்லி நிறையப் பேர் சொல்கிறார்கள். ஜனாதிபதியுடனும் நான் அது பற்றிக் கதைத்துள்ளேன். ஆனால் அரசியலுக்குள் நான் ஒருபோதும் நுழைய மாட்டேன். அதற்காக, இந்த நாட்டை அபிவிருத்தி செய்யும் பணியில் இருந்து விலகும்படி யாரும் என்னைக் கேட்கக்கூடாது'' என்று 'கூலாக' கூறிவிட்டுச் சென்று விட்டார்.

# எல்லாம் ஒரு நடிப்புத்தான்



இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வந்து சென்ற கையோடு, மஹிந்தவும் ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியாவும் திருமண வைபவம் ஒன்றில் சந்தித்துக் கொண்டார்கள். பேச்சு கிருஷ்ண விஜயம் பற்றித் திரும்பியது. தான் 13 பிளஸ் என்று கூறியது செனட் சபையைக் குறிப்பிட்டுத்தான் என்று மஹிந்தர் கூற, ''அப்ப, பொலிஸ் அதிகாரமுமா?'' என்று கரு கேட்டார். ''ஐயையோ அது கிடையாது'' என்று கூறிவிட்டார் மஹிந்த.


''அப்ப, தீர்வை எப்பத்தான் வைக்கப்போகிறீர்கள்?'' என்று கேட்டார் கரு. ''நாங்கள் தீர்வு குறித்த எமது நிலைப்பாட்டைத்தான் சொல்லி இருக்கிறம். ஆனால், தனித்து நாங்கள் அதைக் கொடுக்க முடியாது. அப்படிச் செய்தால் சனங்கள் எங்களுக்கு எதிராகத் திரும்பிவிடும்'' என்று மஹிந்தர் பதில் சொன்னார். கூடவே, மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரத்தைக் குடுக்கக்கூடாது என்பதில் அமைச்சர் தொண்டமான்தான் ஒற்றைக் காலில் நிற்கிறார் என்றும் சொல்லிவிட்டு சாட்சிக் கையெழுத்துப் போடப் போய்விட்டார். அவர் பெண் தரப்பில் சாட்சிக் கையெழுத்திட, கரு மணமகன் தரப்பில் கையெழுத்திட்டார்.

# சந்திரிகா அட்வைஸ்

விமான நிலையத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும், ஐ.தே.கட்சி எம்.பி. புத்திக பத்திரணவும் சந்தித்துக் கொண்டார்கள். நலம் விசாரித்தார் சந்திரிகா. ''நான் ஒன்றரை வாரமாக நாட்டில்இல்லை'' என்று பதில் சொன்னார்புத்திக்க. உடனே சந்திரிகா, ''சரி! சரி! ஐக்கிய தேசியக் கட்சிக்கு நல்லதொரு தலைவரைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு என்னை வந்து சந்தியுங்கள். மூன்றே மாதங்களில் மஹிந்தவை எப்படிக் கவிழ்ப்பது என்ற ரகசியத்தைச் சொல்கிறேன்'' என்று கூறியபடியே பறந்துவிட்டார்.



# கோள்மூட்டிய 'அவர்'



அமைச்சர் கிருஷ்ணாவுக்கும் மஹிந்தருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றபோது, கூட்டமைப்பினர் பற்றி மஹிந்தர் கோள்மூட்டத் தவறவில்லையாம். ''அவர்கள் பேச்சில் ஒன்று வெளியே ஒன்று சொல்லித் திரிகிறார்கள். அரசுடன் எப்படி நடப்பது என்றே அவர்களுக்குத் தெரியவில்லை. நீங்கள்தான் கொஞ்சம் சொல்லித் திருத்த வேண்டும்'' என்றிருக்கிறார் மஹிந்த. அது பற்றி ஒன்றும் அலட்டிக்கொள்ளாத கிருஷ்ணாவோ, ''தீர்வு விவகாரம் என்னாயிற்று'' என்று கேட்டிருக்கிறார். ''13 பிளஸை நடைமுறைப்படுத்தப் போகிறோம் என்றிருக்கிறார் மஹிந்த''. ''அது என்ன 13 பிளஸ்'' இது கிருஷ்ணாவின் கேள்வி. ''செனற் சபை ஒன்றை நிறுவி அதற்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து தீர்வொன்றைக் காண்பதுதான்'' என்று மஹிந்தர் பதிலளித்துள்ளார்.

''அப்படியானால் பொலிஸ், காணி அதிகாரங்களுக்கு என்னாகும்?'' என்று விடாப்பிடியாக கிருஷ்ணாவும் கேட்க, ''காணிப் பிரச்சினையை ஒரு சுதந்திர ஆணைக்குழு வைத்துத் தீர்த்துக் கொள்ளலாம். பொலிஸ் அதிகாரம் தான் பிரச்சினையாக உள்ளது. மற்ற எல்லாக் கட்சிகளுடனும் பேசித்தான் அதற்கொரு முடிவெடுக்க வேண்டும்'' என்றாராம் ஜனாதிபதி.

ஜனாதிபதி எதையாவது சொன்னால் அதைக் கூட்டமைப்பினரிடம் சொல்ல வேண்டியிருக்குமே என்ற முன்னெச்சரிக்கையால் முன்னதாகவே சம்பந்தர் குழுவைச் சந்தித்த கிருஷ்ணா ''எந்தக் காரணம் கொண்டும், அரசு என்னதான் கோபப்படுத்தினாலும் பேச்சு மேசையை விட்டு வெளியேற வேண்டாம்'' என்று அட்வைஸ் வழங்கினாராம்.


# இன ஒற்றுமையை தமிழருக்கு புரியவைக்கப் போகிறார்களாம்

அமைச்சர் கிருஷ்ணாவின் இலங்கை வருகை ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவுக்குத்தான் கடும் எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. நடந்து முடிந்த கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தில் அவர் இதனை வெளிப்படுத்தினார். ''13 பிளஸை அரசு தரும் என்று அவர் எப்படி இங்கே வந்து அறிவிக்க முடியும். இதைக் கேட்டுக் கொண்டு முதுகெலும்பில்லாத அமைச்சர்களும் கப்சிப் என்று இருக்கிறார்கள்'' எனத் துள்ளிப் பாய்ந்தார் சோமவன்ஸ. இப்படி அவர் இந்தியாக்காரர் மீது பாய்ந்தாலும், ''கிருஷ்ணாவுக்கு அரசு என்ன சொன்னாலும் அரசிடம் உண்மையில் எந்த ஒரு தீர்வும் கிடையாது'' என்று தனது அரசியல் உறுப்பினர்களுக்குப் புரிய வைக்கவும் அவர் தவறவில்லை.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ரில்வின் சில்வாவோ, ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதையாக வடக்கு மக்களின் அவதி பற்றியும் கொஞ்சம் கதைத்தார். ''வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை அரசு உருவாக்காமல் இருப்பதுதான், சர்வதேச அழுத்தத்துக்குக் காரணம். இந்த இயலாமைதான் எங்களது எல்லா விடயங்களிலும் வெளிநாடுகள் மூக்கை நுழைக்கக் காரணமாகிறது'' என்றார். இந்தியாவின் தீர்வுத் திட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டு அரசு தனது சொந்தத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டும் என்பதே அங்கிருந்த எல்லோரதும் கருத்தாக இருந்தது. போதாததற்கு, இன ஒற்றுமையை வலியுறுத்தி வடக்கு கிழக்கு மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை வேறு விநியோகிப்பது என்றும் முடிவெடுத்திருக்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள நாடுகளில் ஒரு கோடியே 20 லட்சம் அப்பாவி மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். இந்த எண்ணிக்கை உயர்ந்து கொண்டே செல்லும் என அஞ்சுகிறது ஐ.நா. ஆயிரக்கணக்கான சோமாலியர்கள் உணவு தேடி ஒவ்வொரு நாளும் பல நூறு மைல்களுக்கு இடம்பெயர்ந்து வருகிறார்கள். முடிவின்றித் தொடர்கிறது அவர்களது பயணம். இந்த அவலத்தில் இருந்து அந்த மக்களைக் காக்க எல்லோரையும் உதவுங்கள் என்று அழைக்கின்றன உதவி அமைப்புக்கள். யார் வேண்டுமானாலும் உதவலாம். ஒரு ஆயிரம் ரூபா கொடுத்தால் ஒரு குழந்தைக்கு 100 நாள்களுக்கு சத்துணவு வழங்க முடியும் என்று அறிவித்திருக்கிறது சிறுவர் பாதுகாப்பு நிதியம். பட்டினிக்கு எதிரான அமைப்பு, யுனிசெவ் போன்றனவும் இந்த 1,000 ரூபா (10 டொலர்) உதவித் திட்டத்தை அறிவித்துள்ளன. பணத்தைத் திரட்ட அவற்றின் குறி மேற்கு நாடுகள் மீதுதான் என்றாலும் நாங்கள் உதவக்கூடாது என்றில்லை.

2014 உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத்தை நடத்துவதில் பீபாவுக்கு புதிய தலையிடி ஆரம்பித்துவிட்டது. பிரேஸில் நாடு இந்த உலகக் கிண்ணத்தை நடத்துகிறது. பிரச்சினை , மைதானத்தில் பார்வையாளர்கள் பியர் அடிக்க விடுவீர்களா இல்லையா என்பதுதான். போட்டிக்கு அனுசரணை வழங்குவதோ உலகப் புகழ் பியர் உற்பத்தி நிறுவனம். பிரேஸிலோ 2003 முதல் மைதானத்தில் குடிவகைகளுக்குத் தடை போட்டுவிட்டது. பீபாவோ போட்டி நடப்பதற்குள் சட்டத்தை மாற்று என்று பிரேஸிலை நச்சரித்துக் கொண்டே இருக்கிறது. இதெல்லாம் சேர்ந்ததுதான் விளையாட்டுக் களியாட்டம் என்று வேறு காரணம் கற்பிக்கிறது பீபா.






பிள்ளைகள் புத்தக மூடைகளை முதுகில் சுமக்கிறார்கள் என்பதற்காக நினைந்துருகிப் போபவர்களின் கவலை தீர்க்க வந்திருக்கிறது அப்பிள் நிறுவனத்தின் ஐ-பாட். அப்பிளின் நிறுவுனர் ஸ்ரீவ் ஜொப் மறைந்த பின்னர் அப்பிள், பாடசாலை மாணவர்களுக்கான அசத்தலான அறிமுகத்தை வியாழக்கிழமை வெளியிட்டது. இதனால் இரண்டு வசதி. இனிமேல் பிள்ளைகள் மூடை மூடையாக புத்தகங்களைச் சுமப்பதற்குப் பதில் வெறும் 1.5 கிலோ எடையுள்ள ஐ-பாட் ஒன்றைச் சுமந்தால் போதும். ஆசிரியர்களும் பாடக் குறிப்புக்களைச் சுமந்து கொண்டு திரிய வேண்டாம் என்கிறது அப்பிள். இந்த முயற்சி வருங்காலத்தில் படிப்பையேபுரட்டிப்போட்டுவிடும் என்று எதிர்வுகூறுகிறார்கள்.



ஹொலிவூட் பட உலகின் சாதனை மன்னன், அவதார் எடுத்து ஒரு புது உலகையே படைத்துக் காட்டிய சிருஷ்டி கர்தா ஸ்ரீபன் ஸ்பீர்பெர்க், திரைப்படம் உருவாக்கம் பற்றிச் சொல்லி இருக்கும் கருத்து சினிமா ரசிகர்களை அதிர வைத்திருக்கிறது. ''அது ஒரு சித்திரவதை'' என்று வர்ணித்திருக்கிறார் அவர். ''பத்திரிகைகளில் பார்த்தால் ஹொலிவூட் ஏதோ ஒரு நேரான நெடுந்தெரு (ஏ-9) மாதிரித் தெரியும். ஆனால் திரைப்படம் தயாரிக்கவென்று இறங்கிவிட்டால் அது அப்படி இருக்காது. அது ஒரு சித்திரவதை. ஆனால் எந்த ஒரு சினிமாக்காரராலும் அதைத் தவிர்க்க முடியாது. இன்று நாம் அனுபவிக்கும் இந்தச் சித்திரவதை எமக்கு முன்னால் ஹொலிவூட்டின் பொற்காலத்தில் இருந்தவர்களும் அனுபவித்ததுதான்'' என்று தத்துவமாய் உதிர்த்திருக்கிறார் மனுசன்.


உலகெங்கும் சட்டவிரோதக் கருக்கலைப்புக்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. 1,000 பெண்களில் 28 பேர் வருடாந்தம் கருக்களைக் கலைக்கிறார்கள். ஆனால் இதில் கிட்டத்தட்ட பாதியளவிலானது சட்டவிரோதக் கருக் கலைப்பு என்று கவலைப்படுகிறது உலக சுகாதார நிறுவனம். 1998 ஆம் ஆண்டில் 44 சதவீதமாக இருந்த சட்டவிரோதக் கருக் கலைப்பு 2008ஆம் ஆண்டில் 49 வீதமாக அதிகரித்துவிட்டது; தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. மருத்துவ அறிவோ பயிற்சியோ இல்லாத உள்ளூர் மருத்துவிச்சிகளால் மேற்கொள்ளப்படும் இத்தகைய கருக்கலைப்புக்களால் பெண்கள் உயிர் ஆபத்துக்கு ஆளாகுகிறார்கள் என்பதுதான் உலக சுகாதார நிறுவனத்தின் கவலைக்குக் காரணம். உலகமே கலாசார சீரழிவுக்குள்தான் கிடக்கிறது போங்கள்(!,?)



இத்தாலியில் 4,000 பேருடன் சென்றுகொண்டிருந்த கோஸ்ரா 'கொன்கோடியா' ஏன் திடீரெனக் கவிழ்ந்தது என்பதற்கு அதி அற்புதமான காரணம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எல்லாம் காதல் செய்த லீலைதானாம். கிக்லியோ தீவின் கரையில் நின்றிருந்த மோல்டா நாட்டைச் சேர்ந்த 25 வயது அழகி ஒருத்திக்குக் கைகாட்டுவதற்காக கப்பலை கரையோரமாகக் கொண்டுவந்ததில்தான் கடலில் ஆழ்ந்து கிடந்த பாறை கப்பலின் அடியைக் கிழித்து விட்டது என்று சீறுகிறார்கள் இத்தாலி அதிகாரிகள். கரையில் நின்ற பெண்ணுக்குக் கை காட்டும்போது கப்டனுடன்கூடவே வேறொரு பெண்ணும் இருந்தாராம். பயணிகள் பற்றிய அக்கறை இன்றி இவருக்கு என்ன லீலை வேண்டிக் கிடக்கிறது என்று குமுறுகிறது இத்தாலி. கையில் கிடைத்தால் கொன்றுவிடுவோம் என்று திரிகிறார்கள் உயிர் தப்பியவர்கள். தவிர பயணிகளை மூழ்கவிட்டு கப்டன் தப்பிக்கலாமா என்ற விவாதம் வேறு சூடுபறக்கிறது. டைட்டானிக் கப்பல்போல் அதனுடனேயே மூழ்கிவிடாமல் இந்தக் கப்டன் தான் மட்டும் தப்பிவிட்டார் என்பதுதான் கோபம். ரோம் எரியும்போது பிடில் வாசித்த நீரோவின் வாரிசுகள், இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பலர்ஸ்கோனி முதல் இந்தக் கப்பல் வரை தொடர்கிறது என்று உலகம் சிரிப்பாய் சிரிக்கிறது.

சொக்லேட்களை காதலிக்காதவர்கள் யாராவது இருப்பார்களா? காதலிக்குக்கூட அதைக் கொடுத்துத்தான் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அந்தச் சொக்லேட்கள் சிறுவர்களின் இரத்தத்தை உறுஞ்சியே செய்யப்படுகின்றன என்பதை நாங்கள் ஒருபோதும் அறிந்ததில்லை. மேற்கு ஆபிரிக்காவில் கொத்தடிமைகளாக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் வியர்வையிலும் குருதியிலும் விளையும் கொக்கோவிலிருந்துதான் உலகெங்கும் சொக்லேட் தயாராகிறது. கொக்கோ உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் ஐவரிகோஸ்டில் ஆயிரம் ஆயிரம் சிறுவர்கள் அடிமைச் சீவியம் நடத்தி உற்பத்தி செய்யும் கொக்கோவிலிருந்து தயாரான சொக்லேட்டுக்களைத்தான் நாங்கள் அணு அணுவாகச் சுவைக்கிறோம். ஆனால் அந்தச் சிறுவர்களில் பலர் சொக்லேட்டை வாயில்கூட வைத்ததில்லை. வேறு சிலரோ சொக்லேட் என்ற வார்த்தையைக்கூடக் கேட்டதில்லை.





ஆபத்தில் மனிதர்கள் மட்டும்தானா உதவுவார்கள் நாங்களும்தான் உதவுவோம் என்று காட்டுகின்றன இந்தப் பல்லிகள். நண்பனைக் கீழே விழுந்துவிடாமல் காத்து பத்திரமாகக் கரையேற்றியது மேலேயிருக்கும் பல்லி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்போக்கு-மென்போக்கு அரசியலில் ஈடுபடும் தேரர்களும் ஆயர்களும்

■ ஸுடோ ஸ்வாமி

குடாநாட்டுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானிக்கவரும் உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்குச் சென்று யாழ்.ஆயரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

தென்னிலங்கை அரசியலில் பிரதான பதவியேற்பு நிகழ்வுகள், ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றால், மறுநாள் அரசியல் பிரமுகர்கள் மகாநாயக்க தேரர்களின் கால்களில் விழுந்து 'ஆசி' பெறுவதற்கு கண்டிக்கு ஓடுவதனை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

மேலே கூறிய இரு சம்பவங்களில் மட்டும்தான் ஆயர்கள்-தேரர்களின் பிரசன்னம் இருக்கிறது என்பதை காண்பிப்பதற்காக இவை இங்கு தரப்படவில்லை. மரியாதை நிமித்தமான சந்திப்புக்களாக அவை அமைந்திருந்தாலும், சந்திப்புகளின் நோக்கங்கள் வெவ்வேறானவை.

வருகைதரும் பிரதிநிதிகள் ஆயரைச் சந்திப்பதென்பது பெரும்பாலும் ஆசி பெறுவதை நோக்காகக் கொண்டதாக இருப்பதில்லை. மாறாக, நடைமுறை நிலைமைகள் தொடர்பில் ஆயருடைய பிரதிபலிப்புகள் என்ன என்பதை அறிவதற்காகவே! சந்திப்பு நடந்த மறுநாள் பத்திரிகை/ஊடக செய்திகளைப் பார்த்தாலும் ஆயர் நடைமுறை நிலைமைகளை நன்கு பிரதிபலித்திருக்கிறார் என்றோ தேவையான ஒன்று தொடர்பில் தான் கோரிக்கை முன்வைத்திருக்கிறார் என்றோ திருப்திப்படுமளவுக்கு இருக்கும்.

றோமன் கத்தோலிக்க மதத்துக்கான யாழ்.மாவட்ட தலைமைப்பீடமாக இருக்கும் யாழ்.ஆயரை அந்த மதச்சார்பு நிலையிலிருந்து கருத்துக்களைப் பெறும் நோக்கோடு - பிரதிநிதிகள் அணுகுவதும் இல்லை; ஆயரும் - பொதுவில் அவ்வாறன கருத்துக்களை உதிர்ப்பது இல்லை.

யாழ். ஆயர் மாத்திரமன்றி வடக்கு கிழக்கு மறை மாகாணத்துக்குள் அடங்குகின்ற மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் திருமலை - மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரும் - அபிப்பிராயத்தை அறிவதற்காக பிரதிநிதிகளால் நாடப்படுகின்ற நபர்களாக விளங்குகின்றனர்.

ஆனால் தென்னிலங்கையின் பௌத்த உயர் பீடங்களை அரசியல் பிரமுகர்கள் நாடுவதென்பது பொதுவில் மக்களின் கருத்துக்களின் பிரதிபலிப்புக்களை பெறுவதற்காக இருப்பதில்லை.

சிங்கள, பௌத்த அதி உச்ச பெரும்பான்மை நிலவுகின்ற இலங்கையின் அரசியல் ஜனநாயக நிலவரங்களில் பௌத்த சமயத்தின் உயர் பீடங்களும் றோமன் கத்தோலிக்க சமயத்தின் உயர் பீடங்களும் செல்வாக்கு செலுத்துகின்ற அளவுக்கு மற்றைய இந்து இஸ்லாமிய தரப்பினரது பங்கு இருப்பதில்லை. ஆனால் குடித்தொகையில் குறைந்தளவு சதவீதமானோரே றோமன் கந்தோலிக்கராக இருக்கின்றனர்.

இலங்கை அரசியலில் குறிப்பாக தென்னிலங்கை அரசியலில் தேரர்களின் ஆதிக்கம் பலம் வாய்ந்த நிலையிலேயே இருக்கிறது. ஆயர்களின் ஆதிக்கம் எல்லாம் 'மென்போக்கான' நடவடிக்கையாகவே இருக்கின்றன. வல்லாதிக்கம் மிக்கதும் இனவாத போக்குடையதுமான அரசியலில் தேரர்கள் கைதேந்தவர்களாக விளங்குவது கடந்த கால சம்பவங்கள் பலவற்றிலிருந்தும் நாம் கண்ட உண்மை.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவை கொலை செய்த சோம ராம தேரர் முதற்கொண்டு இன்றைய நாடாளுமன்ற 'கிலிசைகேடு' களுக்குப் பின்னாலும் தேரர்களின் கை ஓங்கியிருக்கிறது. ஜாதிக ஹெல உறுமய, தேசிய பிக்குகள் முன்னணி என்றல்லாம் அரசியல் கட்சிகளை உருவாக்கி அரசியல் நடத்தவும் இவர்கள் பின்நிற்கவில்லை.

அத்துரலிய ரத்தின தேரர், எல்லாவல மேத்தானந்த தேரர், தம்பர அமில் தேரர், ஓமல்பே சோபித தேரர் (ஜாதிக ஹெல உறுமய தலைவர்) ஆகியோர் அரசியல் வட்டாரத்தில் அடிக்கடி அடிபடும் தேரர் வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை மற்றும் கொழும்பு பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் மற்றும் வடக்கு கிழக்கு ஆயர்களே இலங்கையின் அரசியல் புலத்தில் அதிகம் பேசப்படுகின்ற ஆண்டகைகளாக இருக்கின்றனர்.

இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் வடக்குக் கிழக்கில் குடிப்பரம்பலின் இன விகிதாசாரத்தை மாற்றுகிற போக்கில் அரசின் செயற்பாடுகள் இருப்பதாக வழங்கிய சாட்டியம் தென்னிலங்கை அரசியலில் பரபரப்பை உண்டு பண்ணியிருந்தது.

✱ அண்மையில் கூட, அன்னை திரேசாவின் சபையைச் சேர்ந்த அருட் சகோதரிகளினால் பராமரிக்கப்பட்டு வந்த 'பிரேம் நிவாஸ' என்கிற சிறுவர் காப்பகம் சுற்றிவளைக்கப்பட்டு, அதன் தலைமை சகோதரி கைதுசெய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார். அந்த கைது மற்றும் தலைமை அருட்சகோதரி மீதான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அறியப்பட்ட போது - அரச விழாக்களைப் புறக்கணித்து விடப்போவதாக அரசுக்கு அழுத்தம் தரும் வகையிலான தீர்மானத்துக்கு கர்தினால் மல்கம் றஞ்சித் வந்திருந்தார்.

✱ அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமான ஆயுத சண்டை வலுப்பெற்றிருந்த நேரத்தில் நத்தார் -புதுவருட காலத்தில் சாத்தியமான - ஒருவார கால போர்நிறுத்த அறிவிப்புக்களைச் சாதிப்பதில் ஓடித்திரிந்தவர்கள் இந்த ஆயர்களே!

✱ இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருக்கும் கச்சதீவை உரிமை கோருகின்ற விவகாரம் இடைக்கிடை எட்டிப்பார்க்குமாப்போல - மடு அன்னையின் ஆலய பிரதேசம் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இருந்த நிலையில் - மன்னார் ஆயரின் கருத்துக்கள் அனைவரினதும் கவனத்துக்கு உரியதாயிருந்தது. கிட்டத்தட்ட மத்தியஸ்தர் நிலைப்பாட்டில் ஆயர் பணியாற்ற வேண்டியிருந்தது. மன்னார் ஆயரின் மறையுரைகளும் தமிழ் மக்களின் ஏக்கங்களை வெளிப்படுத்துபவையாகவே அமைகின்றன.

✱ மிக அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் சிவில் சமூகப் பிரதிநிதிகள் சமர்ப்பித்த-சர்ச்சைக்குரிய- அறிக்கையில் முதன்மைப் பிரதிநிதியாக விளங்கியிருக்கிறார் மன்னார் ஆயர்!

✱ வடக்கு கிழக்கில் ஆயுதப் போராட்டம் பரவலாக நடந்த காலத்தில், தமக்குக் கீழ் இயங்கிய பல குருவானவர்களை இழந்த வரலாறு இந்தப் பிரதேச ஆயர்களுக்கு இருக்கிறது. 1985இல் சுட்டுக்கொல்லப்பட்ட வண மேரி பஸ்ரியன் அடிகளார், 2006 இல் அல்லைப்பிட்டியில் காணாமற்போன வண. நிகால் ஜிம் பிரவுண் அடிகளார், 2008இல் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட ''கிளிபாதர்'' என அழைக்கப்பட்ட எம். எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் போன்றோர் இங்கு கட்டாயம் நினைவுகூரப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தேரர்களைப் போன்று தமது ஆன்மிக நிலைப்பாட்டை நிரூபிக்கும் உடையுடனேயே தேர்தல் களத்தில் குதித்து - போட்டியிட்டு வென்று - ஆட்சி அதிகார ஆசனங்களைக் கைப்பற்றும் நிலைப்பாட்டில் ஆயர்களோ அல்லது அவர்களுக்குக் கீழ் இயங்கும் குருமார்களோ இல்லை. ஆனால் அரசியல் புலத்தில் அவ்வப்போது மெல்லிய அதிர்வுகளைப் பிறப்பிக்கின்ற ஆற்றல் ஆயர்களிடம் இருக்கின்றது.

அண்மையில் கூட யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமான பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பாகப் பங்குபற்றுமாறு யாழ்.ஆயர் கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

நாடு பற்றி எரிகிறபோது பிடில் வாசித்த நீரோ மன்னன் போன்று அல்லாது தம்மைச் சூழவுள்ள விவகாரங்களையும் கருத்திலெடுத்து தலையிடுவது வரவேற்கத்தக்கதே! எனினும் மதத்துக்குரியவர்களாக இருந்து கொண்டு அரசியலில் குறுக்கிடும் தேரர்களும் ஆயர்களும் மீன் பிடிப்பதற்காக குட்டையை குழப்பு கிற மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருந் தால் சரி.

# எந்த வகையிலான இன நல்லிணக்கம்

■ ஜனநாயகன்

"தமிழர்களுக்கென்ற காணி" என்று ஒன்று நாட்டில் இல்லை எனவும் இலங்கையர்களுக்கு என்ற காணிகளே நாட்டில் இருப்பதாகவும் கொழும்பில் ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் காணி மற்றும் காணி அபிவிருத்தி விவகாரங்களுக்கான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்குப் பகுதியில் தற்போது சூடு பிடித்திருக்கும் காணி அபகரிப்பு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு முழங்கித் தள்ளியுள்ளார்.

"கேட்பவன் கேணயனாக இருந்தால் கேள்வரகில் நெய் வடியும்" என்ற பழமொழியின் உண்மையான அர்த்தம் அமைச்சரின் இந்தச் சுத்துமாத்து மூலம் வெளியாகியுள்ளது.

காணி அபகரிப்பு என்ற ஒன்று வடக்கிலே இடம் பெறவில்லை எனவும் தமிழர்களுக்கு எதிராக நாம் ஒரு போதும் செயற்பட மாட்டோம் எனவும், ஆடு நனையுது என்று ஓநாய் அழுத கதையாக அங்கு வைத்து தமிழ் மக்களின் தலையில் சம்பலரைக்க முற்பட்டார் அமைச்சர். ஆனால் அமைச்சரின் இந்தக் கருத்துக்களை முற்றாக நிராகரிப்பதாகவும் மறுதலிப்பாகவும் அமைகிறது வடக்கு கிழக்கில் உள்ள நிலைமை.

அந்தவகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற பல்வேறு இடங்களிலும் காணி அபகரிப்பு விவகாரம் இடம்பெறாமலில்லை. திரைமறைவிலும் வெளிப்படையாகவும் இது தொடர்கிறது.

போரினால் அனைத்தையும் பறிகொடுத்துவிட்டு விரக்தியின் விளிம்பிலும் எந்தவித ஆதாரமும் அற்ற வெறுமையும் கழிகின்ற வாழ்க்கைக்கு தமிழ் மக்களை மீண்டும் திருப்பிப் போட்டுள்ளது காணி அபகரிப்பு விவகாரம். இந்த விவகாரங்கள் 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' தமிழ்ப் பிரதேசங்களில் இடம் பெறுகின்ற போதிலும் தாம் பிடிக்கும் முயலுக்கு மூன்று கால் என குறிப்பிட்டு உரையாற்றி உள்ளார் காணி அபிவிருத்தி அமைச்சர்.

கதிரிப்பாய், ஒட்டகப்புலம், பலாலி போன்ற யாழ். மாவட்டத்தில் உள்ள காணிகள் பலவற்றை அபகரிக்க அல்லது பாதுகாப்பு அமைச்சால் அரசுடைமை ஆக்குவதற்கான செயற் திட்டங்கள் திரைமறைவிலும் சில வேளைகளில் வெளிப்படையாகவும் இடம்பெற்று வருகின்றன.

மாதகலில் கடற்படை முகாம் விஸ்தரிப்புக்காக தமிழ் மக்களின் காணிகளை அரசுடைமையாக்கும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்[illegible] அந்தப் பகுதி ம[illegible] நடத்தியிருந்தனர். இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றபோது முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் புதைப்பதைப் போல அப்படி எதுவும் நடக்கவில்லை என்ற பாணியில் கதை கூறவும் முற்பட்டுள்ளார் அமைச்சர். இதைவிட கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளிலும் இந்தச் செயற் திட்டங்கள் பல்வேறு வகையில் இடம்பெறுகின்றன. பிரதேச செயலங்களுக்கு செல்லும் படை அதிகாரிகள் இன்னும் பொதுமக்கள் குடியமராத காணிகள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதோடு அதன் உரிமையாளர் பற்றிய விவரங்களையும் சேகரித்து வருவதாக கிளிநொச்சியிருந்து தகவல்கள் வெளியாகி வருகின்றன. அத்தோடு அதனை படையினருக்கு வழங்குமாறும் வலியுறுத்தப்படுவதாகவும் அது பற்றிய தகவல்களைப் பிரதேச செயலகங்களில் பெற்று தமது உயர்மட்டம் ஊடாக அதனைக் கையகப்படுத்துவதற்கான செயற் திட்டங்கள் மேற்கொள்ளப் படுவதைப் பல்வேறு தமிழ் ஊடகங்கள் ஆதாரப்படுத்தியுள்ளன.

[illegible]தைப் பொறுத்தவரையில் [illegible] பகுதியில் உள்ள 20 ஏக்கர் காணியை தமக்கு வழங்குமாறு கோரி காணி அமைச்சின் ஊடாக கடிதம் ஒன்று தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டது. இக்காணி தனியார்களுக்குச் சொந்தமானது எனவும் அதில் மீளக் குடியமர 239 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்திருந்தார்.

இதை விட வன்னியில் துணுக்காய், அமைதிபுரம், கோட்டை கட்டியகுளம், தென்னியன் குளம், பழைய முறிகண்டி, கண்டல் ஆலங்குளம், அனிஞ்சயன் குளம், ஐயங்கன் குளம் ஆகிய பகுதிகள் உள்ள காணிகள் சிலவற்றை கையகப்படுத்தப் படுவதற்கான செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதைப் பல்வேறு செய்திகளும் ஆதாரப்படுத்தி வருகின்றன.

இத்தோடு கதிரிப்பாய் காங்கேசன் துறை பண்ணைப் பகுதிகளில் உள்ள காணிகளும் கையகப்படுத்துவதற்கான செயற் திட்டங்களில் உள்வாங்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகின்றன.

இதைவிட யாழ்ப்பாணப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயம் தவிர்ந்த 550 வீடுகள் இன்னும் இராணுவத்தினரின் கரங்களிலேயே உள்ளன என யாழ். புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற சூழ்நிலையில் தமிழர்களுக்கென்று காணி ஒன்று இல்லை எனவும் இலங்கையர்களுக்கான காணிகளே இருக்கின்றன என இன நல்லிணக்கம் பற்றிப் பேசுவது எந்த வகையில் ஏற்புடையது என கேட்கின்றனர் தமிழ் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசை போட ஒரு விடயம் 12

# ஜெயாவின் ஆசை நிறைவேறினால்

ரம்யன்

பிராமணர்கள் மச்சம், மது பானம், புகைத்தல் முதலிய தீய பழக்கங்களைத் தவிர்ப்பவர்கள், தவிர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுபவர்கள்.

இந்த விதமான நற்பழக்கங்களுடன், ஏனைய ஆசாரங்களையும் பூரணமாகக் கைக்கொண்டு கோயில் பூசகர்களாகவும் இருந்து வருபவர்கள் உண்டு. அதுமட்டு மல்ல சமய சாஸ்திரங்கள், தமிழ் இலக்கி யங்கள், ஆகமங்கள் என்று இந்துசமயத்துடன் தொடர்புடைய சகலவிடயங்களிலும் துறை போக கற்றுக் தெளிந்த பிராமணோத்தமர்கள் இருந்துள்ளார்கள், இன்றும் இருக்கிறார்கள். இவர்களை மக்கள் தெய்வீக நிலையில் வைத்து பணிகிறார்கள். ஆனால் எல்லா பிராமணர்களும் உத்தமர்களாக வாழ்கிறார்களா என்பது ஒரு பெரிய கேள்வியாக இன்று எழுந்துள்ளது.

இது ஒரு தனிப்பட்ட மனிதரின் சொந்த விடயமாக இருக்கும் போது எவரும் கவலைப்படப் போவதில்லை. அந்தத் தனிப்பட்ட மனிதர் பொது மனிதராகும் போது - அரசியல் வாதியாகும் போது, அரசியலில் பெரும் பொறுப்புகளுக்கு ஆளாகும் போது அவரது நடத்தையும், ஒழுக்கமும், செயற்பாடுகளும் மட்டுமல்ல அவரது பேச்சும் கூட கவனமாகக் கவனிக் கப்படுகின்றது. அவருக்குரிய மதிப்பும் மரியாதையும் அந்த அடிப்படையி லேயே வழங்கப்படுகின்றன.

அவ்வளவு ஏன் பொதுவாழ்வில் ஈடு படும் ஒருவர் தமக்குவரும் வசதி வாய்ப்பு கள் மற்றும் அதிகாரங்கள் முதலியவற் றைப் பயன்படுத்திக் கொண்டு முறை தவறி நடக்கும் போது ஊழல்களில் ஈடுபடும் போது மக்கள் வெறுக்கிறார்கள்.- உச்சநிலைக்கு சென்று விட்டவர்களைத் தூக்கி எறிந்து விடுகிறார்கள். இதை அண்டை நாடான இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் நாம் கண் கூடாக பார்த்து வந்துள்ளோம்.

இப்பொழுது, தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் மாட்டுக்கறி சாப்பிட்டார் என்ற வகையில் 'நக்கீரன்' பத்திரிகை வெளியிட்ட விடயம் தமிழ் நாட்டை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.

முதலமைச்சர் ஜெயலலிதா திரா விடக்கட்சி ஒன்றுக்கு தலைவராக இருந்த போதிலும் பிராமண வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் மாட்டுக்கறி சாப்பிட்டார் என்ற விடயத்தை நக்கீரன் பத்திரிகை பெரிதாக எடுத்துக்காட்டி சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. அதுவும் தமிழர்களின் பொங்கல் திருவிழா நடைபெறும் இந்தத் தருணத்தில் இந்த விவகாரம் வெளிப்பட்டிருப்பது ஜெயலலி தாவிற்கும் அவரது கட்சியினருக்கும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

பொங்கல் பண்டிகையில் மாடுகளுக் கென 'பட்டிப் பொங்கல்' விசேடமாகக் கொண்டாடப் படுகின்றது. பசுவைத் தெய்வமாக கொண்டாடும் இந்துக்கள் மத்தியில் அவர்களின் முதலமைச்சராக இருக்கும் ஒருவர் மாட்டுக்கறியை உண்டார் என்று விளம்பரம் செய்வதானது அவரது புகழை மங்கச்செய்வதாகவும், அவருக்கு எதிர்ப்பை உருவாக்குவதாக வும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஜெயலலிதா மாட்டுக்கறி சாப்பிட்டாரா? இல்லையா? என்பது அவருடைய சொந்த தனிப்பட்ட விடயமானாலும் அவர் முதலமைச்சர் பதவிக்கு வந்துள்ள பிராமண சமூகத்தவர் என்ற முறையிலேயே அந்தப்பத்திரிகை இந்த விடயத்தை தூக்கிக் காட்டமுயன்றிருக்க வேண்டும்.

ஜெயலலிதா கொன்வென்டில் தங்கிப் படித்தவர் என்று கூறப்படுகின்றது. அத்துடன் முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்த சசிகலா குடும்பத்தவருடன் பல வருடகாலமாக நெருக்கமாக - உறவினர் போல் இருந்துவந்துள்ளவர். அதனால் புலால் உணவில் அவருக்கு பரிச்சயம் ஏற்பட்டிருக்க முடியும் என்ற வகையில் நக்கீரன் இதழ் மாட்டுக் கறி விடயத்தை பிரசாரப் படுத்தியிருக்கலாம். தமக்கு 'சிக்கன்கறி' மிகவும் பிரியம் என்று ஜெயலலிதா முன்னர் ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்த விடயமும் இப்போது மீளவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

எதுவானாலும் முதலமைச்சரின் ஆதரவாளர்களும் அ.இ.தி.முகவினரும் நக்கீரன் இதழ் பணிமனையை அடித்து நொருக்கி, பத்திரிகைத் தாள்களை தீயிட்டுக் கொளுத்தி நாசம் புரிந்துள்ளார்கள்.

இப்பொழுது விடயம் நீதி மன்றத்தில் இருக்கிறது. தாமோ எம்.ஜி.ஆரோ மாட்டுக்கறி சாப்பிட்டதே இல்லையென்று ஓர் அறிக்கையில் ஜெயலலிதா அழுத்திக் கூறியிருக்கிறார். அவதூறான கருத்துக்களை வெளியிட்டுத் தமது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திவிட்டதாக நக்கீரன் பத்திரிகை உரிமையாளர்கள் மீது முதலமைச்சர் வழக்கும் தொடர்ந்திருக்கிறார்.

அ.தி.மு.க.வினர் தமது நிறுவனத் தின் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் என்பதாக நக்கீரன் ஆசிரியர் கோபாலும் வழக்குப் பதிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

எம்.ஜி.ஆருக்குப் பிறகு அவ்வாறு ஆளுமை உள்ள ஒரு தலைவர் அக்கட்சியில் வெளிப்படவில்லை. எம்.ஜி.ஆருடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தமையாலும், அவர் உயிருடன் இருக்கும் போதே அக்கட்சியின் முக்கிய பதவிகளில் இருந்தமையாலும் ஜெயலலிதாவுக்கு இயல்பாகவே கட்சி தலைமைப் பதவி கிடைத்து விட்டது.

''வழக்கு வரட்டும் ஆவணங்களை சமர்ப்பிக்கிறேன்'' என்று நக்கீரன் கோபால் மிரட்டியிருக்கிறார்.

இந்த நிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு வரும் போது பல விடயங்கள் வெளிவரலாம் - சில வேளை இந்த வழக்கு கள் அப்படியே அமிழ்ந்து போனலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நக்கீரன் கோபால் அவ்வளவு விஷயம் தெரியாத ஆசாமி யல்ல. முதலமைச்சர் தொடர்பாக இப்படி யான ஒரு விடயத்தை பிரசுரித்தால் தம் மீது அவதூறு வழக்கு போடப்படலாம் என் பதை அவர் முன்கூட்டியே உணராமல் இருந்திருக்கமாட்டார். எனவேதான் ஆவணங்கள் இருப்பதாக அவர் கூறுகிறார் என்று எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆவ ணங்கள் வெளிப்படும் என்ற நிலைமை தோன்றும் பட்சத்தில் நக்கீரன் மீதான அவதூறு வழக்கு அப்படியே தொய்யவிடப்படலாம் - அல்லது வாபஸ் பெறப்படலாம். நிலைமை இனிமேல் தான் தெளிவு பெறும்.

உண்மையில் ஈ.வே.ரா.பெரியார் திராவிடர் கழகத்தை ஆரம்பித்த போது முற்று முழுதாக பிராமணர்களுக்கு எதிராகவே அதனை ஆரம்பித்தார் என்று கூறுவார்கள். பிராமணர்கள் முக்கிய பதவிகளில் இருப்பதை கூட பெரியார் விரும்பவில்லையாம் - பிராமணர்கள் தமது சமூகம் சாராதவர்களுக்கு மாறாகவே செயல்படுவார்கள் என்பது பெரியாரின் சித்தாந்தமாக இருந்துள்ளது. பெரியாரை அடியொற்றி திராவிடர் கழகத்தை அரசியல் அமைப்பாக அண்ணா ஆரம்பித்த போது ஆரிய கலாசாரங்களை வன் மையாக எதிர்த்த போதிலும் பிராமணர்களை தனிப்பட்ட முறையில் எதிர்க்கவில்லை. பிராமணர்களால் கைக்கொள்ளப்படும் வர்ணாச்சிரமதர்மத்தை அண்ணா ஆதரிக்கவில்லை.

கருணாநிதியுடன் மோதலுக்குள்ளான எம்.ஜி.ஆர் தி.மு.க விலிருந்து பிரிந்து அ.இ.அ.தி.மு.கழகத்தை ஆரம்பித்தார்.

இலங்கையில் பிறந்தவரான மலையாள பூர்வீகத்தைக் கொண்ட எம்.ஜி.ஆர் தமக்குப் பின்னர் ஜெயலலிதாவை வாரிசாக நியமித்தாரா? இல்லையா என்பது ஒரு புறமிருக்க அவர் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜெய லலிதாவைத் தமது தலைவராக வரித்துக் கொண்டார்கள். அம்மையாரும் அதனை அழுத்தமாகப்பிடித்து கொண்டுவிட்டார்.

பிராமணராக இருந்த போதிலும் முக்குலத்தோர் என்றழைக்கப்படும் சசிகலா குடும்பத்தோடுமிக நெருக்கமாக இருந்து வந்துள்ள ஜெயலலிதாவுக்கு அக்குடும்பமே இப்போது பகையாளிகளாகி விட்டது. அவர்களை அப்புறப்படுத்துவதற்கு 'துக்ளக்' ராமசாமி காரணமாக இருந்துள்ளார் என்று கூறப்படுகிறது. ஜெயலலிதாவின் பதவி ஆசைக்கு இவர் மேலும் தூபம் இட்டு அகில இந்திய அளவில் பெரிய பதவியை அடைய அவருக்கு ஆசை காட்டியுள்ளார் என்று கூறப்படுகிறது. ஜெயலலிதாவின் கருத்துக்களும் அந்த வகையிலேயே அமைந்துள்ளன.

எம்.ஜி.ஆரின் ஆண்டு விழாவையொட்டி கட்சித் தொண்டர் களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கை யிலும் அகில இந்திய மட்டத்தில் கட்சியை உயர் நிலைக்கு கொண்டு செல்ல உழைக்கும் படி கேட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் எல்லாம் இனிமேல் ''சோ''வின் சாணக்கியத்தோடு மத்தியில் பிரதமர் பதவியில் கண் வைப்பதாகவே அமையும் என்று கருதலாம்.

அடுத்துவரும் காலங்களில் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்து பலவீனமான எதிர்க்கட்சியொன்று ஆட்சி அமைக்க நேர்ந்தால் தமிழ் நாட்டில் சகல நாடாளுமன்ற ஆசனங்களையும் அ.இ.தி.மு.க. வென்றுவாகைசூடி வலுவான நிலையில் இருக்கும் பட்சத்தில் மத்தியில் உதிரிக்கட்சிகளின் ஆதரவுடன் பிரதமர் பதவியில் அமரலாம் அல்லது அவர்களே ஜெய லலிதாவை பிரதமர் ஆசனத்தில் அமர்த்தலாம். ஆசை யாரை விட்டது?

இருந்தாலும் நிலுவையிலுள்ள சட்ட விரோதமாக சொத்து சேர்த்த வழக்கு இன்னும் முடிவுறாமல் இருப்பது ஒரு புறம் ஜெயலலிதாவுக்கு இடித்துக் கொண்டுதான் இருக்கும். அந்த வழக்குக்கு எதிராக தீர்ப்பு வந் தால் ஆசைகள் எல்லாம் தோசைகளாகி விடலாம் - சாதகமாக இருந்தால் அதுவே அவரது எதிர்கால பிரசாரங்களுக்கு பேருதவியாக இருந்து விடும்.

எல்லாம் சோவின் திட்டப்படி நடந்தேறினால் - அம்மாவும் மத்தியில் பிரதமர் ஆசனத்தில் அமர்ந்தால் இலங்கையின் ராஜபக்ஷ ஆட்சியாளர்களுக்கு சற்று கலக்கமாகவே இருக்கும். என்றாலும் பதவிக்கு வந்த பிறகு அம்மாவின் வெளிநாட்டு கொள்கை எப்படி அமையும் என்று சொல்ல முடியாது.

பொதுவில் அப்படியொரு நிலைமை வருவதை இலங்கை வாழ் தமிழர்கள் வரவேற்கவே செய்வார்கள். தமிழ் நாடு மீனவர் பிரச்சினையிலும் இலங்கை தமிழர் பிரச்சினையிலும் ஜெயலலிதா காங்கிரஸ் நிலைப்பாட் டுக்கு மாறாக கருத்து கொண்டவர் என்ற முறையில் தமிழ் நாட்டை பொறுத்தவரை அவருக்கான அரசி யல் எதிர்காலம் பிரகாசமாகவே இருப் பது போல் தோன்றுகிறது.

''அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா'' என்று சொல்லிக் கொள்ளலாம் நாம்-

*

# வெளிநாட்டு யோகம்

ஜோதிடர்
பிரம்ம ஸ்ரீ சண்முகதியானேஸ்வரசர்மா

முன்னைய காலங்களில் எமது நாட்டில், பாடசாலைக் கல்வி முடித்த பின் இளைஞர்கள் ஜோதிடரை அணுகுவது - எனக்கு எத்தனை வயதில் உத்தியோகம் கிடைக்கும்? அரச உத்தியோகமா? தனியார் உத்தியோகமா? ஒரே உத்தியோகத்தில் நிலைத்து இருப்பேனோ? அந்த உத்தியோகத்தில் உயர்வு கிடைக்குமா? போன்ற கேள்விகளுடன்தான்...!

ஆனால் இன்றைய கால இளைஞர்கள் (பட்ட தாரிகள் உட்பட) வெளிநாட்டுப் பயணம், அங்கு பிரஜாவுரிமை பெறுவது, தொழில் பெறுவது போன்ற ஆர்வத்துடன் ஜோதிடர்களை அணுகுகிறார்கள்.

வெளிநாடுகளிலுள்ள நிரந்தர வதிவிட பிரஜாவுரிமை பெறாத இளைஞர்களின் பெற்றோர் கூட அவர்களின் ஜாதகங்களுடன் எப்பொழுது தங்களுடைய பிள்ளைகளுக்கு நிரந்தர வதிவுரிமை கிடைக்கும் என்ற அங்கலாய்ப்புடன் ஜோதிடர்களிடம் ஜாதகங்களை கொண்டு செல்கிறார்கள். அல்லது ஏற்கெனவே வெளிநாட்டுப் பிரஜாவுரிமை பெற்ற பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து பிரஜாவுரிமை பெற்று வெளிநாடு செல்லும் பலன் உள்ளதா? என்று பலன் பார்த்துத் திரிகிறார்கள்.

இது இவ்வாறிருக்க, சிலர் ஜோதிடரை அணுகும் போது அந்த ஜோதிடர் வெளிநாட்டு யோகம் மேற்படி ஜாதகருக்கு இல்லை என்று கூறிவிட்டால் ஏன் இந்த ஜாதகர் இந்தியா சென்றார்தானே?மலேசியா சென்றார்தானே? சிங்கப்பூர் சென்றார்தானே? அவை வெளிநாடுகள் இல்லையா? என்று தர்க்கம் புரிகிறார்கள். வெளிநாடு செல்வது வேறு, வெளிநாடுகளில் நிரந்தர வதிவுரிமை பெறுவது என்பது வேறு. இதுவும் அவர்களது ஜோதிடம் சார்ந்த அறிவின்மையே!

ஒருவருடைய ஜாதகத்தில் 3 ஆம் 9ஆம் 12 ஆம் பாவங்களை ஆராய வேண்டும். அத்துடன் நவாம்சமும் ஆராயப்பட வேண்டும். 3 ஆவது பாவம் சிறிய பிரயாணத்தைக் குறிக்கிறது. 9 ஆம் பாவம் பயணம். விமானப் பயணம், கடற்பயணம், நீண்ட தொலைவுப் பயணம் ஆகியவற்றைக் குறிக்கிறது. ஒருவர் அவரது பிறந்த இடத்தையும் பிறந்த நாட்டையும் விட்டுப் பிரிந்து வெளிநாட்டுக்குச் செல்வதைக் குறித்துக் காட்டுகிறது.

### வெளிநாடு ஒன்றில் நிரந்தரமாக வசிக்கும் அதிர்ஷ்டம்

இதற்கு ஒருவர் பிறக்கும் போது கணிக்கப்பட்ட ஜாதகத்தில் 3 ஆம், 7ஆம், 9ஆம்,12 ஆம் பாவங்களை நவாம்சத்துடன் இணைத்து ஆராய வேண்டும். 3 ஆவது பாவம் சிறிய பயணத்தையும் 9 ஆவது பாவமும் 12 ஆவது பாவமும் நீண்ட பயணத்தையும் 7 ஆவது பாவம் ஒருவர் வெளிநாட்டில் வசிப்பதையும் காட்டுகிறது.

3ஆம் 9ஆம் 12 ஆம் பாவங்கள் வெளிநாடுகளிலுள்ள புனித தலங்களுக்கான ஜாத்திரைகள், புனித நதிகளில் நீராடும் யோகங்களையும் (அதிர்ஷ்டம்) தருகிறது.

உதாரணமாக இடப லக்கினத்தில் ஜெனனமானவர்களுக்கு சூரிய பகவான் 4 ஆம் அதிபனாய், 12 இல் உச்சம் பெறுவதும் 12ஆம் அதிபதி செவ்வாயும் பலமானால் வெளிநாட்டு யோகச் சிறப்பும் அங்கு தொழில்ச் சிறப்பும் அமையும். அத்துடன் 7ஆம் 12 ஆம் அதிபனாய் செவ்வாய் 12 இல் பலம் பெறுவதால் வெளிநாட்டில் உள்ளவரைத் திருமணம் செய்து கொள்ளும் அதிர்ஷ்டமும் அமையும். மனைச் சிறப்பும் அங்கு அமையும்.

விருட்சிக லக்கினத்தில் ஜெனனமானவர்களுக்கு சுக்கிரபகவான் 7 ஆம் 12ஆம் அதிபன் பாதிக்கப்படாமல் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் உச்சம் பெறுவதன் மூலம் வெளிநாட்டு அதிர்ஷ்டச் சிறப்பையும் அங்கு திருமண தொழில் சிறப்பையும் தருவார்.

சனிபகவான், கும்பலக்கினத்தில் ஜெனனமானவர்களுக்கு 1 ஆம் 12 ஆம் அதிபனாக 9 இல் (துலா ராசியில்) உச்சம் பெறுவதும் வெளிநாட்டு யோகச் சிறப்பைத் தரும்.


பொதுவாக 7 ஆம் 9ஆம் 12 ஆம் பாவங்கள் பலம் பெறுவதன் மூலமும் குருபகவான் பூர்வ புண்ணிய ஸ்தானத்திலிருந்து 9 ஆம் 11 ஆம் 1 ஆம் பாவங்களைப் பார்ப்பதனூடாகவும் இந்த யோகம் (அதிர்ஷ்டம்) அமையும்.

மேற்குறிப்பிட்டவை பாவக்கிரகங்களின் தாக்கத்துக்கு உள்ளாகாமலும் நவாம்ச நிலையை அனுசரித்தும் இருத்தல் அவசியம்.

பூர்வபக்க சந்திரனாய், சந்திரன் பலம் பெறுவதும் சிறப்பு. அதேவேளையில் வெளிநாடு செல்ல முயற்சிக்கும் காலங்களில் ஜாதகருக்கு கிரக சஞ்சாரங்களும் தெசா புத்தியும் சிறப்பாக அமைவதும் அவசியம்.

*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# நண்பன்

விமர்சனம்

காலேஜில் ஒன்றுசேரும் நண்பர்களின் வாழ்க்கையையும் அவர்களால் காலேஜில் ஏற்படும் நல்ல கெட்ட சம்பவங்களையும் தரமான காட்சி அமைப்புடன் இணைந்து காலேஜுக்குள் சென்று வந்ததான பிரமிப்பில் நண்பன் படத்தின் கதை காதலுடன் வெளிவந்திருக்கிறது. நீண்ட நாளுக்குப் பிறகு நண்பன் என்ற கருத்துக்கு அமைய ஒரு படத்தினைப் பார்த்த பெருமை நண்பன் படத்தின் மூலம் வெளிப்பட்டிருக்கிறது. மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ள இந்தக் காலப் பகுதியில் அந்தத் தற்கொலை கொலைதான் என்ற விளக்கத்தை இப்படம் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. தற்கொலைக்கு மாணவர்கள் கற்கும் பாடத்தின் கனதியும், பேராசிரியர் கற்பிப்பதை இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாமையுமே காரணம் என்ற ஒரு செய்தியை இந்தப் படம் சொல்லியிருக்கிறது. அதாவது மாணவர்களுக்கு கல்வியைக் கற்பிக்கின்ற போது பேராசிரியர்கள் மாணவர்களுக்கு விளங்கிக் கொள்ளும் முறையில் கல்வியைக் கற்பித்தால் மாணவர்கள் இலகுவில் பாடத்தினை கற்க முடியும் என்ற செய்தியையும் சொல்லுகின்றது. படத்தின் ஆரம்பத்தில் விஜயைத் தேடி காலேஜ் நண்பர்களான ஜீவா, ஸ்ரீகாந்த், சத்தியா போகின்றார்கள். தேடிப் போகும்போது காலேஜில் படித்த நாள்களைத் தங்களுக்குள்ளே பகிர்ந்துகொண்டு போகின்றார்கள். அப்படிப் பகிர்ந்துகொண்டு போகின்றபோது முன்னை நாள் நினைவுகள் காட்சியாக நகர்கின்றன.

காலேஜுக்குப் போகும் விஜய் அங்கே ராக்கிங்குக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் ஜீவா, ஸ்ரீகாந்த் துடன் நண்பன் ஆகிறான். விஜயின் வித்தியாசமான செயற்பாடுகள் ஜீவாவுக்கும் ஸ்ரீகாந்துக்கும் பிடிக்க இருவரும் விஜயுடன் சேர்ந்துகொள்கிறார்கள். காலேஜ் காட்சிகள் நகர்கின்றன. பல எதிர்பார்ப்புடன் காலேஜ்ஜுக்கு படிக்க அனுப்பிய ஜீவாவின், ஸ்ரீகாந்தின் பெற்றோர்கள் கஷ்ரப்பட்டு இவர்களைப் படிக்க வைக்கிறார்கள். சூரியாவுக்காகப் படித்து அந்தப் பட்டத்தை அவனுக்கு வாங்கிக் கொடுப்பதற்காக விஜய் காலேஜில் படிக்க வந்திருக்கிறான். சத்தியராஜின் மகள் இலியானா விஜயைக் காதலிக்கும் காட்சிகள் அருமை. அஸ்க்கு ... அஸ்க்கு.. என்ற பாடல் எல்லோர் மனங்களிலும் ரீங்காரம் செய்கிறது. பேராசிரியராக வரும் சத்தியராஜின் நடிப்பு மாணவர்களை கிலி கொள்ள வைக்கும் அளவுக்கு இருக்கின்றது. அந்தளவுக்கு சத்தியராஜ்ஜின் நடிப்பு பழைய வில்லன் நடிப்பு அப்படியே மீண்டும் ஒருமுறை இந்தப் படத்தின் மூலம் வந்திருக்கிறது. பேராசிரியர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்ற மிடுக்கான தோற்றத்தில் சுடுதண்ணீர் மாதிரி ஏறி விழுகிற அளவுக்கு சத்தியராஜ் நடிப்பு பாராட்டக்கூடியது. தான்தான் எல்லாவற்றிலும் முதல் ஆளாக வர வேண்டும் என்ற துடிப்புடன் மாணவன் சத்தியாவின் நடிப்பு ஒரு விதம். பேராசிரியர் சத்தியராஜைப் பார்த்து பயப்படும் மாணவர்கள் மத்தியில் விஜய்யின் துணிவும் திறமையும் பளிச்சென்று இருக்கிறது. மாணவர்களுக்கு விளங்கும் படி படிப்பிக்க வேண்டும் என்று பேராசிரியர்களுக்கு விஜய் சொல்லும் காட்சியும், அந்த முறையைச் செய்துகாட்டும் காட்சியும் இன்றைய கால மாணவர்களுக்கு ஓர் உந்துசக்தியைக் கொடுக்கும். பேராசிரியர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும். இந்தப் படத்தினை பேராசிரியர்கள் பார்க்கும் போது தாம் படிப்பிக்கின்ற முறையை மாண வர்களுக்கு விளங்கும் படி மாற்றிக்கொள்ள முயலுவார்கள். புத்தகத்தைப் படித்துப் பாடமாக்கி பரீட்சையில் சித்தியெய்தும் மாணவர்களின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை ஒரு காட்சியில் தெளிவாக இயக்குநர் கொண்டுவந்திருக்கிறார். காலேஜ் விழாவில் உரையாற்றுவதற்கு சத்தியா கணினியில் தயார்செய்து வைத்திருந்த குறிப்பில் விஜய் மாற்றத்தை ஏற்படுத்திவிட அதையே மனப்பாடம் செய்து மேடையில் பேசும்போது சில கருத்துக்கள் மாறுபட காலேஜ் அதிர்கிறது. அதா வது கற்பிக்கின்ற என்ற சொல் கற்பழிக்கின்ற என்று மாற்றம் பெற்றதால் நடந்த விளைவு. பேராசிரியர்கள் மாண வர்களுக்கு கற்பிக்கின்ற விதம் அந்த மாணவர்கள் எப்படி வளருவார்கள் என்பதை இந்தக் காட்சி மூலம் வெளிப்படுத்தி இருக்கிறது.

வீதியில் நடந்துகொண்டு போகும் போது விஜய், ஜீவா, ஸ்ரீகாந்துக்கு பசி எடுக்கிறது. கையில் பணம் இல்லை. ஒரு திருமண மண்டபத்துக்குள் நுழைகிறார்கள். அந்தத் திருமண நிகழ்வில் இலியானாவை விஜய் சந்திக்கிறார். விஜய்யின் வித்தியாசமான அணுகுமுறை இலியானாவைக் கவருகிறது. ஜீவாவின் அப்பா வருத்தம் கடுமையாகி அம்புலன்சுக்குப் போன் செய்து அம்புலன்ஸ் வரவில்லை. விஜய் இலியானாவின் மோட்டார் சைக்கிளை கேட்டு வாங்கிக்கொண்டு ஜீவாவின் அப்பாவை மோட்டார் சைக்கிளில் நடுவில் இருத்தி மூவரும் ஆஸ்பத்திரி செல்கிறார்கள். ஒரு நிமிடம் பிந்தி வந்திருந்தாலே ஜீவாவின் அப்பாவின் உயிரைக் காப்பாற்ற முடியாது இருந்திருக்கும் என்று டாக்டர் சொல்லும் போது ஜீவா விஜயைக் கட்டிப்பிடித்து அழுகிறான். சரி என்று ஜீவாவுக்கு ஆறுதல் சொல்லி எல்லோரும் கிளம்பும் போது இலியாணாவிடம் விஜய் 'இன்று சுதந்திர தினம்' என்கிறான். இலியானாவோ 'இன்று இல்லையே' என்று சொல்லும் போது 'உனக்கு இன்று சுதந்திரநாள்' என்றும் 'முதன்முதலில் நீயாக ஓர் உதவிசெய்ய முன்வந்திருக்கிறாய்' என்று விஜய் சொல்லும் போது விஜய் மீது இலியானாவுக்குக் காதல் வருகிறது. இருவரும் காதலிக்கின்றார்கள். காட்சி நகர்கிறது. ஜீவா காலேஜில் தண்ணி அடித்துவிட்டு செய்யும் அட்டகாசத்தைப் பார்த்த பேராசிரியர் சத்தியராஜ் ஜீவாவைக் காலேஜை விட்டு வெளியேறுமாறு கூறுகிறார். இதைத் தாங்கிக் கொள்ள முடியாத ஜீவா தற்கொலை செய்வதற்காக மேல்மாடியில் இருந்து விழுகிறான். ஜீவாவை விஜயும் ஸ்ரீகாந்தும் இலியானாவும் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கின்றார்கள். மேல்மாடியில் இருந்து விழுந்ததினால் சுயபுத்தியை இழந்திருக்கும் ஜீவாவை மறுபடியும் எழுந்திருக்க முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். நண்பர்களின் விடா முயற்சியின் பயனாக ஜீவா மீண்டும் சுயநினைவு பெறுகிறார். காட்சி நகர்கிறது. இலியானாவின் அக்கா பிள்ளைபெறும் காட்சி எல்லோருக்கும் ஓர் உணர்வினை கண்டிப் பாக உண்டு பண்ணும். இலியானாவின் அக்காவை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக முடியாதபடி புயல் காற்றில் மழை பெய்துகொண்டிருக்கிறது. இதேவேளை இலியானா வேறு ஒரு வீட்டில் இருக்கிறார். அங்கிருந்து கொண்டு கணினிமூலம் விஜய்க்கு குழுந்தையை வெளியே எடுக்கும் முறையை சொல்லிக்கொடுக்கிறார். அதற்கு ஏற்றவாறு விஜய் முயற்சிசெய்து குழந்தையை வெளியே எடுக்கிறான். இந்தக் காட்சி பிரமிக்க வைக்கிறது. நண்பர்கள் வீடுகள் வரை காலேஜ் வாசல்வரை நண்பன் படம் பல கருத்துக்களை ரசிகர்களுக்கு சொல்லிவிட்டுப் போகிறது.

இலியானாவுக்கும் திருமணம் நடக்கவுள்ளது. திருமண மண்டபத்திலேயே இலியானாவை கூட்டிக் கொண்டு ஜீவா, ஸ்ரீகாந்த், சத்தியா விஜயைத் தேடிப் போகின்றார்கள். அங்கே விஜய் பெரிய ஆராச்சியாளராக இருக்கின்றார். விஜயும் இலியானாவும் ஒன்று சேர்கின்றார்கள். இந்தப் படத்தின் இயக்கம் ஷங்கர். இசை ஹரிஸ்ஜெயராஜ், நீண்ட இடைவெளிக்குப் பிறகு நண்பன் படம். கண்டிப்பாக எல்லோரும் பார்க்க வேண்டிய படம் - குடும்பமாக இருந்து பார்க்கக்கூடிய படம். எமது காலேஜ் வாழ்வினை அழகாக ஒவ்வொரு காட்சியிலும் வடித்து மனோஜ் பரமஹம்சாவின் திறமையான ஒளிப்பதிவில் படம் உயிராக உள்ளது. ஷங்கர் இயக்கத்தில் வெளிவந்த படங்களில் இந்தப் படம் வித்தியாசமானது. புதிய திருப்பத்தைக் கொண்டுவரும்.

- குமார்.

# பவள விழாக்காணும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர்

எமது ஈழத் திருநாட்டில் சமஸ்கிருத மொழியைக் கற்றுத் தேர்ந்து உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்று விளங்கும் அந்தணக் குருமார்கள் பலர் வேதபாராயண குருகுல பாரம்பாரியங்களை வளர்த்து அரும்பணி ஆற்றி வந்துள்ளனர். அவர்கள் அந்தணச் சிறார்களின் வேதாத்யயன கல்வியில் பெரிதும் அக்கறை செலுத்தியுள்ளனர். வேதாத்யயன பயிற்சிக்கெனத் தமது இலத்தில் குருகுலம் முதலான அமைப்புக்கள், பாடசாலைகள் என்பவற்றை உருவாக்கி நடத்தி வந்துள்ளனர். அவர்களது சேவைகள், சமயத்தொண்டுகள் மிகவும் மகத்தானவை.

இவ்விதம் குருகுலப் பாரம்பாரியத்தை உருவாக்கியவர்கள் வரிசையில், இன்றைய காலகட்டத்தில் சிவாசார்ய பாரம்பரியத்தையும் வைதீக மரபையும் வளம் பெறச் செய்ய சேவையாற்றிவரும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக் குருக்களின் சமயத் தொண்டு மிகவும் பாராட்டத்தக்கதாகும்.



தர்மசாஸ்தா குருகுலம், காயத்திரிபீடம் என்பன இணுவில் வட்டுவினி இராஜேஸ்வரி அம்பாள் (கண்ணகை அம்மன்) ஆலயத்தில் அமைந்துள்ளன. பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்டிருந்தவர். அவரது மனைவி திருமதிபுவனாம்பிகைஅம்மா. மகன்மார் மூவர். மகள் ஒருவர்.

குருகுல அதிபர், பிரம்மஸ்ரீ மகாதேவக்குருக்களைப் பலரும் வாத்தியார் ஐயா என அழைப்பது வழக்கம். ஆலய குருகுலத்தில் வேத மந்திரங்கள் எந்த நேரமும் ஒலித்தவண்ணம் இருக்கும். அந்தணச் சிறார்களின் வேதாத்யயனம் காலை மாலை இரு வேளைகளிலும் ஒலித்த வண்ணம் இருக்கும். மந்திர உச்சாடனத்துடன் வேதசிவாகம வகுப்புக்களை வாத்தியார் நடத்திக் கொண்டிருப்பார்.

இங்கு அந்தண சமூகத்தைச் சார்ந்த இளந்தலைமுறையினர், வயது முதிர்தோர் எனப் பலரும் வேத ஆகமப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். குருகுலம் மூலம் சிவாசார்ய பாரம்பரியத்தினையும் வைதீக மரபையும் வளம்பெறச் செய்து வருவது போற்றத்தக்கது. வாத்தியார்-குருகுல அதிபரிடம் சிவாகம நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்த பலர் சிறந்த சிவாச்சார்யர்களாக இன்று இலங்கையின் பல பாகங்களிலும் மற்றும் கடல் கடந்த வெளி நாடுகளிலும் ஆலயப் பணிகளில் ஈடுபட்டு சிறப்பாகப் பணிசெய்து வருகின்றனர். குருக்கள் ஐயா, சிவாச்சார்ய பரம்பரைகளை புதிது புதிதாக உருவாக்குவதன் மூலம் கற்றுத் .தேர்ந்த சிவாச்சார்யர்களாகப் பலர் வெளிவருவதற்கும் அரும்பாடுபட்டு வருகின்றார்.

குருக்கள் தான் செய்கின்ற கிரியைநெறிகளைச் சிறப்பாகச் செய்கின்றமை போற்றத்தக்கது. தமது கண்ணகை அம்மன் ஆலயத்தில் அபிடேகங்கள், பூசைகள், ஸ்ரீ சக்கர பூஜை என்பன மிகவும் பத்தி பூர்வமாக நடைபெறக் காரணகர்த்தாவாக விளங்குகின்றார்.

குருக்கள் தாம் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற கும்பாபிஷேக நிகழ்வுகள், மஹோற்சவங்கள், கொடியேற்றங்கள், சிவாச்சார்ய அபிடேகங்கள், விவாகங்கள் முதலான சகல வைபவங்கள் அத்தனையையும் சிறப்புற நடத்தி வைக்கின்ற பெருமைக்குரியவர். ஆலய அமைப்புக்கள், வைதீக கிரியைகள், ஆகமக் கிரியைகள் தொடர்பான நெறிமுறைகள் என்பன பற்றி விரிவான விளக்கங்கள், சந்தேகங்களுக்கு தீர்வுகள், ஆலோசனைகள் என்பவற்றை வெகு நுட்பமாக அறிந்து ஆற்றுப் படுத்துபவராகவும் திகழ்கின்றார்.

நியத்திரி எனும் அமைப்பு செயற்பட்டு வந்த காலத்தில் அந்தணர்களிடையே சமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கருத்தரங்கு, கௌரவிப்பு, பாராட்டு நிகழ்வுகளிலும், அகில இலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் மாதந் தோறும் ஒழுங்கு படுத்துகின்ற கருத்தரங்கு, பாராட்டு நிகழ்வுகளிலும் பல ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தும், ஆலோசனைகள் வழங்கியும் ஊக்கமளித்து வருகின்றார். ஒன்றியம் நடத்தி வரும் அந்தணர்களுக்கான வேதாத்யயனக் கல்வியினையும் வாத்தியார் நடத்தி வருகின்றார்.

திருகோணமலை பத்திரகாளி அம்மாள் தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியாரான சிவஸ்ரீ.சோ.இரவிச்சந்திரக் குருக்கள், மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதியொன்றைக் கட்டி அன்பளிப்புச் செய்துள்ளமை போற்றத்தக்கது. இத் தர்மசாஸ்தா குருகுலம் 35 வருடங்களாக இயங்கி வருகின்றது. ஏறத்தாழ 300 மாணவர்கள் படித்துப் பயன் பெற்றுள்ளனர். *

இ.குமாரசாமி சர்மா,
வண்ணார் பண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத்தை நாடும் இராணுவத் தளபதி

யமுனா



நாட்டை நிர்வகிக்க ஓர் அரசு அவசியம். அந்த அரசின் நிர்வாகக் கட்டமைப்புக்குள் முக்கியமானதொரு துறையாக விளங்குவது பாதுகாப்புத்துறை. பொதுவாக ஒவ்வொரு நாட்டிலும் ராணுவம் என்று அழைக்கப்படும் பாதுகாப்புப் படை செயற்படுகிறது. ஒரு சில நாடுகளில் நாட்டைப் பாதுகாக்கும் படையே நாட்டை நிர்வகிக்கும் நிலையும் காணப்படுகிறது. இந்த நிலையில் அரசுக்கும் ராணுவத்துக்கும் கருத்து மோதல்கள் ஏற்படுவது வழக்கமான ஒன்றாகி விட்டது. ஆனால் இந்த மோதல் இதுநாள் வரை பாகிஸ்தானில் மட்டும்தான் நிலவி வந்தது. ஆனால் அண்டைநாடான இந்தியாவுக்கும் இந்த நோய் தொற்றிக் கொண்டு விட்டது. அதாவது இந்திய ராணுவத் தளபதி தனக்கான நியாயம் கேட்டு இந்திய அரசை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்றுள்ளார்.

இந்தியாவின் தற்போதைய ராணுவத் தளபதியின் பிறந்த தினம் தொடர்பாக எழுந்த கருத்து முரண்பாடே இவ்விடயம் நீதிமன்றம் வரை எடுத்துச் செல்லப்பட நேர்ந்துள்ளது. அதாவது ராணுவத்தளபதி வி.கே.சிங்கின் பிறப்புச் சான்றிதழிலும், பாடசாலைச் சான்றிதழிலும் அவரது பிறந்த திகதி 1951.05.10 என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ராணுவப் பதிவேடுகளில் 1950.05.10 என்று அவரது பிறந்த திகதி குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி அவர் இந்த வருடம் மே மாதம் 31 ஆம் திகதியுடன் ஓய்வுபெற வேண்டும் என்று பாதுகாப்புத்துறை கூறியது. இதை எதிர்த்து வி.கே.சிங் உச்ச நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் 1951 ஆம் ஆண்டுதான் என்னுடைய உண்மையான பிறந்த ஆண்டு என்று அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் இது தன்னுடைய பதவிக்காலம் தொடர்பான விவகாரம் அல்ல. 13 லட்சம் ராணுவத்தினருக்கும் தலைமைத் தளபதியாக இருக்கும் தன்னுடைய நேர்மை சம்பந்தப்பட்டது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ராணுவத் தளபதி ஒருவர் பதவியில் இருக்கும் போதே அரசை எதிர்த்து நீதிமன்றத்தை நாடியிருப்பது இந்தியாவில் இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க ராணுவத் தளபதிக்கு கட்டாய விடுமுறை வழங்கி அவரை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கை தொடர்பாக இந்திய மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகின்றது. ராணுவத் தளபதி தமது வயது குறித்த சர்ச்சையால் ஓய்வு பெற மறுத்து வருவதால் அடுத்த ராணுவத் தளபதியை நியமிப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எது எவ்வாறெனினும் வி.கே.சிங்குக்கு அடுத்த நிலையில் மூத்தவரான கிழக்கு மண்டல ராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்ரம் சிங்கை அடுத்த ராணுவத் தலைமை தளபதியாகத் தெரிவு செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கிடையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி இந்தியப் பிரதமருடன் இவ்விடயம் குறித்து அவசர ஆலோசனை நடத்தியுள்ளார். அவ்ஆலோசனையின்போது ''ராணுவத் தளபதியின் வயது விவகாரத்தை சிக்கலாக்க வேண்டாம். பிரச்சினையைச் சுமுகமாக முடிவுக்குக் கொண்டு வாருங்கள்'' என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் கேட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து வி.கே.சிங் விடயமாக எந்த உத்தரவையும் பிறப்பிக்கும் முன்னர் தங்கள் தரப்புக் கருத்தையும் கேட்க வேண்டும் என்று கோரி உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

இது இவ்வாறிருக்க முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் இவ்விடயம் குறித்துக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

''ராணுவத் தளபதியின் உணர்வு பூர்வமான பிரச்சினையை உணர்ச்சியற்ற முறையில் மத்திய அரசு கையாள்கிறது. இந்த விடயத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சரின் திறமையின்மை, எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. பிரதமரோ, பாதுகாப்புத் துறை அமைச்சரோ ராணுவத் தளபதியைச் சந்தித்து இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்'' என்று ஜஸ்வந்த் சிங் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், நாட்டின் கௌரவத்தைக் காக்கும் உயர் பொறுப்பிலுள்ள ராணுவத் தளபதி இந்த விவகாரத்தில் தாம் நேரடியாகவே பிரதமரைச் சந்தித்திருக்கலாம். அதை விடுத்து ஒரு சாதாரண பிரஜைபோல உச்ச நீதிமன்றத்தை அணுகி உலகளாவிய ரீதியில் இந்தப் பிரச்சினையை பேச வைத்தது அவர் இதுவரை காலம் வகித்த பதவியின் மரியாதைக்கு இழுக்கானதாகும் எனவும் விமர்சிக்கப்படுகிறது.

அவருக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்ட வேளையிலும் அவரதுபிறந்த திகதி குறிப்பிடப்பட்டதாகக்கூறப்படுகிறது.

அப்போதெல்லாம் இதனைத் திருத்த அக்கறை காட்டாதவர் ஓய்வு பெறுவதற்கு ஒரு வருடம் இருக்கும் வரை இந்தப் பிரச்சினையை ஏன் நீடிக்க விட்டார்? இந்திய ராணுவத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஒருவர் தமது பிறந்த திகதி குறித்து அசமந்தமாக இருந்துள்ளார் என்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. அதைவிட பேரதிர்ச்சி, இதுவரை காலமும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இந்தப் பிரச்சினை தொடர்பாக சிந்திக்காமல் இருந்தமைதான். ✦

# நிம்மதியைக் கெடுக்கும் காட்டு யானைகள்

கல்பனா

கிழக்கு மாகாணத்தில் காடுகள் அண்டிய மக்கள் குடியிருப்புக்களுக்குள் அண்மைக் காலமாகக் காட்டுயானைகள் பிரவேசித்துச் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. தமது குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்து சேதங்களை விளைவிக்கும் காட்டு யானைகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த அரசு கூட நடவடிக்கை எடுக்காதது குறித்து அந்தப் பகுதி மக்கள் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்து வருகின்றனர்.

அவ்விதம் இந்த விடயத்தில் அரசு கூட அக்கறை செலுத்தி நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் யானைகளிடமாவது உதவி கோருவோம் என்று மொறவெள சிங்கள மகா வித்தியாலயத்தில் இரண்டாம் தரத்தில் கல்வி பயிலும் சிறுமி முடிவெடுத்து யானைக்குக் கடிதம் எழுதிய சுவாரஸ்யமான சம்பவமொன்று அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது. தனது அந்தக் கடிதத்தில்

''யானையின் படத்தை வரைந்து தான் வீட்டை விட்டுப் போவதாகவும் வீட்டை உடைப்பது கவலையாக உள்ளதாகவும் எதிர்காலத்தில் தொடர்ந்து வீட்டை உடைத்தால், உன்னுடன் கோபித்துக்கொண்டு கண்டி பெரகராவுக்கு வரமாட்டேன்'' என்று தனது மனதில் தோன்றியதை மழலை மொழியில் எழுதி, வீட்டுக் கதவருகில் வைத்துள்ளார் இந்தச் சிறுமி.

''யானை வரப்போகிறது... யானை வரப்போகிறது...'' என்று எந்த நேரத்திலும் அச்சவுணர்வுடனேயே கிழக்கு மாகாணக் காடுகளை அண்டியுள்ள கிராமத்து மக்கள் தமது வாழ்வைக் கழிக்க நேர்ந்துள்ளது. இயற்கையின் சீற்றம், யுத்த அனர்த்தம் போன்றவற்றால் ஏற்பட்ட துன்ப,துயரங்கள் மக்கள் மனங்களில் மாறாத வடுக்களாக அமைந்துவிட்டன. இந்தத் துயரங்களுடன் காட்டு யானைகளின் அட்டகாசமும் இணைந்து அந்தப் பகுதி மக்கள் மனங்களில் வேதனைகளை நிரந்தரமாக்கிவிட்டுள்ளன. இலங்கையில் காட்டு யானைகளின் அட்டகாசத்துக்குப் பல கிராமங்கள் முகம் கொடுத்து வருகின்றபோதிலும் கிழக்கு மாகாண மக்கள் தொடர்ச்சியாகப் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மக்கள் ஏற்கனவே பலவித சோதனைகளுக்கு முகம்கொடுத்து தமது வாழ்வில் எப்போது விடிவுகாலம் பிறக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்கின்றனர்.

அம்பாறை, தாண்டியடி, சங்கமன்கண்டி ஆகிய பகுதிகளில் யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இந்தப் பகுதிகளில் உள்ள பல குடியிருப்புக்கள் அண்மைக்காலமாக யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மதங்கொண்ட யானைகள் வீதியில் நிறுத்திவைக்கப்படும் வாகனங்களைக் கூட விட்டுவைக்காது சேதப்படுத்துகின்றன.

காட்டு யானைகளின் அட்டகாசத்தால் அண்மையில் மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பகுதியில் 55 வயதையுடைய வயோதிபப் பெண் ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளார். படுவான்கரைப் பிரதேசத்தில் வயல் காவலுக்குச் சென்ற விவசாயியொருத்தர் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமடைந்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் யானைகளின் தாக்குதலினால் மக்கள் படுகாயங்களுக்கு உள்ளாகுவதுடன் பலபேரின் உயிர்களும் காவு கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து அதில் இருந்து மீள முற்படுகின்றபோது, ''பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல்'' யானைகளின் தாக்குதல்களும் அவர்களுக்குப் பாதிப்பாக அமைகின்றன. அண்மையில் சங்கமன்கண்டி காட்டுப் பிள்ளையார் ஆலயத்துக்குள் நுழைந்த யானை ஒன்று, ஆலயத்தின் கதவுகளை உடைத்து கோயிலுக்குள் இருந்த தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருள்களையும் சேதமாக்கிச் சென்றுள்ளது.

இந்தக் கிராமத்துக்கு இதுவரை மின்சார வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படாததனால் மக்கள் இரவு வேளையில் அதிகளவில் யானைகளின் தாக்குதலுக்கு பாதிப்புக்கு உள்ளாகும் நிலை காணப்படுகின்றது.

யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகாது தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு துறைசார் அதிகாரிகளிடமும், அரசியல் வாதிகளிடமும் பல முறை தாம் வேண்டுகோள் விடுத்தும், இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை என்று கிழக்கு மாகாண மக்கள் தெரிவிக்கின்றனர். இனிமேலாவது யானைகளின் அட்டகாசத்துக்கு வன விலங்குத் திணைக்களத்தின் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் உரிய நடவடிக்கை எடுத்து தமது உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்துத்தர முன்வரவேண்டும் என்பதே அம் மக்களின் எதிர்பார்ப்பு. மஹிந்த சிந்தனையில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு மின்சார வேலி அமைத்துக் கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதும், அந்தச் சிந்தனைகூட செயலுருப்பெறாது காற்றில் பறக்கவிடப்பட்ட செய்தியாகவே ஆகியுள்ளது.

யானைகளின் தாக்குதல்களில் அதிகளவில் தமிழ் மக்கள் பாதிப்படைந்த அதே வேளை கணிசமான அளவு சிங்கள மக்களும் பாதிப்படைந்துள்ளனர். சாதாரண சிங்கள மக்களின் பாதிப்புகளுக்குக் கூட உரிய நடவடிக்கை எடுக்க முன்வராத மஹிந்த அரசு, தமிழ் மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைக்ளுக்கு எவ்வாறு தீர்வைப் பெற்றுத்தரப் போகின்றது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ★



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 53

## இரும்புச் சத்தின் அவசியம்

இரும்பு என்றாலே வலிமை. பூமியில் அபரிமிதமாகக் கிடைக்கும் தாதுப் பொருள்களில் முக்கியமானது. பல்வேறு சாதனங்கள் செய்யப் பயன்படும். இரும்பில்லாமல் இயந்திரங்கள் இல்லை. உடலுக்குத் தேவையான தாதுப்பொருள்களில் இரும்பும் ஒன்று. நமது இரத்தத்தில் ஈமோகுளோபின் என்ற பொருள் இரும்பாலானது. இரும்புச் சத்து இல்லாவிட்டால் கலங்களால் ஒட்சிசனைப் பெற்றுக்கொள்ள முடியாது. இரும்புச் சத்தின் தினசரித் தேவை 1-3 mg. ஆனால் உடலால் இரும்புச் சத்தை அகத்துறிஞ்சும் திறன் ஓரளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. தானியங்கள் மிகுந்த உணவுகளில் இருந்து 2-5 வீதமான இரும்புச் சத்தைத் தான் உடல் அகத் துறிஞ்ச இயலும். குறைந்த அளவு தானி யங்கள், அதிகளவு இறைச்சி மற்றும் மீன் செறிந்த உணவுகளிலிருந்து உடல் 10-20 வீதமான இரும்புச் சத்தை அகத்துறிஞ்சிக் கொள்ளும். இதனால் உணவில் தினசரித் தேவையை விட 10-25 மடங்கு அதிகமாயிருக்க வேண்டும்.

**இரும்புச் சத்துள்ள உணவுகள்**

இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. மாமிச உணவுகளிலிருந்து கிடைக்கும் இரும்புச் சத்து
2. சைவ உணவுகளிலிருந்து கிடைக்கும் இரும்புச் சத்து

சைவ உணவு இரும்புச் சத்து சராசரி உணவில் 85 வீதம் கிடைக்கிறது. ஆனால் இந்த 85 வீதத்தில் 20 வீதம் தான் உடலால் அகத்துறிஞ்ச முடியும். இந்த அகத் துறிஞ்சலை அதிகரிக்க உணவுடன் விற்றமின் C மற்றும் அசைவ உணவுப் புரதம் சேர்த்துக்கொள்ள வேண்டும். அசைவ உணவு இரும்புச் சத்து, சைவ உணவு இரும்புச் சத்தை விட நன்றாக உடலால் அகத்துறிஞ்சப்படுகிறது.

**இரும்புச்சத்து நிறைந்த அசைவ உணவுகள்**

முட்டை, இறைச்சி, ஈரல்

**இரும்புச்சத்து நிறைந்த சைவ உணவுகள்**

வெந்தயக் கீரை, முல்லை, முசுட்டை, பொன்னாங்கண்ணி, வல்லாரை, முருங்கை, அகத்தி, முளைக்கீரை, தவசிமுருங்கை, சண்டி, கறிவேப்பிலை, பசளி, தூதுவளை, பருப்பு வகைகள், சோயாபீன்ஸ், பேரிச்சம் பழம், இதர உலர்ந்த பழங்கள் முதலியன.

தினமும் 50 g கீரையைச் சேர்த்துக் கொண்டால் நமது தினசரி இரும்புத் தேவை பூர்த்தியாகும். அத்துடன் விற்றமின் C,B கரோட்டின், கல்சியமும் கிடைக்கும்.

**இரும்புச்சத்துக் குறைந்தால்**

இரும்புச்சத்துக் குறைவுதான் உலகிலேயே பரவலாகக் காணப்படும் தாதுப் பொருள் குறைபாடு. இரும்புச்சத்துக் குறைந்தால் இரத்தச் சோகை ஏற்படும். பெண்களுக்கு இரத்த இழப்பு பல கால கட்டங்களில் ஏற்படும். கட்டிளைமைப் பருவ நிலையிலுள்ள இளம் பெண்களுக்கு மாதாந்த உதிரப் போக்கு ஏற்படும்போது இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும். கர்ப்பிணிகளுக்கும் குறைபாடு ஏற்படும். ஏனெனில் கருவிலுள்ள சிசுவுக்கு அதிகளவில் இரும்புச்சத்துத் தேவை.

ஆண்களுக்குச் சில நோய்களாலும் மூலம் போன்ற இரத்த இழப்பு நோய்களாலும் இரத்தச் சோகை ஏற்படலாம். மொத்தத்தில் இருபாலாருக்கும் உணவுக் குறைபாடுகள், இரத்த இழப்பு என்பவற்றால் இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும். இரத்தச் சோகை வேறு சில காரணங்களால் ஏற்பட்டாலும் இரும்புச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் சோகைதான் மிக அதிகமாகக் காணப்படுகிறது.

**ந.ஸ்ரீசரவணபவானந்தன்**
குழந்தை வைத்திய நிபுணர்,
மாவட்ட பொது வைத்தியசாலை
கிளிநொச்சி.

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., **நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை,** யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

**கேள்வி:-**

வயது 28. இரண்டு குழந்தைகளின் தாய். கருத்தடை முறையாக Depo provera எனும் மூன்று மாதத்துக்கு ஒருமுறை போடும் ஊசியைப் பாவிப்பதற்கு உத்தேசித்துள்ளேன். ஆனால் இதனால் மாதவிடாய்ச் சிக்கல் போன்ற பிரச்சினைகள் வரும் எனவும் புற்றுநோய் ஆபத்துள்ளதாகவும் பயமுறுத்துகிறார்கள். எனவே இது பற்றிய தெளிவான பதிலை எதிர்பார்க்கிறேன்.

**பதில்:-**

Depo proverda எனும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஏற்றப்படும் கருத்தடை ஊசி பற்றி பல்வேறுவிதமான பிழையான கருத்துக்கள் நிலவுகின்றன. அவ்வகையில் இதுபற்றிய உங்கள் சந்தேகத்தை தீர்ப்பதன் மூலம் பெரும்பாலானவர்களின் பயத்தையும் சந்தேகத்தையும் தீர்க்க முடியும் என நம்புகின்றேன்.

இந்தக் கருத்தடை ஊசியானது கருத்தரித்தலைத் தடுப்பதில் மிகவும் பிரயோசமானது. இதனைத் தாய்ப்பாலூட்டும் பெண்களும், ஒரு குழந்தை பிறந்த பின் அடுத்த குழந்தை பெறுவதைப் பின்தள்ளிப் போடுவதற்கும், நிரந்தர கருத்தடை முறையை செய்வதற்கு முன்னதாக தற்காலிக முறையாகப் பயன்படுத்தலாம்.

எனினும் மருத்துவரை அணுகி விரிவான மருத்துவப் பரிசோதனையின் பின்னர், நீங்கள் இக் கருத்தடை ஊசி பாவிப்பதற்கு உகந்தவர் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே பயன்படுத்தலாம்.

கருத்தடை ஊசி பாவிப்பதைத் தவிர்க்க வேண்டியவர்கள்.

1. கர்ப்பிணிகள், கர்ப்பிணி என ஊகிக்கப்படுவோர்.
2. மார்பகப் புற்றுநோய் உள்ளவர்கள்
3. ஈரலில் கட்டி அல்லது புற்றுநோய் உள்ளவர்கள்.

இருதயநோய் மற்றும் கடந்த காலங்களில் பாரிச வாதம் போன்ற நோய்கள் ஏற்பட்டவர்கள் வைத்தியர்களின் விசேட கவனிப்பின் கீழ் அவரவர் உடல் நிலைகளுக்கு ஏற்றவாறு எடுத்துக் கொள்ளலாம்.

கருத்தடை ஊசி போடுபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை;

1. பாலூட்டும் தாய்மார்கள் குழந்தை பிறந்து ஆறு வாரங்களின் பின்னர் போடுவது நல்லது.
2. ஏனைய பெண்கள் மாதவிடாய் வந்த முதல் 7 நாள்களுக்குள் ஊசி போடலாம். மாறாக 7 நாள்களுக்குப் பிறகு ஊசி போடுவதாயின் கர்ப்பம் தரிக்கவில்லை என்பதை உறுதி செய்த பின்னரே கருத்தடை ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.
3. அடுத்த ஊசியை 90 நாள்களுக்குள் அல்லது வைத்தியர் தரும் திகதியில் போட்டுக் கொள்ள வேண்டும்.
4. ஊசி போட்ட பின் போட்ட இடத்தை அழுத்துவதோ, சுடுநீர் ஒத்தடம் கொடுப்பதோ கூடாது.

**கருத்தடை ஊசியின் பக்கவிளைவுகள்..**

கருத்தடை ஊசி போட ஆரம்பிக்கும் காலங்களில் அடிக்கடி

1. சிறிதளவு இரத்தம் படுதல், மாதவிடாய் பிற்போதல், மாதவிடாய் ஏற்படாது நின்றுவிடல், மிகையான இரத்தப் போக்கு போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.
2. அடிக்கடி சிறிதளவு இரத்தம் படுதல் மற்றும் மிகை இரத்தப் போக்கு போன்றன 3-6 மாதங்களில் நின்றுவிடும். ஆனால் மாதவிடாய் பிற்போதல் அல்லது மாதவிடாய் ஏற்படாது விடல் என்பன கருத்தடை ஊசி போடும் காலங்களிலும், ஊசி போடுவதை நிறுத்தி 3-4 மாதங்கள் வரையும் காணப்படலாம். எனினும் இதனால் உடலுக்கு எவ்விதமான தீங்கான விளைவும் ஏற்படாது.
3. நிறை அதிகரித்தலும் ஒரு பக்கவிளைவாகும். எனினும் உடற்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு மூலம் நிறையைக் கட்டுப்பாடாக வைத்திருக்க முடியும்.

கருத்தடை ஊசியின் மேலதிக நன்மைகளாகக் கருப்பைப் புற்றுநோய் மற்றும் கருப்பைக் கட்டிகள் ஏற்படுவது தடுக்கப்படும். அத்தோடு மாதவிடாயின் போது குருதிப்போக்கு குறைவாக உள்ளமையினால் குருதிச்சோகை ஏற்படுவதையும் தடுக்கும். எனவே நீங்கள் பயப்படவோ, சந்தேகப்படவோ தேவையில்லை. உங்களுக்கு அருகில் உள்ள வைத்தியசாலையையோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்தையோ அணுகி கருத்தடை ஊசியைப் போட்டுக் கொள்ளுங்கள்.

**Dr.[illegible]**
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

**கேள்வி:-**

எனக்கு 38 வயது. பாரவூர்தியின் சாரதியாகத் தொழில் புரியும் எனக்குத் திருமணமாகி 9 வருடங்களாகியும் குழந்தைச் செல்வம் கிட்டவில்லை. நீரிழிவு மற்றும் உயர் குருதியமுத்த நோயாளியான நான் மருந்துகளை ஒழுங்காகப் பாவித்து வருகிறேன். எனக்குப் புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற பழக்கங்களுண்டு. வாரத்தில் 1-2 தடவை உடலுறவு கொள்ளும் எனது விந்துப் பரிசோதனை அறிக்கையில் மொத்த விந்துக்களின் தொகை 5 மில்லியன் ஆகும். உங்களின் அறிவுரையை எதிர்பார்க்கிறேன்.

**பதில்:-**

ஓராண்டு அல்லது அதற்குக் கூடிய காலமாக ஒழுங்கான பாதுகாப்பற்ற (கருத்தடைமுறை பயன்படுத்தாது) உடலுறவை மேற்கொள்ளும் தம்பதியினர் கருத்தரிக்காதவிடத்து அவர்கள் குறைந்த கருக்கட்டும் ஆற்றலைக் (SUBFERTILITY) கொண்டவர்களாக இனங்காணப்படுவர். இந்நிலை பத்திலொரு தம்பதியினரைப் பாதிக்கின்றது.

குறைந்த கருக்கட்டும் திறனை ஏற்படுத்தும் காரணிகளில் 30-40% ஆனவை ஆண்களையும் 40-50% வீதமானவை பெண்களையும் 10% வீதமானவை இருவரையும் சார்ந்துள்ளன.

பெண்களைப் போல ஆணின் வயது, குறைந்த கருக்கட்டும் திறனுக்குக் காரணியாக அமையாவிடினும் ஆணின் வயது அதிகரித்க விந்துகளின் தொகை குறைந்து செல்லும்.

ஆண்களில் விதைகள் இடுப்புக் குழிக்கு வெளியே விதைப்பையினுள் இருப்பதால் உடல் வெப்பநிலையை விட 1-2°F குறைவான வெப்பநிலை பேணப்பட்டு விந்து உற்பத்தி சீராக நிகழ உதவுகிறது. அதிக நேரம் ஆசனத்தில் அமர்ந்திருப்போர், இறுக்கமான உள்ளாடை அணிவோர், வெப்பமான சூழலில் பணிபுரிவோர், விதைநாள வீக்கமுள்ளோர் (VARICOCELE) ஆகியோரில் வெப்பத்தின் தாக்கத்தால் விந்து உற்பத்தி குறைவடைகிறது.

நீரிழிவு, உயர் குருதியமுத்தம் போன்ற நெடுங்கால நோய்கள் விந்து உற்பத்தியைப் பாதிக்கின்றன. நீரிழிவு நரம்புத் தொகுதியைப் பாதிப்பதால் பின்னோக்கிய விந்து வெளியேற்றம் (RETROGRADE EJACULATION) நிகழக்காரணியாகிறது. இதனால் போதியளவு விந்து பெண் சனனித் தொகுதியினுள் விடப்படுவதைத் தடுக்கிறது.

புகைப்பிடித்தலும் மதுபானம் அருந்துவதும் விந்து உற்பத்தியாதலைக் குறைக்கின்றன. மேலும் உயர் குருதியமுத்தத்திற்குப் பயன்படுத்தப்படும் SPIRANDLACTONE METHYL DOPA மருந்துகள் விந்துக்களின் எண்ணிக்கை குறையக் காரணமாகின்றன.

குறைந்த தடவைகள் உடலுறவில் ஈடுபடல் கருக்கட்டும் திறனைப் பாதிக்கும். எனவே வாரத்திற்கு 4-5 தடவைகள் குறிப்பாகக் கருக்கட்டும் காலப் பகுதியில் (பொதுவாக மாதவிடாய்ச் சக்கரத்தில் 12 முதல் 18 ஆம் நாள் வரை) மேற்கொள்ளல் மிகுந்த பயனைத் தரும். இதற்குத் தம்பதியினராக வைத்திய ஆலோசனையை நாடவும்.

உங்களின் மொத்த விந்துத்தொகை 5 மில்லியன் என்றுள்ளது. எனினும் ஓர் அறிக்கையை வைத்து முடிவு செய்ய இயலாது. மீண்டும் 6 வாரங்களின் பின் 3 நாள்கள் விந்து வெளியேற்றாமல் இருந்து பரிசோதனையைச் செய்தல் நலம்.

வைத்திய ஆலோசனையைப் பெறுவதன் மூலம் கருக்கட்டுமாற்றலைக் குறைக்கும் மருந்துகளைத் தவிர்த்து வேறு மருந்துகளைப் பயன்படுத்தலாம். நீரிழிவு நோயை இறுக்கமான கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும்.

மது அருந்துதல், புகைப்பிடித்தல் ஆகிய பழக்கங்களை முற்றாக நிறுத்துவதுடன் உடற்றிணிவுச் சுட்டியை 20-24 இனுள் பேணவும்.

இறுக்கமான உள்ளாடை, வெப்பமான சூழ்நிலைகளைத் தவிர்க்கவும். உயிர்ச் சத்து $B_{12}$, C, E, போலிக்கமிலம் கொண்ட மாத்திரைகள், இலைக்கறி, பழ வகைகளை உள்ளெடுக்கவும்.

மன அழுத்தத்தை உளவளத்துணையுடன் நீக்கமுடியும். மேலும் நவீன மருத்துவத்தின் செயற்கையான கருக்கட்டல் போன்ற சிகிச்சை முறைகள் உங்கள் வேண்டுதலை நிறைவேற்றும். வைத்திய ஆலோசனையை நாடவும்.

வைத்தியக் கலாநிதி
**யோ.சிவாகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மட்டுவில் நல்லதம்பி

# கருணையற்ற துஷ்யந்தனால் உருவம் மாறிய சகுந்தலை

உடனிருந்து உயிருக்குயிராகப் பழகிய அனசூயையும் பிரியம்வதையும் சகுந்தலையோடு போகலாமோ என ஏங்கியபொழுது அவர்களைத் தேற்றித் தபோவனத்துக்கு அழைத்துச் செல்கிறார் காசியபர்.

இந்தவேளையில் துஷ்யந்தனின் காவலர் வந்து ''இமயமலைப் பக்கமிருந்து யாரோ வருகிறார்கள்; அவர்களுள் பெண்களும் இருக்கிறார்கள்'' என்கிறார்.

தவஞ்செய்வோருக்கு யாதும் தீங்கு நேர்ந்ததோ என எண்ணிய அரசன், அவர்களை எதிர்கொண்டழைக்க புரோகிதர் சோமநாதரை அனுப்புகிறான். அங்கு வந்த இளம் மங்கை சகுந்தலையைக் கண்டு அரசன் ''யார் இந்தப் பெண்மணி? காய்ந்த சருகுகளுக்கு மத்தியில் தோன்று இளந்தளிர் போல இருக்கிறாள்'' என்று கேட்கிறார். ''அழகுடைய பெண்'' என்று காவலன் சொல்ல பிறன் மனையாளைக் கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாது என்றும் தடுக்கிறான்.

*''பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு*
*அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு''* *[குறள் 148]*

என்ற வள்ளுவர் வாக்கை நினைவு செய்கிறாய் புலவர்.

''இவரின் மனோபாவம் ஏன் இப்படியாயிற்று'' எனச் சகுந்தலை கலக்கமுறும் பொழுது துஷ்யந்தனோ ''தபோவனத்தில் ஏதும் இடையூறு உண்டா?'' எனக் கேட்கின்றான்.

''நற்குணவதியான சகுந்தலை சமசீலமுடைய நாயகி. இவளை நீங்கள் மணம் முடித்தீர்கள்; இன்று இவள் கர்ப்பவதியாக இருக்கிறாள். இவளை நீங்கள் ஏற்றுக் கொள்வதே அறம்'' என்கிறான் சார்ங்கரவன்.

அதற்கு அரசன், ''இது என்ன கட்டுக்கதை'' என்கிறான். பின்பு தபசி கௌதமி சகுந்தலை இதுவரை அணிந்திருந்த முகத்திரையை விலக்கி விடுகிறாள். அப்பொழுது அரசன் ஏதோ யோசிக்கிறான்.

அரசன் தனக்குள்

*''ஒப்பில்லா உருவம் மாசில்லா மேனி;*
*தேடாமல் என்முன் வந்து நிற்கும் இவளை*
*முன்னாள் மணந்தேனோ, இல்லையோ*
*..........................*
*உள்ளே பனிபுகுந்த முல்லை மலரை*
*அதிகாலையில் தீண்டிய வண்டு போல்*
*ஏற்று இன்புறவோ உதறித் தள்ளவோ முடியவில்லை...''*

எனக் காளிதாசன், துஷ்யந்தனின் மனநிலையைக் காட்டுகின்றார். இவனது மௌனத்தை அவதானித்த சார்ங்கரன், ''தனது மகளை இதற்கு அனுமதித்த முனிவருக்கு இது ஓர் அவமானம்; தன் பொருளை அபகரித்த திருடனுக்கே அப்பொருளைத் தானம் கொடுத்த கதையாய் அல்லவா இருக்கிறது'' என்று சொல்ல, இது கேட்ட சகுந்தலையின் மௌனம் கலைகிறது. ''பௌரவ அடையாளங்காட்டி உங்கள் சந்கேத்தை நீக்குகிறேன்'' என்று கூறி கணையாழியைக் கழற்ற முயல்கிறாள்; கணையாழி விரலில் இல்லை' பரபரப்புடன் கௌதமியைப் பார்க்கிறாள். ''வரும் வழியில் சக்கிராவதார தீர்த்தத்தில் நீராடும் போது விழுந்திருக்கலாம்'' என்கிறாள்.



தவச்சாலையில் சகுந்தலையோடு துஷ்யந்தன் இருக்கும் போது அரசன் கையால் மான்குட்டி நீர் குடிக்க மறுத்த சந்தர்ப்பத்தை நினைவுபடுத்தினாள். அதையும் அரசன் மறந்துவிட்டான்.

இப்போது சகுந்தலையை விட்டு விட்டுத் தாங்கள் தபோவனம் போக சார்ங்கரனும் கௌதமியும் தீர்மானிக்கின்றனர்.

இந்த நேரம் துஷ்யந்தனுடைய புரோகிதர்முன்வந்து, ''சகுந்தலையின் பிள்ளைப் பேறு முடியும் வரை நான் அவளைப் பராமரிக்கிறேன். சகுந்தலையின் பிள்ளை அரசனைப் போல் இருந்தால் இவளை ஏற்கலாம்; இல்லையேல் தள்ளலாம்'' என்கிறான்.

இலக்கியக் காட்சி – 117

இதனை விரும்பாத சகுந்தலை, பகவானைத் தியானம் செய்கிறாள். அப்பொழுது பெண்ணுருவில் ஒரு சோதி தோன்றி அவளைத் தூக்கி தேவமாதர் தடாகத்தருகில் விட்டு மறைகிறது.

தேவமாதர் இல்லத்தில் சகுந்தலை பிள்ளையைப் பெற்றெடுக்கிறாள். இவ்வாறிருக்க, ஒரு நாள் நகர்காவலர், ஒரு மீன்பிடிகாரனிடம் பெயர் பொறித்த கணையாழி இருப்பதை அறிந்து அவனை அரசனிடம் கொண்டு வந்தனர். அவன் ''அந்தக் குளத்தில் பிடித்த மீன் வயிற்றில் இருந்தது இந்தக் கணையாழி'' என்று சொல்கிறான். கணையாழியைக் கண்டதும் அரசன் 'மறதி' மறைகிறது (சாபம் நீங்குகிறது). ஆனால் சகுந்தலை இப்போது அரசனிடம் இல்லையே!

பின்னர் துஷ்யந்தன் சீடனுடன் தபோவனத்துக்குச் செல்கிறான். அங்கே ஓர் அழகான பிள்ளை சிங்கக் குட்டியோடு விளையாடிக் கொண்டு நிற்பதைக் கண்டு ''இவன் யார் மகன்?'' எனக் கேட்கிறான். அதற்கு அந்தத் தபசி, ''தேவதந்தையின் சம்மதத்தோடு இந்தச் சிறுவனின் தாயார் பிரசவித்தாள்'' எனச் சொல்கிறாள். தாயின் பெயரைக் கேட்பது தர்மமில்லை என அரசன் எண்ணிப் பிள்ளையைக் கட்டித் தழுவுகிறான். அப்பொழுது சிறுவனது கையில் கட்டியிருந்த மந்திரமூலிகை விழுந்துவிடுகிறது. அதனை அரசன் எடுக்கப் போக தபசி தடுக்கிறான். எனினும் அரசன் அதனை எடுத்துவிட்டான். அது பாம்பாக மாறவில்லை. இந்தச் செய்தியறிந்து சகுந்தலை அவ்விடம் வருகிறாள். ''ஆஹா, இவளே அந்தச் சகுந்தலை; புழுதி படிந்த புடைவை உடுத்தி, நியமத்தால் மெலிந்த முகம்; கருணையற்ற என்னால் வாடிய உருவம்'' என்கிறான். ''அன்பே நான் கொடுமை புரிந்தும் நீ என்னை நினைவில் வைத்திருந்தாய்; அது நன்மையாகவே முடிந்தது'' என்கிறான்.

சகுந்தலை (தனக்குள்) ''இதயமே ஆறுதலடைவாய்; நாதனால் அருள் செய்யப்பட்டேன்'' ''கிரகணம் தீர்ந்த பின் சந்திரனோடு சேரும் ரோகிணிபோல, நினைவை மறைத்த சாப இருள் நீங்க நீ என் முன் தோன்றினாய்'' என அரசன் சொல்கிறான். ''இவர் யார்'' என்று கேட்ட சிறுவன், தாய் மூலம் தந்தையை அறிகிறான்.

இந்தச் சிறுவன் ஏழு தீவுகளையும் வென்று சர்வதமனன் ஆவான். பின்பு உலகபாரம் ஏற்றுப் பாரதன் ஆவான்'' என மாரீசர் வாழ்த்தினார்.

*''மக்கள் நலத்தை மன்னன் நாடுக;*
*அறிஞர் நாவலர் கலைகள் ஓங்குக''*
*இறைவன் அருள் புரிவானாக''* என மங்களம் பாடிச் சாகுந்தல நாடகத்தை நிறைவு செய்கிறார் மகாகவி காளிதாசர். ஏனைய காப்பியங்கள் போல சாபம் விதியாகக் கேடு சூழ்ந்ததாக நாடகத்தை வழிகடத்தி நயம்பட இலக்கியம் செய்தமை நமக்கு விருந்தாய் அமைகிறது. ✱

---

# கலைந்து போன கனவுகள்




தனி இருட்டில் தன்னந்தனியே வந்து கொண்டிருந்த வசந்தன் தன் வீடு இருந்த குறிப்பை மனதில் கொண்டு வந்து அவ்விடத்திலே நின்று விட்டான். பார்த்தவன் மனம் பதறியது.

கண் களிலே கண்ணீர் பெருக அந்த இருள் சூழ்ந்த கிராமத்தில் அவன் வீடு இருந்த இடமே அழிந்து விட்டதைப் பார்த்து, கலங்கிப்போனான். 'அம்மா' என்று இதயம் கிழிபட அலறினான். அங்குமிங்கும் ஓடினான். யாரையும் காணவில்லை. அந்த இடத்தில் என்ன நடந்தது.

எப்படி நடந்ததென்பதை கூடச் சொல்ல ஒருவருமில்லை ஒரு ஜீவன் அவனின் வீட்டு முற்றத்தில் நின்ற வேப்பமரம் மட்டும்தான். பாவம் எல்லாம் தெரிந்தும் அவனது அலறலுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவியாய் தவித்தது.

அவனின் ஓசைக்குத் தலையை அசைத்தும் அவனுக்கு புரிய வைக்கவும் முடியாமல், அவனால் புரிந்து கொள்ளவும் முடியாமல் நிற்கின்ற அவ்வேளை 'அண்ணா அண்ணா' என்ற ஒலி கேட்க 'வசந்தி வசந்தி' என்று அங்குமிங்கும் தேடியபடி ஏங்கிய அவனுக்கு அவன் மனமே ஆறுதல் கூற எங்கு தேடியும் காணாமல் கீழே விழுந்தான். அவன் மனம் அவனை அவன் சோகத்திலிருந்து மீட்க மனக் கதவு திறக்க அவன் கடந்த காலம் ஓடியது.

அது ஒரு அழகிய சிறிய கிராமம். ஒருவருக்கொருவர் உதவி செய்து சந்தோசமடையும் இளைஞர்கள். அக்கிராமத்தில் பச்சைப்பசேல் என்ற வயல் களும், மரங்களும் அருமையான ஒசை எழுப்பும் பறவைகள், மனிதனுக்கு உறவாக இருந்த உயிரினங்கள் சூழ்ந்து காணப்படுகின்றன.

அக்கிராம மக்கள் கமத்தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள். அங்கே இராசையாவின் குடும்பம் ஊருக்கே தலைமை போல திகழ்ந்து வந்தது. அன்பான மனைவி நேசத்துக்கெனவும், பாசத்துக்கெனவும், அருமை மகனும், அன்பு மகளும். வசந்தன் கமம் செய்து படித்த ஒரு மாணவன். இவன் உத்தமன். தன் தங்கையை உயிர்போல காப்பவன். உதவி என்று வரும் எல்லோருக்கும் உதவுபவன். அவன் ஒருவாறு கஷ்டப் பட்டுப் படித்து முடித்து விட்டான். அவன் படித்த படிப்புக்கு பல இடங்களிலே வேலை தேடி அலைந்தான்.

அவன் அலைந்ததன் பயனாக

■ கஜதர்சினி ராஜதுரை,
மானிப்பாய்.

இரண்டு கிராமங்கள் தள்ளி உள்ள நகரத்திலே ஒரு வேலை கிடைத்தது. மாதம் 3000/= சம்பளம். ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு தடவையேனும் குடும்பத்தாரைப் பார்க்க வருவான்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி மீது வீசப்படும் கற்கள்

■ வீகேளம்

இலங்கையின் அபிவிருத்தி ஆசியாவின் ஆச்சரியமாக 2030ஆம் ஆண்டில் மாற்றப்படும் என்ற தூர நோக்குடன் மஹிந்த அரசு பல்வேறு நெருக்கடிக்குள்ளும் சவால்களுக்குள்ளும் அதற்கான பணிகளை வேகப்படுத்தி வருவதாகப் பேசப்படுகின்றது.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அங்குள்ள உட்கட்டமைப்பு வசதிகளே பெரிதும் மூலகாரணங்களாக அமைகின்றன. இதில் இடங்களுக்கிடையிலான தொடர்பைப் பேணும் வகையில் போக்குவரத்துத்துறை முக்கிய பணியாற்றுகின்றது.

இலங்கையின் அபிவிருத்தியில் இப்போது முக்கியத்துவம் கொடுக்கப்படும் துறையாக பெருந் தெருக்கள் மற்றும் துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து போன்றவற்றுக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

வரலாற்றின் ஒரு திருப்பமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலை இருப்பதாக அரசதரப்பு மார் தட்டிக்கொள்கின்றது.


இலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்பமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பு என வீராப்புப் பேசும் அரசு இன்னும் பல அதிவேக வீதிகளை நாட்டின் பல பாகங்களிலும் உருவாக்கவுள்ளதாக உறுதி கூறியுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு வீதி வலையமைப்பு முக்கியமானதாக இருந்தாலும் ஏனைய துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அபிவிருத்தியைச் சமவேகத்தில் நகர்த்த முடியும்.

இலங்கையில் இப்போது இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகள் துறைசார் கட்டமைப்புக்களுக்கிடையில் வேறுபாடுகளை உருவாக்குவனவாக உள்ளன.

இலங்கை அரசால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைகள், மக்களது அடிப்படைத் தேவைகள், அன்றாடத் தேவைகளுக்கு விடை காணாது புதிய பாதையில் செல்வதை உணரமுடிகின்றது.

அண்மையில் 2011.11.27 அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்ட தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இப்போது பாவனையாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்களே மக்களது தேவைகளுக்கும் அரசின் செயற்பாடுகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசங்களை உணரவைத்துள்ளன.



**எங்கள் வயல்காணிகள், மேட்டுக் காணிகள் என்பவற்றின்மீதே நீங்கள் உல்லாச சவாரி செய்கின்றீர்கள். அதனால் ஆத்திர மடைந்தே நாங்கள் கற்களை வீசுகிறோம்**

### அதிருப்திகளின் அதிவேகம்

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் வாகனங்கள் வேகமாகச் செல்லும்போது அவற்றின்மீது கற்கள் வீசப்படுகின்றன. நெடுஞ்சாலை திறக்கப்பட்டதன் பின் இத்தகைய கல்வீச்சுகளால் 57வாகனங்கள் சேதமடைந்ததுடன் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

வாகனங்களுக்கு கல்லெறிபவர்கள் தொடர்பில் விழிப்பு குழுக்கள் வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களது கண்களைக் கட்டிவிட்டு கல்வீச்சுக்கள் தொடர்கின்றன.

வீதிக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கென விஷேடமாக வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒன்பது கார்களும் 06 மோட்டார்சைக்கிள்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை இந்த வீதியில் ஏற்படும் விபத்துக்கள், இடையூறுகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கண்காணிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வாகனத்தில் பயணிப்பவர்கள் வேகக் கட்டுப்பட்டைப் பேணவேண்டும்,வீதி ஒழுங்கைப் பேணவேண்டும், விபத்துக்களிலிருந்து தப்பிக்கவேண்டும். இடைநடுவில் வாகனங்களை நிறுத்திக் கல்லெறிகாரர்களை இவர்களால் ஒன்றும் செய்துவிடமுடியாது.வாகனம் நிறுத்தப்பட்டால் அடுத்த கணமே விபத்துத்தான்.

### நாய்களுக்கும் அதிருப்தி

சாலை பாவனைக்குவிடப்பட்டதும் திடீர் திடீரென விபத்துக்கள் நிகழ ஆரம்பித்தன. காரணம் புரியாது கண்காணிப்பாளர்கள் அதிர்ச்சியுற்றனர். அப்போது தெருநாய்கள் வீதியால் குறுக்கறுப்பது தெரிய வந்தது. ஏற்கனவே வீதிக்கு வேலி போடப்பட்டிருக்கிறது. ஆனால் நாய்களுக்கு அது போதாது. ஆடு அல்லது மாடு அதிலிருந்து தப்பிக்க முடியும். யானை கூட அண்மையில் இந்த வீதியைக் குறுக்கறுத்தது. சில இடங்களில் மண் அணை போடப் பட்டிருந்தாலும் எல்லா இடங்களுக்கும் அவை விஸ்தரிக்கப்படவில்லை.

நாய்களின் குறுக்கறுப்பால் வீதி திறக்கப்பட்ட அடுத்த நாளே வாகன விபத்தொன்று நடந்தது. திறக்கப்பட்ட 72 மணித்தியாலங்களுக்குள் மூன்று விபத்துக்கள் இடம்பெற்றன. 2 மாதங்களுக்குள் 80 விபத்துக்கள் பதிவாகியது. இவற்றில் பலவுக்கு நாய்கள் மீதே பழிபோடப்பட்டது. அவை யும் பலி கொள்ளப்பட்டன.

மஹிந்தவின் சிறப்பு உத்தரவு நாய்களைக் கொலை செய்யக்கூடாது என்று. ஆனால் அவரின் கனவான அதிவேக சாலையும் அதில் பயணிக்கும் வாகனங்களும் நாய்களைக் கொலைசெய்யும் துர்பாக்கியம் ஏற்பட்டுள்ளதை அவர் எந்தத் திட்டத்தைக் கொண்டு சீர்செய்யப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். புதிதாக ஏதாவது திட்டம் அவருக்குள் இருந்து வரும்வரை.

இந்த நெடுஞ்சாலையின் நோக்கம் நகர்பகுதியில் ஏற்படும் வாகன நெருக்கடியைக் குறைப்பது, வேகமான போக்குவரத்து, பயணிகள் இலகுவாகவும் குறைந்த செலவுடனும் பயணங்களை சிரமமின்றி மேற்கொள்ளுதல் போன்றனவாகக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்திக்கு தேவை இதுவல்ல. இப்போதைக்கு எங்களது அடிப்படைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொண்டு அடுத்த கட்டமாகச் சர்சதேச நிலையிலான அபிவிருத்திகளை நீங்கள் மேற்கொள்ளலாம். எங்கள் வயல்காணிகள், மேட்டுக்காணிகள் என்பவற்றின்மீதே நீங்கள் உல்லாச சவாரி செய்கின்றீர்கள். அதனால் ஆத்திரமடைந்தே நாங்கள் கற்களை வீசுகிறோம். எங்கள் வளமான காணிகள்மீதே இந்த வீதி அமைந்திருக்கிறது என்று கல்லெறி காரர்கள் எண்ணுகிறார்கள். இதற்காகவே வீதிக்குவந்து கற்களை வாகனங்கள் மீது அவர்கள் வீசுகிறார்கள்.

அபிவிருத்தியின் தேவையில் இதுவும் ஒன்றுதான். அது எப்போது தேவை என்பதும்,மக்களது இப்போதய தேவை என்னவென்றும் தீர்மானிப்பது அரசுதான். எனவே எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கட்டும். ✱

**தெற்கு அதிவேக நெடுஞ்சாலை**

**பணிஆரம்பம்:**
2003

**நிதி உதவி:**
ஜப்பான் வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசு.

**நிர்மாணச் செலவு:**
சுமார் 77 பில்லியன் ரூபா.

**தூரம்:**
கொழும்பு கொட்டாவிலிருந்து காலி பின்னது வவரை 100 கிமீ (கொட்டாவ, கஹதுட்டுவ, கெளனிகம, தொடங்கொட, லெவன்துவ, குருந்துகஹ, நாயபமுல்ல ஆகிய இடங்களைக் கடந்து பின்னத்துவ வரை)

**தடை:**
100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்க முடியாத வாகனங்கள், அதிகளவு புகையை வெளியிடும், முறையாக நிறுத்தற் கருவிகள் (பிரேக்) செயற்படாத வாகனங்கள் வெளிச்ச, சமிக்ஞை விளக்குகள் முறையாக இல்லாத வாகனங்கள், பாதசாரிகளுக்கு இந்தவீதியில் தடை

**நுழைவாயில்:**
08. கொட்டாவை, கஹதுடுவ, களனிகம, வெலிபின்ன, குறுந்துஹ, தாபிம, தொடங்கொடை, பத்தேகம, பின்னதுவ.

**வேகம்:**
80-120 கிமீ(மணிக்கு)

**கட்டணம்:** கார்,கெப்ரக வாகனம்,9 ஆசனங்கள் வரையுள்ள சகல வாகனங்கள், எக்ஸல் 2 மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு 400 ரூபா,9 ஆசனங்களுக்கு அதிகமான பஸ் மற்றும் 33 ஆசனங்கள் கொண்டுள்ள சகல பஸ்களுக்கும் 700 ரூபா, 22 இற்கும் அதிகமான ஆசனங்களைக் கொண்ட பஸ், 6 சக்கர வாகனங்கள் மற்றும் எக்ஸல் 3 ஐ உடைய மோட்டார் லொறி, டிரக் வாகனம் ஆகியவற்றுக்கு 1500 ரூபா, ஒன்றாக இணைக்கப்பட்ட கோச் 2 உடன் பயணிக்கும் பஸ், எக்ஸல் 4, மற்றும் அதற்கு அதிகமான வாகனங்களுக்கு 2000 ரூபா.

# இதுவும் அபிவிருத்தி தான்

■ திப்பிலி

தென் இலங்கையில் அபிவிருத்திப் பணிகள் இப்போது துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பகுதிகளின் அபிவிருத்திக்கு அரசியல்வாதிகள் கூடுதல் அக்கறை காட்டிவருகின்றனர்.

இந்த அபிவிருத்தி ஆர்வம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் போரின் பின்னரான மீள்கட்டுமான முயற்சியாகவே மேற் கொள்ளப்படுகின்றன. உண்மையில் இந்த இரண்டு மாகாணங்களும் போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவை. பெரும்பாலான பகுதிகள் அன்றும் சரி இன்றும் சரி மிகவும் வறிய பிரதேசங்களாகவே, அபிவிருத்தியில் பின்தங்கிய பகுதிகளாகவே காணப்படுகின்றன.

அரசியல் நோக்கங்களுக்காக வெளித்தெரியும் வகையிலான அபிவிருத்திப் பணிகள் வடக்கில் அதிகம் முன்னெடுக்கப்படுகின்றன. உள்ளூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அபிவிருத்திப் பணிகள் உதவுவதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் பருவ மழைக்குப் பின்னர் பெரும்பலான வீதிகள் குன்றும் குழியுமாக மாறிவிட்டன. பராமரிப்பின்மையால் அவை நாளாந்தம் மேலும் சேதமடைந்தே வருகின்றன. பழைய வீதிகள் புனரமைக்கப்படாமலும் மணற்பாதைகள் தார் இடப்படாமலும் காணப்படுகின்றன. அதிகளவான மக்களின் பாவனையில் உள்ள வீதிகளுக்கே இவ்வாறான நிலை தோன்றியுள்ளது.

இதுபோலவே வன்னியிலும் நீண்ட காலமாக வீதிகள் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன. யுத்தம் காரணமாக அந்தப் பகுதியில் அபிவிருத்திப் பணிகள் முடங்கிப் போயிருந்தாலும் இப்போது அந்தப் பிரச்சினை இல்லை. ஆனாலும் அபிவிருத்திக்கான சாத்தியங்களும், நிதி ஒதுக்கங்களும், முன்னுரிமைப்படுத்தலும் இந்தப் பகுதிக்கு குறைந்தளவே வழங்கப்படுகின்றன. இதனால் மக்கள் தமது அடிப்படைத் தேவைகள் முதல் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு நாளுக்கு நாள் வெவ்வேறு வகையாக நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இடங்களுக்கிடையேயான தூரம் அதிகமாகவும் சேவை மையங்கள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து விலகியிருப்பதாலும் அவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ள வேண்யுள்ளது.

ஆனாலும் அதற்கான வீதி அபிவிருத்தி, போக்குவரத்து வசதி அவர்களுக்கு [illegible] இல்லை.



மழைக்காலங்களில் வெள்ளக் காடாக மாறும் வீதிகள் வெயில் காலங்களில் புழுதி பாதைகளாக மாறி வருகின்றன.

இதனால் அவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போவதுடன் உடல் உபாதையைத் தினமும் வளர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது.

இத்தகைய அபிவிருத்தியின் மந்தநிலை பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் வேலாகப் பாய்ந்து இன்னும் வேதனைப்படுத்தியே நிற்கின்றது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரை யார் வரவேற்பது?

❒ அருவி

மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி. இருபத்திரண்டு வருடங்களின் பின் ஊருக்கு போகப் போறன் என்ற எண்ணமே புது உற்சாகத்தைத்தர எனது பயணம் தொடங்கியது:

கே.கே.எஸ். வீதி வழியாக வந்து சத்திரத்துச் சந்தியை நெருங்கிய போது தான் யாழ்நகரின் மாற்றத்தை வெளிப்படையாகக் காணமுடிந்தது.1990களில் யாழ்.கோட்டைப் பகுதியிலிருந்து ஏவப்படும் எறிகணைகளினாலும். துப்பாக்கிப் பிரயோகங்களினாலும் சிதைந்து எலும்புக் கூடுகளாய் எஞ்சி நின்ற கட்டடங்கள் எல்லாம் புதுப்புது பெயர்களோடு புதுப்பொலிவோடு மிளர்ந்தன.

அப்படியே சற்றுத்தள்ளிப் போக யாழ். தபாற்கந்தோர். மெல்லத்திரும்பி பண்ணை வீதியால் செல்ல தொலைத் தொடர்பு நிலையம் என சூழவுள்ள கட்டடங்கள் எல்லாமே உயிர் பெற்று நிமிர்ந்து நின்றன. ஆனால் வீதியில் மட்டும் மாற்றம் எதையும் காணமுடியவில்லை.

தீவகத்தின் நுழைவாயிலை வாகனம் மெல்ல நெருங்கிய போது என் நினைவு கூண்டுக்குள் இருந்த ஞாபகங்கள் மெல்லச் சிறகு விரித்தன.

காலை 7.50 இருக்கும் தீவகப் பகுதியிலிருந்து யாழ்.நகரை நோக்கி எமது பாடசாலை வாகனம் உள்நுழைந்து கொண்டிருந்தது. அன்றைய நாள்களில் திடீர் திடீர் என்று துப்பாக்கி பிரயோகங்களும் எறிகணை வீச்சுக்களும் நடப்பது வழமை. ஆனால் அன்று மாட்டிக் கொண்டது எங்கள் பாடசாலைப் பணியில் வந்த மினிபஸ்தான்.

என்ன நடக்கிறது என்று எதுவும் புரியவில்லை. பட பட என்று வேட்டுச் சத்தங்கள், வாகனம் ஒரு பக்கத்தால் இழுத்துக் கொண்டு ஓடியது. உள்ள இருந்த அனைவருமே செய்வதறியாது கதறி அழுதோம். வாகனத்தைச் செலுத்தி வந்தவருக்குத் தலையில் காயப்பட்டு இரத்தம் கசிந்தது.

என்ன நடக்கிறது என்று எதுவும் புரியவில்லை. பட பட என்று வேட்டுச் சத்தங்கள், வாகனம் ஒரு பக்கத்தால் இழுத்துக் கொண்டு ஓடியது. உள்ள இருந்த அனைவருமே செய்வதறியாது கதறி அழுதோம். வாகனத்தைச் செலுத்தி வந்தவருக்குத் தலையில் காயப்பட்டு இரத்தம் கசிந்தது. வாகனம் கடற்கரை ஓரமாக கொட்டடி நாவாந்துறை பாதையில் நின்றது. 'எல்லாரும் இறங்கி பாதுகாப்பாக ஒடுங்கோ...' அவர் தனது தலையில் வடிந்த இரத்தத்தை கையால் பொத்திக் கொண்டார். எல்லோருமே நான் முந்தி நீ முந்தி என்று விழுந்தடித்து இறங்கி ஓடினோம்.

'எனது சகோதரிகள் இருவரும் எனது கையைப் பிடித்துக் கொண்டு....., அவர்கள் இழுத்த பக்கத்துக்கு அள்ளுப்பட்டுப் போய் விழுந்தொழும்பி முழங்கால் உடைந்து...', என்னை அறியாமலே எனது கை அன்று காயப்பட்ட இடத்தை வருடிக் கொண்டது. அன்று தெய்வாதீனமாக எல்லோரும் உயிர் காப்பாற்றப் பட்டு விட்டோம். ஆனாலும் அதுதான் எனது யாழ்ப்பாண படிப்பின் இறுதி நாளாகவும் இருந்தது.

வாகனம் மெல்ல நகர்ந்த போது மீண்டும் நடப்புக்குத் திரும்பினேன். சங்கிலிப்பாலம் கட்டப் பட்டிருந்தது. ஆனாலும் வீதி இன்னும் சீராக்கப்படவில்லை. சங்கிலிப்பாலம் தாண்டி கடைசியாய் பயணித்த அந்த நாள் என் மனக்கண்ணில் விரிந்தது.

சங்கிலிப்பாலம் உடைக்கப்பட்டு தீவகத்தையும் யாழ்ப்பாணத்தையும் மரக்குற்றிகளே இணைப்புச் செய்திருந்தன. சைக்கிளோ மோட்டார் சைக்கிளோ உருட்டிக் கொண்டு போகக் கூடிய ஒற்றையடிப் பாதை, அந்தப் பாதையூடாகவே அன்றைய போக்குவரத்துக்கள் நடந்தன. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கடலைக் குனிந்து பார்க்காமல் நடக்க வேண்டும். தவறினால் கடலுக்குள் போகவேண்டியதுதான் உயிராபத்து நிறைந்த அந்தப் பாதையைக் கடந்து விட்டேன்.

தொப்பென்ற ஒரு சத்தம் திருப்பிப் பார்த்தேன் ஒருவர் கடலுக்குள் குதித்துக் கொண்டிருந்தார். என் நெஞ்சு திக்கென்றது. சனங்களுக்குள்ளும் சல சலப்பு 'ஒரு பொம்பிளப்பிள்ள தவறி விழுந்திட்டவாம்....' அவரைக் காப்பாற்றத்தான் அவர் குதித்திருக்கிறார் என்பது புரிந்தது.கொஞ்ச நேரத்தில் காப்பாற்றக் குதித்தவரை மட்டும் தான் காப்பாற்ற முடிந்தது. அன்றைக்கு எடுத்த முடிவுதான் இனிப் பாலம் கட்டினால் தான் ஊருக்கு வாறது என்று.....,

இப்போது வாகனம் பண்ணைச் சந்தியை நெருங்கிக் கொண்டிருந்தது. பண்ணை என்றவுடன் 'ஜீவா' அக்காவின் நினைவுதான் முன்னோக்கி விரிந்தது. 1989 ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வுக்கான போட்டிப் பரீட்சைக்குச் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த பலபேரைச் சுமந்து வந்து கொண்டிருந்த வாகனம் மீது யாழ் கோட்டையில் இருந்து வந்த எறிகணைகள் வீழ்ந்து வெடிக்க வாகனத்தில் வந்த பலபேர் காயப்பட, ஜீவாக்கா அந்த இடத்திலேயே தலைசிதறி.... நினைக்கவே புல்லரித்தது. அதில் தப்பி வந்த என் அக்கா பயத்தில் உறைந்து போயிருந்ததும்.... ஜீவாக்காவுக்கு நேர்முகத் தேர்வுக்கு வரும்படி வந்த கடிதம் கண்டு அவரது தாய்பட்ட துடிப்பும்..... இப்போதும் வேதனையின் கோடுகளாய் என் மனசுக்குள்....

'கடற்படையினர் உங்களை அன்புடன் வரவேற்கின்றனர்' என்ற பெயர்ப்பலகை என் கவனத்தில் பட்டது. மண்டைதீவு நோக்கி வாகனம் திரும்பியது.'எங்கட ஊருக்குப் போக யார் வரவேற்பது,....' மனதில் இனம்புரியாத நெருடல் வாகனம் பள்ளங்களுக்குள் விழுந்தொழும்பியபடி நகர்ந்தது. வீதியின் இருமருங்கும் கண்ணாப் பத்தைகள் அடர்ந்திருந்தன.

தனித்துப் போயிருந்த வழிப்பிள்ளையாருக்குத் துணையாய் இப்போது படையினரின் முகாம் ஒன்று முளைத்திருந்தது. வாகனத்தை ஓரம்கட்டி வழிப் பிள்ளையாரை வழிபட்டுவிட்டு படம் எடுக்க முனைந்த போது, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று துப்பாக்கி வீரர்கள் அதைத் தடுத்துவிட மீண்டும் வாகனம் உயிர்பெற்றது.

முத்துமாரி அம்மன் ஆலயம்..... எங்களப் பொறுத்தவரை இது தான் எங்கட குல தெய்வமும் கூட, இடிபாடுகளுக்குள் இருந்து மீண்டெழுந்து கொண்டிருந்தாள் அம்பிகை. அவள் பாதங்களைத் தரிசித்துக் கொண்டு ஊர் மனைகளுக்கு புகுந்த போதும் ஆள் நடமாட்டத்தை காணமுடியவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய் வீடுகளில் ஆட்கள் இருப்பதற்கான அறிகுறிகள் இருந்தன. மிகுதி எல்லா இடமும் பாழடைந்து போயிருந்தது.

'அ' சொல்லித் தந்து என்னைத் தூக்கி வைத்த ஏணியாய் இருந்த எனது ஆரம்பப் பாடசாலை இன்று அடியோடு தடம் புரண்டு கிடந்தது. எத்தனை பேரை உயரத்தில் ஏற்றிவிட்ட இந்தப்பள்ளி இன்னும் இடிபாடுகளுக்கிடையில் மூச்சுத் திணறியபடி.....

வாகனம் கடற்கரை நோக்கித் திரும்பியது. நாங்கள் ஓடி வந்த பஸ் பிடிக்கும் சந்தி..... வீட்டை நெருங்கிக் கொண்டிருப்பது புரிந்தது. கடைக்கும், பள்ளிக்கும் தண்ணிக்கும், தோட்டத்துக்கும் என்று அறுபது தடவை என் பிஞ்சுப் பாதங்கள் நடை பயின்ற வீதி அப்போது போலவே இப்போதும் தாரின் வாசனை காணாமலே இருந்தது.

வீட்டு முற்றத்துக்குப் போக முடியவில்லை. சீருடை வீரர்களும் வந்து சேர்ந்தனர்.

'இது எங்கட வீடு நான் பார்க்க வேணும்' நான் தமிழில் தெளிவாகச் சொன்னேன். மீண்டும் அவர்கள் சிங்களத்தில் பேசினார்கள். அதற்குள் என்னோடு வந்தவர்கள் வந்து விட்டார்கள்.

'உள்ள போக ஏலாதாம், வீடு பார்க்க முடியாதாம்......' நெஞ்சு கனத்தது என் வீட்டுக்கு நான் போக முடியாதாம். புறப்படும் போது இருந்த மகிழ்ச்சி எல்லாமே பறித்தெடுக்கப்பட்டு விட்டது. ஏமாற்றத்தோடும் சொல்ல முடியாத வேதனைகளோடும் என் கால்கள் பின் நோக்கித் திரும்பின. என் மனதின் வலியைப் புரிந்து கொண்ட நிலமகள் மண்ணில் பட்ட என் பாதத்தை வருடி விடுவதைப் போன்ற உணர்வு.....

தெற்கில் ஓரங்கப்பட்ட நிலையில், அரசியல் நிலையிருப்பை பேணுவதற்கு இப்போது தமிழ் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர். எமது மக்களின் கண்ணீர் இன்று அவர்களுக்கு அரசியல் வியாபாரம்.

# எதற்கு இந்த நீலிக்கண்ணீர்?

❒ தில்லாலங்கடி

எங்கள் உறவுகளின் வற்றாத கண்ணீரை வைத்து பிழைப்பு நடத்துவது சிங்கள அரசியல் தலைமைகளுக்கு இன்று அவசியமாக இருக்கின்றது. இதற்காக அவர்கள் காலத்துக்கு காலம் பல்வேறுபட்ட வடிவங்களை கொண்டு ஒரே சுலோகத்துடன் செயற்பட்டு வருகின்றன.

தெற்கு அரசியலில் இனவாதம் பேசி மக்களிடம் ஆதரவைப் பெற்ற ஜே.வி.பி. இன்று எழுந்து நிற்பதற்கும் திராணியற்று இருக்கின்றது. இந்த நிலையில் பலமில்லாத ஜே.வி.பியிலிருந்து புதியதொரு கட்சியும் உதயமாகியிருக்கின்றது. மக்கள் போராட்டக் குழு, நாம் இலங்கையர் அமைப்பு என்பன இணைந்து தற்போது காணாமல் போனவர்களுக்காகப் போராடுகின்றன.

தமிழர்களைப் பொறுத்தவரையில் எமக்கு நடந்தவற்றை மன்னிக்கின்றோமோ இல்லையோ மறந்து விடுவோமோம். இது எங்களை வைத்து அரசியல் நடத்துவதற்குத் தெற்குக்கு சாதகமாகி விடுகின்றது. இன்று காணாமல் போனவர்களுக்காகப் போராடும் ஜே.வி.பியின் மாற்று அணியினரும் எமது உறவுகள் காணமல் போனதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர்கள்தான்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்வை நோக்கி நகரும் கட்டத்தில் இனவாதத் தீயைப் பரப்பி அதில் குளிர்காய்ந்தவர்கள். இணைந்த வடக்குக் கிழக்கைப் பிரித்தவர்கள். யுத்தம் வேண்டும், புலிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கோசமிட்டவர்கள்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் காரணமாகவும், புலிகளுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் பலர் கைது செய்யப்பட்டபோதும் சரி அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட போதும் சரி, அப்பாவி இளைஞர்களை புலி முத்திரை குத்தி னம் காத்தவர்கள் இன்று இவர்களின் விடுதலைக்காகப் போராடுகிறார்களாம்.

தெற்கில் ஓரங்கப்பட்ட நிலையில், அரசியல் நிலையிருப்பை பேணுவதற்கு இப்போது தமிழ் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர். எமது மக்களின் கண்ணீர் இன்று அவர்களுக்கு அரசியல் வியாபாரம். ஆனால் எங்களது மக்களைப் பொறுத்த வரையில் யார் குற்றினாலும் அரிசியானால் சரி என்ற நிலையில், எங்களது உறவுகளை யார் கண்டுபிடித்து தந்தாலும் சரி என்ற நிலையில் இருக்கின்றனர். ஒரு புறம் எங்களுக்காக போராடுவது போன்று நடந்தாலும் மறுபுறம் இன்னும் அவர்கள் தங்களது தமிழ் விரோத போக்கை கைவிடவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் புனர் வாழ்வு என்ற சித்திரவதையின் பின்னர் மெல்ல மெல்ல விடுவிக்கப்படுகின்றனர். அவர்கள் போராட்ட காலத்தில் இலங்கை இராணுவத்தை இலகுவாக வெற்றி கொண்டிருந்தாலும், தற்போது அவர்களது வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றிக் கொள்வதற்கு முடியாமல் இருக்கின்றது.

இவ்வாறு வாழ்க்கைக்கு அல்லல்படும் முன்னாள் போராளிகளுக்கு அரசு உதவுகின்றதோ இல்லையோ, அவர்களை நிம்மதியாய் வாழவிடுவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றது. அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்தில் உரையாற்றி உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா, ஜே.வி.பியிலிருந்து பிரிந்த போராட்டக் குழுவினர், முன்னர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியவர்களுடன் இணைந்து அமைதியை சீர்குலைக்க முனைந்து வருகின்றது - என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலடியாக, ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்று உதயமான மக்கள் போராட்டக் குழுவின் உறுப்பினரும், நாம் இலங்கையர் அமைப்பின் தலைவருமான உதுல் பிரேமரட்ண, ''நாங்கள் முன்னாள் போராளிகளுடன் இணைந்தே செயற்பட்டு வருகின்றோம்'' என்று தெரிவித்திருக்கின்றார்.

வீடெரிக்கும் ராசாவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரி போல முன்னாள் போராளிகளை ஒடுக்க நினைக்கும் இலங்கை அரசுக்கு உரிய ஆயுதத்தை கையில் எடுத்துக் கொடுத்திருக்கின்றது - தமிழ் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் மக்கள் போராட்ட குழு.

இவற்றைப் பார்க்கும் போது இவர்கள் தமிழ் மக்களுக்கா போராட வருகின்றார்களா ? அல்லது தமிழ் மக்களின் இருப்பை கேள்விக் குறியாக்க வருகின்றார்களா ? எம்மை வைத்து எம்மையே அழிப்பதற்கு நாங்கள் இடங்கொடுக்கப் போகின்றோமா ? அல்லது நாங்களே எங்களுக்காய் போராடப் போகின்றோமா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழவி



இதோ
இறைவனின் இன்னோர் வடிவு!
நிறைவான சூரிய விடிவு!
தூரிகை வரையாத பாரிய ஓவியம்!
மொழிகளின் வழிகளால்
செப்பம் செய்ய முடியா சிற்பம்!

பேச்சு வார்த்தைகளால்
முடியாத தீர்வுகள்! – இந்த
பேசா 'மழலை'க்குள்
எத்தனை தீர்வுகள்...!

மனிதா அந்தகன் இல்லாததன்
அர்த்தம் புரிகிறதா?
விழிகளைப் படைத்ததன்
விடை தெரிகிறதா?
வாழும் அதிசயம்
வண்ண அபூர்வயம்
உன் கரங்களுக்குள் (வர)
காத்திருக்கிறது...



மூட மனிதா,
உலக அதிசயம்
உன்னோடிருக்க,
ஆயிரம் மைல்களுக்கு
அப்பாலிருக்கும்
இரும்பு ஈபிளும்
கல்லறைத் தாஜ்மகாலும்
புல்லரிக்கிறதா உனக்கு?

இது ஒன்றுதான் – இன்னும்
இகத்தில் அதிசயம்!
அகத்தினால் அந்த
அற்புதம் பார்!


மரித்திடும் மனிதநேயம்
உன்னுள் விரிந்தெழும்
விந்தை காண்பாய்!

அந்த மழலைக் குழலை
எடுத்து மகிழ்ந்து வாசி...
நீள யோசி.....
ஆழ நேசி....

இப்போது.....
இந்தப் பிறப்பிலேயே
இன்னொரு ஜென்மம்
இருப்பதை உணர்வாய்.....

மானியூர் ரட்ணேஸ்.

# மறையாத துயரம்!....



தேடிய தேட்டமும்
தேட்டம் தரும் வாழ்வுமாய்
மகிழ்ந்திருந்த காலம் ஒன்று
எமக்கு இறந்த காலம்

கண்ணீரும் கம்பலையும்
கருகிய வாழ்வுமாய்
வெற்று நிலத்திலும்
தொடரூந்து தடத்திலும்
இடர்படும் எம் வாழ்வு
தொடர் கதையாய் நீள்கிறது

பாலம்கட்டி வீதி அகட்டி
யாழ்தேவி இனிமேல்
வடமுனை வருவதாய்
நிறைவான செய்திகள்
மகிழ்வினைத் தரவில்லை
மனம் சலித்துக் கிடக்கிறது

குந்த ஒரு நிலம் தேடி
நொந்துபோன எம் வாழ்வில்
தெரு நாய்களாய் இப்போ
விரட்டப்படும் அவலம்
தீராதோ இந்தச் சோகம்
மறையாதோ எம் துயரம்.

அ.பூவானந்தன்,
வயாவிளான்.

# ஏமாற்றம்



வானம்
மழை எனும்
கண்ணீர்
சிந்துகிறது
என்றாலும்
விதவையாகிப்
போன
பாலைவனமோ
துளிர் விட
மறுக்கிறது.

# தவிப்பு



கவிதை சொல்லவில்லை
கண்ணீரால் சொல்லுகிறேன்
யுத்தத்தால் – என்
உறவுகளை
இழந்ததால்
நான் இருக்கும்
இருப்பிடம்
முதியோர் இல்லம்

# மறு ஜனனம்!...

நீ என்னை நேசிப்பதற்காய்
இன்னொரு ஜனனம்
ஒன்று எனக்கு நிகழ
வேண்டும், உனக்காக மட்டும்
என் இதயம் துடிப்பதற்காய்!,....



# தெரிந்துகொள்வாய்!

நீ என்னைச் சேர்ந்திருக்க
வாய்ப்பில்லை,
என் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள
முடியாத உன்னால்
என் மனதில் வாழ்ந்து
கொண்டிருப்பதை
நீ எப்படிப் புரிந்து கொள்வாய்!...



# இதழ் துடிப்பு!...

என் இதயம் தனது துடிப்பை
நிறுத்திக் கொள்வதால்
நீ என்னை புரிந்து கொள்வாய்
என்னால் வாழ முடியாது
போனாலும் என் காதல்
வாழ்ந்து கொண்டிருக்கும்!...

# சொந்தம்

நீ என்னைச் சேர்ந்திருக்காத
வரை நிஜங்கள் எனக்குச்
சொந்தமில்லை,
நீ சேரும் வரை நிழல்கள்
எனக்கு சொந்தம்!...



# புரிந்துகொள்வாய்

உன்னை நினைத்து
அதிகமாகத் துடித்த என்
இதயத்தை ஏற்றுக்கொள்ள
மறுத்துவிட்டாய்,
எண்ணத்தை மாற்ற
என் மனதில் இடமில்லை,
உன் நினைவை நிரப்பியதால்
என் இதயம் தனது
துடிப்பை நிறுத்திக்
கொள்கின்றது
துடிப்பது ஞாயமில்லை என
தெரிந்தபோதும்!...



ஆக்கம் ச.சோபியா,
முதலிக் கோயிலடி.

க.செல்வமலர்
சிறுவர் இல்லம், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்



# சந்தி சிரிக்கும் தேசிய நல்லிணக்கம்

ஞாயிறு காரம்

"நல்லிணக்க ஆணைக்குழுவின் சமீபத்திய அறிக்கையில் அநேக காத்திரமான பரிந்துரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை நாம் அவதானித்தோம். இந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது இலங்கை அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள நேர்மையான தேசிய நல்லிணக்கப்பாட்டுக்கான முன்னெடுப்புகளில் ஒரு முக்கிய படியாக அமையும். இலங்கை இந்த வாய்ப்பை நழுவவிட்டு விடக் கூடாது.

இது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்பு ஊடகவியலாளர்களிடம் வெளியிட்ட கருத்துக்களில் ஒரு பகுதியாகவும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஏனைய பல அமைச்சர்களும் பல்வேறு இடங்களிலும் பல்வேறு மேடைகளிலும் தேசிய நல்லிணக்கம் பற்றியும் சமாதானமான அபிவிருத் தியை நோக்கிய முன்னேற்றம் பற்றியும் அடிக்கடி வலியுறுத்தி வரும் ஒன்றாகவும் உள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளை இழுத்தடிப்பது வடக்கு, கிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது எனப் பகிரங்கமாகத் தெரிவித்து வருவது. வடக்குக் கிழக்கை இராணுவ மயப்படுத்துவது, இராணுவ அபிவிருத்தித் தேவைகள் என்ற பேரில் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்தல் போன்ற ஏனைய தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகள் என்பன எவ்வளவு தூரம் தேசிய நல்லிணக்கம் உருவாவதற்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும் என்ற கேள்வி ஒரு புறம் உண்டு.

### கீழ்த்தரமான முறையில் அரங்கேறிய அநீதி

ஆனால், எஸ்.எம். கிருஷ்ணா இந்தப் பேட்டியை வழங்கிக் கொண்டிருந்த அதே நாளில் அவர் குறிப்பிட்டது போன்று இலங்கை அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள நல்லிணக்கத்துக்கான முன்னெடுப்பு வடக்கில் படு மிலேச்சத்தனமான முறையில் அரச படைகளால் காலில் போட்டு மிதிக்கப்பட்டதை ஒரு சிறு விடயமாகக் கருதி விட முடியாது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் கண்டித்தும் அந்தக் கொடுமையை எதிர்த்துக் குரல் கொடுத்தவர்கள் கடத்தப்பட்டுக் காணாமற் போனமையைக் கண்டித்தும், குரல் கொடுக்க வந்தவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி மிகவும் கீழ்த்தரமான முறையில் அரங்கேற்றப்பட்டது.

தென்னிலங்கையிலிருந்து நாம் இலங்கையர் அமைப்பு உட்பட 15 பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் வடக்குக் கிழக்கில் காணாமற் போனவர்களைத் தேடித் தரும்படியும் வடக்கில் வைத்துக் கடத்தப்பட்டுக் காணாமற்போன மக்கள் போராட்ட அமைப்பைச் சேர்ந்த குகன், லலித் ஆகியோரை விடுவிக்கக் கோரியும் யாழ்ப்பாணத்தில் ஒரு பேரணியை நடத்தும் முகமாக வடக்கு நோக்கி வந்தனர். ஆனால், அவர்கள் வடக்கு நோக்கி வரமுடியாது பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இவர்கள் வவுனியா தொடக்கம் மதவாச்சி வரையுள்ள படைமுகாம்களில் தடுக்கப்பட்டனர். இறுதியில் அவர்கள் பேரணியில் கலந்து கொள்ள முடியாத நிலையில் புளியங்குளத்தில் ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தி விட்டுத் திரும்பி விட்டனர்.

அதேவேளையில் யாழ். பஸ் நிலையத்தில் அன்று முற்பகல் 10 மணி தொடக்கம் ஏராளமான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மேலும் நல்லூரில் உள்ள தங்குமிட விடுதியின் முன்னால் நின்றிருந்த சமாதானப் பேரவையின் வாகனம் உட்பட இரு வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டன. ஆர்ப்பாட்டம் நடத்தவிருந்த அமைப்பினர் அந்த விடுதியிலேயே ஊடகவியலாளர் சந்திப்பை மேற்கொள்ளவிருந்தனர். வழமை போல் இனந் தெரியாதவர்களே இந்த வாகன உடைப்பு வீரதீர சாகசத்தை மேற்கொண்டிருந்தனர்.

### முத்தரப்பு நல்லிணக்கம்

இங்கு நாம் ஒரு முக்கிய விடயத்தை அவதானிக்க முடியும். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வந்த மக்கள் இராணுவத்தினரால் சோதனைச் சாவடிகளில் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஆர்ப்பாட்டம் நடக்கவிருந்த இடத்தில் ஆயுதம் தாங்கிய கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். செய்தியாளர் மாநாடு நடக்கவிருந்த இடத்தில் வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டன.

அதாவது இராணுவத்தினர், பொலிஸார், காடையர்கள் ஆகிய முத்தரப்பாருக்குமிடையே பாதிக்கப்பட்டவர்களின் குரலை ஒடுக்குவதில் ஒரு நல்லிணக்கம் இழையோடியிருப்பதை அவதானிக்க முடியும்.

இதேபோன்று நல்லிணக்கம் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் நிலவிய போதும், காணாமற் போனோர் தொடர்பாகக் கடந்த மாதம் பல தமிழ் சிங்கள அமைப்புக்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்திய போது உருவானதையும் மறக்க முடியாது.

அப்போது ஆர்ப்பாட்டம் நடத்தியோரை மிரட்டிப் பொலிஸார் அவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரரை ஏற்றி வந்த பஸ் சாரதிகளையும் நடத்துநர்களையும் படையினர் பயமுறுத்தினர். ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த லலித், குகன் ஆகியோர் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டனர்.

இங்கேயும் இந்த மூன்று தரப்பினருக்குமிடையே ஒரு நல்லிணக்கம் இழையோடியுள்ளது. இப்படியான மக்கள் விரோத நல்லிணக்கங்கள் எமது நாட்டில் ஆசீர்வதிக்கப்பட்டவையாக விளங்குவது சில சமயம் ஆசியாவின் ஆச்சரியத்தில் ஒன்றாகவும் இருக்கலாம்.

ஆனால், மக்களைப் பொறுத்தவரை இவை சந்தி சிரிக்கும் நல்லிணக்கங்கள் தான்.

எப்படியிருப்பினும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தேசிய நல்லிணக்கம் தொடர்பாக நம்பிக்கைகளை வெளியிட்ட அதேசமயத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நாம் இலங்கையர் அமைப்பினரோ அல்லது மக்கள் போராட்டக் குழுவினரோ அல்லது அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பினரோ காணாமற் போனோரைத் தேடிக் கண்டு பிடித்துத் தரும்படி கோரித்தான், ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்படப் பல தமிழ் அமைப்புகளும் கலந்துகொண்டன.

### ஏற்றுக்கொள்ளாத இனவாதிகள்

அதாவது பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணம் கோரி இன, மத, பேதங்களை மறந்து ஒரு அணியாக நின்று குரல் கொடுத்தனர். இங்கு தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே ஒரு உண்மையான தேசிய நல்லிணக்கம் நிலவியது. அது ஒடுக்கப்படும் மக்களுக்கிடையேயான ஒரு தூய்மையான தேசிய நல்லிணக்கம். ஆனால் இனவாதிகள் இந்த நல்லிணக்கத்தை என்றுமே விருப்புவதில்லை. இப்படியான ஐக்கியம் உருவாகுவதை முளையிலேயே கிள்ளிவிட முனைகின்றனர். நியாயங்களைத் தேடும் அடிப்படையில் நல்லிணக்கம் உருகுவாவது இவர்களால் வேம்பாக வெறுக்கப்படும் அம்சமாகும்.

ஆனால் அடக்குமுறையாளர்களும் மக்கள் விரோத சக்திகளும் தங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை எப்போதும் இறுக்கமாகவே பேணி வருகின்றன.

மஹிந்த ராஜபக்ஷவுடன் டக்ளஸ் தேவானந்தாவும் விநாயகமூர்த்தி முரளிதரனும் இன, மத, பேதங்களை மறந்து நல்லிணக்கத்தைப் பேண முடியுமென்றால் காணாமற் போனோரின் பெற்றோர், உறவினர் அமைப்பும் நாம் இலங்கையர் அமைப்பும் ஏன் நல்லிணக்கத்தைப் பேண முடியாது. தமிழ் மாணவர்களும் சிங்கள மாணவர்களும் ஏன் உறவைப் பேண முடியாது?

உண்மையிலேயே சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதன் மூலமும் ஒருவரின் உரிமைகளை மற்றவர்கள் ஏற்றுக் கொள்வதன் மூலமும் மட்டுமே உண்மையான தேசிய நல்லிணக்கம் உருவாக முடியும்.

நல்லிணக்கம் என்பது எவராலும் திணிக்கப்பட்டு உருவாக முடியாது. அது ஆழமான புரிந்துணர்வின் மூலமே உருவாக முடியும். ஒருவரின் பிரச்சினைக்காக மற்றவர் குரல் கொடுக்கும் போது உருவாகும் நல்லிணக்கம் நேர்மையானதாகவும் நிரந்தரமாகவும் அமையும்.

ஆனால், இலங்கை அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையிலேயே அமைந்துள்ளன என்பதை எவரும் மறந்து விட முடியாது. குறிப்பாக வடக்குக் கிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட்ட அதிகாரப் பரவலாக்கல் என்பவற்றை வழங்க முடியாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரபாகரன் கேட்டதையே கேட்கின்றனர் எனவும் ஜனாதிபதி உட்பட பல அமைச்சர்களும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

### ஊட்டப்படும் அச்ச உணர்வுகள்

இத்தகைய பரப்புரைகள் தமிழ் மக்களின் கோரிக்கைகள் சிங்கள மக்களுக்கும் விரோதமானவை என்ற கருத்தையே ஏற்படுத்தி வருகின்றன. இதன் காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகள் தொடர்பாக ஒரு அச்ச உணர்வு வலிந்து திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. இப்படியான ஒரு நிலையில் இப்படியான பரப்புரைகள் சிங்கள மக்களிடம் நல்லிணக்கம் உருவாவதற்கு எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அடுத்து இந்தப் போர் வெற்றி பற்றியும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பெரும் உயிரிழப்புகள் உட்பட்ட பேரழிவும் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பெருமித உணர்வைத் தோற்றுவிக்கும் ஆயுதங்களாகப் பயன்பட்டு வருகின்றன.

எமது அழிவுகள், இழப்புகள் தொடர்பாக ஒரு சகோதர இனம் என்ற முறையில் அனுதாபம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக பெருமித உணர்வே உருவாக்கப்படுகிறது. சிங்கள மக்களைப் பெருமளவில் வட பகுதிக்குக் கொண்டு வந்து காட்டுவதன் மூலம் எமது அழிவுகள் அவர்களின் மனதில் படையினரின் பெரும் சாதனைகளாக உருவகிக்கப்படுகின்றன. இப்படியான நடவடிக்கைகள் நிச்சயமாக இரு இனங்களின் மத்தியிலும் நல்லிணக்கம் உருவாதற்கான நிலைமைகளையே உருவாக்கி வருகின்றன.

ஒட்டு மொத்தத்தில் இன்றைய அரசு தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் ஒரு நல்லிணக்கம் உருவாகி விடக் கூடாது என்பதில் மிகவும் சூட்சுமமான முறையிலேயே செயற்பட்டு வருகிறது. அதே வேளையில் மக்கள் விரோத சக்திகள் தங்களுக்கிடையே இறுக்கமான நல்லிணக்கத்தை இன, மத பேதங்களை மறந்து கட்டியெழுப்பி வருகின்றன என்பதுதான் யதார்த்தம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் முன்னேற்றம்

கடந்த சில ஆண்டுகளில் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு பழக்க வழக்கங்களிலும் சிந்தனைகளிலும், முக்



கியமாய் பெண்கள் நிலையில் பெரும் மாற்றங்கள் வந்துள்ளன. இந்த மாற்றங்கள் வளர்ச்சியா, வீக்கமா என்றால் உறுதியாகப் பெருமளவில் வளர்ச்சிதான்... ஆனால், ஆங்காங்கே வீக்கங்களும் தோன்றி உள்ளதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

அறியாப் பருவத்தில் திருமணம் நடந்து, கல்வி அறிவு மறுக்கப்பட்டு உனக்கென்று தனியாக எந்த விருப்பு, வெறுப்பும் இல்லாமல் வாழப் பழகு என்று காலங்காலமாய் விதிக்கப்பட்டிருந்த சட்டங்களை உடைத்துக்கொண்டு பெண்கள் சமுதாயம் இன்று முன்னேறி உள்ளது.

மிகப்பெரிய அளவில் கல்வித் தகுதியைப் பெற்றது மல்லாமல், ஆண்களில் உலகம் என்று முத்திரை குத்தப்பட்ட பிரிவுகளான இராணுவம், காவல்துறை, அரசியல், ஆராய்ச்சி, தொழில் நுட்பம் என்று சகலத்திலும் புகுந்து இன்றைய பெண் வெற்றிக்கொடி நாட்டி வருகிறாள். பெண்களிடையே பரவலாகத் தன்னம்பிக்கை, சுயமரியாதை உணர்வுகள் அதிகரித்திருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. ஆனால், இந்த விழிப்புணர்வே சில பெண்களிடம் எல்லை மீறி வளர்ச்சிக்குப் பதில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது. நான் சம்பாதிக்கிறேன், என் வாழ்க்கையை என்னால் பார்த்துக்கொள்ள முடியும். யாருடைய தயவும் எனக்குத் தேவையில்லை, என்று சில பெண்கள் பெற்றோரையும், கணவனையும் குடும்பத்தையும் தூக்கி எறியும் போது வீக்கத்திற்கு ஆளாகிறார்கள்.

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று கண்மூடித்தனமாய் அடிமைப்பட்டிருப்பது தேவையே இல்லை என்றாலும், விட்டுக் கொடுப்பதும், அனுசரித்துச் செல்வதும், நாளைக்கு கண்டிப்பாய் விடியும் என்று நம்பிக்கையுடன் வாழ்வதும், வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்க்கும் என்பதை மறந்து விடக்கூடாது. வசதியாய் வாழப் பணம் அவசியமான ஒன்று. ஆனால், பணம் இருந்தால் சந்தோஷமாக வாழ்ந்து விடலாம் என்பது பேதமை அல்லாவா?

■ சந்தியா

## நியாயமாகுமா?

மஞ்சள் குங்குமம், தாலியென
மங்கலப் பொருள்களை
மணநாளில் தந்த - என்
மணவாளனே!
இராமன் நீயென எண்ணியே
உனக்கு நான் மாலையிட்டேன்
மாறிப்போனாய் நீ தசரதனாய்
அக்கினியை சாட்சி வைத்து
சாகும் வரை உன்னுடன் என
சத்தியம் தந்தவனே!
என் இல்வாழ்வுக்கும்
இளமைக் கனவுக்கும்
சமாதி கட்டிவிட்டு
எந்த மங்கைக்கு கட்டுகிறாய்
காதல் கோட்டை
எம் இல்வாழ்வு இறுதிவரை
இனிமையாக இருக்கும் என்றவனே!
வெந்தணலில் விறகாய்
எனை வீசி சென்றுவிட்டாய்
உன் வரவுக்காய்
நான் இங்கு காத்திருக்க
புது உறவுடன் புறப்பட்டுச்
சென்றவனே!
நீ உயிருடன் இருந்தும்
நான் வாழ்கின்றேன்
விதவையாக!

■ வந்தனா, கரவெட்டி

# எதிர்பார்ப்புகள் நிறைந்தவள்தான் பெண்!

'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்பார்கள். ஆனால் பெண்கள் விடயத்தில் ஆண்கள் இரங்காதது உண்மைதான்.

ஆண் என்ற அதிகாரத்தில் உச்சத்தொனியில் அடக்க முற்படும் ஆண் இனத்தில் விதிவிலக்காகவும் ஒரு சிலர் இருக்கிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

கொடுக்கப்பட்ட பொறுப்புக்களும் தேவைகளும் ஒரு பெண்ணால் நிறைவேற்றப்பட்டும் கூட அதில் குறைகண்டு குற்றம் சொல்லும் கூட்டம்தான் ஆண் கூட்டம்.

பெண் என்றால் பேசா மடந்தை என்றும் எதுவும் திருப்பிக் கேட்கத் துணிவு அற்றவள் என்றும் மனநிலை கொண்டுள்ள நிலையில்தான் இவ்வாறான ஆதிக்கத்தைத் திணிக்க முற்படுகின்றனர்.

இது தவறான ஒரு கருத்து. பெண்ணுக்குள்ளும் துணிவு உள்ளது. அவளாலும் கேள்விகள் கேட்க முடியும் என்று எண்ணிக்கொண்டால் ஒரு பெண்ணின் உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுக்க முடியும்.

பெண்கள் கௌரவத்துக்காகவும் அவர்களது உளநிலை மென்மையாக உள்ளதாலுமே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்த ஆணையும் எதிர்க்க முற்படுவதில்லை.

அது தந்தையாக இருந்தாலும் கூடப்பிறந்த அண்ணனாலும் அலுவலக உயரதிகாரியாக இருந்தாலும் எல்லோரிடமும் ஒரே மாதிரியான மனோநிலையில்தான் இவளால் கடமையாற்ற முடிகின்றது.

அதுமட்டுமன்றி ஒரு பெண்ணானவள் தனது வீட்டில் எத்தனையோ பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் தான் கடமைகளுக்குச் செல்ல வேண்டியவளாகின்றாள்.

அவளுக்கு அன்றாட வருமானம் இருந்தால் அல்லது உறவுகளால் உதவிகள் இருக்குமானால் ஒரு தொழிலை தனியே நாடவேண்டிய தேவை ஏற்படாது.



இதில் ஒரு சில பெண்கள் விதிவிலக்காக இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய தேவை இங்கு அவசியம் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

ஒரு பெண்ணின் மனநிலை எவ்வளவு நோகும் என்று கூட எண்ணிப்பார்க்காத எத்தனையோ நெஞ்சங்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

கிட்டவந்தாலே ஏதோ நோயாளிகள் வருவதைப்போல பார்ப்பவர்களும் ஏளனச் சிரிப்போடு கதை பேசுபவர்களுமாக எத்தனை எத்தனைபேர் உள்ளனர். ஏன் இந்த நிலை?

அவளும் ஒரு மனிதப் பிறப்புத்தானே. அவளுக்கும் உணர்வுகள் உண்டுதான் என்று எந்தவோர் ஆணும் எண்ணியிருந்தால் இந்த நிலையில் இருந்து எப்போதோ மாறியிருப்பார்கள்.

ஆனால் சில ஜென்மங்களை உருக்கி இன்னுமொரு அச்சில் வார்த்து எடுத்தால் கூட அவர்களின் குணங்களை மாற்ற முடியாது.

பெண்ணை மதிக்க மறுத்தாலும் பெண் இனத்தை வெறுத்தாலும் மனிதப் பிறவிக்கு மதிப்பளியுங்கள். வரலாறுகள் திசை திரும்பும்.

■ நிஷாவதி, நல்லூர்

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இது கதையல்ல 8

■ யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

"விஜி, ஆண்டு ஒன்பது அல்லது பத்தில் நீ படித்துக்கொண்டிருந்த காலம் உனது நினைவிலிருக்கிறது தானே?"

இருபதை எட்டாத வயதுப் பிள்ளைகளால் ஏன் குடும்ப வாழ்க்கையை நடத்த முடியாது என்று விளக்கம் கூறப்போகிறேன் என எதிர்பார்த்திருந்த விஜிதாவிற்கு என் கேள்வி எதிர்பாராததாகவோ எரிச்சலூட்டுவதாகவோ இருந்திருக்கலாம். ஆனாலும் அம்மாவுடன் ஆறுதலாகக் கதைக்கச் சந்தர்ப்பம் கிடைத்த ஆறுதலோ என்னவோ என் கேள்விக்குப் பதில் கூறினாள்.

"நல்லாய் நினைவிருக்கம்மா"

"அப்ப உன்னாலை நல்லாய் எழுத முடியும், நிறைய வாசிப்பாய், வகுப்பிலை கெட்டிக்காரி. கட்டுரைகள் எழுதுவாய்."

"ஓமம்மா. அதையேன் இப்ப சொல்லுறியள்?"

"அப்படியிருந்த நீ ஒரு முதுமாணிப் பட்டத்திற்கோ, கலாநிதிப் பட்டத்திற்கோ ஏன் ஒரு கட்டுரை எழுதவில்லை?"

விஜிதா சிரிக்க ஆரம்பித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய் விஜி? கட்டுரை எழுதத் தேவையான தகுதி எழுதத் தெரிய வேணும். அத்தோடு கட்டுரை எழுதவும் உனக்குத் தெரிந்திருந்தது."

"முதுமாணிப் பட்டத்துக்கு மட்டுமில்லை இளமாணிப் பட்டத்திற்குக் கூட அந்த நேரம் என்னாலை எப்படி எழுத முடியும்?" விஜிதா சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"அப்ப உன்னாலை அப்பிடிக் கட்டுரை எழுத ஏலாதெண்டு சொல்லுறாய்?"

"ஐயோ, ஐயோ, என்னம்மா நீங்கள். அந்தநேரம் எழுதியிருக்க ஏலாது. இனிமேல் படிக்க அதுக்கேற்ற ஆற்றல் வந்தால் எழுதுவன்தானே. அப்ப முடியாதெண்டுதான் சொன்னனான்."

"அதைத்தான் விஜி நானும் சொன்னனான்" என ஆரம்பித்து நான் விடயத்துக்கு வந்தேன்.

"இதே மாதிரித்தான் இந்த வளர்ச்சியும். பிள்ளைகள் குழந்தைகள் இல்லை. அவை வளர்ந்திட்டினம். இளமைப் பருவத்துக்குரிய மாறுதல்கள் உடலிலும் உள்ளத்திலும் ஏற்பட்டிருக்கும். அது முழுமையான வளர்ச்சியல்ல. உடலினுடைய மாற்றங்களும் அப்படித் தான். அறிவு, ஆற்றல் போன்றவற்றின் விருத்தியும் அப்படித்தான். தம்பி காதல் கடிதம் எழுதுவார். ஆனால் குரல் கீச்சிடும். அந்தக் குரல் மாறி வரவே எவ்வளவு நாளெடுக்குது. அப்படித்தான் உடலினுடைய மற்ற மாறுதல்களும்.

கௌரிக்கு இப்ப கரு உருவாகும். ஆனால் அதன் [illegible] குவ நிலை அ[illegible] இருக்காது. வைத்தியர்கள் சொன்னதைத்தான் நான் சொல்லுகிறேன். இது அந்தக் குழந்தைக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும்.



என்னுடைய மச்சாள் பதினைஞ்சு வயசிலை செய்து லலிதாவைப் பெத்திட்டா. என்ரை அம்மா சொல்லிச் சிரிக்கிறவ. மச்சாள் தலையணைக்கு மேலை காலைப்போட்டு படுக்கிற மாதிரி குழந்தைக்கு மேலை காலைப் போட்டு லலிதா கத்தி அழுது பெரிய அமர்க்களம் நடந்ததெண்டு. இந்தச் சிறுபிள்ளைத்தனம் குழந்தை வளர்ப்பிலை மட்டுமில்லை. குடும்பம் நடத்திறத்திலையும் இருக்கும். முதிர்ச்சி, அனுபவம் கூடி வந்த பின்பு குழந்தைப்பிள்ளைத் தனமான சண்டையில்லாமல் அனுசரிச்சுப் போவினம்.

அதனாலைதான் சிறுவர் என்ற வயதிலை சிறுவர்களுக்கான வாழ்க்கையை அனுபவியுங்கோ. நாலைஞ்சு வருசம் போன பிறகு கெஞ்சிக்கேட்டாலும் இந்தப் பருவமும் அதில வாழுற வாழ்க்கையும் வராது. உரிய பருவம் வந்த பிறகு தாம்பத்திய உறவை யோசியுங்கோ.

இதைவிட்டு கௌரியைப் போன்று ஏமாற நேர்ந்திட்டால் வாழ்க்கை முழுவதுமே திருமணம், குடும்பவாழ்வு [illegible] இல்லாமல் போயிட [illegible] ஒரு நாள் சில நிமிடங்கள் அனுபவிக்க ஆசைப்பட்ட இன்ப வாழ்க்கை முழுவதும் அனுபவிக்கக் கிடைக்காமல் போகும்."

"ஏன் கௌரியே பிழைவிட்டவள்? சங்கரியக்கா ஒரு பிழையும் செய்யேல்லை. அவவுக்கு கலியாணம் கட்டி வைக்கவேணும் எண்டு நீங்கள்தானே அம்மா சொன்னனீங்கள்." விஜிதா இடைமறித்தாள்.

"இரண்டு பேருக்கும் திருமண வாழ்க்கை அமைஞ்சால் நான் சந்தோஷப்படுவேன். ஆனால் சங்கரியின்ரை கதை வித்தியாசம்."

இருவரது கதைகளிலுமுள்ள வேறுபாட்டை நான் விளக்க ஆரம்பித்தேன்.

*எனது சிந்தனை நீண்டது...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைத்தமிழ் வித்தகி புத்தினியம்மா திலகநாயகம் போல்



சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

27

கலைத்திறன் என்பது கடவுளால் அருளப்படும் கொடையாகவே எம்மவர்களால் மதிக்கப்படுகின்றது. ஆகையால் கலைஞர்களாக உருவெடுப்போரை முற்காலத்தில் மன்னர்கள் முதல் சாதாரண மக்கள் வரையான அனைவரும் மதித்தும் வாழ்வளித்தும் வந்தனர்.

ஆனால் தற்காலத்தில் உயர் அரச பதவிகளில் அமர்ந்திருப்போரில் பலர் கலைகளையோ கலைஞர்களையோ உரிய முறையில் மதிப்பதில்லை. எனினும் நிர்வாகத்திறன் கொண்ட அரச நிர்வாகியாகத் தமிழர் பகுதிகளில் நாற்பதாண்டுகளுக்கும் மேலாகச் சேவையாற்றிய ஒருவராகவும் கலை, இலக்கியத் துறைகளில் ஆளுமையும் ஈடுபாடும் கொண்ட கலைஞராகவும் இசைக் கலைக்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த சமூக சேவகியாகவும் பணியாற்றி வருபவர் கலையரசி திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்.

அமரர்களான சிதம்பரப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகளாக 09.05.1945இல் கரவெட்டியில் இவர் பிறந்தார். சிறு வயதிலிருந்தே இலக்கியத்துறையில் ஆர்வம் கொண்டிருந்த இவர் கரவெட்டி ஞானாசாரியா வித்தியாசாலை, யாழ். இந்துமகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்விகற்று 1963- 1967 காலப் பகுதியில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டதாரிக் கற்கை நெறியை முடித்துக் கொண்டதுடன் பள்ளிப் பருவத்திலேயே தமிழ் பாலபண்டிதர், சைவப்புலவர் போன்ற பட்டங்களையும் பெற்றிருந்தார்.

1970இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட இவர் கொழும்பு, புத்தளம் ஆகிய இடங்களில் தலைமைப்பீடக் காரியதிகாரியாகவும் 1977இல் வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் தலைமைப்பீட உதவி அரச அதிபராகவும் அதன் பின்னர் வடமாகாண நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்பு உதவி ஆணையாளராகவும் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகவும் திறமையுடன் பணியாற்றியவர்.

1992 இல் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பணியாற்றிய இவர் 1997இல் வலிகாமம் வடக்குப் பகுதிக்கான பிரதேச செயலர் பதவியைப் பெரு விருப்புடன் ஏற்றுக்கொண்டு இடப்பெயர்வால் அல்லலுற்றிருந்த மக்களின் குறைகளை நேரில் கண்டுணர்ந்த ஒருவராகப் பல ஆண்டுகளாகச் சேவையாற்றியவர். இந்தப் பிரதேசத்தின் வளங்கள் அனைத்தையும் ஆவணப்படுத்தும் முகமாக வலி. வடக்குப் பிரதேச மலர் என்னும் ஆய்வு நூல் ஒன்றையும் தனது பதவிக் காலத்தில் உருவாக்கி வெளியிட்ட பெருமைக்குரியவர்.

அத்துடன் 2002இல் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபராக மீண்டும் பதவியேற்ற இவர் 2004இல் ஓய்வு பெற்றார்.

தாய்மொழி அறிவும் சமயப் பண்பாடுகள் பற்றிய தெளிவும் கொண்டிருந்த இவரது கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் போன்ற அனைத்தும் 1961இல் இருந்து ஈழத்தில் வெளியான அனைத்துத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளிவரத் தொடங்கின.

சிதம்பரபத்தினி, சித்தி, பிரக்ஞா போன்ற புனைபெயர்களில் தனது ஆக்கங்களை எழுதி வந்ததுடன் அக் காலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பான ஈழத்துப் பாடல்கள் என்னும் நிகழ்வுக்கான பாடல்களையும் ஏராளமாக எழுதியவர். அத்துடன் கவியரங்கம், பேச்சு, கருத்தரங்கம் போன்ற நிகழ்வுகளிலும் ஈடுபட்டு வந்தார்.

இவ்வாறு எழுத்துத் துறையில் சாதனை படைத்த இவரது ஆக்கங்கள் நிஜத்தின் நிழல், தேன்வதை, மழலை அமுதம், மழலைப்பாக்கள் போன்ற பெயர்களில் நூல்களாக வெளியிடப்பட் டுள்ளன.

அத்துடன் இசைத்தமிழின் தொன்மையும் திண்மையும் என்னும் இசைஆய்வு நூலானது கணவரின் துணையுடன் இவரால் எழுதப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.

ஈழத்தின் இசை வரலாற்றில் பல புதுமைகளையும் சாதனைகளையும் படைத்தளித்த இவரது கணவரான ஸ்வர ராக லயவினோத சுரபி அமரர் எல்.திலநாயகம் போலின் இசை வாழ்வில் உற்ற துணையாய் அமைந்து அவரது கலைப் பணிகளில் தன்னையும் இணைத் துக் கொண்ட இவர் இசையரங்குக் கான கீர்த்தனைகளையும் ஈழத்தின் சைவாலயங்கள் மீதான இசைப் பாடல்களையும் நூற்றுக் கணக்கில் புதிதாக உருவாக்கி நம் நாட்டின் இசை வளர்ச்சியிலும் தனது பங்களிப்புக்களை இனிதே வழங்கியவர்.

05.12.2009 இல் இறைபதமடைந்த தனது கணவரின் நினைவாக இசையின் இமயம் என்னும் நினைவு மலரையும் கிறிஸ்துகானம், செந்தமிழ்ச் செவ்விசைப் பாடல்கள், செவ்விசைக் குரல் போன்ற இறுவட்டுக்களையும் வெளியிட்டுள்ள இவர் ஆண்டு தோறும் கணவரின் நினைவு நாளில் முழுநாள் இசை விழாக்களையும் சிறப்புற நடத்தி வருகின்றார்.

தமிழ் மொழியையும் தமிழிசையையும் தனது உயிராக நேசித்து வரும் இவர் எதிர்காலத்திலும் தனது இசைத் தொண்டைச் சிறப்புற முன்னெடுக்கும் முயற்சிகளிலும் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றார்.

''எண்ணற்ற ஆசிரியர்களையும் ஆற்றுகையாளர்களையும் ஈழத்தில் உருவாக்கியவர் எனது கணவர். தன்னைப் போன்றே தனது மாணவரும் உருவாக வேண்டும் எனும் எண்ணத்தோடு உண்மையான கற்பித்தலில் அவர் ஈடுபட்டதை நேரில் கண்டவள் நான்''. தம்புராவைச் சுருதி கூட்டித் தரையில் அமர்ந்து இசை கற்பித்தல் என்பது கேட்பதற்கும் பார்ப்பதற்கும் இனிமையானவை.

எனவே தான் இசையைப் புனிதமான கலை யென்றும் இசையாளர்களைத் தெய்வீகமானவர்கள் என்றும் நாம் போற்றி வருகின்றோம்.

இறைவனையே மகிழ்விக்கும் ஆற்றல் கொண்ட புனிதமான இசைக் கலையானது மனிதர்களின் மனங்களை மகிழ்விப்பதுடன் நோய்களையும் குணமாக்கும் சக்தி கொண்டது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். திறன் கொண்ட இசையாளர் ஒருவரது இசை ஆற்றுகையானது பல்லாயிரக்கணக்கான இரசிகர்களை மணிக்கணக்கில் ஒரு சிந்தனை கொண்டவர்களாக வைத்திருக்கின்றமை இசைக் கலையின் ஒரு விதமான மருத்துவக் குணமே என்பதில் எதுவித ஐயமும் இல்லை.


எனவே இசைக்கலையில் ஆழமான அறிவும் எல்லா வகையான இராகங்களையும் நீண்ட நேர ஆலாபனை செய்யக் கூடிய ஆற்றுகைத்திறனும் கொண்ட ஒருவரால் இசை மருத்துவத்தில் சிறப்புடன் ஈடுபட முடியும். ஆனால் தற்காலத்தில், இசைக் கலையில் அடிப்படை அறிவில்லாமல், அதன் புனிதத்தை மதிக்கத் தெரியாமல், சுருதிப் பெட்டியானது

இசை கற்பித்தலில் இடையூறாக இருக்கின்றது என்று கூறித் தமது இசை கற்பித்தலுக்கான பலவீனங்களை மறைக்க முற்படும் சிலர் இசை மருத்துவத்தில் ஈடுபடுகின்றமை கவலைக்குரியதும் வேடிக்கைக்குரியதும் ஆகும் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார்.

■வசாவிளான் தவமைந்தன்

*

# சரும நோய்களுக்கு நிவாரணி கார்போகவரிசி



மரிமா (அம்பரலங்காய்)
வேறுபெயர்- புளிமா, அம்பாலை, கானமரி, மரிமாங்காய், காட்டுமா
தாவரவியற் பெயர்- Spondias
(ஸ்பொண்டியாஸ் மஞ்ஜிபெரா)
குடும்பம்- Anacardiaceae (அனகாடியேசியே)
சிங்களப் பெயர்- அம்பரலா
சமஸ்கிருதப்பெயர்- அமராதக
ஆங்கிலப் பெயர் - Hog - Plum Wild Mango

இலங்கை இந்தியாவில் காணப்படும் பெருமரம். பட்டை கபில நிறம், பொருக்குள்ளது. கூட்டிலைகள் பெரிய இலைகள். நீள்வட்டம், நுனி கூரானது. கனிகள் சிறியவை. உண்ணக் கூடியவை.

**வாய்க்கசப்பு, நாச்சுவையின்மைக்கு**

இதன் காயைத் தோல் நீக்கி துவையல் அல்லது ஊறுகாய் செய்து சாப்பிட்டு வர மாறும். சுரமுள்ள வருக்கும் உகந்தது.

விரணங்களுக்கு இலைக் கொழுந்தை அரைத்துப் பூசலாம்.

**அடிபட்ட காயங்களுக்கு**

பட்டையை நீர் விட்டரைத்து சிறிது உப்பும் சேர்த்துப் பூச அடிப்பட்ட நோ, வீக்கம் என்பன மாறும்.

**நாள்பட்ட சரும நோய்களுக்கு**

பழச்சதையை தேனில் ஊற வைத்து தினமும் சாப்பிட்டு வர குணம் ஏற்படும். நாட்பட்ட இருமலுக் கும் இது நன்று.

**கார்போகவரிசி**

வேறுபெயர்-கார்புவா அரிசி, கார்போகம், பவுக்சி, கார்கோலரிசி
தாவரவியற் பெயர்- Psoralea Corylifolia
(சொளரேலியா கோரைலிஃபோலியா)
குடும்பம்- Paplilionacea (பப்பிலியோனேசியே)
சமஸ்கிருதப்பெயர்- பாகூச்சி
ஆங்கிலப் பெயர்- Babchi Seeds

இது இலங்கை, இந்தியாவில் காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் தீவகப் பிரதேசங்களில் சிறுபூண்டாக தன்னிச்சையாகக் காணப்படும். தனி இலைகள். பூக்கள் ஊதா நிறம். விதைகள் கறுப்பு நிறம். இதுவே கார்போகவரிசி என அழைக்கப் படுகிறது.

**சரும நோய்களுக்கு**

கார்போகரிசி, நீரடிமுத்து, கசகசா, கருஞ்சீரகம் ஆகிய வற்றை எடுத்துப் பொடித்து பழங்கஞ்சி விட்டரைத்து சொறி, சிரங்கு, படர் தாமரை, கரப்பன் மற்றும் சரும நோயுள்ள இடங்களில் பூசி 1-2

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

மணித்தியாலயம் ஊறவிட்டு பிறகும் இளம் வெந்நீரில் குளித்துவர மாறும்.

**வெண் குஷ்டத்துக்கு**

கார்போகவரிசியைப் பசுப்பால் விட்டரைத்து வெண்குஷ்டத்தின் மீது பூசி குளித்து வர மாறும். கார்போகரிசித் தைலத்தை யும் பூசி வரலாம்.

கார்போகரிசிச் சூறணத்தை நெய். அல்லது பனங்கட்டி சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வருவதும் வெண் குஷ்ட நோய் குணமாக உதவும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 198

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | | ■ |
| | ■ | 11 | | ■ | 12 | | 13 |
| ■ | 14 | | | 15 | | ■ | |
| 16 | | ■ | 17 | | ■ | 18 | |
| 19 | | | ■ | 20 | 21 | ■ | |
| 22 | | ■ | 23 | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1.பாதிப்பான அம்சம்
4.ஒன்றின் பங்கு
7.கலாட்டா
8.ஒரு பிடி
9. மறித்தல்
11.சிரசு
12. மாட்சிமை
14. பலவகையான ரகம்
16. மரம்
17. செல்வம்
18. அரைவாசி
19. கையால் கொடுக்கும் ஒரு தாக்குதல் வகை
20. பெரிய
22.சிரார்த்த நாள்
23.வயதில் மூத்தவர்

### மேலிருந்து கீழ்

1. இந்தியா
2. மெல்லிய உலோகப் படை
3.அசதியால் வருவது
4. முகத்தில் வரும்
5. இருமல் நோய்
6. அதிர்ச்சி அடை
8. வாயில் அரைக்கும் உறுப்பு
10. சிரசில் எழுத்தப்பட்டது
12. ஏவுகணை வகை
13. மகன்மார்
14. பஞ்சில் இருந்து எடுப்பது
15. தரவேண்டியது
16. தகைமை நிலைமை
21. உலர

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 198**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 01.02.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத்தபாலட்டையில்ஒட்டிஅனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.198 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 05.02.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 196 இற்கான' சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**நா.வசுமதி,** குமரபுரம், அரசடி வீதி, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு**
**சி.தாகிஜன்,** இல.113, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
**ச.ஸ்ரெலா,** இல.100, 154 ஆம் கட்டை, இந்துபுரம், முறிகண்டி.

**4 ஆம் பரிசு**
**திருமதி தி.அமுதலிங்கம்,** சன்னதிவீதி, ஓடைக்காடு, அச்சுவேலி.

**5 ஆம் பரிசு**
**பா.ஷாலினி,** இல.47, நாகம்மாள் கோயில் வீதி, உடுவில், சுன்னாகம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**திரு. ஜெ.சிவானந்தம்,**
கற்பகப் பிள்ளையார் கோயிலடி, பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு.

**ச.ஜசிந்தன்,**
இலக்கணாவத்தை, உடுப்பிட்டி.

**அ.ஸ்ரீதரன்,**
ஐயனார் கோயிலடி, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 196 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அகம்பாவம் (6) சனி (7) வட (8) கட
(9) அலம்புதல் (11) பாமரன் (13) வலி (14) விதம்
(15)என (17) தலை (18) விரும்பல் (20) கொடுமை
(21)கல (22) சடுதி (23) கல்வி

### மேலிருந்து கீழ்

(1) அசம்பாவிதம் (2) கனி (3) பாவலன் (4) வடம்
(5) கடல் (8) கதலி (9) அரம்
(10) புவனம் (12) மதலை (15) எருமை (16) பல்லவி
(18) விடுதி (19) பகல் (20) கொடு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர்களின் பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# கலைந்து போன கனவுகள்.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனுக்கும் அவர்களுக்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லை. தொலைபேசி வசதி கூட இல்லை.

ஒரு முறை தன் தங்கையின் பிறந்த நாளுக்கு தான் கஷ்டப்பட்டு உழைத்த காசிலே ஒரு பட்டுப்புடவையும் தலைக் குஞ்சமும் வாங்கி ஆசையாக வந்து கொடுத்தான். அதை வாங்கிய அவள் சந்தோச மிகுதியால் துள்ளிக்குதித்தாள்.

அவன் தன் மனதிலே தங்கை தேவதை போல் வாழ வேண்டும் எக் கஷ்ரமும் படக்கூடாது என்று நினைத்தபடியே இருப்பான். அவளுக்கு புடவையுடன் குஞ்ச மும் கட்டி அழகு பார்த்தான். அவளுக்குத் தலைவாரிப் பூச் சூடியே மகிழ்ச்சிக்கடலில் மிதப்பான்.

தன் தங்கையை நல்ல மாப்பிள்ளைக்கு கட்டி வைக்க வேண்டும்; அவளின் வாழ்க்கை சிறந்து விளங்க வேண்டும் என்று எண்ணிய அவன் தன் ஆசையைத் தாய் தந்தையரிடம் கூறினான். அவர்களும் சம்மதிக்க எல்லோரும் ஒவ்வொரு பக்கத்தால் மாப்பிள்ளை தேடினார்கள்.

ஒருவாறு தேடித்தேடி நல்ல மாப்பிள்ளையை பார்த்துவிட்டார்கள். தன் ஒரு தங்கைக்காக மாப்பிள்ளை வீட்டார் கேட்ட சீதனத்தைச் கொடுக்கச் சம்மதித்தான் இரவு பகலாக வேலை செய்துதான் இதனை சேர்க்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம்.

அவனோ வேலைக்குப் போய் சிறிது காலமே ஆகிறது. இவனது நேர்மை இவன் முதலாளிக்குப் பிடித்திருந்தது.

தன் தங்கைக்காக 3 மாதங்கள் தொடர்ந்து வேலை செய்தாக வேண்டும் என்று கூறிவிட்டு பெற்றோரிடமிருந்து விடை பெற்றான் வசந்தன். அண்ணனைக் காணாமல் இருந்த தங்கை அவன் வாங்கி கொடுத்த புடவையை புரட்டிப் புரட்டிப் பார்த்துச் சந்தோசப்படுவாள். தன் அண்ணனைப் போல அவள் நினைக்கும் அந்த வேப்பமரமே இவளுக்கு ஆறுதல் கூறும்.

அன்று விடைபெற்றவன் இரவு பகலாக உழைத்து 3 மாத சம்பளத்தைச் சேமித்தான். இவன் நல்ல மனசுக்கு கடவுள் புண்ணியமாக முதலாளியும் ஒரு தொகை பணம் கொடுத்து உதவினார்.

அவற்றைக் கொண்டு தாய்க்கும், தங்கைக்கும் புடவைகள் தங்கைக்கு நகைகள் வாங்கினான். அவர்களை நேரில் பார்க்கும் சந்தோசத்தில் அன்று முழுவதும் சாப்பிட மறந்தே விட்டான். அன்று மாலையே தன் உறவுகளைக் காணப் புறப்பட்டு விட்டான்.

பஸ்ஸிலிருந்து இறங்கி வீட்டை நோக்கி வந்தான். வந்தவன் கண்ட காட்சி அவனது உள்ளத்தைச் சுக்கு நூறாக்கியது.

மயங்கி அந்தத் தரையிலேயே வீழ்ந்தான். மயக்கம் தெளிந்து விழித்தபோது வசந்தனால் சொரிந்த கண்ணீரைத் கட்டுப்படுத்த முடியவில்லை . அவன் அழுகையை மேலும் கூட்டுவது போல தங்கையின் பிறந்த நாளன்று எடுத்த படம் ஆசையாக வங்கி வந்து அவளை அழகுபார்த்த அக் குஞ்சங்கள் யாவுமே சிதறிக் கிடந்தன. அவற்றைக் கையில் எடுத்து தாய் தந்தை தங்கைக்கு கண்ணீராலேயே அஞ்சலி செலுத்தினான்.

அவனின் ஆக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வேப்பமரம் கூட மனம் கசிந்து அழுதது போல் தோன்றியது.

உள்ளம் கனத்தது; உடல் நடுங்கியது. சோர்வு அவனுடலைத் தளர்த்த அவ்விடத்திலேயே பல மணி நேரம் உட்கார்ந்திருந்தான்.

மனம் ஆறுதலடைய மறுத்தது. எத்தனை மணித்தியாலயங்கள் கடந்து சென்றன என்பதையும் அவனால் உணர இயலவில்லை இருட்டி விட்டது. இருட்டில் எதுவுமே தெரியவில்லை. அவன் தரையிலே படுத்துவிட்டான்.

''தம்பி.... தம்பி...'' என யாரோ அவனை உசுப்பி எழுப்பும் வகை தெரிந்தது கண்களைத் திறந்தான். இருட்டில் யார் அவர்? என்பது தெரியவில்லை.

''தம்பி தம்பி இவள் தங்கச்சி வெளியில போனாள் கண்டனியோ?'' என்ற கேள்வியும் குரலும் அவனுக்குப் பழக்கப்பட்டதாகத் தோன்ற 'அம்மா அம்மா' என்று கூவிய அவனை தொடர்ந்து தம்பி வசந்தனா ?என்று வினாவெழுப்பினார் அவனது மாமா சுந்தரம் அவனுக்குத் தலை சுற்றியது.

எல்லோருமே செல் வீச்சால் மாண்டழிந்து போனார்கள் என்று எண்ணியவனுக்கு அம்மா உயிரோடிருக்கிறாள் என்ற உண்மை தெரிந்தது ஆனால்.......!

அனைத்தையும் இழந்த அதிர்ச்சியில் அவளும் மனங் குழம்பிப் பைத்தியக்காரியாக......

''தம்பி வசந்தன் எல்லாமே முடிஞ்சு போச்சு; இருக்கிற எச்சம் நாங்கள்தான். எங்களுக்குகென்று எதுவுமேயில்லை அம்மாவும் இப்படி ஆகிப்போனா'' என்ற மாமாவின் வார்த்தைகள் வசந்தனின் எண்ணங்களில் புயலை விளைவித்தது.

எங்களுக்கு மட்டுமில்லைத் தம்பி சில குடும்பங்கள் என்ன வாச்சென்றே தெரியவில்லையே. எங்கட மஞ்சுளா மாமி குடும்பத்திலிருந்த பத்துப்பேரும் சரி என்றபோது அவர் விம்மி விம்மி அழுதார்.

அவருடன் சேர்ந்தழுத வசந்தனை நோக்கி வெளியே போன தங்கச்சியைக் கண்டனியோ என்று கேட்கும் அம்மாவின் உருவம் அந்த இருட்டிலே ஒரு கரிய நிழலாகத் தெரிந்தது.

தினந்தினம் தூக்கமின்றி அலையும் அம்மாவுக்குத் துணையாகச் சுந்தரம் மாமாவுடன் இப்பொழுது வசந்தனும் சேர்ந்து கொண்டான்.

ஆனால் அவர்களது துயரத்தைப் போக்கும் வழி காணத் திட்டமிடும் அவனது மனமோ ஓயவில்லை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசணியும் யானையும்!

ராமுவும் கோவிந்தனும் அடுத்தடுத்த வீடுகளில் குடியிருப்பவர்கள். ராமு, செல்வாக்கும் செல்வமும் மிக்க வியாபாரி. கோவிந்தன் ஏழை விவசாயி. கோவிந்தன் தனது நிலத்தில் பூசணிக்காய் பயிரிட்டிருந்தான். அதில் ஒரு பூசணி மிகப் பெரிய அளவில் விளைந்திருந்தது. அதைக் கண்டவுடன் கோவிந்தனுக்கு, தமது நாட்டின் அரசனுக்குப் பரிசாகக் கொடுத்தால் என்ன என்று தோன்றியது. உடனே அதை எடுத்துக் கொண்டு போய் அரசனுக்கு பரிசாக வழங்கினான். கோவிந்தனின் நல்ல குணத்தைப் பாராட்டிய அரசன், அவனுக்கு 100 தங்கக் காசுகளைப் பரிசாகக் கொடுத்தான்.

இதைப் பற்றிக் கேள்விப்பட்ட ராமுவுக்குப் பொறாமையாக இருந்தது. ''மிகப் பெரிய பூசணிக் காயைக் கொடுத்ததற்கே அரசன் 100 தங்கக் காசுகளைப் பரிசளித்திருக்கிறார்! நாம் அதைவிடப் பெரிதாக ஒரு யானையைப் பரிசாகக் கொடுத்தால், எவ்வளவு தங்கம் தருவார்'' என்று பேராசைப்பட்டான்.


அவன் நினைத்தபடியே ஒரு யானையை விலைக்கு வாங்கிக் கொண்டுபோய் அரசனுக்குப் பரிசாக அளித்தான். அரசன் யோசித்தான். இவனை எப்படித் திருத்துவது என்று யோசித்த அரசன், ஒரு தீர்மானத்துக்கு வந்தான். யானையையே வாங்கக்கூடிய அளவுக்கு செல்வம் இருக்கும் ராமுவுக்குத் தான் கொடுக்கும் தங்கக்காசுகள் தேவையில்லையே! என்று யோசித்த அரசன், கோவிந்தன் கொடுத்த பெரிய பூசணிக்காயை ராமுவுக்கே பரிசாகக் கொடுத்து விட்டான். ராமுவுக்கு ஏமாற்றமாகப் போய் விட்டது.





■ சோபா

## தங்கமும் வைரமும்




உலகில் தரம் வாய்ந்த மிகப் பெரும் வைரம் 1905 இல் தென்னாபிரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டது. எடை 3025 கரட். தங்கச் சுரங்கங்களின் இருந்து ஒரு தொன் தங்கப் பாறையை வெட்டியெடுக்க சுமார் 15 தொன் சுவாசக் காற்றை இழக்கும் அளவுக்கு முயற்சிக்க வேண்டும்.


## பெருவாழ்வு

ஜப்பானியர்களின் வாழ்நாள் மிக நீண்டது. உலகிலேயே அதிக வாழ்நாள் கொண்டவர்கள் ஜப்பானியர்களே. ஜப்பானிய ஆண்களின் சராசரி வயது 75.9 வருடங்கள். பெண்களின் சராசரி வாழ்வு 81.9 வருடங்கள். சுறு சுறுப்பும், உணவுப் பழக்க முறைகளுமே இதற்குரிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.






ரா. ஹரிஷ்ராகவ்
கார்மேல் பாலர் பாடசாலை



ர.ஆகாஷ்
யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை



நி. இந்துகா
உருத்திரபுரம், கிளிநொச்சி.




க.தேனுகா
தரம்-4, புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை



த.இலக்கியன்
தரம்-6பி, யாழ்.புனித பரியோவான் கல்லூரி



இ.சாரங்கன்
தரம்-8பி, யாழ்.இந்துக் கல்லூரி



கி.சோபிதா
தரம்-9பி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி



பா.தமிழிசை
தரம்-4, புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை

## எலியும் பானையும்



பாட்டியின் வீட்டுப் பழம் பானை - அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா!
ஓட்டை வழியொரு சுண்டெலியும் - அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா!
உள்ளே புகுந்து நெல் தின்று தின்று - வயிறு
ஊதிப் பருத்ததடா!
மெள்ள வெளியில் வருவதற்கும் - ஓட்டை
மெத்தச் சிறிதாகப் போச்சுதடா!

## கடவுள்



உலகையும் அண்ட சராசரத்தையும் அதில் உள்ள பொருள்களையும் படைத்தவர் கடவுள். இவர் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறார். இவர் உருவமில்லாதவர். ஆனால் கடவுளை வணங்கும் மக்கள் தங்களுக்கு விரும்பிய முறையில் கடவுளை சிருஷ்டித்து வருகிறார்கள். நாம் கடவுளை கண்ணால் காணமுடியாது. இருந்தும் முனிவர்கள் ஞானிகள் கண்டதாகக் கூறப்படுகிறது. கடவுளை ஒவ்வொரு மதத்தவர்களும் ஒவ்வொரு பெயரில் அழைப்பர். இந்துக்கள் சிவன், சக்தி, முருகன், பிள்ளையார் போன்ற பல பெயர்களாலும் கிறிஸ்தவர்கள் இயேசு என்றும் முஸ்லிம்கள் அல்லா என்றும் பௌத்தர்கள் புத்தர் என்றும் அழைப்பர். கடவுள் பெற்ற தாயைப் போல் நமக்கு வழிகாட்டுவார்.

''கடவுளை நம்பினோர் கை விடப்படார்''

இ.கிருத்துகாயினி
தரம் - 6 ஏ, யா/ விக்டோறியாக் கல்லூரி.

## விடை தெரியுமா? 143

### உங்களுக்கும் பரிசில்கள்

1. கடக இராசியின் அடையாளம் என்ன?
2. கானா நாட்டின் எழுத்தறிவு வீதம் என்ன?
3. தாய்வான் நாட்டின் தற்போதைய அதிபர் யார்?
4. உலகின் மிகப் பெரிய சிலை எது?
5. பொதுநலவாய அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட நாடு எது?

### விடைகள் 141

1. பரிஸ்
2. அமெரிக்காவில்
3. பி.ஏ.தோமஸ் அடிகளார்
4. யூ செப் அல்மன்குஸ்
5. யானதிஹார்

### வெற்றி பெற்றோர் விவரம் (142)

★ ஏ.கீர்த்திகன், தரம்-4 சி, சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை
★ சி.வனோஜா, தரம் -3, சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை
★ சு.பிரியதக்ஷி, தரம்-8 சி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை
★ கு.மாதங்கி, தரம் - 04, யா/ இணுவில் இந்துக் கல்லூரி
★ ஏ.துவாரகி, தரம் -7, சாவகச்சேரி இந்துக் கல்லூரி
★ ரா.உஷாந்தினி, தரம் - 9எம், ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 28.01.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துயிரூட்டுவார்களா?

மங்காத்தா

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. முன்னோர்கள் அந்தக் காலம் தொட்டு கோயில்களை அண்மித்து தமது குடியிருப்புகளை அமைத்தனர்.

அந்தக் காலத்தில் அனைவருமே பக்தியுடன் வழிபாடாற்றியிருந்தனர். பண்டைக் காலந்தொட்டு ஆபத்துக்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவும். பல நன்மைகளை அடைவதை எதிர்பார்ப்பாகக் கொண்டும் வழிபாடாற்றியிருந்தனர். ஆனால் அந்தக் காலத்தில் இருந்த பக்தி, ஆர்வம் இந்தக் காலத்தில் வெகுவாகக் குறைந்து விட்டது.

பொதுவாகவே வழிபாட்டு ஸ்தலங்களது அருமை பெருமை அங்கு வழிபாடாற்றுபவர்களிலேயே தங்கியுள்ளது. எனவே வழிபாடாற்றுபவர்களான இந்துக் குருமார் தம்மை நல்ல நிலைக்கு உயர்த்திக் கொள்ள வேண்டும். காரியம் முடிந்தால் சரி என்ற நிலை மாறி ஒவ்வொரு நிலையிலும் செயல்கள் உரிய ஒழுங்கு முறையில் ஆற்றப்படல்வேண்டும்.

நம்பிக்கையின் அடிப்படையில் ஆலயங்களுக்கு வருபவர்கள், வழிபடுபவர்கள் தமது வழிபாட்டு ஸ்தலங்களின் மீதான, குருக்கள்மார் மீதான நம்பிக்கையீனங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும்பொறுப்பு குருக்கள்மாரையே சாரும்.

ஆலயங்களில் பூசை செய்பவர்களது நிலை, தராதரம் எனப் பலவற்றில் பலவேறுபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. முன்னைய காலத்தில் பூசை செய்பவர்களில் படித்தவர்கள் குறைவாக இருந்தாலும் கூடுதலாக இருந்தாலும் சரி விடயத்தைப் புரிந்துகொண்டிருந்தார்கள். அதிகமானவர்கள் பாடசாலை சென்றிருந்தனர். கல்வி கற்றிருந்தனர். எது எப்படியோ ஆலயங்களில் பூசை செய்பவர்கள் வேதாகமங்களைத் தெரிந்திருந்தனர். பாடசாலைக் கல்வி கைகூடாத பட்சத்திலும் செவி வழிக் கல்வியாக பழக்கதோசமாக பூசை வழிபாடுகள் செய்திருந்தனர்.

இன்று இவர்களின் நிலை, தராதரம் என்பவற்றில் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. சொல்லப்போனால் வெட்கக்கேடு. ஆலயங்களில் பூசை செய்பவர்களில் சிலருக்கு வேதாகமங்கள், மந்திரங்கள் கூட இன்று வரை தெரியாதாம்.

கிராமம், நகரம் வேறுபாடின்றி தமது தந்தையரோடு, உறவினரோடு கோயில்களுக்குச் செல்லும் பிராமணச் சிறார்கள் காலவோட்டத்தில் கோயிலோடு பூசையுடன் மட்டும் நின்றால் போதுமே என்ற நிலையில் பாடசாலைக் கல்வியைத் தொலைத்து விடுகிறார்கள்.

அதனை மீறி பாடசாலைக் கல்வியைக் கற்கச் செல்பவர்கள் எட்டாந் தரத்தை அதனையும் தாண்டினால் ஜீ.சீ.ஈ. சாதாரணதரத்துடன் தமது கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுகின்றனர். ஆனால் புலமைப்பரிசில் பரீட்சையுடன் கல்வியைத் துரத்திவிட்டு கோயில் பூசையில் களமிறங்கிவிடுபவர்களையும் இன்றும் காணமுடிகிறது.

இவர்கள் பூசை செய்வதற்குரிய மந்திரங்கள் கற்றுக்கொள்ளாமல் அடிப்படை மந்திரங்கள் கூடத் தெரியாமல் கோயில்களில் பூசை செய்ய எப்படி அனுமதிக்க முடியும். பூசையின்போது அவர்கள் ஏதோ சொல்கிறார்கள் அதாவது வடமொழியிலமைந்த மந்திரத்தை உச்சரிக்கிறார்கள். அது சரியான முறையில்தான் உச்சரிக்கப்படுகிறதா? என்பது வேறு.

இவர்கள்தான் இங்குள்ள ஆலயங்களில் கொடியேற்றி திருவிழா நடத்தும் எதிர்காலச் சந்ததிகள் தவிர ஆலய பிரசங்கங்கள் கூட இவர்களின் அறிவினால் மேன்மையானதாக பயன்மிக்கதாக அமையவேண்டிய தேவை இந்தக் காலத்தில் ஏற்பட்டுள்ளதை உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

இன்று ஆலயங்களில் பூசை செய்பவர்கள் கடமைக்குத்தான் பூசை செய்கின்றனர் என்ற கருத்து சிலரிடம் இருந்து வருகிறது. இதனை மாற்றியமைக்க வேண்டிய தேவை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. முன்னரெல்லாம் ஆலயங்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அர்ச்சனை செய்யும் வழக்கம் இருந்தது. ஆனால் இன்று அப்படியில்லை. ஐந்து பேரென்றாலும் சரி ஐம்பது பேரென்றாலும் சரி ஒரே தடவையில் அலுவல் முடிந்துவிடும். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அர்ச்சனை செய்வது நேர விரயம் எனும் கருத்து இங்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரதான விடயமெனினும் இதுபற்றி கவனத்தில் கொள்வது நல்லது.

தவிர பிராமணர்கள், பூசைசெய்வோர் அதிகமானோர் பணம் சுருட்டும் நோக்கை இலக்காகக் கொண்டே செயற்படுகின்றனர். சமஸ்கிருத மந்திரம் தெரியாத அநேகமானோர் ஐயர் மந்திரம் சொல்கிறாரா தமக்குத் தெரியாத ஏற்றுக்கொள்ளமுடியாத வார்த்தைகளை உச்சரிக்கிறாரா என்ற கருத்து நிலை பொதுவாக அதிகரித்து வருகிறது. இதனை மாற்றியமைக்க மந்திர உச்சாடனங்களை உரிய முறையில் ஓதுதல் மூலம் வழிபடுவர்களது எண்ணங்களை சிந்தனைகளை உண்மையானவையாக மாற்றமுடியும்.

தவிர பூசை செய்பவர்கள் பக்தர்களிடம் பணம் கறக்கும் முயற்சியிலேயே ஈடுபடுகின்றனர் என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது. இந்த நோக்கத்தை இவர்கள் கைவிட்டுவிடல் வேண்டும்.

கோயில்கள் சம்பந்தமான பல வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன. திருவிழா நடைபெறும் நகரை அண்மித்துள்ள கோயில் ஒன்றின் கொடித்தம்பத்தை அங்கு பூசை செய்யும் பிராமணர் ஒருவர் திருடிச் சென்று விட்டார் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றில் வழக்கு ஒன்று நிலுவையில் இருந்து வருகிறது.

இவ்வாறு செயற்படுவதன் மூலம் இவர்கள் பூசை செய்வதற்குத் தகுதியிருக்கிறதா? என்ற கேள்வி சாதாரண மனிதருக்கும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதுதானே. சமயத்தை வளர்க்க, அங்குவரும் பக்தர்களின் நம்பிக்கைக்குரியவர்களாகவே பிராமணர்கள், பூசகர்கள் பார்க்கப்படுவார்கள். பக்தர்களுக்கும் இறைவனுக்கும் தொடர்பாளர்களாக இவர்களே விளங்குகிறார்கள். பக்தர்களும் அதனை இன்றுவரை நிராகரிக்கவில்லை.

திருவிழாக்கள் நடைபெறும் ஆலயங்களில் பிராமணர்களின் பூசை வழிபாடுகள், செயற்பாடுகள் என்பனவே எதிர்காலத்தில் சமயத்தை நெறிப்படுத்த வல்லன. எனவே மந்திரங்கள், கல்வி கற்றவர்களாக சிறந்தவர்களை உருவாக்கி ஆலய பூசைப் பணிக்கு அமர்த்தவேண்டிய பொறுப்பு இந்து குருமார் ஒன்றியம், சமய நிறுவனங்கள், சமயத் திணைக்களங்கள், சைவப்பெரியார்கள் அனைவரையுமே சார்ந்து நிற்கிறது. இவர்கள் எதிர்காலத்திலாவது இதனை மாற்றியமைக்கவேண்டும் என இந்துக்கள் நினைக்கிறார்கள் இதனை நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட இவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

# தீர்வு கிடைப்பது எப்போது...?

சோபியா

பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமாம் என்பது போலத்தான் தற்போதைய ஆடம்பரமான வாழ்க்கை முறை யாழப்பாணச் சமுதாயத்தை மாற்றிக் கொண்டிருக்கிறது. அந்தளவுக்கு வளர்ச்சியடைந்து வரும் நாகரிக மோகமும் தென்னிலங்கையரின் வாழ்க்கை முறைப் பின்பற்றலும் பண வசதிகளும் சமுதாயத்தை மாற்றமடையச் செய்துவிட்டன.

ஆம் யாழ்ப்பாணத்தில் தற்போது சூடு பிடிக்க ஆரம்பித்துள்ள ஒர் விடயம் " சீதனம்" எனும் கைக்கூலி.

" தை பிறந்தால் வழி பிறக்கும்" எனும் தமிழரின் மரபு வழி நம்பிக்கை. தை பிறந்துவிட்டது இனியாவது வழி பிறக்காதா என ஏங்கிக் கொண்டிருக்கும் திருமண வயதுப் பெண்களுக்கு எமனைப் போல் வடம் பிடித்துக் காத்துக் கொண்டிருக்கிறது இந்த சீதனம்.

சீதனம் வேண்டாம் அழகான மணமகள் தேவை என அடிக்கடி தினசரிப் பத்திரிகையில் வரும் விளம்பரங்களைப் பார்க்கும் போது பெண்ணைப் பெற்ற அப்பாக்களுக்கு ஒர் நப்பாசை.

அந்தளவுக்கு எகிறிக்கொண்டு போகும் வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்றாற் போல் பெண்களின் திருமணத்துக்காகப் பேசப்படும் சீதனம் அதிகரிப்பு கொடுக்க முடியாத திண்டாட்டம் பெண்ணைப் பெற்ற அப்பாக்களை யோசிக்க வைக்கிறது.

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு பரம்பரைச் சொத்துக்களை ஈடு வைக்கவும் விற்கவும் வேண்டிய நிர்ப்பந்தத்தில் போகின்றது. இந்த நிலையில் பெண்ணுக்காகப் பேசப்படும் சீதனத் தொகையைக் கொடுப்பதற்கு எங்கு தான் போவது என்ற நிலை ஆகிவிட்டது.

அந்தக் காலத்தில் காதல் திருமணம் அதிகமாகவும், பேசப்படும் திருமணங்கள் குறைவாகவுமே இருந்தன. இதன் போது சீதனம் என்பது பெரிதாகப் பேசப்படுவதும் இல்லை கொடுப்பதும் இல்லை. பெண்ணுக்கென பரம்பரைச் சொத்துக்களில் காணியோ, வீடோ என தீர்மாணிக்கப்பட்ட படி கொடுத்து விட்டு அப்பாட என்று ஒய்ந்து விடுவார்கள்.

இதனால் திருமணம் மிகவும் காதல் கொண்டதாகவும் உறவுகளால் மதிக்கப்படுதவாகவும் தமது வாழ்க்கைச் செலவை எவ்வாறு ஈடு செய்ய முடியும் என்ற அன்றாட வாழ்க்கை முறையுமாகவே இருந்தது.

'இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று' எனும் பாடல் வரிகள் அந்தக் காலத் திருமண வாழ்க்கையும் அதன் மதிப்பையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

இனம், மதம், மொழி இவற்றின் அடிப்படையில் வெறுமனே வாழக்கைக்கு மட்டும் மதிப்புக் கொடுத்து திருமணங்களைப் பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்து வைத்தனர் இந்தத் திருமண உறவுகள் விரும்பப்பட்டதாகவும் சமுதாயத்தில் மதிப்பு கொண்டதாகவும் இருந்தது.

மாறாக காதல் திருமணம் செய்யும் போது உறவுகள் வெறுக்கப்பட்டு சமூகத்தால் ஒதுக்கப்பட்டு தமது காதலை மட்டும் மதிப்புக் கொடுத்து திருமணம் முடிப்போர் வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய பண்பாடுகள் அனைத்தையும் மாற்றி விட்டது. பணம் மட்டும் தான் திருமணம் எவ்வாறு நடந்தது யாரை துணையாகத் தேடிக் கொள்ளப் போகின்றார் என்பதைப் பற்றி சமுதாயத்தில் உள்ளவர்கள் சிந்திப்பது கிடையாது. பெண்ணுக்காக பெண் வீட்டில் எவ்வளவு சீதனம் கொடுத்தார்கள் கொடுக்கப் போகின்றார்கள் என்பது தான் கேள்வியாக இருக்கும்.

சமுதாயத்தின் இத்தகைய ஆடம்பரமான எண்ணங்கள், மாற்றங்கள் பணம் மோகம் அனைத்துமே இந்தளவுக்கு யோசிக்க வைக்கின்றது.

கல்வியறிவில் அதிகம் மிளிரும் யாழ்ப்பாணத்துக்கு இந்த நிலை வேதனைக்குரியது தான்.

வெளிநாட்டு மாப்பிள்ளையை மருமகனாக வீட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என நினைக்கும் ஒவ்வொருவரும் அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுத்தே தான் ஆக வேண்டும். எப்படியும் எனது பிள்ளை வெளிநாடு போய்விடுவாள் என்ற நம்பிக்கை அவர்களை கேட்கும் பணத்தைக் கொடுக்கவைக்கிறது. அதன் வளர்ச்சிதான் இன்றைக்கு யாழ்ப்பாணத்தை [illegible] மாற்றிவிட்டது. [illegible] முறைகள், விழுமி



யங்கள், மதம், மொழி, இனம் என அனைத்தையும் தின்று குடித்து ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறது.

'ஐந்து பெண்ணைப் பெற்றவன் ஆண்டியாவான் என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள் என இப்போது எமது சமுதாய மாற்றத்தைப் பார்க்கும் போது யோசிக்க வைக்கின்றது.

பெண்களின் உரிமைகள் மறுக்கப்படவில்லை என கோசமிடும் சமுதாயம் பெண்ணின் திருமண உரிமையை மட்டும் சங்கிலி போட்டு பூட்டி வைத்துக் கொண்டு மதிக்கப்படுகின்றன என எவ்வாறு கூற முடியும். இன்ரநெற்றில் குறிப்புப் பார்த்துப் பொருத்தம் பார்த்து மணமகள், மணமகன் முகம் பார்த்துப் பேசி முடிந்த பிறகு தரகர் கொண்டு வரும் சீதனத் தொகைப் பட்டியலில் ஐயோ என தலையில் கை வைத்து அப்பாவின் மூச்சை ஒரு தடவை இழுத்து வைத்துக் கொள்ளும்.

ஆண் மகனின் இனம், மதம் அழகு, தொழில் இவற்றின் தராதரத்திற்கு ஏற்ப பெண்களுக்கான சீதனத் தொகை மாப்பிள்ளை வீட்டாரால் பேசப்பட்டு வருகின்றது.

இந்தச் சம்பவம் வேற்று நாடுகளிலோ, வேறு பிரதேசத்திலோ நடப்பதைக் கூறவில்லை எமது யாழ். மண்ணில் தான் இந்த துர்ப்பாக்கிய நிலை ஏழுந்துள்ளது. இந்த சமுதாயத்தின் பிடிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பது பாவம் இந்த அப்பாவிப் பெண்கள் தான்.

திருமணக் கனவுகளும் வீட்டின் சந்தோசமும் சீதனம் எனும் கொடூரப் பிடிக்குள் மாட்டிக் கொண்டு தவிக்கின்றது இதிலிருந்து விடுபட சமுதாயம் தான் முன் வர வேண்டும். மூட நம்பிக்கைகளையும், ஆடம்பரமான வாழ்க்கை முறைகளையும் சற்றுப்புறந்தள்ளிவிட்டு எமது பண்பாடுகளையும் சமுதாய வளர்ச்சி பற்றியும் சிந்திக்க வேண்டும்.

இந்தத் திண்டாட்டத்தில் சிக்கித் தவிக்கும் பெண்கள் இனம், மதம், மொழி கடந்து தனக்கென ஒர் துணையைத் தேடிக் கொள்கிறார்கள். இதனால் எமது தமிழினம் மட்டும் அழிந்து கொண்டு போகவில்லை எமது பிரதேசத்தின் மதிப்புமே பாதிப்படைந்து கொண்டு போகின்றது.

விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொண்டு தனது அடுத்த கட்ட வாழ்க்கையைத் தொடர நினைப்பதும் திருமண வயதுப் பெண்கள் கிடைக்கும் காதல் துணையை தலைவராக ஏற்றுக் கொள்ள நினைப்பதும் உறவுகளாலும் சமூகத்தாலும் வெறுக்கத்தக்க ஒன்றாகி விட்டது. எமது இனப்பரம்பலை சீர்குலைத்துக் கொண்டிருக்கும் கொடிய நோயாக இருக்கும் இந்த சீதனம் பற்றி சமுதாயம் உணர முன் வர வேண்டும்.

பிரதேசத்தின் அபிவிருத்தி வளர்ச்சியடைந்து வருவது மெச்சத்தக்க ஒன்றாக உள்ளபோதும் அடுத்தவரின் சொத்தையும் கண்ணீரையும், வியர்வையையும் வினையாகப் பெறும் இந்தக் கைக்கூலி நிலை பெறாத ஒன்றாகும்.

வேற்று நாடுகளில் பின்பற்றல் எமது பிரதேசத்திலும் துளிர்விட ஆரம்பித்தால் எமது இனத்தையும் மொழியையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு வெறும் பிணத்துடன் மட்டுமே வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம் எனச் சற்றுச் சிந்திக்க வேண்டியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைகளில் உரம் யாழ்ப்பாணத்தில் சாத்தியமாகுமா?

உற்பத்தி செய்யப்படும் அளவுக்கு ஏற்ப தென்பகுதியில் சிறைச்சாலைகள் வருடாந்தம் மூன்று மில்லியன் ரூபா வரை இலாப மீட்டுகின்றது.

இலங்கையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு வகைப் பிரச்சினை தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. அந்தந்தப் பிரதேசங்களது நிலைமைகள், சூழலமைவைப் பொறுத்து சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும் இன்றுவரை தொடர்கின்றன. இவ்வாறு அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள இன்றுவரை தீர்ந்தபாடில்லாத பிரச்சினையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது வீதிக்கு வரும் குப்பை கூளப் பிரச்சினை.

ஒவ்வொரு மாநகர சபையும், நகர சபையும், பிரதேச சபையும் வீதிக்குப்பை கூளங்களை அகற்றும் பணியில் ஈடுபடுகின்றன. சில சபைகள் பொறுப்பின்றி ஏதோ கடமைக்குச் செய்வது போல இன்றுவரை செயற்படுகின்றன.

வீதிக்கு வரும் குப்பை கூளங்கள் வீதிப் பிரச்சினையாக மட்டுமன்றி ஒவ்வொருவரது வீட்டிலிலும் உள்ள பிரச்சினையாகவும் உள்ளன. உரியமுறையில் இவை அகற்றப்படாமல் விடப்படுவதனால் அண்மைக் காலத்தில் டெங்கு, மலேரியா, ஒருவகை வைரஸ் காய்ச்சல் என பல வியாதிகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைக்கு நாம் அனைவரும் தள்ளப்பட்டுள்ளோம். சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் இதனுடன் மோதிக் கொண்டிருக்கின்றனர்.

நகரை பிரதேசங்களை அழகாக வைத்திருக்கவும், தொற்றுநோய் உள்ளிட்ட வியாதிகளிலிருந்தும் அனைவரையும் பாதுகாக்கவுமே குப்பை கூளங்கள் அகற்றப்படுகின்றன. ஆனால் அகற்றப்படும் குப்பை கூளங்கள் என்ன செய்யப்படுகின்றன? ஒவ்வொரு சபைக்கும் உட்பட்ட பகுதியிலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒதுக்குப்புறமாக உள்ள இடங்களில் கொட்டப்படுகின்றன. இது அந்தப் பிரதேசத்தை அண்மித்துள்ள கிராமத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

இவதைத் தடுக்க வழியே இல்லையா? என்ற கேள்விக்கு இங்குள்ள பலரிடமும் விடை இல்லை. ஆனால் இந்தக் கேள்விக்குத் தென்பகுதியிலுள்ள அதிகமான இடங்கள் பதிலளிக்கும் வகையில் செயற்படுகின்றன.

இந்தக் குப்பை கூளங்களைக் கண்டு இங்குள்ள அதிகாரிகள் சீறிச்சினக்கிறார்கள். ஆனால் இதேபோன்ற குப்பை கூளங்களால் கைதிகளைப் பயன்படுத்தி தென் பகுதி அதிகாரிகள் மில்லியன் கணக்கில் வருமான மீட்டுகிறார்கள் என்றால் ஏற்றுக்கொள்ள முடிகிறதா? அதில் எதுவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. அவர்கள் மில்லியன் கணக்கில்தான் வருமானம் ஈட்டுகிறார்கள். அவரவர்களது திறமையிலேயே இது தங்கியுள்ளது.

இந்த நல்ல காரியத்தால் எவ்வளவு பயன் கிடைக்கிறது. இது எத்தகைய சமூகநலன், பொது மக்கள் சார்ந்த நலன் என்பது இங்குள்ளவர்களுக்குத் தெரியுமா? இந்தச் செயற்பாட்டால் குற்றவாளிகளின் எண்ணிக்கையையே குறைக்க முடியும் என்பது எவ்வளவு வரவேற்கத் தக்கதொன்று. தென்பகுதியில் வெற்றிகொள்ளப்பட்ட செயற்பாடாக இது தொடர்கிறது.

அதாவது வீதிகளில் சேரும் குப்பை கூளங்களை மீள் சூழற்சிக்கு உட்படுத்தி பயிற் செய்கைக்கான உரம் தயாரிக்கப்படுகிறது. இன்று குப்பை கூளங்களை பயன்படுத்தி பயிற் செய்கையிலீடுபடுபவர்களை, அருமருந்தாக எங்காவது ஒரிருவரைக் காணமுடிகிறது. ஏனையோர் இரசாயன பசளையின் மேல் மோகம் கொண்டு விட்ட விவசாயிகளாவர். விவசாயிகள் இதனை உணர்ந்து தாமாக அவற்றைத் தவிர்த்துக் கொண்டால் அல்லது குறைத்துக் கொண்டாலேயொழிய இதனை வேறெவராலும் கட்டுப்படுத்த முடியாது.

தென்பகுதியிலுள்ள அதிகமான சிறைச்சாலைகளில் கைதிகள் மூலமாக பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றே குப்பை கூளங்களை மீள் சுழற்சிக்குட்படுத்தி இயற்கைப் பசளை தயாரிக்கும் செயற்பாடு.

குற்றம் புரிந்து சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைக் கூண்டுக்குள் அடைத்துத் தடுத்து வைக்காது வேலை செய்விப்பதற்கென பல ஏக்கர் கணக்கில் உருவாக்கப்பட்டவையே திறந்த வெளிச் சிறைச்சாலைகள்.

இவ்வாறான 13 சிறைச் சாலைகள் இலங்கையில் உள்ளன. யாழ். சிறைச்சாலை இந்தளவு பரப்பளவைக் கொண்டதாக இல்லை. தவிர அது இன்றுவரை தனியார் வீடொன்றிலேயே இயங்கி வருகிறது. அதற்கான புதிய கட்டடத்துக்கான நிர்மாணப்பணிகள் புதிய இடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆனால் குப்பை கூளங்களை மீள் சூழற்சிக்குட்படுத்தி இயற்கைப் பசளை தயாரிக்கும் செயற்பாட்டுக்கு, தென்னிலங்கைச் சிறைச்சாலைகள் போன்று ஏக்கர் கணக்கில் இடம் தேவையில்லை. மரவேலை, சூழல் வேலை, நெற் செய்கை, விவசாயம், மலைநாட்டுப் பகுதியெனில் தேயிலைத்தோட்டம் என்பனவற்றுக்கு ஏக்கர் கணக்கில் இடம்தேவை. அங்கெல்லாம் குப்பை கூளங்களை மீள் சூழற்சிக்குட்படுத்தி இயற்கைப் பசளை தயாரிக்க இரண்டு பரப்புடைய இடமும் தேவையில்லை. சிறிய இடத்திலேயே இது மேற்கொள்ளப்படுகிறது.

தென்பகுதியில் அதிகமான பிரதேசங்களில் சேரும் குப்பை கூளங்கள் அதற்குப் பொறுப்பான சபைகளால் அவற்றுக்கு அண்மித்துள்ள சிறைச்சாலைகளுக்குக் கொண்டு சென்று அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்டப்படுகின்றன.

அவை அந்தப் பணிக்கென நியமிக்கப்பட்டிருக்கும் பயிற்றப்பட்ட கைதிகள் மூலம் குப்பைகளை இரசாயனம் கலந்தவை, இரசாயனம் அற்றவை என இரண்டாகப் பிரிப்பர். அவற்றில் குப்பை தவிர்ந்த பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், தகரங்கள் போன்றவை வேறாக்கப்பட்டுவிடும்.

குப்பைகள் சிறு குவியல்களாக்கப்படும். அதற்கு மூன்று அல்லது நான்கு குழாய்கள் பொருத்தி அவற்றின் மூலமாக தண்ணீர் மற்றும் ஒட்சிசன் உட்செலுத்தப்படும். விரைவாக குப்பைகளை உக்கலடையச் செய்வதற்காக இதனை மேற்கொள்வர். இதன்போது மீள் உற்பத்தியும் நடைபெறும். இவ்வாறு செய்வதன் மூலமாக நான்கு மாதங்களில் அவை மீள் உற்பத்தீ அடைந்துவிடும்.

நான்கு மாதங்களின் பின்னர் உக்கிய குப்பைகளை அதற்கென உள்ள இயந்திரத்தில் போட்டு அரைக்கப்படுகிறது. அது சாதாரணமானதொரு இயந்திரமாகும். அரைத்த பின்னர்அவை சாதாரண மண் போன்று மண்ணிறத்தில் இயற்கை உரமாக - முடிவுப் பொருளாகப் பெறப்படுகிறது. இதற்கு சுமார் நான்கு பேர் போதுமானதாக உள்ளது. சிறைச்சாலைகளில் சூழற்சி முறையில் இதில் பலர் ஈடுபட்டிருப்பர்.

கொலைக்குற்றம் உட்படப் பெரிய குற்றங்களைப் புரிந்தோர் கூண்டுக்குள்ளேயே கம்பி எண்ணிக் கொண்டிருப்பர். சாதாரண சிறைக் கைதிகளே இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர். இரத்தினபுரி குருவிட்ட சிறைச்சாலை, பலாங்கொட, அவிசாவெல எனப் பதின்மூன்றுக்கும் மேற்பட்ட சிறைச்சாலைகளில் இந்தச் செயற்பாடு இடம்பெற்றுவருகிறது.

இவ்வாறு மீள்சூழற்சியான இயற்கை உரத்துக்கு பெரும் கிராக்கி நிலவுகிறது. இவை மூலமாக அதிக விளைச்சலைப் பெறமுடிகின்றமையும் இரசாயனம் முற்று முழுதாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றமையும் இதற்குக் காரணமாகவுள்ளன.

யாழ்ப்பாணத்திலும் கைதிகள் மூலமாக இந்தப் பணி முன்னெடுக்கப்படும் பட்சத்தில் யாழ்.மாவட்டத்தில் குப்பை கூளங்களாலும் டெங்கு, மலேரியா நோய்த் தாக்கங்களாலும் பாதிக்கப்பட வேண்டிய அவசியம் அற்றுப் போய்விடும்.

உற்பத்தி செய்யப்படும் அளவுக்கு ஏற்ப தென் பகுதியில் சிறைச்சாலைகள் வருடாந்தம் மூன்று மில்லியன் ரூபா வரை இலாபமீட்டுகின்றது. அவற்றில் அதிகமான சிறைச்சாலைகள் அந்த வருமானத்தில் அரைவாசித் தொகையை சம்பந்தப்படும் மாநகர, நகர, பிரதேச சபையினருக்கு வழங்கி விடுவர். இதனால் இரண்டு தரப்பினருமே இலாபமடைவார். கைதிகளுக்கு கூலி வழங்கப்படுவதில்லை. அவர்களுக்குகான தண்டனையாகவே இது அமைந்து விடுகின்றன. யாழ்ப்பாணத்தில் இந்தப் பணி முன்னெடுக்கப்படும் பட்சத்தில் இலாபமே தவிர தீமை எவருக்கும் ஏற்படப் போவதில்லை. ✸

**நிரோஜன்**

---



# மீன் விநியோகமா? மின்




மின் விற்பனைக்கான சந்தைக் கட்டடம் ஒன்றில் மின் விநியோக நிலையத்தை வைத்திருப்பது கஷ்டமான ஒன்றுதான். நெடுந்தீவில் மீன் சந்தைக்கென சுமார் 35 ஆண்டு களுக்கு முன் அமைக்கப்பட்ட சிறிய கட்டடத்தில் தற்போது மின் விநியோக நிலையம் அமைந்துள்ளது.

அடிப்படை வசதிகளற்ற இந்தக் கட்டடத்தால் மின்சாரசபை ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கிணறு, குடிதண்ணீர் வசதிகள் தங்கிக் கொள்வதற்குத் தகுதியான இடங்கள், மலசல கூட வசதிகள் எதுவுமற்ற நிலையில் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தக் கட்டடத்தில் தற்போது உள்ள பெரிய இயந்திரங்கள் மட்டுமே வைக்கக் கூடியதாக உள்ளது. மேற்கொண்டு மின்சார விநியோகத்துக்கான அத்தியாவசிய பாகங்களை, எரிபொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடிய வசதிகள் இல்லை. டீசல் பரல்கள் கட்டடத்தின் முன்பாகவுள்ள முற்றத்தில் கிடக்கின்றன. ஒரு பெரிய இயந்திரத்தின் ஒரு பகுதி இதற்கெனப் போடப்பட்ட கொட்டகையில் அரைப்பாகமும் மிகுதி அரைப்பாகம் வெயில், மழை, பனி போன்ற இயற்கையின் கொடுப்பனவுகளைப் பெற்ற வண்ணமும் காணப்படுகின்றது.

இந்தச் சிறிய மீன் சந்தைக் கட்டடத்தில் மின் இயந்திரங்களுடன் மேலும் சில பொருள்களை வைத்தும் தாங்களும் ஒருபொருளாகி முடங்கிக் கிடக்கிறார்கள் மின்சாரசபை ஊழியர்கள். இத்தனை கஷ்டங்கள் போதாதென்று ஊழியர்களுக்கு மேலும் கஷ்டத்தைக் கொடுக்கும் பொருட்டு நுளம்பு உற்பத்தி மையம் ஒன்றும் இந்தக் கட்டடத்தின் பின்புறத்தில் காணப்படுகின்றது.

பிற்பகுதியில் உள்ள குளம் அதற்குள் காணப்படும் குப்பைகள் சுற்றாடலில் உள்ள மக்களைத் தவிர ஏனையோருக்குத் தெரிவதில்லை. சுகாதாரப் பிரிவுக்கும் அது [illegible] சிரமதானம் என்றெல்லாம் பிரசாரங்கள் பெரிய அளவில் இடம்பெறுமளவுக்கு செயற் பாடுகள் இல்லையோ என எண்ணத் தோன்றுகின்றது. மின்விநியோக நிலையத்துக்கெனத் தகுதி வாய்ந்த ஊழியர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய வசதிகள் கொண்ட கட்டடம் அமைக்கப்பட வேண்டும். தமக்கு மின்சாரம் கிடைத்தால் போதும் என்ற நிலையில் மட்டும் நுகர்வோர் தங்கியிருந்தால் நெடுந்தீவுக்கான மின்சார சேவை முழுமை பெற்றதாகிவிடாது. வசதி மிக்க புதிய மின் நிலையத்தை அமைப்பது தொடர்பாகவும் அவர்களது கோரிக்கைகள் அமைய வேண்டும். நெடுந்தீவைப் பொறுத்தவரை இந்தப் பகுதியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. ஜனாதிபதியும் விசேட கவனம் செலுத்துவதாகக் கூறப்படுகின்றது. மக்களும் பிரதேசத்தின் முக்கிய தேவைகளில் கவனம் செலுத்துவது அவசியம். ★

**லக்ஸ்மன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி என்ற முத்திரை குத்துவதே நோக்கம்

6

## உணர்வுகளை இறக்கிவைத்த நேரம்

மக்கள் நிறைய வந்துகொண்டே இருந்ததால் மலசலகூடப் பிரச்சினை அடுத்த பிரச்சனை ஆகிவிட்டது. அவ்வளவு பேரும் எங்குதான் போறது. நாங்கள் ஓர் இடத்தில கொஞ்சப்பேர் தங்கியிருந்தோம். பதினைந்து குடும்பங்கள் வரை இருக்கும் என நினைக்கிறேன். எங்களுக்காக ஒரு ரென்ற் அமைத்து அதில் சின்ன பிள்ளைகளைத் தூங்க வைத்தோம். நாங்கள் வெளியில் தான் படுத்துக்கொண்டோம்.

ஆண்கள் எப்படியோ ஒரு மறைவைத் தேடி மலசலம் கழித்து வந்துவிடுவோம் பாவம் பெண்கள். எனவே வீட்டுக்கு பக்கத்திலே ஒரு கிடங்கு வெட்டி நாங்கள் தற்காலிகமாக - எல்லாமே தற்காலிகமாக இருந்திச்சு உயிர் உட்பட. பெண்களுக்கு மறைவான இடமொன்றை ஏற்படுத்தினோம். நாங்கள் கனநாளெல்லாம் அங்கு இருக்கவில்லை அதிகபட்சம் பதினைந்து நாள்கள் இருந்திருப்போம். பிறகு மீண்டும் அள்ளிக்கொண்டு புறப்பட்டோம் இன்னோரிடம்.

இப்படியே நகர்ந்து கொண்டிருக்கையில் கடைசியில் முள்ளிவாய்க்கால் பகுதிக்குள் ஒடுக்கப்பட்டோம். ஓரங்கப்படுத்தப்பட்டோம். எங்கள் உயிரை எப்படி பாதுகாப்பது என்ற அச்சம் அதிகரித்தது. பிழைக்க முடியும் என்ற நம்பிக்கை சுத்தமாக குறைந்து கொண்டே வந்தது. முன்னமே சொன்னதுபோல ஜெபமாலையும் திருஇருதய ஆண்டவர் ஜெப புத்தகமும் தான் எப்போதும் உறுதுணையாக இருந்தன.

சிதைந்த முகங்களினூடாக ஓடிவந்த நாங்கள் ஒரு இடத்தில் மூன்று நாள் பங்கருக்குள்ளேயே இருந்தோம். நான் எனது மனைவி என் மகள் மற்றும் இன்னும் இருவர் எல்லோரும் இருந்தோம். இதய துடிப்பின் சத்தம் எப்படி இருக்கும் என்பதெல்லாம் அப்போது தான் தெரிந்தது. கண்கள் அவ்வப்போது எம்மை மறைத்திருந்த தட்டி வழியே எட்டி பார்த்தப்படி இருந்தது. மூன்று வேளை சாப்பாடெல்லாம் நினைக்க முடியாத ஒன்றாயிற்று. எப்போது பசிக்கும் என்றெல்லாம் அப்போது தெரியவில்லை.

நான்தான் மெதுவாக வெளியே ஊர்ந்து வந்து வானத்தில் ஒரு கண்ணும் பாத்திரத்தில் மறு கண்ணுமாக பங்கர் மறைவிலேயே சமையல் செய்தேன். தூரத்தில் விமானச் சத்தம் கேட்டால் கூட காதருகே வந்து விட்டதோ என்று பயந்து மீண்டும் பங்கருக்குள் ஓடியிருக்கின்றேன். எப்படியோ ஒரு வழியாக ஒரு மத்தியான சாப்பாடு மட்டும் சமைத்து அனைவருக்கும் கொஞ்சம் கொடுத்தேன்.

நாங்க உள்ள இருந்த மூன்று நாள்களும் ஒரே ஷெல்லடியாகவே இருந்தது. இன்று படபடக்கும் தகர ஓசைகள் கூட ஷெல்லின் சத்தங்கள் என தரையில் விழுந்திருக்கிறேன். அவ்வளவு அச்சத்தை தந்துவிட்டு மனதில் தைரியத்தை மடியச்செய்தவைகள் அவை. சில ஷெல்கள் ஓசையில்லாமல் வந்து விழும். ஐந்து இஞ்ச் ஷெல் என்று சொல்வார்கள். எப்போது எப்படி எங்கிருந்து வரும் என்றெல்லாம் தெரியாது. யார் அடிக்கிறார்கள். எங்கிருந்து அடிக்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் திடீரென எழும் அழுகுரல், சிங்களவன் நிகழ்த்திய கொலைவெறி ஆட்டத்தை சுட்டும்.

பாதர்,.ஷெல்லும் கொத்து குண்டுகளும் பலகுழல் எறிகணைகளும் நிறைய பயம் என்பதே தேசிய மொழியாக்கிக் கொண்ட சமூகமாக்கப்பட்ட நாங்கள் அதிகமாக பயந்தது பல்குழல் எறிகணைக்குத்தான். இடியும் மின்னலும் ஒன்றுசேர மேகம் தமது சிறு வாட்டக் காசை கொட்டிவிட்டு கரும் பூதமாக நிற்பதுபோல ஒரே விசையில் எண்ணற்ற குண்டுகளை கொட்டிவிட்டு இரத்தமும் சதையுமாக மக்கள் பய்த்தெறியப்படுவதை கல்நெஞ்சத்துடன் பார்த்து முறுவலிப்பார்கள்.

கடைசியாக ஜனங்கள் பூராவும் கடல் ஓரத்திற்கு தள்ளப்பட்டோம். தண்ணீரும் கடல் நீரும் உப்புகரிக்கின்ற நிலையில் எமது துயரம் கடலுக்குத் தெரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றெல்லாம் சில நேரங்களில் எங்கள் விரக்தியினூடே பேசியிருக்கின்றோம். கடல் வழியே தப்பிக்க முடியுமா என்று பலர் வழிதேட ஆரம்பித்தார்கள். நாங்களும் முயற்சி செய்தோம். கடல் வழியாக இந்தியா போய்விடலாமா என்று பலவாறு முயற்சி செய்தோம். சந்தர்ப்பவாதிகள் தலைமை யேற்று நடத்தும் நாட்டுக்குள் நுழைய கடைசிவரை எங்களுக்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

சண்டை இறுக்கமாக நடைபெற்ற இறுதி நேரம் நாங்கள் எங்கும் நகர முடியவில்லை. இயக்கமும் பின்வாங்க ஆரம்பித்தால் சரணடைவதைத்தவிர வேறுவழி தெரியவில்லை. எவருடைய கைக்குள் சிக்கிவிடக் கூடாதென்று நினைத்தோமோ அவர்களிடமே சரணடைய வந்தோம்.

நாங்கள் சரணடைய வரும் போது பார்த்த ஒரு துயர சம்பவம். மறைந்து கொள்ள பங்கருக்குள் ஒரு குடும்பம் நுழைந்திருக்கிறது. எப்போது நுழைந்தது என்றெல்லாம் தெரியாது. பட்டினியாக வந்து அமர்ந்தார்களா அல்லது உணவெல்லாம் வைத்திருந்தார்களா என்று தெரியாது. யாரும் காயம் பட்டிருந்தார்களா கால்களை இழந்திருந்தார்களா என்றெல்லாம் அறிய வாய்ப்பில்லை. ஆனால் எப்போதோ அந்த பங்கர் மீது விழுந்த குண்டுக்கு இரையாகி அப்படியே செத்துகிடந்தார்கள் குடும்பத்தில் அத்தனைபேரும். யாராலும் போய் அடக்கம் செய்ய முடியாத சூழலில் மண்ணோடு மண்ணாக உரமாகி இனிவரும் இளைஞர்களுக்கு ஆங்கார சுதியாக கிடந் தார்கள். பங்கர்தான் எங்கள் உயிர் நிறுத்தும் தொப்புள்கொடியானது. சிலருக்கு அதுவே கல்லறையுமானது.

தான் வருகிற போது கண்ட காட்சிகளைப் பற்றி பேசியவர் இடையிடையே நிறுத்தி கண்களை துடைத்து கொண்டும் மூக்கு சிந்திக் கொண்டும் பேசினார். தடுமாற்றமே பேச்சில் நிலை கொண்டது. உணர்வுகளை அதிகமாகி விடக்கூடாதென்ற உள்ளுணர்வில் நான் செவிமடுக்க மட்டுமே செய்தேன்.

பாதர் நாங்க, தலையில்லாத உடல்களைப் பார்த்தேன். தலை பிளவுண்ட உடல்களும் கிடந்தது. குடல் வெளிவந்த மனிதர்களைப் பார்த்தோம் பனைமரத்துடன் செத்துக்கிடந்தவர்கள், நடை பாதையில் கிடந்தவர்கள், மரங்களுக்குள் மடிந்து கிடந்தவர்கள், அடையாளம் காணமுடியாத உருவங்கள் என பல கொடூரத்தைப் பார்த்தோம்.

வடிவாக உடுப்பு உடுத்திய எம் குல பெண்களின் ஆடைகள் எரிந்து அவர்கள் நிர்வாண பணமாக கிடந்ததை கண்டோம். யுவதிகளின் இளமைக்கனவு சிதைந்து கிடப்பதையும் சிதைவுக்குள் புதைந்து கிடப்பதையும் கண்டோம். துணி எடுத்து மூடக்கூட முடியாத எத்தனையோ பேர் நிர்வாணமாக இரத்தமே போர்வையாக கிடந்தார்கள். கால் நைந்தவர்கள் நடக்கமுடியாமல் கிடந்தார்கள் அதற்கு மேல் சொல்ல முடியாமல் படபடப்புடன் அழுதுகொண்டே இருந்தார்.

எங்களோடு கைகள் அறுந்த நிலையில் நடந்து வந்தார்கள், உதடு கிழிந்தவர்கள் வந்தார்கள், விழி பாதிக்கப்பட்டவர்கள் வந்தார்கள், முகத்தில் காயப்பட்ட குழந்தைகள் சின்ன சின்ன சத்தத்துக்கும் அஞ்சும் மனமுடையோர் இருந்தார்கள். உடல் முழுக்க இரத்தம் பிசுபிசுத்த உடல்கள் இரத்தக் கறை உறைந்த தேகங்களுடன் பலர் கணவரை இழந்து பொட்டல் வெளியில் பொட்டிழந்த பூவையர் என்று கணக்கற்றோர் உடல் நடந்தார்கள். மிரண்ட விழிகளுடன் உடன் வந்தார்கள். அடக்கு முறையின் இரும்பு கால்களால் நசுக்கப்படும் மக்கள் ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல் வேதனைப் படும் நிலை உருவாகின்றது. அந்தக் கட்டம் தான் இப்போது நேர்ந்து உள்ளது என்று ஒரு முறை மாட்டின் லூதர் கிங் உரைத்தது இன்று எமக்கு நிகழ்ந்துள்ளது என்ற உணர்வுடன் எல்லோருடனும் 2009, 5ஆம் மாசம் 11 ஆம் திகதி சிங்களவனிடம் சரணடைந்தோம்.

என்னைப் போல நம்பிக்கை நசிந்த பிறகு சரணடைந்த பலர் அங்கிருந்தார்கள். யாருடைய முகத்திலும் ஒளி இல்லை. ஓடித்திரிந்த கால்கள் அன்றுதான் வாடி வதங்கி அமர்ந்திருந்தது. எங்களுக்குள் எந்த சலனமும் இல்லை. திடீரென நான் [illegible] வந்து முன்னால் [illegible] நின்ற வீரர்கள் பருவ வயதினர்தான் என்பது அரும்பு மீசையே காட்டிக்கொடுத்தது. பட்டினியாக பரிதவிப்புடன் வந்தவர்கள் மீது கிஞ்சித்தும் அவர்களுக்கு அக்கறை இருக்கவில்லை. எத்தனுக்கு எத்தன் உலகில் உண்டு என்று அறியும் படிப்பறிவோ பட்டறிவோ அதிகம் இருக்க வாய்ப்பில்லாத அவர்கள் விசாரிக்க ஆரம்பத்தார்கள்.

காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்பார்கள். அங்கு நின்ற அனைவருக்கும் தமிழர்கள் அனைவரும் புலிகளாகவே தெரிந்தார்கள். ஒவ்வொருவரின் பூர்வீகம் என்ன என்பதையும் என்ன தொழில் புரிந்தனர், எங்கிருந்தனர் என்பதையும் கேட்டு குறித்துக் கொண்டனர்.

அவர்களது வினாக்கள் எல் லாமே எப்படியாவது நாங்கள் எங்களை புலி என்று அறிவிக்க வேண்டும் அல்லது அவர்கள் எங்களை புலியாக இனங்காண வேண்டும் என்பதில்தான் இருந்தது. பலர் பயத்தில் வார்த்தைகள் வராமல் சிங்களவனின் சூழ்ச்சி மிகுந்த வார்த்தைக்கு ஆம் என்று சொல்லி மாட்டிக்கொண்டார்கள். பலர் தாங்கள் பொது மக்களே என்பதை திரும்பித் திரும்பி சொல்லி அவர்களின் ஒப்புதல் பெற்றார்கள்.

என்னைப் போலவே பலர் உண்மையையே சொன்னோம். நான் இயக்கம் செயற்பட்ட காலத்தில் வன்னியில் அவர்களுக்கான கடை ஒன்றில் வேலை செய்ததையும் அதற்கு மேல் எனக்கும் போராட்டத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதையும் தெரிவித்தேன். தலைக்கு மேலே வெள்ளம் போன பிறகு சாண் என்ன முழம் என்ன என்ற நினைப்பு எனக்கு. அவர்களுக்கு முதலில் நம்பிக்கை இல்லை. பனைமரத்தின் கீழிருந்து பால் குடித்தாலும் பார்ப்பவர்கள் கள் என்று சொல்வார்களே அது போலவே நான் என்ன தான் சொன்னாலும் அவர்கள் நம்புவதாக இல்லை. புலிகளுள் ஒருவனாக நினைத்தே என்னை விசாரித்தார்கள்.

அஞ்சா நெஞ்சர்கள் நாங்கள் என்று முரசு கொட்டியவர்கள் புலி படத்தை பார்த்தாலே புலி என்ற பெயரை கேட்டாலே பயந்து, பயத்தை கோபமாக வெளிக்காட்டியதைக் கண்டு வியந்து நின்றேன். ஒரு வழியாக என்னை விசாரித்து முடிவில் நான் சொன்னதை நம்பினார்கள். தடுப்பு முகாமிற்கு என்னை அனுப்பினார்கள். மனைவி மற்றும் பிள்ளைகளை வேறு முகாமிற்கு அனுப்பினார்கள்.

தடுப்பு முகாமில் நான் அடைக்கப்பட்டேன். ஐந்து ஏக்கர் சுற்றளவு உள்ள முகாம் அது. நான் இருந்த முகாம் போலவே வெலிக்கந்தை திரிகோணமடு, சேனபுரம் போன்ற பகுதிகளிலும் தடுப்பு முகாம்கள் இருந்தன. என்னோடு மட்டுமே 450 பேர் இருந்தார்கள். இயக்கத்தில் இருந்தவர்கள் மட்டுமல்ல இயக்க தொடர்பு உடையவர்கள் என்று அவர்கள் சந்தேகித்தவர்கள் அனைவருமே தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தோம். வதைக்கப்பட்டோம்.

போராட்டம் தொடங்கிய ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை இயக்கத்தில் இருந்தவர்கள், இயக்க தொடர்பு உடையவர்கள், பதினாறு பதினேழு வருசத்திற்கு முன்பே இயக்கத்தை விட்டு விலகியவர்கள், என் நான்கு ஐந்து நாள்கள் இரண்டு நாள்கள் இருந்தவர்களெல்லாம் அங்கிருந்தோம். குறிப்பாக கடைசி காலத்தில் இயக்கத்தில் இருந்தவர்கள், அவர்களுக்கு மனிதாபமான அடிப்படையில் உதவி செய்தவர்கள், சாப்பாடு கொடுத்தவர்கள் எல்லோரையும் அங்கு வைத்திருந்தார்கள். சிலரை வேறு வேறு முகாமிற்கு மாற்றியபடி இருந்தார்கள்.

[illegible] எல்லாவற்றையும் உணர்[illegible] புரட்சிக்காரன் வெறுப்பினால் உந்தப்படுவதில்லை. அன்பினால்தான் என்ற சேகுவேராவின் வார்த்தையை உள்வாங்கிய தமிழீழ வீரர்கள் சிலரை வேறு இடங்களுக்குக் கொண்டு சென்று அடித்துநொறுக்கி விட்டார்கள். அதில் ஒரு சிலர் மீண்டும் திரும்பி வரவே இல்லை. வந்தவர்களும் தேக ஆரோக்கியத் துடன் மீண்டு எழவே இல்லை. எத்துன்பம் வந் தாலும் தமிழர்களை நேசித்தே சிறையி லும் பேசிய வீரர்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்று சொல்லும்போதே, ஒடுக்கப்பட்ட வர்களின் உரிமைப் போராட்டம் என்பது, தீச் சுழல்க ளைப் கடப்பதுதான் என்ற ஒடுக்கப் படுபவர்க ளுக்காக் ஓயாது குரல்கொடுத்து வரும் வைக்கோவின் வார்த்தைகள்தான் ஞாபகத்திற்கு வந்தது.

யார் யார் என்னென்ன வேலைகள் செய்தார்கள் என்ற விவரம் தாங்கிய பட்டியலை வைத்துக்கொண்டு ஒவ்வொருவராக எப்போதாவது மட்டும் விசாரித்தார்கள். நிதித்துறை மற்றும் புலனாய்வு துறையில் பணியாற்றியவர்களை அதிக கவனம் செலுத்தி பலமுறை விசாரித்தார்கள். தொடர் விசாரணை நடத்தினார்கள். திருப்தியாக பதில் கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் பூசாவில் உள்ள சிறைச்சாலைக்கு கொண்டுபோய் அடைத்தார்கள்.

**- அருட்தந்தை சூ.ம.ஜெயசீலன்**

தவறு செய்யாதவர்களைக்கூட தலைமைக்கு கணக்கு காட்ட வேண்டும் என்பதற்காக சிறைச்சாலையில் அடைத்திருந்தார்கள். ஏழை சொல் அம்பலத்தில் ஏறாது என்பது போல இவர்கள் என்னதான் கூறினாலும் அதெல்லாம் எடுபடவே இல்லை, என்று கூறி சற்று நேரம் பேச்சை நிறுத்தினார்.

சுற்றுமுன் என்னிடம் வந்து பேசிச் சென்ற தாய் ஒருவரின் அழுகுரல் எனது நினைவுக்கு வந்தது. பேச ஆரம்பித்த உடனேயே அழ ஆரம்பித்து விட்டார். 2006ஆம் ஆண்டு என் மகன் விரும்பி நாட்டின் விடுதலைக்காக இயக்கத்தில் சேர்ந்தார் பாதர். கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. அதைப் பற்றிய உணர்வே இல்லாது தடுமாறி தடுமாறி பேச முயற்சி செய்து கொண்டிருந்தார். அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை. சுற்றிலும் பார்த்து கொண்டவர் இரகசியம் பேசுவதுபோல கிசுகிசுத்து என்னிடம் பேச ஆரம்பித்தார்.

எப்போதாவது தான் கடிதம் எழுதுவான். எங்களைப்பற்றி கவலைப்படாதீங்கம்மா அண்ணன் எங்களை எந்த குறையும் இல்லாமல் பார்த்து கொள்கிறார் என்றெல்லாம் எழுதுவான். அடுத்த கடிதம் வருவதற்கு ஒரு மாதமோ இரண்டு மாதமோகூட ஆகும்.

அதுவரை அந்த கடிதங்கள்தான் என் மகனின் நிழல்படங்கள் போல எனக்கு இருந்தன. ஏன் இன்றுவரையும் அதுதான் அவன் எங்களுக்கு குடும்பத்திற்கென்று சேர்த்து வைத்த சொத்துபோல இருக்கிறது. வார்த்தையோடு குரலும் கம்மியது.

சண்டை தீவிரம் ஆனவுடன் என் மகன் தாக்குப் பிடிக்க முடியாமல் சரண்டர் ஆகிட்டான். சரண்டர் ஆனவனை விசாரித்து விடுதலை செய்வாங்களென்று நாங்கள் எல்லோரும் காத்திருந்தோம்.


ஆனால் அவனை அடி அடி என்று அடித்து பூசாவிலே போட்டி ருந்தார்கள். பெத்த வயிறு தவியா தவிக்குது. சிங்கள பயக போய் பார்க்கக்கூட விடமாட்டேங்கிறாங்கள். என்னென்னமோ காரணமெல்லாம் சொல்லி வழக்கு போட்டிருக்கிறாங்களாம். அங்க போகணுமென்றாகூட நிறைய செலவு செய்யவேணும் பாதர் எங்களுக்காக நன்றாக மன்றாடுங்க பாதர் என்று சொல்லி விட்டு எமக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய வயதில் தேம்பித் தேம்பி அழுதபடி அந்தத்தாய் சென்றது விழித்திரையில் வந்து வந்து விழுந்தது.

*(சந்திப்போம்...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்கு வழிகோலுமா இந்தியாவின் அழைப்பு?

அதிரன்



இந்திய அரசின் விசேட அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த மாதம் முற்பகுதியில் இந்தியா பயணமாகிறது. அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான தீர்வு குறித்த பேச்சுக்கள் தற்போது தடைப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்கும் நிலையில் இந்திய அரசு கூட்டமைப்பைப் புதுடில்லிக்கு அழைத்திருக்கிறது. இந்தியா செல்லும் கூட்டமைப்பின் குழுவினர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்துப் பேசுவதற்கான ஒழுங்குகளை இந்திய வெளிவிவகார அமைச்சு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்வாரம் இலங்கை வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உட்பட பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்துக் கலந்துரையாடியிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது அமைச்சர் கிருஷ்ணா சில விடயங்கள் தொடர்பாக அவர்களுடன் மனம் விட்டுப் பேசியிருக்கிறார். பேச்சுக்களின் போது ஏற்பட்டுள்ள தடங்கல்கள், தீர்வுக்கான வழிமுறைகள் ஆகிய தொடர்பாக அவர் கேட்டறிந்ததுடன் ஜனாதிபதி மஹிந்தவின் தெரிவுக்குழு யோசனை தொடர்பாகக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் தீர்க்கமாக வினவினார். இந்தச் சந்திப்பின்போது இந்தியத் தரப்பிடம் சில விடயங்களை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உறுதிபட எடுத்துக்கூறியதாகத் தெரியவருகிறது. இந்தச் சந்திப்பை அடுத்தே கூட்டமைப்பினர் அவசர அவசரமாக அடுத்த மாதம் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சின்போது பல முக்கிய விடயங்களை அது இந்தியத் தரப்பிடம் சுட்டிக்காட்டியது. அரசுடனான இந்தப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இந்தியாதான் காரணகர்த்தாவாக இருந்தது. ஆகவே இந்தப் பேச்சு சரியான தடத்தில் செல்லவேண்டுமாயின் அதற்கு இந்தியா தனது காத்திரமான பங்களிப்பை வழங்கவேண்டும் - அதிக அக்கறை காட்டிச் செயற்படவேண்டும். இலங்கை அரசு உணரக்கூடிய வகையில் இந்தியாவின் அழுத்தம் இருந்தால்தான் கொழும்பு ஆட்சியாளர்கள் தீர்வு ஒன்றைக் காண இணங்கி வருவார்கள். இல்லாவிட்டால் இந்தப் பேச்சால் எதுவித பலனும் இல்லை என்று இந்தியாவிடம் தெரிவித்துவிட்டது கூட்டமைப்பு. பேச்சின்போது அரச தரப்பினால் ஏற்படுத்தப்பட்டுவரும் இழுத்தடிப்புக்கள், முரண்பட்ட கருத்து வெளிப்பாடுகள் என்பன பேச்சின் எதிர்காலப் போக்கை கேள்விக்குள்ளாக்கும் எனவும், கூட்டமைப்பை இவ்வாறான செயற்பாடுகள் சினம் கொள்ளச் செய்கின்றன எனவும் இந்தச் சந்திப்பில் சம்பந்தன் கிருஷ்ணாவிடம் கொஞ்சம் காரசாரமாகத் தெரிவித்திருக்கிறார். இலங்கை அரசு இவ்வாறான நிலைகளிலிருந்து விடுபட்டு அர்த்தமுள்ள பேச்சுக்களில் ஈடுபட இந்தியாவின் அழுத்தம் ஒன்றே சரியான வழி என்பதையும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பேச்சின்போது காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு அரச தரப்பு மேற்கொண்டுவரும் அசமந்தம் தம்மை வெறுப்படையச்செய்வதாகவும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி உட்பட அரச தரப்பு அரசியல்வாதிகள் தெரிவித்துவரும் முரண்பட்ட-விரும்பத்தகாத கருத்து வெளிப்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும் எனவும் சம்பந்தன் கிருஷ்ணாவிடம் கேட்டுக்கொண்டார். இந்தச் சந்திப்பின்போது பதிலுக்குக் கிருஷ்ணாவும் சில விடயங்களைக் கூட்டமைப்பிடம் உறுதிபடக் கூறியுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகிறது. அதாவது கூட்டமைப்புடன் மேற்கொள்ளப்படும் பேச்சின் மூலமே ஓர் உறுதியான-நீதியான-தமிழர்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு ஏற்படும் என்பதை இந்தியா ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது. அதனையே அது விரும்புகிறது. ஆகவே பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் பங்குபற்றவேண்டும். அதனை முறித்துக்கொள்ளக் கூடாது. அரச தரப்பில் இருந்து ஏற்படுத்தப்படும் பிரச்சினைகள் தொடர்பாக இந்தியா கவனித்துக்கொள்ளும். அரச தரப்புடனான சந்திப்பின்போது பேச்சுத் தொடர்பில் உரிய அறிவுறுத்தல்களை அவர்களுக்கு வழங்குவேன் என்றும் கிருஷ்ணா கூட்டமைப்பிடம் தெரிவித்திருக்கிறார். பேச்சு மூலம் தீர்வு காண்பதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் இந்தியா செய்யும் என்றும் அவர் உறுதியளித்திருக்கிறார்.

இந்தப் பேச்சின் பின்னரே இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறது. அங்குச் செல்லும் கூட்டமைப்புக் குழுவுக்கு சம்பந்தன் தலைமை வகிக்கிறார். வழமையாக இந்தியப் பயணத்தின்போது இந்திய உள்ளூர்த் தலைவர்களைச் சந்தித்துப் பேசும் கூட்டமைப்பு இம்முறை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்திக்கவுள்ளது. இதற்கான ஏற்பாட்டை இந்திய வெளிவிவகார அமைச்சரே மேற்கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இலங்கை அரசுடனான பேச்சின் தற்போதைய நிலை, தமிழர்கள் விரும்பும் அரசியல் தீர்வு, வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்படும் பிரச்சினைகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் நேரடியாகக் கேட்டறிவார் என நம்பப்படுகிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியாவுக்கு அழைத்துள்ளதன் மூலம் இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா தற்போது ஒரு காத்திரமான பங்களிப்பை வழங்கத்தொடங்கிவிட்டதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அல்லது வழமைபோலவே தனது நலன்களில் அக்கறை கொண்டு - தமிழர்கள் தன்மீது கொண்டுள்ள ஆத்திரத்தை அடக்கிவிடுவதற்கு இந்த முயற்சிகளை மேற்கொள்கிறதா என்றும் கிசுகிசுக்கள் கிளம்பாமல் இல்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடக்கிறது. அந்தக் கூட்டத் தொடரில் இலங்கை அரசு மீது சரமாரியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் என்றெல்லாம் தற்போது கருத்துக்கள் வெளியாகிவருகின்றன. இந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பிக்கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவதில் இலங்கை அரசு இப்போது தீவிரமாக இறங்கியுள்ளது. அதற்காகத்தான் கூட்டமைப்புடனான பேச்சின்போது காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றியும் பேசுவதற்குத் தயார் எனத் தெரிவித்துள்ளது. இதன்மூலம் அரசில் தீர்வில் அரசு அதிக நாட்டம் கொண்டு செயற்படுகிறது என்பதைச் சர்வதேசத்துக்குக் காட்ட அது முயன்று வருகின்றது. இந்த அரசியல் நாடகத்துக்காகத்தான் கூட்டமைப்புடனான பேச்சையும் அது பயன்படுத்துகிறது. ஆயினும் அரசின் இந்த இரட்டைவேடப் போக்கு இந்தியாவுக்குத் தெரியாத ஒன்றல்ல. இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா இலங்கையில் இருந்தவேளை கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் மூன்று தினங்கள் நடைபெறும் என ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்தப் பேச்சுக்கள் இடம்பெறவில்லை. அதற்கு அரச தரப்பு காரணம் எதையும் அறிவிக்கவில்லை. கிருஷ்ணா இலங்கையில் இருந்த நேரத்திலேயே இப்படி பூச்சாண்டி காட்டிய அரசு பேச்சில் தொடர்ந்தும் நம்பிக்கையுடனும் இதய சுத்தியுடனும் கலந்து கொள்ளும் என்பதை எப்படி ஏற்றுக்கொள்வது என்றும் கூட்டமைக்குள் இருந்து கருத்துக்கள் எழாமல் இல்லை.

ஜனாதிபதி மஹிந்த 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வை வழங்கத் தயாராக உள்ளதாக தன்னிடம் கூறியதாக அமைச்சர் கிருஷ்ணா ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டிருந்தார். கூட்டமைப்புடனான பேச்சு மற்றும் தெரிவுக்குழு ஆகியவற்றின் ஊடாக அரசியல் தீர்வு எட்டப்படும் என இந்தியா நம்புவதாகவும் அவர் மேலும் கூறியிருந்தார். ஆயினும் கிருஷ்ணா இலங்கையில் இருந்து திரும்பிய மறுகணமே இங்கு 13 பிளஸ் என்ற விடயம் பெரும் சர்ச்சையை தோற்றுவித்திருக்கிறது. ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லத் தயார் என இந்தியாவிடம் கூறியிருந்தால் அதை எமக்கு உடனடியாக வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறான ஒரு தீர்வுக்கு நாம் ஆதரவளிக்கமாட்டோம் என்று ஹெலஉறுமய போர்க்கொடி தூக்கியுள்ளது. அதேநேரத் தில் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கான கபட நாடகமே 13 பிளஸ் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. தீர்வு குறித்து தெரிவிக்க வேண்டியது ஜனாதிபதியே தவிர கிருஷ்ணா அல்லர் என்று ஜே.வி.பி. தெரிவித்திருக்கிறது. அரசியல் கட்சிகளில் இந்த கருத்துக்கள் ஜனாதிபதியை இப்போது பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கின்றன. இதனையடுத்து அவரும் கிருஷ்ணாவின் சந்திப்புப் பற்றி இப்போது புதுக்கதை விட்டிருக்கிறார். தீர்வின் போது பொலிஸ் அதிகாரங்களை வழங்க மாட்டோம் என தான் கிருஷ்ணாவிடம் ஏற்கனவே கூறிவிட்டதாக ஜனாதிபதி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரியவிடம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு 13 பிளஸுக்குத் தயார் என ஜனாதிபதி கூறிய மறுகணமே இலங்கை அரசியலில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று எப்படி அவர் தீர்வை வழங்கப் போகிறார் என்பது கேள்விக்குறிதான்.

எவ்வாறாயினும் இந்தியாவின் அழுத்தம் இலங்கைக்கு ஏதோ ஒருவகையில் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது உண்மை. கிருஷ்ணாவை யாழ்ப்பாணத்தில் சந்தித்த யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார்.

அரசு- கூட்டமைப்பு இடையேயான பேச்சுக்களின் போது இந்தியா மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வகிக்க வேண்டும் எனவும் அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டதால் தான் பேச்சில் உருப்படியாக ஒரு தீர்வை எட்ட முடியும் எனவும் அவர் கூறியிருந்தார்.

இவையெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு கிருஷ்ணா நாடு திரும்பிவிட்டார். இப்போது மேலும் பேசுவதற்காக கூட்டமைப்பை அங்கே கூப்பிடுகிறார். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது இந்தியாவுக்கு ஏதோ நல்லாக உறைத்திருக்கிறது போலும். அதனால்தான் இப்போது அது இந்தத் தீர்வு விடயத்தில் கொஞ்சம் வேகம் எடுத்திருக்கிறது. அந்த வேகம் விவேகத்துடன் கூடிய நல்லதொரு தீர்வுக்கு வழி வகுப்பதாகவே அமைய வேண்டும் என தமிழர்கள் விரும்புகிறார்கள். இறுதி யுத்தத்தில் அப்பாவி மக்கள் பலர் காவு கொள்ளப்பட பார்த்திருந்த இந்தியா அதனால் ஏற்பட்ட பாவத்தைக் கழுவ உருப்படியான ஓர் அரசியல் தீர்வு கிடைக்கவாவது உதவ வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. அதனை அது சரியாகச் செய்யுமா? ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 22.01.2012 முதல் 28.01.2012 வரை

தருபவர் - வித்தியா

### மேடம்



எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். பணிபுரிவோர் தேவையற்ற பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். சகோதரிகள், பங்காளிகளுடன் மனஸ்தாபம் வரலாம். பிள்ளைகள் வழியிலும் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்கள் சொல்வதை நம்பி எதையும் செய்ய வேண்டாம். கவனம் அவசியம். மறதி, தண்டச் செலவு ஏற்படும். கலகலப்பான அனுபவம் உண்டு.

### இடபம்



குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளும் வரலாம். சில வேலைகளை சிரமம் இல்லாமல், சுலபமாக செய்து முடிப்பீர்கள். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சகோதரர்கள், நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்ய நேரிடலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும்.

### மிதுனம்



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். குழப்பம், மறதி, தடுமாற்றம் போன்றவை ஆள் கொள்ளும். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் பயம் கொள்வீர்கள். அடிக்கடி குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். ஆழம் தெரியாமல் எந்த விடயத்திலும் காலை விடுவதைத் தவிர்க்க வேண்டும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரும். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள்.

### கடகம்



திட்டமிட்ட காரியங்கள் நடக்கும், நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். வழக்கத்துக்கு மாறாகக் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறாமல் ஏமாற்றம் அடையலாம். எதிர்பாராத செலவினங்களால் பண நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்படும் வாக்குவாதங்கள், கோபதாபங்களால் மன அமைதி பாதிக்கப்படலாம். பிள்ளைகள் வழியிலும் பிரச்சினைகள் ஏற்படலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அதை நீங்களே செய்யலாம்.

### சிங்கம்



சில வேலைகளைச் செய்ய மறந்து அவதிப்படலாம். வாக்குவாதங்களால் மன அமைதி கெடலாம். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். உற்சாகமாகவும், உத்வேகத்துடன் உழைப்பீர்கள். நீண்ட நாள் இலட்சியங்களாக இருந்த சில காரியங்கள் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுக்கு வாய்ப்பு ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் அவசியம். எந்தக் காரியத்தையும் அவசரப்பட்டுச் செய்துவிட்டு, பின்னர் வருத்தம் அடைவது, சண்டை, சச்சரவுகளால் மன அமைதி பாதிக்கப்படுவது போன்றவை ஏற்படும். குழப்பம், தடுமாற்றம் உண்டாகும்.

### கன்னி



மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். எதிர்பாராத உதவி கிடைக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். கோபதாபங்கள், வாக்குவாதங்களைத் தவிர்த்து, எந்த விடயத்திலும் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டியது அவசியம். ஊக்கம், உற்சாகம் கூடும்.

### துலாம்



திட்டமிட்டதை விட சில விடயங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். நீங்கள் சில வேலைகளைத் தவறாகச் செய்து விட்டு, மற்றவர்களை குறை சொல்வீர்கள். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத்தேடி வரலாம். ஆதாயம் தருவது போல் தோன்றிய விஷயங்கள் எல்லாம் கடைசி நேரத்தில் கைநழுவிப் போகலாம். எதுவும் உங்களின் மனம் போல நடக்காமல், ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். திட்டமிட்ட காரியங்களில் தடை ஏற்படும்.பணவரவு உண்டு.

### விருச்சிகம்



ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். பணவிடயங்களில் மற்றவர்களை நம்ப வேண்டாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றிப் பெருமை சேர்ப்பீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

### தனுசு



திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமை அடைவீர்கள்.சில வேலைகளைச் செய்வதன் மூலம் எதிர்பார்தததை விட கூடுதல் வருமானம் பெறலாம். புதிய வேலை முயற்சிகளில் வெற்றிகிட்டும். எதையும் ஒன்றுக்குப் பல முறை யோசித்துச் செய்து மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். சிலருடன் கருத்து மோதல்கள் உருவாகலாம்.

### மகரம்



நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். ஒரு விடயம் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி, அது நடக்காமல் கடைசி நேரத்தில் தகர்ந்து போகலாம். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடக்கலாம். வேலைப்பளு தொடரும். தேக ஆரோக்கிய விடயங்களிலும், தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் அக்கறை அவசியம். மற்றவர்களுக்காக நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதைத் தவிர்க்கவும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம்.

### கும்பம்



எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். பயணங்களில் தடை, தாமதம் நேரும். மற்றவர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். சிலருக்கு அவசர உதவி செய்யலாம். தந்தை உடல் நலன் தொடர்பான வழிகளில் செலவு உண்டாகலாம். காரிய வெற்றி உண்டு. கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். ஆதாயகரமான பண வரவுகளைப் பெறலாம்.

### மீனம்




குடும்பத்தினரின் தேவைகளை, ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். திட்டமிட்ட வேலைகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியங்கள் நடக்காமல் போவதால் குழப்பங்கள், ஏற்படும். உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்காமல் அவதி போன்றவற்றை எதிர்கொள்ளலாம். எந்த விடயத்திலும் முன்னெச்சரிக்கையாகச் செயற்படவில்லை எனில், மாட்டிக் கொண்டு முழிக்கலாம். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கடன் பிரச்சினைகள் தீர்வுக்கு வரும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உடல் நலம் இல்லாமல் இருக்கும். உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். காரிய வெற்றி உண்டு. பணம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான மாற்றம் தேவை

❒ டிலீப்




**இலங்கை கிரிக்கெட்டின் தலைவராக உபாலி தர்மதாஸ, புதிய தேர்வுக் குழுத் தலைவராக அசந்த டிமெல் நியமிக்கப்பட் டுள்ளனர். இந்தப் புதிய மாற்றங்களுடன் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை யும் மாற்றமடையப் போகின்றது. மாற்றம் ஒன்றுதான் உலகில் மாற்றமில்லாதது. அந்த மாற்றம் இலங்கை கிரிக்கெட் ஆரோக்கியமான தாக இருக்க வழி வகுக்க வேண்டும்.**

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைத்துவத்தை மாற்றுவது என்று எடுக்கப்பட்டுள்ள முடிவானது வரவேற்கத்தக்கதாயினும், புதிதாக இளம் தலைமைத்துவத்தை தேர்வு செய்யாமல் இலங்கை கிரிக்கெட் மீண்டும் தவறிழைத்திருக்கின்றது.

டில்ஷான் இலங்கை அணியின் தலைமைத்துவத்தை ஏற்றபோதே பல்வேறு வகையான விமர்சனங்கள் எழுந்தன. அணியின் தலைமைத்துவத்துக்கு தகுதியில்லாத ஆனால் சிறந்த அதிரடி வீரர் ஒருவராகவே டில்ஷான் இலங்கை கிரிக்கெட் ரசிகர்களினால் நோக்கப்பட்டார். இவ்வாறு எதிர்பலைகள் இருந்த போதும் டில்ஷானிடம் அணித்தலைமை கையளிக்கப்பட்டது. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் முடிவடைந்த பின்னர் இலங்கை அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. டில்ஷானின் தோல்விப் பயணம் அங்கேதான் ஆரம்பமானது. தொடர்ந்து இலங்கை மண்ணில் வைத்து ஆஸ்திரேலியாவிடமும், டுபாயில் வைத்து பாகிஸ்தானிடம் அடிவாங்கியதை தொடர்ந்து அணித்தலைமையில் மாற்றம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பனும் இறுதி வாய்ப்பாக தென்னாபரிக்கத் தொடர் டில்ஷானுக்கு வழங்கப்பட்டது. அந்தத் தொடரிலும் டில்ஷான் சொதப்ப அணித் தலைமையை மாற்றுவது என்ற முடிவுக்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வந்துள்ளது.

புதிய அணித்தலைவராக, 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மார்ச் வரையில் அணித் தலைவராக இருந்த மஹேல ஜெயவர்தனவை நியமிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. சங்கா மீண்டும் ஒரு போதும் அணித்தலைமைப் பதவியை ஏற்பதில்லை என்ற காரணத்தினால் இந்த முடி வுக்கு கிரிக்கெட் சபை சென்றதாக தெரிவிக்கப் படுகின்றது.

அணியில் இளமை ரத்தத்தை பாய்ச்சுவதாக ஒரு புறம் சொல்லப்பட்டாலும் இளம் - அனுபவ - வீரர்களை அணித்தலைவராக இலங்கை கிரிக்கெட் நியமிக்க பின்னடித்து வருகின்றது. இவர்களின் இந்தப் பின்னடிப்பின் பின்னாலும் புதிய அணித்தலைமை நியமனத்திலும் அரசியல் கலந்து விட்டது என்றே பலராலும் விமர்சனம் செய்யப்படுகின்றது.

தற்போதைய உப அணித் தலைவராக உள்ள 24 வயதான மத்தியூஸை இலங்கையின் அணித்தலைவராக நியமிப்பதன் மூலம் இன்னும் ஒரு பத்தாண்டுகளுக்கு புதிய அணித்தலை வரை தேட வேண்டிய தேவை ஏற்படாது. இருப்பினும் மத்தியூஸுக்கு அணித் தலைமை ஏற்பதற்கான சகல தகுதிகள் இருக்கின்ற போதும், அடிப்படையில் அவர் தமிழரென்பதால்தான் இந்தப் பாகுபாடு காட்டப்படுவதாக பலராலும் சந்தேகங்கள் வெளியிடப்படுகின்றன. மஹேல இலங்கையின் அரசுக்கு வேண்டப்பட்ட ஒருவராகவே இருக்கின்றார். இதனாலேயே இவரது மீள் நியமனம் இடம்பெறுவதாகவும் கருதப்படுகின்றது.

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தினர் காலிறுதி வரையில் ஜெயசூரிய அணித் தலைவராக இருந்து அணியை வழி நடத்திய பின்னர் இலங்கை அணியின் தலைமை மாவன் அத்தபத்துவிடம் கையளிக்கப்பட்டது. மாவனின் அணித் தலைமையில் தொடர் தோல்விகளை சந்தித்த பின்னர் மஹேலவிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மஹேலவின் கைகளில் அணித்தலைமை சென்ற பின்னர் இலங்கை அணி எழுச்சி கண்டு 2007 உலகக் கிண்ண இறுதியாட்டம் வரையில் முன்னேறியது. மஹேலவின் ஓய்வின் பின்னர் சங்காவிடம் அணித் தலைமை 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.சி.சி 'ரி-20' உலக் கிண்ணத்துக்காக கையளிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் சங்காவின் அணித் தலைமையும் முடிவுக்கு வந்தது. சரியான அணித்தலைமை இன்றி அணி நிலைமாறும் காலத்தில் தடம் புரண்டது. எது எவ்வாறாயினும் இலங்கையைப் பொறுத்த வரையில் தற்போது உலகக் கிண்ணத்தின் பின்னரான நிலைமாறும் காலத்தில் உரிய தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியமானதொன்றே.

இலங்கை கிரிக்கெட்டின் தலைவராக உபாலி தர்மதாஸ, புதிய தேர்வுக் குழுத் தலைவராக அசந்த டிமெல் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தப் புதிய மாற்றங்களுடன் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமையும் மாற்றமடையப் போகின்றது. மாற்றம் ஒன்றுதான் உலகில் மாற்றமில்லாதது. அந்த மாற்றம் இலங்கை கிரிக்கெட் ஆரோக்கியமானதாக இருக்க வழி வகுக்க வேண்டும்.

எனவே ஒட்டு மொத்தத்தில் இலங்கை அணி புதிய அணியாக ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள முத்தரப்புத் தொடரிலேயே களமிறங்கவுள்ளது. இந்த மாற்றங்கள் இலங்கை அணியை மீண்டும் அதே பழைய நிலைக்கு இட்டுச் செல்லுமா ? ✱

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா?

❒ இனியன்



**விளையாட்டுத்துறை அதிகாரிகளே 2012 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் தேசிய மட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு கொள்ளவிருக்கும் வீர வீராங்கனைகளுக்குரிய பயிற்சிகளையும் வசதிகளையும் வழங்குங்கள்**

2012 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் தேசிய மட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படுமா?

யாழ்.மாவட்டத்தில் திறமையுள்ள சைக்கிள் ஓட்ட வீர, வீராங்கனைகள் உள்ள போதும் அவர்கள் வசதியின்மை காரணமாக அவர்களின் திறமைகள் யாவும் மழுங்கடிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு வவுனியாவில் இடம்பெற்ற வடமாகாண சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்ற வீரர்களிடம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தேசிய மட்ட போட்டிகளில் பயன்படுத்தப்படும் தரத்தையுடைய சைக்கிள் பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளித்த போது கடைசி நிமிடம் வரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இழக்க நேரிட்டது என்று பாதிக்கப்பட்ட வீரர்கள் கவலை வெளியிட்டனர். இதனால் வீர, வீராங்கனைகள் ஏமாற்றமடைந்தோடு மனஉழைச்சலுக்கும் ஆளாக நேரிட்டது.

போருக்கு முன்னைய காலங்களில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மெய்வன்மை, சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் எமது வீர, வீராங்கனைகள் தேசிய மட்டத்தில் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

குறிப்பாக 1982 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாத்தளையில் இடம்பெற்ற தேசிய மட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு கொண்ட தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தை சேர்ந்த இனித் இவோன் என்ற பெண்மணி மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும். இதற்கான வளம் இருந்தால் தானே வெற்றிபெற முடியும் என்று கூறுகின்றனர் வீரர்கள்.

விளையாட்டுத்துறை அதிகாரிகளே 2012 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் தேசிய மட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குகொள்ளவிருக்கும் வீர வீராங்கனைகளுக்குரிய பயிற்சிகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இல்லையேல் பிரபல வர்த்தக நிறுவனங்களிடமோ அல்லது வங்கி நிறுவனங்களிடமோ அனுசரணை பெற்று வீர, வீராங்கனைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய ஆவணம் செய்ய வேண்டும்.

வடமாகாணத்தில் விளையாட்டுத் திறனை அதிகரிக்கும் நோக்கில் பல திட்டங்கள் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி 2010 ஆம் ஆண்டு வழங்கிய வாக்குறுதியை இம்முறையாவது நிறைவேற்றுவாரா? ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்

# பாக். அரசியல் நெருக்கடி மேலும் இறுகும் நிலை

“ நாட்டின் அரசமைப்பு விதிகளின்படி ஜனாதிபதியானவர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படமுடியாது என்பதாலேயே தம்மால் உச்சநீதிமன்ற உத்தரவை நிறைவேற்றப்பட முடிய வில்லை என்பதை விளக்கினார். மேலும் நீதிமன்றத்தை அவமதிக்கும் எண்ணம் தமக்கு கிடையாது என்றும் தெரிவித்தார். என்றாலும் தாம் செய்த தவறை ஒப்புக் கொண்டு நீதிமன்றத்துக்கு வருத்தம் தெரிவிக்கவோ மன்னிப்புக் கேட்கவோ முற்படவில்லை.



“ கிம் இறந்த செய்தி வெளியானதும் அந்தப் பறவை தனது அனுதாபத்தைத் தெரிவிக்க தூதரகத்துக்கு வந்து சிறிது நேரம் இருந்துவிட்டு பறந்து சென்றுள்ளது. அதேபோல் அவரின் மரணத்துக்கு தன் கவலையை வெளியிட அந்தப் பூ பூத்துக் குலுங்கியுள்ளது என்கிறார்கள் அந்தத் தூதரகத்தினர். கிம் மறைவுக்கு உள் நாட்டிலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்றதாக அறிவித்திருக்கிறார்கள்.

பாகிஸ்தானில் அரசியல் குழப்ப நிலையானது மேலும் மோசமடைந்திருப்பதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

பிரதம மந்திரி யூசுப் ரசா கிலானி மீது அவமதிப்பு நோட்டீஸ் ஒன்றை உச்ச நீதிமன்றம் விடுத்ததைத் தொடர்ந்து இந்த நிலை தோன்றியுள்ளது.

கிலானியை நீதிமன்றில் நேரடியாக பிரசன்னமாகி பதிலளிக்கும்படி உச்சநீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது. இதில் கிலானி குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் நாடாளுமன்றத்திலிருந்தும் அவர் வெளியேற வேண்டியிருக்கும் அத்துடன் அவரது பதவிக்கும் ஆபத்து வரும்.

இருந்தபோதிலும் கடந்த திங்கட்கிழமை கூட்டப்பட்ட தேசிய மக்கள் சபையில் (நாடாளுமன்ற கீழ் சபை) அரசுக்கு சார்பாக தீர்மானம் ஒன்று பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் பற்றி இந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சுவிஸ் அரசுக்கு எழுதி அதிபர் ஆஸிம் அலி சர்தாரி தொடர்பான வழக்குகளை மீள ஆரம்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுமாறு உச்ச நீதிமன்றம் பாகிஸ்தான் அரசைக் கேட்டிருந்தது. ஆனால் அதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமை தொடர்பாக மன்றின் முன் தோன்றி நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக விளக்கம் அளிக்கும் படி பிரதமர் கிலானி கேட்கப்பட்டிருந்தார். நீதிமன்றத்தின் கட்டளையை வேண்டுமென்றே உதாசீனம் செய்தமை தொடர்பாக கிலானி மீது வழக்கு விசாரணை ஏன் நடத்தப்படக் கூடாது என்றவகையில் ஏழு நீதியரசர்களைக் கொண்டு ஆயம் கேள்வி எழுப்பியிருந்தது.

நீதிமன்றக் கட்டளை வெளியான உடனேயே கிலானி அதிபர் சர்தாரியைச் சந்தித்துப் பேசினார். அதன் பின் இருதலைவர்களும் பாகிஸ்தான் மக்கள் கட்சிமற்றும் கூட்டணி கட்சித் தலைவர்களை சந்தித்துப் பேசினார்கள்.

கட்சித் தலைவர்கள் நீதிமன்றக் கட்டளையை ஏற்று உச்சநீதிமன்றத்தில் பிரசன்னமாகும்படி கிலானியைக் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றது.

பாகிஸ்தான் அரசுக்கும் உச்ச நீதிமன்றத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள இந்த சிக்கலான மோதலுக்கிடையில் ராணுவத்துக்கும் அரசுக்குமிடையிலான மோதல் இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

**பிரதமர் விளக்கம்**

இதற்கிடையில் கடந்த வியாழக்கிழமை உச்ச நீதிமன்றத்தின் முன்தோன்றிய பிரதமர் கிலானி அதிபர் சர்தாரி தொடர்பான கட்டளையைத் தம்மால் நிறைவேற்றப்பட முடியாமல் போனமைக்கான காரணங்களை எடுத்துரைத்தார்.

நாட்டின் அரசமைப்பு விதிகளின்படி ஜனாதிபதியானவர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படமுடியாது என்பதாலேயே தம்மால் உச்சநீதிமன்ற உத்தரவை நிறைவேற்றப்படமுடியவில்லை என்பதை விளக்கினார். மேலும் நீதிமன்றத்தை அவமதிக்கும் எண்ணம் தமக்கு கிடையாது என்றும் தெரிவித்தார். என்றாலும் தாம் செய்த தவறை ஒப்புக் கொண்டு நீதிமன்றத்துக்கு வருத்தம் தெரிவிக்கவோ மன்னிப்புக் கேட்கவோ முற்படவில்லை.

இந்த நீதிமன்றத்தின் மீது நான்

## உலகப் பார்வை ஒரு தொகுப்பு

வைத்திருந்த மதிப்பை வெளியிடவே இங்கு வந்துள்ளேன். மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அதிபர் ஒருவர் மீது வழக்கு விசாரணையை நடத்துவதென்பது நல்ல செய்தியாக இருக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

